உலகப் புகழ்பெற்ற
அமெரிக்க ஞானி

எமர்சன் கட்டுரைகள்

இயற்கை, அரசியல், கல்வி, அனுபவம் ஆகிய நான்கு கட்டுரைகள் அடங்கியது

சக்தி

எமர்சன் கட்டுரைகள்

[இயற்கை, அரசியல்,
கல்வி, அனுபவம்]

தமிழாக்கியவர் :
ரா. நாராயணன்

சக்தி காரியாலயம்
ஆயிரம்விளக்கு :: சென்னை-6.

முதல் பதிப்பு : ஜனவரி, 1957.

ரூபாய் ஒன்று

தபால் செலவு தனி

சென்னை-14 மாருதி அச்சகத்தில் அச்சிடப்பெற்றது. பிரதிகள் 2100.

பதிப்புரை

உலகப் பேரறிஞன், ஞானி, ஆசிரியன் எமர்சனை தமிழ் மக்கள் அறிவர். அவர் எழுதிய தன்னம்பிக்கை (*Self Reliance*) என்ற கட்டுரையைப் பல வருஷங்களுக்கு முன் ஆங்கிலத்தில் கம்பனை ஆக்கித் தந்த பேரறிஞன் வ. வே. சு. ஐயர் தமிழ் மக்கள் அறிவு ஞானம் பெறத் தமிழில் தந்தார். அதன் பின்னர் இரண்டொரு புத்தகங்கள் எமர்சனைப் பற்றியும், அவருடைய கட்டுரைகள் மொழி பெயர்ப்பும் தமிழில் வந்தன. இப்பொழுது வெளிவந்திருக்கும் தொகுப்பில் எமர்சன் முதன் முதலில் தம்முடைய முப்பத்து மூன்றும் வயதில் எழுதிய இயற்கை (*Nature*), மற்றும் அரசியல் (*Politics*), கல்வி (*Education*), அனுபவம் (*Experience*) ஆகிய கட்டுரைகளைத் தமிழ்ப் பெரு மக்களுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம்.

தமிழ் நாட்டில் பிரபலமாக வெளிவந்து கொண்டிருந்த 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த ஸ்ரீ நாராயணன் அவர்களுக்கு, இந்த நூலை—கஷ்டமான விஷயத்தைத் தமிழாக்கித் தந்ததற்காக எங்கள் நன்றி.

சக்தி காரியாலயம்

உள்ளடக்கம்

இயற்கை

அறிமுகம்

பழையவைகளை நினைத்துப்பார்ப்பதே நமது காலத்தவர் வழக்கம். நாம் முன்னோர்களுக்குச் சமாதிகட்டுகிறோம்; அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை எழுதுகிறோம், சரித்திரங்கள் சமைக்கிறோம்; விமர்சனம் செய்கிறோம். நமக்கு முந்திய தலைமுறையினர் ஆண்டவனையும், இயற்கையையும் நேருக்குநேர் கண்டனுபவித்தனர். நாம் கடவுளையும் இயற்கையையும் நமது முன்னோர் வாயிலாகத்தான் பார்க்கிறோம். இந்தப் பிரபஞ்சத்தை நாமும் ஏன் அவர்களைப்போல் நேருக்கு நேர் பார்க்கலாகாது? சம்பிரதாய மூலமின்றி உள்ளுணர்வினுல் பார்க்கும் தத்துவத்தையும் கவிதையையும் நாமே ஏன் அடையலாகாது? நாமாகவே கடவுளை உணர்ந்து அனுபவிக்கும் வகையில் நமது மதத்தை ஏன் நாம் அமைத்துக் கொள்ளலாகாது? முன்னோர் சரித்திரங்கள் மூலம் தான் இவைகளை நாம் பெறவேண்டுமா? கொஞ்சகாலத்திற்கு இயற்கையோடியைந்த வாழ்வு நடத்துவோமானுல், இயற்கையின் ஜீவகளை நம்மைச் சூழ்ந்து, நம்முட் புகுந்து பரவி இயற்கைக்கு இணங்கி செயல் புரிய நம்மைத் தூண்டும். இந்தப் பெரு நன்மை நமக்குச் சுலபமாக கிடைக்கக் காத்திருக்கையில் கடந்தகாலத்தின் பசையற்ற எலும்புக்கூடுகளைத் துருவி இயற்கைத் தத்துவத்தை ஆராயப் புகுவது வீணல்லவா? சூரியன் அன்றுபோல் இன்றும் பிரகாசித்துக்கொண்டுதானிருக்கிறது. புதிய நிலங்கள் இருக்கின்றன; புதிது புதிதாக மனிதர்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றனர்; புதிய சிந்தனைகள் பெருக்கெடுத்தோடுகின்றன. நமக்குத் தேவையான பணியை நாம் நாடுவோம். நமக்குத் தேவையான சட்டங்களை வகுப்போம்; நமக்கிஷ்டமான தெய்வ வழிபாடுகளை விதித்துக்

கொள்ளுவோம். இவைகள் தாம் இயற்கையோடு இணங்கி வாழ்வதற்குத் தேவையான அம்சங்கள்.

விடை கூற முடியாத கேள்விகளை நாம் கேட்கப்போவதில்லை. ஏனெனில், பரம்பொருளால் சிருஷ்டிக்கப்பட்டவைகளில் எவ்வித குறைபாடுமில்லை. இதில் நாம் முழு நம்பிக்கை கொள்ளலாம். சிருஷ்டி வினோதங்கள் எந்த வகையில் நமது ஆவலைத் தூண்டத்தக்கனவாயிருப்பினும் நம் மனத்தில் எழக்கூடிய எவ்வித கேள்விகளுக்கும் சிருஷ்டி அமைப்பிலேயே பதிலையும் காணமுடியும். ஒரு மனிதன் என்ன கேள்விகள் கேட்டாலும், அதற்கு பதிலை அவன் தன்னிடத்திலிருந்தே அறிந்து கொள்ளலாம். தன்னுடைய தன்மையின் தத்துவத்தை அவன் அறிந்து கொள்ளுமுன்பே, அவன் அதற்கிணங்க செயல் புரிந்து ஒழுகுகிறான். அம்மாதிரியே இயற்கை தன் வடிவங்களின் மூலமும், இயங்கும் முறைகளின்மூலமும் தனது அமைப்பின் தத்துவத்தை விளக்குகிறது. நம்மைச்சுற்றி அமைதியாக ஒளி வீசும் அந்த அகண்டாகார உருவை அணுகி நம்முடைய சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவோம். இயற்கையின் இறுதி லக்ஷியம்தான் என்ன என்று கேட்டுத் தெளிவோம். இதுதானே நாம் இயற்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது.

விஞ்ஞானங்களுக் கெல்லாம் ஒரே நோக்கந்தான் உண்டு. இயற்கை இயங்குவதன் காரணத்தைக் காண்பது தான் அது. பல இனங்கள் இருக்கின்றன; அவைகளின் நடை உடை பாவனைகள் பற்றிப் பல கொள்கைகள் இருக்கின்றன. ஆனால், சிருஷ்டியின் ஆதிகாரணத்தை மட்டும் அறிந்து கொள்வதற்கான, சிறிதளவு முயற்சிகூட நாம் செய்யக் கூடவில்லை. சத்தியத்தைப் புகட்டக்கூடிய மதகுருக்கள் பலர் இருந்தும், அவர்கள் ஒருவரையொருவர் தூஷித்துக்கொண்டும் வெறுத்துக்கொண்டும் இருப்பதால், நாம் உண்மை மார்க்கத்திலிருந்து வெகுதூரம் விலகி இருக்கிறோம். உண்மை யாது எனச் சிந்தனை செய்யும் புத்திமான்கள் சிலர் புத்தியில்லாதவர்கள் பொறுப்பில்லாதவர்கள் என்று தூற்றப்படுகின்றனர். ஆனால் உண்மையை உணரும் சக்தியுள்ளவர்களுக்கு கேவலம் அறிவு மூலமே விளங்கக்கூடிய உண்மை எல்லாம் அனுபவ சாத்தியமானவையாகவே தோன்றும். ஒரு உண்மையான கொள்கை தோன்றியவுடன் அது உண்மை

என்பதற்கு அதுவே சாட்சியாக விளங்கும். தன் பல்வேறு தோற்றங்களை யெல்லாம் அதுவே விளக்கிக் கூறும் தன்மை வாய்ந்தது என்பதுதான் அது உண்மையானது என்பதற்கு ஆதாரம். இப்போது பாஷை, தூக்கம், சித்தப்பிரமை, கனவுகள், பிராணிகள் முதலியவைகள்போல் பல விஷயங்களின் தத்துவங்கள் விளக்கப்படவில்லை, விளக்க முடியாதவை என எண்ணுகிறார்கள். ஏனெனில், உண்மையைவிட்டு நாம் விலகியிருப்பதே இதற்குக் காரணம்.

தத்துவ நோக்கில் பார்த்தால் இயற்கையும் ஆன்மாவும் சேர்ந்ததே பிரபஞ்சம். இவை இரண்டும் மாறுபட்ட தனிப் பொருள்கள் என்பது இதிலிருந்து விளங்கும். வார்த்தையளவில் கூறவேண்டுமானால் இயற்கை என்னும் சொல்லிற்கு "நான் அல்லாதது" என்று எந்தெந்த வஸ்துக்களையெல்லாம் தத்துவதரிசிகள் குறிப்பிடுகிறார்களோ அவைகள் எல்லாம் பொருள். உதாரணமாக, இயற்கை அமைப்பு, கலை, என்னைத் தவிர மற்ற மக்கள், என்னுடைய சரீரம், முதலிய எல்லாம் இயற்கை என்னும் சொல்லில் அடங்கியவை.

இயற்கையின் சிறப்புகளையும், அதன் பொதுவான அம்சங்களையும் ஒன்று கூட்டி நான் விவரிக்கையில், இயற்கை எனும் பதத்தை அதன் சாதாரணமான அர்த்தம், தத்துவார்த்தம் என்னும் இரண்டு முறைகளிலும் உபயோகிக்கிறேன். நமது இந்தப் பொதுப்படையான ஆராய்ச்சியில், இவ்விரண்டு அர்த்தங்களையும் இணைத்துக் கூறுவதில் தவறுதல்கள் ஏற்பட்டால் அவைகளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை; ஏனெனில், அதனால் கருத்துக் குழப்பம் ஒன்றும் ஏற்படாது. சாதாரணமாகப் பார்த்தால் இயற்கை மனிதனால் மாற்ற முடியாத தன்மைகளைக் குறிக்கிறது. உதாரணமாக பரந்தவெளி, காற்று, நதி இவை போன்றவைகள். கலை என்பது இயற்கையிலமைந்த இந்த பஞ்சபூதங்களை மனிதன் தன் புத்தியை உபயோகித்தும் பயன்படுத்திக் கொள்ளுவதைக் குறிக்கிறது. உதாரணமாக வீடு கட்டுதல், வாய்க்கால் வெட்டுதல், சிற்பம் செதுக்குதல், சித்திரம் வரைதல் போன்றவை. ஆனால், மனிதனின் செயல்களைச் சேர்த்துப் பார்த்தால் அவைகள் மிக அற்பமானவை என்பது விளங்கும். ஒரு சிறிது செதுக்குகிறான், செங்கல்லைச்

சுடுகிறான், ஒட்ட வைக்கிறான், அல்லது கழுவுகிறான். இம்மாதிரி சிறு காரியங்களினால் இயற்கையின் தன்மை மாறுபடுவதில்லை. உலகத்தைப்பற்றி மனிதன் மனத்தில் பதியும் பரந்த காட்சியை நினைத்தால், அவன் செயல்களின் விளைவுகளால் இந்தக் காட்சியின் மேன்மை அவ்வளவாக பாதிக்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

1. இயற்கை

ஒருவன் தனிமையாக இருக்க விரும்பினால் சமூகத்திலிருந்து விலகிக்கொண்டால் மட்டும் போதாது. தன்னுடைய அறையிலிருந்தும்கூட விலகிக் கொள்ள வேண்டும். ஏனெனில், என்னுடன் யாருமில்லாவிட்டாலும் நான் அறையில் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டுமிருந்தால் அது தனிமையிலிருப்பதாகாது. மனிதன் தனியாயிருக்க வேண்டுமென்றால் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருக்கட்டும், விண்ணுலகிலிருந்து வீசும் ஒளிக்கிரணங்கள் அவனுக்கும் அவன் அருகாமையிலிருக்கும் பொருள்களுக்கும் இடையில் பிரகாசிக்கும். ஆகாயத்தில் விளங்கும் பல தெய்விகப் பொருள்கள் தங்களுடைய பிரகாசத்தின் மூலம், மனிதனின் உள்ளத்தில் இயற்கையின் புனிதத் தன்மையை எப்போதும் விளங்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான், ஒளிக் கதிர்கள் ஊடுருவிச்செல்ல வசதியுள்ளதாக ஆகாயம் அமைந்திருக்கிறதோ என்றுகூட சொல்லத் தோன்றுகிறது. தெருக்களில் நின்று கொண்டு பார்த்தால் நட்சத்திரங்கள் எவ்வளவு அற்புதமாயிருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கொருமுறைதான் நட்சத்திரங்கள் தோன்றுமென்றிருந்தால், மனிதர்கள் அவைகளின் மகத்துவத்தை எப்படி ஏற்றுக் கொண்டு வணங்குவார்கள்! வணங்குவது மட்டுமா? ஆண்டவனின் மண்டலத்தின் பேரொளியைப் பார்த்த அந்த நினைவை தலைமுறை தலைமுறையாக மறக்காமல் ஞாபகத்திலிறுத்தி கொள்வார்கள்! ஆனால் இந்த அழகு தேவதையின் தூதர்கள் தினம் தினம் காட்சியளித்து, பிரபஞ்சத்தை தங்கள் கடும் புன்னகையால் பிரகாசிக்கச் செய்கின்றனர்.

நட்சத்திரங்கள் நம் மனதில் ஒருவகையான பணிவைத் தூண்டுகின்றன. ஏனெனில் அவைகள் இடைவிடாது பிரகாசித்துக் கொண்டிருந்தாலும் அவைகளை நெருங்கமுடியாது. மனிதனின் மனம் தக்க பக்குவமுள்ளதாயிருந்தால் மற்ற இயற்கைப் பொருள்களும் இதே மாதிரி பணிவையே தூண்டும். இயற்கை எப்பொழுதுமே அருவருப்பான தோற்றமளிப்பதில்லை. சிறந்த அறிவாளிகளால்கூட இயற்கையின் ரகசியத்தை அறிந்துகொள்ள முடிவதில்லை. இருந்தாலும் இடைவிடாது அதன் பெருமைகளை அறிந்துகொள்வதில் உள்ள ஆவலை இழப்பதில்லை. ஞானியின் கண்களுக்கு இயற்கை ஒரு பொம்மைப் பொருளாக ஒருபோதும் தோன்றுவதில்லை. புஷ்பங்கள், பிராணிகள், மலைகள் முதலியவைகள் அவனுடைய களங்கமற்ற குழந்தைப் பருவத்தில் மகிழ்ச்சி அளித்தது மாதிரியே அவனுடைய முதுமையிலும் அவனுடைய அறிவின் சுடரை விளக்குகிறது.

இவ்வாறு இயற்கையைப் பற்றி நாம் பேசுகையில் நமது மனத்தில் தெளிவான கவிதா உணர்ச்சி எழுகிறது. அதாவது பல இயற்கைப் பொருள்கள் சித்தத்தில் பதிந்து, அவைகளின் சேர்க்கையால் உருவகப்பட்ட சுத்தமான கருத்து நம் மனத்தில் உதிக்கிறது. இந்தக் கருத்துணர்வுதான் விறகு வெட்டியின் கோடரிக் காம்புக்கும், கவியின் கற்பனையில் தோன்றும் மரத்திற்கும் பாகுபாடு காண உதவுகிறது. இன்று காலையில் என் மனத்தைக் கவர்ந்த பசுமையான நிலவெளியில் இருபது அல்லது முப்பது நபர்களின் வயல்கள் அடங்கி இருக்கலாம், ஒரு வயல் மில்லர் (*Miller*) என்பவனுடையதாயிருக்கலாம், மற்றொன்று லாக் (*Lock*) என்பவனுக்குரியதாயிருக்கலாம், மேற்கொண்டு ஒன்று மானிங் (*Manning*) என்பவனின் உடமையாயிருக்கலாம். ஆனால், என் மனத்தில் பதிந்த நிலவெளியின் காட்சி, யாருக்கும் சொந்தமல்ல. தொடுவானம் யாருடையதுமல்ல. எல்லாக் காடுகளையும் மலைகளையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும் மேதையுள்ளவனுக்குத்தான் அது சொந்தம். அதாவது ஒரு கவிக்குச் சொந்தம் என்று கூறலாம். அந்தக் காட்சிதான் தனிப்பட்ட வயற்காடுகளைக் காட்டிலும் மிகவும் சிறந்தது. ஆனால், அந்தக் காட்சிக்கு அவன் வைத்திருக்கும் சாஸனப் பத்திரத்தில் உரிமையளிக்கப்படவில்லை.

உண்மையைக் கூறவேண்டுமானால் வயது வந்தவர்களில் இயற்கையை அறிந்துகொள்ளக் கூடியவர்கள் மிகவும் சிலரே. பலர் சூரியனைப் பார்த்திருக்கின்றனர். ஆனாலும், அவர்கள் எதையும் மேலோட்டமாகத்தான் பார்க்கின்றனர். சூரியன் மனிதன் கண்ணுக்கு மாத்திரம் ஒளியளிக்கிறது. ஆனால், அது குழந்தைகளின் கண்களிலும் உள்ளத்திலும் ஒளி வீசச் செய்கிறது. எவனுடைய உள்ளும் புறமும் ஒருமித்து இயங்குகிறதோ, யார் ஒருவன் முதுமையிலும் குழந்தை உள்ளம் படைத்தவனாயிருக்கிறானோ, அவன்தான் இயற்கையில் உண்மையான பற்றுதலுள்ளவன். அப்படிப்பட்ட ஒருவனுக்கு, இம்மாதிரி விண்ணுலகத்துடனும் மண்ணுலகத்துடனும் உள்ள தொடர்பு தினசரி உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாக இருக்கும். எவ்வளவோ துயரங்களுக்கிடையேயும் இயற்கையின் முன் இயற்கைப் பித்தன் குழந்தையைப்போல் ஆனந்தத்தை அனுபவிக்கிறான். இயற்கை அன்னை அவனைப் பார்த்துச் சொல்லுகிறாள். "அவன் என் குழந்தை; அவனுக்கு அனாவசியமான துயரங்கள் எத்தனையிருந்தாலும் அவன் என்னிடம் ஆனந்தமாயிருக்கவேண்டும்." பகலில் மட்டுமல்ல; கோடை காலத்தில் மட்டுமல்ல; ஒவ்வொரு ருதுவிலும் ஒவ்வொரு மணிகூட விடாமல் அவன் ஆனந்தமாயிருப்பான். ஏனெனில், காலத்தின் மாறுதல்கள் மனிதனின் மனத்திலும் மாறுதல்களை உண்டாக்குகின்றன. தகிக்கும் வெய்யிலிலிருந்து குளிர் வீசும் நள்ளிரவு வரையில், இயற்கை நிலையும் மனமும் மாறிக்கொண்டே இருக்கிறது. இயற்கை எனும் பின்னணியைக்கொண்டு, மேடைமீது அதன்முன் தமாஷ் நாடகமும் நடத்தலாம், சோக நாடகமும் ஆடலாம். ஆரோக்கியமாயிருப்பவனுக்கு காற்று உற்ற நண்பனாயிருக்கிறது. பனி நிறைந்த கட்டாந்தரையை அந்திப் பொழுதில், மேலே மேகமண்டலம் குடை பிடிக்க நான் நடந்து செல்லுகையில், உற்சாக மூட்டும் நற்செய்தி கேட்கா விட்டாலும் என் உள்ளம் களிநடம் புரிவதை நான் அனுபவித்திருக்கிறேன். அபாயம் நிறைந்த இடத்திற்கு நான் ஆனந்தமாகப் போவேன். அடர்ந்த காட்டில் பாம்பு தோலுரிப்பதுபோல், மனிதன் முதுமையை உதறிவிட்டு என்றும் குழந்தையாயிருக்கிறான். காட்டில் நித்திய இளமை பெறலாம். ஆண்டவனின் நந்தவன

மாகிய இயற்கையின் மத்தியில் ஒரு ஒழுங்கும் புனிதத் தன்மையும் நிலவுகிறது; முடிவில்லாத் திருவிழாக் கோலம் தாண்டவமாடுகிறது; இதில் வந்திருக்கும் விருந்தினன் ஆயிரம் வருஷங்களுக்கு நீடித்திருந்தாலும் களைப்புறமாட்டான். காட்டில் அறிவுத் தெளிவும் நம்பிக்கையும் பெறுகிறோம். அங்கே எனக்கு கண்மட்டு மிருந்து விட்டால் (அது போனால் இயற்கை அதை மீட்டுத்தர முடியாது) அவமானமோ ஆபத்தோ என்னை பாதிக்காது. குளிர்ந்த காற்று என்மீது வீச நான் கட்டாந்தரையில் நின்றுகொண்டு, பிரபஞ்சத்தையே என் மனக்கண்ணால் பார்த்தேனானால் அற்பத்தனமான தற்பெருமை பறந்தோடி விடுகிறது; நான் பிரதிபிம்பம் தெரியும் கண்விழியாகி விடுவேன். அப்பொழுது நான் யார்? துரும்புக்கும் சிறியவனாகிவிடுகிறேன். நான் யாவற்றையும் பார்க்கிறேன். பரம்பொருளின் மனவேகம் என்னை ஊடுருவிச் செல்கிறது. நான் ஆண்டவனின் ஒரு அம்சம். இந்த நிலையிலிருக்கையில் நெருங்கிப் பழகிய நண்பனின் பெயர் கேட்டால் அன்னியர் பெயரைக் கேட்பது போலிருக்கும். சகோதரன், நண்பன், எஜமானன், வேலையாள் என்கிற உறவெல்லாம் அற்பமாகத் தோன்றுகிறது. மனதில் கலக்கத்தை உண்டாக்குகிறது. என்றும் அழியாத நிறைவான அழகுத் தெய்வத்தின் அடிமையாகி விடுகின்றேன். தெருக்களிலும் கிராமங்களிலும் இருப்பதைவிட திக்குத் தெரியாத காட்டில் அன்புக்குரியவைகள் இருப்பதைக் காண்கின்றேன். அசைவற்ற இயற்கைக் காட்சியில், அதுவும் எங்கோ தெரியும் தொடுவானத்தின் எல்லைக் கோட்டில் மனிதன் தன்னுடைய தன்மையைக் காணும் கவர்ச்சியைக் காண்கிறான்.

வயல்களும் காடுகளும் நமக்கூட்டும் இன்பத்திலிருந்து, மனிதனுக்கும் செடி கொடிகளுக்குமுள்ள புனிதமான உறவை அறிந்துகொள்கிறோம். நான் தனித்து நிற்கவில்லை. நான் இருக்கிறதை பிறர் உணர்கிறார்கள். இயற்கையைப் பார்த்து நான் தலையசைக்கிறேன், அவைகளும் என்னைப் பார்த்துத் தலை வணங்குகின்றன. புயலில் மரக்கிளைகள் ஆடும் பொழுது அது எனக்குப் புதுமையாகப்படுகிறது, ஆனால் அந்த ஆடும் தன்மை புராதனமானது. அந்த சலனத்தைப் பார்த்து நான் ஆச்சரியப் படுகிறேன், ஆனால் அதனுடைய இந்த இயல்பு

தெரியாததல்ல. நான் நீதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்கிறேன் என நினைத்துக்கொண்டிருக்கையில், இந்த இயற்கைக் காட்சி என்றுமே ஒரு உயர்ந்த சிந்தனையையும், சிறப்பான உணர்ச்சிப் பெருக்கையும் எழுப்புகிறது.

ஆனால் நம்மை மகிழ்விக்கும் இந்த சக்தி இயற்கைக்கு இல்லை, அந்த சக்தி மனிதனிடமோ, அல்லது மனிதன் இயற்கையுடன் கொண்டுள்ள தொடர்பிலோ இருக்கிறது. இன்ப உணர்ச்சிகளை அளவாக உபயோகிப்பது அவசியம். ஏனெனில் இயற்கை எப்பொழுது உல்லாச உடை அணிந்திருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. நேற்று மணம் வீசிய இயற்கை, தேவகன்னிகைகளின் திருவிளையாடல்போல் காட்சியளித்த இயற்கை, இன்று துக்கம் தோய்ந்தவளாய்க் காணப்படுகிருள். மனித உள்ளத்திலெழும் உணர்ச்சிகளின் சாயையைத் தான் இற்கையிடம் நாம் காண்கிறோம். துயர சம்பவத்தில் வருந்திக்கொண்டிருப்பவன், தன் துக்கத்தின் சூட்டை இயற்கையிடம் காண்கிருன். ஒரு நண்பனின் மரணத்திஞல் துயருற்றிருப்பவனுக்கு இயற்கைக் காட்சியைப் பார்த்தால் அலட்சியமாயிருக்கிறது. ஜனங்களினிடையே இயற்கையை அனுபவிக்கும் அருகதையில் குறைவு கண்டவுடன் வானத்தின் மகத்துவமும் மங்கலாகத் தெரிகிறது.

2. பொருள்

உலகம் தோன்ற முடிவான காரணம் என்ன என்பதை ஆராய்பவர்கள் அதனுடைய பல்வேறு பயன்களைக் கொண்டே முடிவு காண்பார்கள். அப்படிப் பயன்படுபவை எல்லாம் பொருள், அழகு, மொழி, கட்டுப்பாடு என்னும் நான்கு பிரிவாக உள்ளன என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

பொதுவாக பொருள் என்னும் தலைப்பில் இயற்கையிலிருந்து மனித புலன்கள் பெறும் நலன்களைக் கொள்ளலாம். ஆனல், இந்த நலன்கள் தாற்காலிகமானவேயொழிய ஆத்மாவுக்கு நலமளிப்பவைபோல் முடிவானவையல்ல. இந்த நலன்களெல்லாம் சாதாரணமானவைகளானலும் அப்பழுக்கற்றவை. இயற்கையின்

இம்மாதிரி நலன்களைத்தான் மனிதர்கள் புரிந்துகொள்கிறார்கள். இந்தப் பசுமையான பந்துபோன்ற உலகத்தில் வாழ்ந்து தெய்விக இன்பத்தை அனுபவிப்பதற்கான சுகபோகங்களை, எவ்வளவு தாராளமாக இயற்கை ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் மனிதன் துயரமடைவது எவ்வளவு சிறு பிள்ளைத்தனமானது என்பது விளங்கும். இந்த சிறப்பான அணிகலன்களை, இந்த செல்வமிக்க வசதிகளை, எல்லையற்ற ஆகாய வெளி கீழே இந்தப் பரந்த கடல்கள், மேலே ஒளி வீசும் மின்சார விளக்குகளைத் தோன்றி மறையும் மேக மண்டல கூடாரங்களை, சீதோஷ்ணமாறுதலால் ஏற்படும் வர்ண ஜாலங்களை, நாலு பருவங்களடங்கிய ஆண்டு அமைப்பை எந்த தேவதைகள் படைத்தனரோ? பிராணிகள், தீ, தண்ணீர், கல், தான்யம் எல்லாம் மனிதனுக்குப் பணிவிடைகள் புரிகின்றன. வயல்வெளி அவன் நடக்கும் தரை, அவன் வேலை செய்யும் இடம், அவனுடைய விளையாட்டு மைதானம் அவனுடைய நந்தவனம், அவனுடைய படுக்கையாகவெல்லாம் அமைந்திருக்கிறது. தான் கவனித்து அனுபவித்த, பணியாட்களைக்காட்டிலும் எவ்வளவோ அதிகமான பணியாட்கள் மனிதனுக்குச் சதா சேவை செய்கின்றனர் என்பதை அவன் உணர்வதில்லை.

இயற்கை மனிதனுக்குப் பணிபுரியுங்கால் பல பொருள்களை வழங்குவதுமன்னியில் அவைகளை மனிதனுக்குப் பயன்படுத்தியும் கொடுத்து, பணிவிடையின் பலனை அவன் அடையும்படி செய்து, தானும் அதை அடைந்து கலந்து விளங்குகிறது. மனிதனின் நலனுக்காக இவைகளெல்லாம் ஒன்றோடொன்று இணங்கி கலந்து இடைவிடாது வேலை செய்கின்றன. காற்று விதை விதைக்கிறது; சூரியன் கடல்நீரை நீராவியாக்கி மேகமாக்குகிறது; காற்று மேகத்தையும் மழையாக மாற்றி வயல்களில் பொழியச் செய்கிறது; பூகோளத்தின் மற்றொரு புறமுள்ள பனிக்கட்டி மழைத் தண்ணீரை உறைந்துபோகச் செய்கிறது; மழை செடியை வளர்க்கிறது: செடி பிராணிகளுக்கு உணவாகிறது. இவ்வாறு ஆண்டவனின் படைப்பில் இயற்கைச் சக்கரம் சுழன்று மனிதனுடைய தேவைகளை எல்லாம் அள்ளி வீசிக்கொண்டு அவனை உணவூட்டி வளர்க்க உதவுகிறது.

மனிதன் தன் அறிவைக் கொண்டு இயற்கை வசதிகளைப் பெருக்கியோ அல்லது பலவற்றைச் சேர்த்து பயன் படுத்தியோ செயல் புரிகிறான். அவன் பருவ மழைக்காகக் காத்திருப்பதில்லை. அவன் நீராவியைப் பயன்படுத்தி ஒருவிதமான காற்றைத் தன் படகில் அடக்கி ஆள்கிறான். பொருள்கள் ஒன்றோடொன்று உராய்வதால் தீ கிளம்பாமல் பாதுகாக்க ரஸ்தாக்களில் தண்டவாளங்களைப் பதித்துவிடுகிறான். இதன் பயனாக ஏராளமான மக்களையும் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு வண்டியேறி பருந்து ஆகாயத்தில் எவ்வளவு வேகமாகப் பறக்கிறதோ, அவ்வளவு துரிதமாக ஊருக்கு ஊர் போகிறான். உலகம் தோன்றிய காலத்திலிருந்து நெப்போலியன் (*Napoleon*) காலம்வரை இம்மாதிரி வசதிகளின் . சேர்க்கையால் உலகத்தின் தோற்றம் எவ்வளவு மாறியிருக்கிறது! ஏழை மக்களின் நன்மைக்காக நகரங்கள், கப்பல்கள், வாய்க்கால்கள் பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவன் தபாலாபீசுக்குப் போகிறான், அவன் செய்திகளைக் கொண்டு சேர்க்க மனித வர்க்கம் உதவுகிறது. புத்தகக் கடைக்குப் போனால் மனித ஜாதிக்கு என்ன நேருகிறது என்பது பற்றிய நூல்களை எல்லோரும் படிக்க முடிகிறது. நீதி ஸ்தலத்திற்குச் சென்றால் அங்கே மனிதனுக்கு நேரும் குறைகளைத் தீர்க்கிறார்கள். ரஸ்தா ஓரத்தில் வீடுகட்டிக் கொண்டால் மனிதக் கும்பல் தெருக்களில் வந்து பனியை நீக்கி மனிதர் நடக்கும் பாதை வகுப்பதைப் பார்க்கலாம்.

இம்மாதிரி நலன்களை விளக்கிக் கூறவேண்டியதில்லை. அவைகளுக்கு முடிவே இல்லை. அவையாவும் விளக்கமின்றியே தெரிந்தவையாகையால் வாசகர்களின் யூகத்திற்கே விட்டுவிடுகிறேன். ஆனால் ஒன்றுமட்டும் சொல்லி நிறுத்திக்கொள்கிறேன். இந்த நலன்களெல்லாம் நம்மை மற்றொரு பெரிய நலனுக்கு அழைத்துச் செல்வதாகும். மனிதனுக்கு உணவளிப்பது அவன் உண்பதற்காகமட்டுமல்ல, அவன் உண்டு அதன் பயனாக உழைப்பதற்காக.

3. அழகு

மனிதனின் உணவு முதலிய தேவைகள் பூர்த்தியானபின், மற்றொரு மேன்மையான, சிறப்பான தேவை

ஒன்றையும் இயற்கை பூர்த்தி செய்கிறது. அதுதான் அழகில் மனிதனுக்குள்ள ஆர்வம்.

பண்டைக்கால கிரேக்கர்கள் உலகத்தையே அழகு என அழைத்தனர். இயற்கை உலகத்தில் வஸ்துக்களின் அமைப்பினாலோ அல்லது கண்களின் காணுதல் என்னும் இணையற்ற சக்தியினாலோ வானம், மலை, மரம் பிராணி முதலியவை தோற்றமாத்திரத்தில் நமக்கு இன்பம் தருகின்றன, இந்த இன்பம் அவைகளுடைய உருவம், வர்ணம், அசைவு ஒறுமைப்பாடு முதலியவைகளால் ஏற்படுகிறது. இதற்கு ஓரளவு காரணம் நமது கண்கள்தான். கலைஞர்களில் எல்லாம் சிறந்தவை கண்கள் என்றே கூறலாம், கண்ணில் பல்வேறு பகுதிகளின் ஒன்றுபட்ட அசைவினாலும், ஒளி இயங்கும் நீதியினாலும் காட்சி நமது மனத்தில் பதிகிறது. இதனால் நாம் பார்க்கும் பொருள் யாதாயிருந்தாலும், அவை நம் மனத்தில் பலவித வர்ணங்களும் நிழலும் குழைந்து ஒன்றுபட்டு இயங்குகிறது. இதன் விளைவாக நாம் பார்க்கும் இயற்கைக் காட்சி வட்டமாகவும் சீராகவும் நமக்குத் தெரிகிறது. கண்ணுக்கு எப்படி கவனம் செய்யும் சக்தி உண்டோ அம்மாதிரியே வெளிச்சம்தான் சிறந்த சைத்ரீகனாக விளங்குகிறது. ஒரு பொருள் எவ்வளவு அற்பமானதாயிருந்தாலும் அதை வெளிச்சம் அழகு படுத்தி விடுகிறது, ஒளி நமது உணர்ச்சிகளை எழுப்பிவிடுகிறதானாலும் அது காலம் வான வெளி போல் முடிவில்லாத் தன்மைவாய்ந்திருப்பதனாலும் எல்லாப் பொருள்களும் களிப்பூட்டும் சிறப்பு வாய்ந்தவையாக மாறிவிடுகின்றன. ஒரு பிணத்திற்குக் கூட ஒருவித தனி அழகு இருக்கிறது. இயற்கை இந்த தனிக் கவர்ச்சியைப் பொருள்களுக்கு அளிப்பதுடன் பொருள்களின் ஒவ்வொன்றின் தோற்றமும் மனிதனுடைய கண்களுக்குப் பிடித்ததாயிருக்கிறது. உதாரணமாக தான்யம், திராட்சை, கோதுமை, முட்டை, பட்சிகளின் சிறகுகளும் பிற பாகங்களும், சிங்கத்தின் நகம், பாம்பு, பட்டுப் பூச்சி, கடற்சங்குகள், தீப்பிழம்பு, மேகம், மொட்டு, இலைகள், பனை, தென்னை போன்ற மரத்தின் பல பாகங்களைக் கூறலாம்.

இன்னும் நன்கு ஆராய்வதற்காக அழகின் அம்சங்களை மூன்றுவகையாகப் பிரிக்கலாம்.

1. இயற்கையில் பலவிதத்தோற்றங்களை அப்படியே

காண்பது ஒரு இன்பம், இயற்கையின் பல்வேறு தோற்றங்களும் அதன் அசைவுகளும் அவைகளினால் ஏற்படும் நலன்களும் மனிதனுக்கு இன்றியமையாத ஒரு தேவை. வெளித்தோற்றத்தில் இப்பல்வேறு தோற்றங்கள் பொருளையும் அழகையுமே கவருகிறதே போலக் காணப் படலாம். ஆனால் உண்மையில் அவைகள் இதற்கப்பாலும் கவருகிறது, சங்கடமான வேலையினாலோ, பிடிக்காத தோர் கூட்டுறவுகளிலோ களைப்புற்றிருக்கும் உடலுக்கும் மனதிற்கும் இயற்கை மருந்துபோலிருந்து உற்சாகத்தைப் பெருக்கும். வ்யாபாரியும் வக்கிலும் தெருவின் நெருக் கடியைக் காட்டி, தன் தொழிலில் ஏற்படும் சலிப்பையும் காட்டுவதற்கு, வானத்தையும் அடர்ந்த காட்டையும் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தால், களைப்பு நீங்கி மீண்டும் மனிதர்களாகின்றனர். இவ்விரண்டிலும் அவர்கள் காணும் அமைதியினால் அவர்கள் தங்களை உணர்ந்து கொண்டிருக்கின்றனர். கண் ஆரோக்கியமாயிருக்க வேண்டுமானால் அது ஒரு வானத்தைப் பார்க்க விரும்பு கிறது. நெடுந்தூரம் பார்க்கும் சக்தி நமக்கிருக்கும் வரையில் நாம் களைப்படைவதில்லை.

மற்ற சமயங்களில் இயற்கை தனது கவர்ச்சியினா லேயே நம்மைத் திருப்தியடையச் செய்கிறது. அதில் உலக நலன் எனும் கலப்பே இல்லை. சிறு குன்றின் மீதிருந்து விடியற்காலையிலிருந்து சூரிய உதயம் வரையில் காலைப் பொழுதின் அழகைப் பார்க்கையில் எனக்கு ஏற்படும் மன எழுச்சி தேவர்களும் பார்த்து பொறாமைப்படத் தக்கது. கடல்போல் பரந்த செவ்வானத்தில் மீன்கள் துள்ளி விளையாடுவதுபோல், மெல்லிய மேகப் பாளங்கள் மிதந்து செல்லுகின்றன. கரையிலிருந்துகொண்டு பரந்த சமுத்திரத்தைக் காண்பதுபோல், நான் பூமியிலிருந்து கொண்டு இவ் வானவெளியைக் கண்டு ஆனந்திக்கிறேன். அதன் துரித மாறுதல்களில் நானும் பங்கு கொள்வது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகிறது. அதனுடைய களிப்பூட்டும் கவர்ச்சி என்னை ஆட்கொள்கிறது. நான் நின்று சிந்திக்கிறேன். காலையின் மென்மையான காற்றை நுகர்கிறேன்.

ஒரு சில எளிய சாதனங்களைக் கொண்டு இயற்கை அன்னை நம்மைக் கடவுளுக்குச் சமமாக மாற்றவல்ல அதிசயம்தான் என்னே! நல்ல ஆரோக்கியமும் ஒரு நாள்

ஒய்வும் எனக்குக் கிடைத்தால், மன்னாதி மன்னர்கள் பெற முடியாத பேரின்ப நிலையை நான் அடைவேன். காலைப் பொழுதை அனுபவிப்பது அஸ்ஸிரியா நாட்டுக்குச் சென்று வந்த ஆனந்தத்தை எனக்கு அளிக்கிறது; சூரிய அஸ்தமனத்தையும் சந்திரோதயத்தையும் காண்பது பாபோஸ் சென்ற அல்லது தேவதா உலகிற்குச் சென்றது போன்ற இன்பநிலை அளிக்கிறது. நடு நிசியில் பூரணச் சந்திரனைக் காண்பது நான் சுயநினைவுடன் இங்கிலாந்துக்குப் போவது போன்ற நிலையை ஊட்டுகிறது. இரவின் இன்பத்தை அனுபவிப்பது தத்துவ சாஸ்திரம், கனவு உலக உறைவிடமான ஜெர்மனியிலிருப்பதுபோல் உற்சாக மளிக்கிறது.

பிற்பகல்பொழுதில் இயற்கையின் மகத்துவத்தை அவ்வளவு உற்சாகமாக நாம் அனுபவிப்பதில்லை. ஆனால் நேற்று மாலை ஜனவரி மாத சூரிய அஸ்தமனத்தைப் பார்த்தபொழுது நான் அடைந்த இன்பம் குன்றவில்லை. மேற்கத்தி மேகக் கூட்டங்கள் ஒரு பழுப்புநிற ஒளிவீசப் பிரிந்து பிரிந்து சென்றன. அவைகளில் ஒருவித மென்மை தென்பட்டது. அன்று காற்றில் விவரிக்க முடியாத ஒருவித ஜீவகளையும் இனிமையும் நிரம்பி இருந்ததால் திறந்த வெளியை விட்டு உள்ளே நுழைய மனம் வரவில்லை. இந்த நிலையில் இயற்கை அன்னை நமக்கு என்ன சொல்ல விரும்புகிறாள்? அந்த ஆலைக்குப் பின் இருந்த பள்ளத்தாக்கில் நிலவிய அமைதி ஒருவன் ஆழ்ந்த நித்திரையிலடையும் அமைதியை ஒத்திருப்பது போல் இருக்கிறது. இப்படிப்பட்ட அமைதிக்குப் பொருள் இல்லையா? இந்த ஜீவகளை தரும்பும் அமைதியை ஹோமர் (*Homer*) ஷேக்ஸ்பியர் போன்ற கவிகள்கூட வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. சூரியாஸ்தமனத்தின் போது தீயின் நாக்குகள் போன்று நிற்கும் இலை உதிர்ந்த மொட்டையான மரங்களையும், கிழக்கே நிலவானையும் பக்கத்தில் உதிர்ந்த செம்பூக்களையும், மரத்தின் கிளைகளில் பனி படிந்திருப்பதையும் பார்த்தால் மௌன கீதத்தைக் கேட்பது போலிருக்கின்றது.

கிராமங்களில் காணும் இயற்கைக் காட்சி வருஷத்தில் ஆறு மாதங்களுக்குத்தான் பார்க்க இனிமையாயிருக்கிறதென நகரமக்கள் நினைக்கின்றனர். ஆனால், இது சரியன்று. பனிக்காலக் காட்சியும் எனக்கு இன்பம்

தருகிறது. கோடைக் காலத்தின் மென்மையான கவர்ச்சி போல் பனிக்காலமும் எனக்கு இனிமையாயிருக்கிறது. கவனித்துப் பார்ப்பவர்களுக்கு வருஷத்தில் ஒவ்வொரு கணத்திலும் இயற்கையின் அழகு சொட்டுகிறது என்பதை உணர்வார்கள். ஒரு வயலில் நாம் காணும் காட்சி அதற்கு ஒரு மணி முந்தியும் கண்டிருக்க முடியாது. பின்னரும் காண முடியாது, வானுலகு கணத்திற்கு கணம் மாறி அதன் சோகத்தையோ பெருமையையோ பூவுலகின் மீது பொழிந்தவண்ண மிருக்கிறது. விளைச்சலின் பொன் நிறம் வாரத்திற்கு வாரம் மாறி பூமியின் கவர்ச்சியை வளம் செய்கிறது. புல் தரையிலும் ரஸ்தா ஓரத்திலும் பருவத்திற்கேற்ப செடிகள் மாறி வருவதிலிருந்து கடிகாரம் மௌனமாக கோடைக் காலத்தில் மணி காட்டுவதற்கும், நாளை காலை, மாலை, முற்பகல், பிற்பகல் எனப் பிரிப்பதற்கும் பொருள் உண்டு என்பதைக் கற்பிக்கிறது. செடிகள் மாதிரியே பட்சிகளும் பூச்சிகளும் அவைகளின் பருவத்திற்கேற்ற முறையிலேயே தோன்றுகின்றன. அவைகள் ஒன்றன்பின் ஒன்றாக வருவதிலிருந்து வருஷத்தில் ஒவ்வொன்றும் நிலவுவதற்கேற்ற காலம் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. நீர் நிலைகளிலும் இன்னும் அதிகமான பாகுபாடுகள் காணலாம். ஜூலை மாதத்தில் நமது நதிகளில் ஆழமில்லாத இடங்களில் சில செடிகள் படர்கின்றன, பூக்கள் மலர்கின்றன. இவைகள் நிறைந்திருக்குமிடங்களில் மஞ்சள் நிறப் பட்டுப்பூச்சிகள் திரள் திரளாக வட்டமிடுகின்றன. இந்தப் பழுப்பு, பொன்னிற வர்ண ஜாலங்களை தேர்ந்த கலைஞன் கூட தோற்றுவிக்க முடியாது. நதியே ஒரு திருவிழாக் கோலத்தில் காட்சி அளிக்கிறதோ என்று ஐயுறும்படி இருக்கிறது. அது ஒவ்வொரு மாதம் தனித் தனி அழகுடன் விசுகிறது.

இயற்கையின் அழகை அழகு என அனுபவிப்பது அதன் சிறப்பில் கடைசிப் பட்சமானது. பனிமூடிய காலை, வானவில், மலைகள், பூத்துக் குலுங்கும் பழத்தோட்டங்கள், நட்சத்திரங்கள், நிலவு, தேங்கிய நீரின்மீது வாழும் நிழல்போன்றவைகளை நாமாக நாடிச் சென்றோமானால் அவைகள் நம்மைக் கண்டு நகையாடும் போலித்தன்மையைக் காட்டும். அவசியமாகப் பிரயாணம் செய்கையில் சந்திர வெளிச்சம் தற்செயலாக நம்மீது வீசினால் நமக்கு

உண்டாகும் இன்ப உணர்ச்சி இணையற்றது. அதை அனுபவிக்கவேண்டும் என விரும்பிச் சென்றால் உண்டாகாது. அது வெறும் தகரத்தின் பளபளப்பு போலாகி விடும். அக்டோபர் மாத பிற்பகலில் பளபளக்கும் மஞ்சள் வெயிலை கட்டிப்பிடிக்க முடியுமா? ஆனால், அதைக் காண்பதற்கென நடந்து சென்றால் அது மறைந்துவிடும் கானல் நீர் போல.

அழகு பூரணமாகத் துலங்கவேண்டுமானால் அதை உணர உயர்தர சக்தி ஆன்மியச் சிறப்பு இருக்கவேண்டும். சிறப்புமிக்க தெய்வீக அழகில் தயக்கமின்றி பற்றுக் கொள்ளவேண்டுமானால் அதில் இயற்கையும் மனித உறுதியும் ஒன்றுபடவேண்டும். நற்குணத்திற்கு ஆண்டவன் இடும் முத்திரைதான் அழகு. இயற்கையான செயல்கள் எல்லாம் இனிமையானவையே வீரச் செயல்களெல்லாம் கண்ணியம் நிறைந்தவை. இம்மாதிரி செயல்கள் அவை நிகழும் இடத்தையும், அதைப் பார்த்து நிற்கும் மக்களையும் சிறப்பிக்கிறது. மகத்தான செயல்களிலிருந்து இப்பிரபஞ்சம் அதில் வாழும் ஒவ்வொருவருக்கும் சொந்தமானது என்பதை அறிந்துகொள்கிறோம். அறிவுள்ள ஒவ்வொருவருக்கும் இயற்கையே சொத்தும், பரிசும் ஆகும். அவன் விரும்பினால் அதைத் தனதாக்கிக் கொள்ளலாம். அல்லது அவன் அதைத் துறந்துவிட்டு ஒரு மூலையில் பதுங்கிக் கொள்ளலாம். மனித ஜாதியில் பலர் இவ்வாறே செய்கின்றனர். ஆனால், இயற்கை இவனுக்குச் சொந்தமானதுதான். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் உலகத்தைப் பற்றிச் சிந்தித்து அந்த சிந்தனை உறுதிப்படுகிறதோ அந்த அளவுக்கு அதை தனது உடைமையாக்கிக் கொள்கிறான். "எதற்காக மனிதர்கள் உழுகிறார்களோ, கட்டிடம் கட்டுகிறார்களோ, படகோட்டுகிறார்களோ அந்த உழைப்பு அவர்களை நற்குணமுடையவர்களாக்கிறது" என்கிறார் ஸாலஸ்ட் (Sallust) காற்றும் அலையும் சிறந்த மாலுமிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன" என்றார் கிப்பன். (Gibbon) இவ்வாறே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் யாவும் மனிதருக்கு உதவியாயிருக்கின்றன. இயற்கை அழகு நிறைந்த இடத்தில் நற்காரியம் செய்தால், லியோனிடாஸும் அவனுடைய முன்னூறு சகாக்களும் ஒரே நாளில் தெர்மாபிலே கணவாயில் மடிந்துகிடக்கையில் அந்த

சோகக் காட்சியை சூரியனும் சந்திரனும் பார்க்கையில், ஆல்ப்ஸ் மலை உச்சியில் பனி சரிந்து வரும் சமயத்தில் ஆர்னல்டு வின்கல்ரீடு (*Arnold Winkelried*) தன் கையிலிருந்த ஆஸ்திரிய வேல்களைக் கொண்டு பனியைச் சிதைத்து அவனது சகாக்கள் நடந்துவர வழிசெய்து வைத்தபோது, இந்தச் சம்பவங்களை எல்லாம் இயற்கையின் மகத்துவமும், வீரர்கள் தீரமும் ஒன்றுபட்டுப் பெருமையளிக்க வில்லையா? கொலம்பஸின் படகு அமெரிக்கக் கடற்கரையை அணுகியபொழுது அங்கு வசித்த காட்டுமிராண்டிகள் தங்கள் குடிசைகளிலிருந்து ஓடோடியும் வந்தனர், பட கொன்றை முதன் முறையாகப் பார்க்க! ஒருபுறம் கடல், மற்றொருபுறம் இந்தியத் தீவுக் கூட்டத்தில் நிறைந்திருந்த மலைச்சாரல்களின் பழுப்புநிறத் தோற்றம் எல்லாம் கொலம்பஸுக்குப் புது உடை தரித்துப் பார்த்துக் களித்தது போன்ற பிரமிப்பூட்டவில்லையா? அவரையும் அந்த இயற்கைக் காட்சியையும் பிரித்துப் பார்க்க முடியுமா? இயற்கை அழகு காற்றுமாதிரி பிறர் பார்க்காமல் வந்து தீரச் செயல்களை அழகுபடுத்துகிறது. ஆங்கிலச் சட்டத்தின் பெருமையை நிலை நாட்டியவன் என்று பிரசித்திப்பெற்ற ஸர் ஹாரிவேன் என்பவரை குற்றம் சாட்டி, சக்கரமில்லாத வண்டியில் இழுத்து வந்தபொழுது அதைக் கண்ணுற்ற கூட்டத்தினரில் ஒருவன், “இம்மாதிரி சிறப்பு மிக்க ஆசனத்தில் நீங்கள் இதற்குமுன் உட்கார்ந்திருக்க மாட்டீர்கள்” என்று கூறினானாம். இரண்டாவது சார்லஸ் (*Charles II*) மன்னன், லாப்டன் வாசிகளை பயமுறுத்துவதற்காக ரஸ்ஸல் பிரபு எனும் தேசபக்தரை திறந்த கோச் வண்டியில் அமர்த்தி நகரத் தெருக்களிலெல்லாம் சுற்றியடித்தானாம். அப்படிக்கிருந்தும் இதுபற்றி அப்பிரபுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் கூறுகிறார்: “அவருடைய இருபக்கத்திலும் சுதந்திரமும் நற்குணமும் வீற்றிருந்ததாக மக்கள் நினைத்தனர். அந்தரங்கமான இடங்களில், சாமான்ய பொருள்களுக்கு மத்தியில் ஒரு உண்மையான காரியம் அல்லது வீர சம்பவம் நிகழ்ந்தால் அந்த இடத்தில் வானம் கோயிலாகவும், சூரியன் திரு விளக்காகவும் காட்சியளிக்கின்றன. அச் சாயங்களில் இயற்கை அன்னை தன் கரங்களால் மனிதனை வாரி அணைத்துக்கொள்கிறாள். அவனுடைய சிந்தனையும் இதற்கேற்ற சிறப்புடையதாயிருக்கட்டும். அவன் போகும்

வழியெல்லாம் அவள் ரோஜாவும், மற்றும் மணம் நிறைந்த புஷ்பங்களையும் சொரிந்துக் கொண்டே போகிறாள். அவளுடைய அருமைக் குழந்தைக்கும் மதிப்பும் இனிமையும் சொட்ட உதவி புரிகிறாள். ஆனால், அவளுடைய எண்ணங்களும் இதற்குச் சமமான மகத்துவமுள்ளதாயிருந்தால்தான் ஈடும் இணையும் பொருந்தியதாயிருக்கும். நற்குணம் படைத்தவன் இயற்கையின் திருவிளையாடல்களில் ஒன்றிவிடுவான். அப்பொழுதுதான் அவன் உலக அரங்கின் மையத்திலிருப்பான். ஹோமர், பிண்டார், சாக்ரடீஸ், போஸியான் முதலியோரை நாம் நினைக்கும் பொழுது, கிரீஸின் இயற்கை அமைப்பும் அதன் சீதோஷ்ண நிலையும் நமது ஞாபகத்திற்கு வருகின்றன. நமது கண்களுக்குப் புலப்படும் விண்ணும் மண்ணும் ஏசுநாதருக்காகக் கண்ணீர் விடுகின்றன. சாதாரண வாழ்க்கையில் சிறந்த நற்குணமும், சுமுகமான பேதையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன், அவன் காலத்தினரின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றதைப் பார்க்கிறோம். இதிலிருந்து இயற்கை மனிதனின் இணையற்ற சாதனம் என்று தெரியவில்லையா ?

3. உலகின் அழகைப் புரிந்துகொள்ள மூன்றாவது முறை ஒன்றிருக்கிறது. அதுதான் அறிவின் மூலம் அழகை அறிவது. பொருள்களுக்கும் நற்குணத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதுபோல் அவைகளுக்கும் அறிவுக்கும் ஒரு சம்பந்தமுண்டு. அன்பெனும் பாசம் இன்றி, உலகை ஆண்டவன் எந்த நீதியின் அடிப்படையில் வகுத்தாரோ, அதை நாடித் தெரிந்து கொள்ள அறிவு விரும்புகிறது. அறிவும் செயல் புரியும் ஆற்றலும் ஒன்றையொன்று தொடர்ந்து வருகிறது. அறிவின் தூண்டுதலால் செயல் பரிணமிக்கிறது. இருந்தாலும் அறிவுக்கும் செயலுக்கும் அவ்வளவாக ஒருமைப்பாடு இருப்பதில்லை. பிராணிகள் முதலில் உண்டுவிட்டு பின்னர் ஓடி ஆடுவதுபோல் மூளை முன்னேற்பாடு செய்கிறது, உடல் ஓடி உழைக்கிறது. ஆகையால் அழகு அழைக்காமலேயே இயல்பாகவே தோற்றமளிக்கிறது. அதை நாடாமலே அழகு பிரசன்னமாகிறது என்று கூறலாம். அறிவு தன்னைப் புரிந்துகொள்ளட்டும், பின்னர் செயல் திறன் தன்னைப் பூஜிக்கட்டும் என அழகு காத்திருக்கிறது போலும். தெய்வீகத் தன்மை வாய்ந்த

எதுவும் அழிவதில்லை. நல்லது என்றென்றும் பெருகிக் கொண்டே இருக்கும். இயற்கை அழகு தானுகவே உரு மாறிக்கொண்டிருக்கிறது. இந்த உருமாற்றம் நாம் கண் மூடிச் சிந்தனை செய்வதற்காக அல்ல, அதனுடைய சிருஷ்டி சக்தியைப் பெருக்கிக் கொள்ள.

உலகின் தோற்றத்தைக் கண்டு மக்கள் யாவரும் ஓரளவுக்கு வியப்படைகிறுர்கள். அதைப் பார்த்துச் சிலர் பரவசமடைகின்றனர். அழகு ஆர்வம் தான் ருசி அல்லது ரஸனை என்பது. இந்த ஆர்வமிகுதியினுல் சிலர் அதைக் கண்டு ஆனந்திப்பதுடன் நில்லாமல், இயற்கை அழகுக்குப் புது உருக்கொடுக்கின்றனர். இம்மாதிரிப் புது அழகின் சிருஷ்டியில் ஈடுபடுவதுதான் கலை.

கலை சிருஷ்டி மனித வர்க்கம் பற்றிய மர்மத்திற்கு விளக்கம் தருகிறது. கலை என்பது உலகத்தை ஒரு அளவுக்குட்படுத்தி அல்லது சுருக்கிக் காண்பிப்பது; இயற்கையின் தோற்றங்கள் பற்பலவாக இருந்தாலும், அவைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தாலும், அவைகள் தோற்றமளிக்கும் முறையும், அவைகளின் முடிவான பலனும், ஒரே மாதிரிதானிருக்கும். பலனும் ஒன்றே தான் உண்டு. இயற்கை ஒரு கடலில் பலப் பல தோற்றங்கள் காண்பதை ஒத்தது. தோற்றங்கள் பல வானுலும் தோன்றும் தன்மை ஒன்றுதான். ஒரு சிலை, ஒரு சூரியக்கிரணம், ஒரு இயற்கைக் காட்சி, கடல் முதலியன பல்வேறு பொருள்களாக இருப்பினும் இவைகள் எல்லாம் மனித உள்ளத்தில் ஒரே வித உணர்ச்சியைத்தான் பதிவு செய்கின்றன. இவைகளுக் குள்ள ஒருமைப்பாடு என்னவென்ருல், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே உள்ள பூர்ணத்வமும் ஒழுங்கு முறையுமே. இதுதான் அழகு எனப்படுவது. இயற்கைத் தோற்றங்கள் பூராவையும் ஒன்று கூட்டிப் பார்ப்பதில்தான் அழகின் தரம் அமைந்துள்ளது. இத்தாலிய தேசத்தவர்கள் அழகு உணர்ச்சி அதிகமாகப் படைத்தவர்கள். அவர்கள் அழகைப் பற்றி விவரிக்கையில் "இயற்கை முழுமையும் திரட்டிக் காண்பதில்தான் அழகு மிளிரும்" எனக் கூறி இருக்கின்றனர்.

தனிப்பட்ட எந்த வஸ்துவுமே மிகவும் அழகாக இராது. சேர்க்கையில் எதுவுமே அழகில்லாமல் இருக்காது.

உலகம் பூராவும் ஊடுருவியுள்ள அழகின் மென்மையை எந்த அளவுக்கு ஒவ்வொருத் தனிப்பொருளும் பிரதிபலிக்கின்றனவோ அந்த அளவுக்குத்தான் அதனிடம் அழகுண்டு.

கவி, சைத்திரிகன், சிற்பி, பாடகன், கட்டிடம் அமைப்போன் முதலியவர்கள், ஒவ்வொருவரும் உலகின் பொலிவில் ஒரு அம்சத்தில் தனிக் கவனம் செலுத்துகின்றனர். அழகில் உள்ள ஆர்வத்தினால் இவர்கள் ஒவ்வொருவரும், தங்களுடைய தனிக் கலையில் உற்சாகம் காட்டி, தங்கள் ஆவலைப் பூர்த்தி செய்துக்கொள்கின்றனர். இவ்விதமாக இயற்கையேதான் மனிதனுடைய ரஸாயன சாலையின் மூலமாக கலையாகத் திகழ்கிறது. இயற்கையின் முதல் வேலைப்பாடுகளைக் கண்டு மகிழ்ந்த மனிதன் அந்த உற்சாகத்தைக் கலைமூலம் காட்டுகிறான்.

ஆன்மாவைப் பொருத்தாட்டில், உலகம் இருப்பதற்குக் காரணமே தன் அழகில் உள்ள ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ளுதற்காகவே என்று சொல்லலாம். இந்த அம்சத்தைத்தான் உலகத்தின் படைப்புக்கு இறுதி நோக்கம் எனக்கொள்ளலாம். ஆன்மா ஏன் அழகை நாடுகிறது என்பதற்குக் காரணம் கேட்கவோ சொல்லவோ முடியாது.

பிரபஞ்சத்தின் ஒரு லட்சணம்தான் அழகு என்று அதற்குச் சிறப்புப் பொருள் கூறலாம். ஆண்டவன் நேர்மையின் அவதாரம் உண்மை, நற்குணம், அழகு இவை யாவும் ஆண்டவனின் தனித் தனியான பல்வேறுத் தோற்றங்கள். ஆனால் இயற்கையில் அழகு காண்பது இறுதி லட்சியமல்ல. அது நித்தியமான அக அழகின் தூதன். அழகு மாத்திரம் தனிச் சிறப்பளிக்க முடியாது. இயற்கையின் ஆதிகாரணம் யாது என்னும் கேள்விக்கு, அழகு என் பதில் கூறுவது முடிவான மறுமொழியாகாது. இயற்கையின் ஆதிகாரணங்களில் அழகும் ஒன்று என்றுதான் கூறலாம்.

4. மொழி

இயற்கை மனிதனுக்கு அளித்துள்ள மூன்றாவது சாதனம் மொழி. நமது சிந்தனைகளை வெளிப்படுத்து

வதற்கான சாதனமாக அமைந்துள்ளது இந்த இயற்கை. இந்த சாதனம் மூன்று வகைகளில் பயன்படுகிறது.

1. இயற்கை உண்மைகளுக்கு வார்த்தைகள் உருவங்களாகும்.

2. குறிப்பிட்ட இயற்கை உண்மைகள் குறிப்பிட்ட ஆன்மிக உண்மைகளின் சின்னங்களாகும்.

3. இயற்கை ஆன்மாவின் சின்னம்.

சொற்கள் இயற்கை உண்மைகளின் சின்னங்கள்.

1. இயற்கை சரித்திரத்தின் பயன் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளின் சரித்திரத்தை அறிந்து கொள்ளவே. நம் உள்ளத்தில் நடைபெறும் சிருஷ்டி சக்தியை விவரிப்பதற்கான வாசகங்களை வெளி உலக சிருஷ்டியிலிருந்து பெறுகிறோம். அறிவு அல்லது மானஸிக உண்மை வெளியிடுவதற்கு; நாம் கையாளும் ஒவ்வொரு வார்த்தையின் மூலத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் அது ஒரு இயற்கை வஸ்துவின் தோற்றத்திலிருந்து உருவாகியது என்பதை அறிந்து கொள்ளலாம். சரியானது (*Right*) என்றால் நேரானது (*Straight*) என்று பொருள். தவறானது (*Wrong*) என்றால் கோணலானது (*Twisted*) எனப் பொருள். ஆன்மா (*Soul*) என்பதற்குப் பொதுவாக முக்கியமாகக் காற்று (*Wind*) என்பது பொருள். பிறளாதது (*Transgression*) என்பதற்கு. ஒரு கோட்டைத் தாண்டுவது எனப் பொருள்; அலட்சியபுத்தி என்பது புருவத்தை நெரிப்பது என்பதிலிருந்து வந்தது. உணர்ச்சி பற்றிப் பேசும்போது ஹ்ருதயத்தைக் குறிப்பிடுகிறோம்; சிந்தனையைக் குறிக்கும்பொழுது தலையைச் சுட்டிக் காட்டுகிறோம்; சிந்தனையும் உணர்ச்சியும் சேதனப் பொருள்களிலிருந்து தோன்றிய வார்த்தைகளானாலும், இன்று அவைகள் ஆன்மிக விஷயங்களிலேயே பயன்படுத்தபபடுகின்றன. வார்த்தைகளின் பிரயோகம் இம்மாதிரி மாறுதலடைந்ததன் காரணத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் மொழி தோன்றிய காலநிலையை ஆராயவேண்டும். ஆனால் அக்கால சரித்திரம் பாசிபடிந்து மறைந்து விட்டது. ஆனால், இதே போக்கை இன்று குழந்தைகளிடம் நாம் காணலாம். குழந்தைகளும் காட்டுமிராண்டிகளும் பொருள்களின் பெயர்ச் சொற்களையே வினைச் சொற்களாக மாற்றிக் கொண்டு, அதேமாதிரி மானஸிகச் செயல்களுக்கும் அப்பெயர்களையே பயன்படுத்துகின்றனர்.

2. மொழி வளர்ச்சி வரலாற்றில் வார்த்தைகளுக்கு ஆத்மாவை சம்பந்தப்படுத்திப் பொருள் காண்பது முக்கிய மான அம்சம். ஆனால் இயற்கையினிடம் நாம் பெறும் பயன்களில் இது அவ்வளவு முக்கியமானதல்ல. வார்த்தை களைச் சின்னங்களாகக் கருதுவதுமின்றி பொருள்களும் சின்னங்கள்தான். ஒவ்வொரு இயற்கை உண்மையும் சம்பந் தப்பட்ட ஒரு உண்மையைக் குறிக்கிறது. இயற்கையின் ஒவ்வொரு தோற்றமும் மானிட உள்ளத்தில் தோன்றிய உருவத்திற்கு ஒத்திருக்கும். உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளுக்கு வெளி உலகிலுள்ள பொருள்களைத்தான் உருவகமாகச் சொல்லவேண்டும். கோபாவேசம் பூண்ட மனிதன் ஒரு சிங்கத்திற்கொப்பாவான். ஒரு தந்திரக் காரன் குள்ளநரியாவான். உறுதியுள்ளவன் கற்பாறை போன்றவன். ஒரு பண்டிதன் ஜோதிக்கு ஒப்பாவான். ஆடு குற்றமற்ற தன்மையைக் குறிக்கிறது. பாம்பு விஷ நெஞ்சுள்ளதைக் காட்டுகிறது. புஷ்பம் நுட்பமான அன் பைக் காட்டுகிறது. ஒளியும் இருளும் ஞானத்திற்கும் அறி யாமைக்கும் ஒப்பிடப்படுகின்றன. வெப்பம் காதலைக் குறிக்கிறது. நமக்கு முன்னும் பின்னும் தொலை தூர மிருந்தால், அதை பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளவும் எதிர்காலத்தில் நம்பிக்கையைப் பெறவும் பயன்படுத்திக் கொள்கிறோம்.

நாம் சிந்தனைப்படி வாழ்ந்திருக்கையில் நீரோடையைப் பார்த்தால், வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைப் பற்றி உடனே நினைக்கத் தோன்றுகிறது. ஒரு நீர் நிலையில் கல் எறிந்தால் அதில் வட்டமான சலனம் ஏற்படுகின்றது. அதிலிருந்து ஒரு பொருள் மற்றொன்றை எப்படி ஊக்கு விக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வில்லையா? தன்னுள்ளே அல்லது தனக்குத் தூண்டுதலாக பரமாத்மா இயங்குகிறது என்பதை மனிதன் இதிலிருந்து உணர் கிறான். அந்த பரமாத்மாவின் நீதி, சத்தியம், அன்பு, சுதந் திரம் யாவும் தோன்றி ஒளி வீசுகிறது. பரமாத்மாவைத் தான் அறிவு என்கிறான் மனிதன். அது என்னுடையது மல்ல, உன்னுடையது மல்ல, மற்றெவருடையது மல்ல. ஆனால், நாம் எல்லோரும் அதைச் சேர்ந்தவர்கள். நாம் எல்லோரும் அதனுடைய சொத்து, அதனுடைய மக்கள். நீலவானம், அதன் ஆதரவில் இயங்கும் பூமண் டலம், பல வர்ண விசித்திரங்கள் அடங்கிய நிச்சலமான

ஆகாயம், முதலிய எல்லாம் அறிவின் அம்சங்கள். நமது புத்தியைக் கொண்டு எதைக் கூறுகிறோமோ அது அறிவு எனப்படுகிறது. இயற்கையுடன் ஒன்றிப் பார்த்தால் அதையே ஆன்மா என்கிறோம். ஆன்மாதான் சிருஷ்டி கர்த்தா, ஆன்மாவுக்கு உயிர் அதனூடே இருக்கிறது. ஆன்மாவைத்தான் எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் தங்கள் தங்கள் மொழிகளில் தந்தை என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

இந்த உவமைகளில் எதுவும் அதிருஷ்டவசமாகவோ காரணமின்றியோ நிகழ்வதில்லை என்பதை எளிதில் புரிந்துக்கொள்ளலாம். அவை நிலையானவை, இயற்கையில் பரவி இருப்பவை. அவை ஏதோ சில கவிஞர்களின் கனவுகளல்ல. மனிதன் எதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் சக்தி வாய்ந்தவன், அவன் எல்லாப் பொருள்களுக்குமுள்ள தொடர்புகளை ஆராய்ந்து அறிந்துக் கொள்கிறான். அவன் யாவற்றிற்கும் நடுநாயகமாக அமைந்திருக்கிறான். மற்றெல்லாப் பொருள்களின் சக்தியும் அவனுள் ஊடுருவிச் செல்கிறது. இந்தச் சூழ்நிலையின்றி மனிதனை அறிந்து கொள்ள முடியாது. மனிதனை நீக்கிவிட்டு அவன் சூழ்நிலையையும் புரிந்துகொள்ள முடியாது. இயற்கை சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளவைகளைத் தனியே பார்த்தால் அவைகளுக்குப் பொருள் விளங்காது, ஆணோ பெண்ணோ தனித்தியங்குவதுபோல் பயனற்றவையாக இருக்கும். செடிகொடிகள் பற்றி லின்னேஸ், பப்பன் முதலியோரின் தாவர வரலாறுகள் வெறும் வறட்டுப் பட்டியல் போன்றவைகள். ஆனால் அவர்கள் கூறியிருப்பதில் ஒரு செடியின் தன்மை அல்லது ஒரு பூச்சியின் சுபாவம் போன்ற சிறு விவரங்களை தத்துவ சாஸ்திரத்தையோ, மனித இயல்பையோ விளக்குவதற்குப் பயன்படுத்தினால், அது நம் மனதில் சூமுகமான உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்துகிறது. ஒரு செடியின் வித்தை, மனித இயல்பை விளக்க எத்தனைவிதமாகத்தான் எப்படிப் பயன்படுத்தியுள்ளது. பால் எனும் ஞானி பிணத்தை ஒரு வித்து என்று வருணித்துப் பின் வருமாறு கூறுகிறார் :—

"மனித உடலைத்தான் இந்த விதை உண்டாக்க முற்பட்டது. அது இப்போது ஆன்மீக உடலை எழுப்பி விட்டது" பூமி தானாக சுழன்றும், சூரியனைச் சுற்றியும் வருவதால்தான் நாள், ஆண்டு எனும் கணக்கு ஏற்பட்டது.

பூமி என்பது ஓரளவு ஒளியும் ஓரளவு வெப்பமும் கலந்தது. மனித வாழ்வுக்கும் பருவங்களின் தோற்றத்திற்கும் உவமை கூறமுடியாதா? மனிதனுடன் தொடர்பு கொள்வதனுல் பருவங்களுக்கு எவ்வித பெருமையும் பச்சாதாபமும் ஏற்படுவதில்லையா? எறும்புகளின் இயல்பை அவைகளின் வாழ்க்கையின் அம்சங்களாக எண்ணிப் பார்த்தால் அவைகள் சாதாரணமானவைதான். ஆனுல், அவைகளின் இயல்பை மனித வாழ்வுடன் பிணைத்துப் பார்த்தால், அந்தச் செய்ததையே செய்யும் சிறு பிராணி மனித சமூகத்திற்கு வழிகாட்டியாகத் தோன்றுகிறது. அது சிறு உருவம் படைத்திருந்தாலும் உறுதியான உள்ளம் படைத்தது என உணருகிறோம். சமீப காலத்தில் எறும்பு தூங்குவதே இல்லை என்று கண்டுபிடித்திருக்கிருர்கள், இதையும் அதன்பிற தன்மைகளையும் நினைத்துப் பார்த்தால் மகோன்னதமாகத் தோன்றுகிறது.

கண்களுக்குத் தோன்றும் பொருள்களுக்கும் மனித சிந்தனைகளுக்கும் இவ்வளவு நெருங்கிய தொடர்பிருப்பதால் காட்டுமிராண்டிகள் தங்கள் தேவைகளுக்கானவைகளை மட்டுமே உடையவர்களாதலால் உவமைகள் மூலமே தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர். சரித்திரத்தின் பழைய ஏடுகளைப் புரட்டினுேமானுல் மொழி சித்திரம் போல இருக்கிறது என்பதை அறிவோம். ஆரம்ப காலத்தில் பேச்செல்லாம் கவிதைகளாகவே இருந்தன. ஆன்மீக உண்மைகளெல்லாம் சின்னங்கள்மூலமாக வெளியிடப்பட்டன. எல்லா மொழிகளும் ஆதியில் சின்னங்கள் மூலமே வெளியாயின. எல்லா மொழிகளிலும் சந்திமிக்க, மக்களைப் பரவசப்படுத்தக் கூடிய வாக்கியங்களின் சொற்ருெடர்களின் மரபு ஒரேமாதிரி அமைந்திருப்பதைக் காணலாம். மொழிகளின் ஆரம்ப முதல் இறுதிவரை இதே ரீதியில் இருக்கின்றன. மொழி வளர்ச்சிக்கு இயற்கையைத் தழுவி நிற்கவேண்டியிருப்பதும், புறப்பொருள்களைக் கொண்டு மனித சிந்தனையை வெளியிடவேண்டிய அவசியம் மக்களை நிடித்துக் கவர்ந்து வந்தது. இந்தத் தன்மைதான் விவசாயி அல்லது காட்டில் வசிப்பவர்களின் பேச்சுக்குத் தனிச் சிறப்பும் கவர்ச்சியும் அளித்தது.

ஒரு மனிதன் தனது எண்ணங்களைத் தக்க உவமைகள் மூலம் வெளியிட வேண்டுமானுல் அவன் உண்மையில்

பற்றுள்ளவனுகவும், சொற்செட்டுடன் பேசுவதில் விருப்பமுள்ளவனுகவும் இருக்கவேண்டும். மனிதனின் மொழி மாசு பட்டவுடன் அவனுடைய குணத்திலும் மாசு படிந்துவிடும். பொன்னுசை, மண்ணுசை, உல்லாஸத்தில் பற்று, புகழ்வேட்கை முதலியவைகளாலும், எளிமை உண்மை இரண்டையும் கைவிட்டு, பொய்யும் பித்தலாட்டங்களும் உயர்வு பெற்றவுடன் எளிமையான குணமும், சிந்தனையின் சிறப்பும் சீர்குலைந்து மனித சித்தத்தை வெளிப்படுத்தும் இயற்கையின் வன்மை குன்றிவிடுகிறது. இயற்கையிலிருந்து உவமைகள் வெளிவருவது தடைப்பட்டு விடுகிறது, வார்த்தைகளின் பொருள் சிதைந்துபோகிறது. கஜானுவில் தங்கம் குறைந்தவுடன் காகித நாணயம் வெளிவருவதுபோல் சொற்களும் சீர்குலைந்து வெளிப்படுகின்றன. நாளாவட்டத்தில் வார்த்தை உலகில் மோசடி பலிந்து வார்த்தைகளுக்கு மனிதரை வசப்படுத்தும் சக்தியோ, அவர்களுடைய அன்பைப் பெறும் சாமர்த்தியமோ நசித்துவிடுகிறது. நீடித்த நாகரிகமுள்ள நாடுகளில் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் தாங்கள் உண்மையைக் கண்டு அவைகளை வெளியிடுவதாக நம்புகிருர்கள். அவ்வாறே பிறரை நம்பும்படியும் செய்கிருர்கள். ஆனுல், அவர்கள் தங்களுடைய சிந்தனைகளை இயல்பான முறையில் வெளியிடுவதில்லை. ஆதிகால ஆசிரியர்கள் இயற்கையைப் பின்பற்றி எழுதி வைத்துப் போன வாசகங்களையே கையாளுகிருர்கள்.

ஆனுல், அறிவாளிகள் இந்த எதுகை மோனைகளை உதறி எறிந்துவிட்டு, மீண்டும் வார்த்தைகளை இயற்கைப் பொருள்களுடன் பொருத்திப் பயன்படுத்துகிருர்கள். இதன் விளைவாக அழகான நடையைக் கையாள்பவன் சத்தியம் கடவுள் இரண்டையும் தனக்குத் துணையாகக் கொண்டுள்ளான் எனும் நற்சாட்சிப் பத்திரம் பெறுகிருன். பழக்கமான உண்மைகளைத் தாண்டி, நாம் விவாதம் செய்யத் தொடங்கினுேமானுல், நம்மைத் தனி உற்சாகமும் சிந்தனை எழுச்சியும் ஆட்கொண்டுவிடுகிறது. நமது நடையும் உவமைகள் நிறைந்ததாக மிளிர்கிறது. ஒரு மனிதன் உள்ளம் ஒன்றிப் பேசினுல், அவன் மனதில் எண்ணங்கள் தோன்றத் தோன்ற அவைகளை விளக்கும் பொருள்களின் உருவங்களும் பிரகாசமாகத் தோன்றி வருவதை உணர்வான். இம்மாதிரி உருவங்கள் எண்ணங்

களின் உடைகளாக அமைகின்றன. நல்ல எழுத்தும் சிறப்பான பேச்சும், உவமைச் சிகரங்களாக அமைகின்றன. இந்த உவமை ஊற்று இயல்பாகவே எழுகின்றது. பழைய அனுபவமும், புதிய செயலும் ஒன்றுபட்டது தான் இந்த எழுத்தும் பேச்சும். இது ஒழுங்கான சிருஷ்டியாகவும் அமைகிறது. ஆண்டவன் தன் சிருஷ்டிகளைக் கொண்டே ஆடும் லீலைகள் இவை.

இந்த உண்மைகளிலிருந்து செயற்கை முறையில் நடக்கும் குறுகிய நகர வாழ்க்கையைவிட, கிராம வாழ்க்கையில் அதிக நலன்கள் உண்டு என்பதைப் பண்பட்ட மனம்படைத்தவர்கள் அறிந்துகொள்வார்கள். இயற்கையினிடமிருந்து நாம் கற்றறிந்த படிப்பினைகளை விவரிக்க இயலாது. இயற்கையின் ஒளி நமது அறிவில் இடைவிடாது வீசிக்கொண்டிருப்பதினால் அது இருப்பதை நாம் மறந்து விடுகிறோம். எவ்வித முன் ஏற்பாடுமின்றி சுற்றியுள்ளவைகளைக் கவனியாமல், இயற்கை வருஷா வருஷம் ரம்மியமாக மாறி வருவதன் பயனாக, இயற்கையை விரும்பும் கலைஞனும், சொற்பொழிவாளனும், ஓசை மிகுந்த நகர வாழ்க்கை, அரசியல் கொந்தளிப்புக்கிடையேயும் இயற்கை அளிக்கும் படிப்புகளை அறிந்துக் கொள்ளத் தவற மாட்டார்கள். தேசிய சபைகளில் கிளர்ச்சியும் அதிர்ச்சியும் தாண்டவமாடுகையிலும், புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கையிலும், இந்தப் புனித உருவங்கள் தங்களுடைய ஒளி மங்காமல் தற்காலிக நிகழ்ச்சிக்கோவைகளின் சின்னங்களாகக் காட்சியளிக்கும். ஒருவன் ஒரு உயர்ந்த எண்ணத்தை வெளியிட்டதும் தன் இளமையில் பார்த்துக் கேட்டமாதிரியே, மரங்கள் குலுங்கும், இலைகளின் அசைவின் ஒலி கேட்கும், ஆறு புரண்டோடிப் பிரகாசிக்கும், மலைச்சாரல்களில் பசுக்கள் உறுமும், இந்தக் காட்சிகளின் ஆதாரத்தினால் மக்களை மயக்கும் சொல்வளமையின் மர்மத்தை மனிதன் புரிந்துக் கொள்கிறான்.

3. ஒரு விஷயத்திற்குக் குறிப்பான பொருள் கூறுவதில் இயற்கைப் பொருள்கள் நமக்கு உதவுகின்றன. ஆனால், எளிய விஷயங்களைப் புகட்ட எவ்வளவு பெரிய பொருள்கள் பயன் படுகின்றன! மனிதனின் சாதாரணத் தேவைகளை விளக்குவதற்கு வார்த்தைகள் காண இவ்வளவுபெரிய பிராணிகள், இவ்வளவு பெரிய உருவங்கள் விண்ணின் பல்வேறுத் தோற்றங்கள் தேவையா? நமது

சாமான்ய விஷயங்களுக்கு வார்த்தைகள் காண்பது இவ்வளவு அகண்டமான சிருஷ்டியை பயன் படுத்துகையில் அதன் பெருமைக்குத் தக்க முறையில் அதைப் பயன்படுத்தவுமில்லை, பயன்படுத்தவும் நம்மால் இயலாது. எரிமலையில் முட்டைகளைப் பொரித்துண்ணும் பிரயாணிகள் போல நாம் இருக்கின்றோம். நமது பேச்சுக்கு உருக் கொடுக்க இயற்கை தயாராயிருக் கையில் இயற்கையே தனித்தியங்கும் சக்தி வாய்ந்ததல்லவா எனும் கேள்வி எழுகிறது. மலைகளை, அலைகளை, வானத்தை உவமைகளாக்கி நம் கருத்துக்களை வெளியிடுகிறோம். இந்த வர்ணனை இல்லாவிட்டால் இவைகளுக்குத் தனிச் சிறப்போ பொருளோ கிடையாதா? உலகமே ஒரு சின்னம் போன்றது. இயற்கை பூராவுமே புத்திக்கு உவமையாயிருப்பதனால், நமது சொற்களும் உவமையாக அமைகின்றன. சன்மார்க்க வழிகளுக்கும் உலகத்திலுள்ள பொருள்களுக்கும் உள்ள உறவு, நாம் நமது முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்வது மாதிரிதான். "நாம் காணும் உலகமும், அதன் பல்வேறு பகுதிகளுக்குள் நிலவும் உறவும். கண்ணுக்குத் தெரியாத பரம் பொருளை அறிவிக்கும் ஒரு தகடு போலாம்". அறநெறி விதிகளை பௌதிக விஞ்ஞான சூத்திரங்கள் விளக்கிக் கூறுகின்றன. உதாரணமாக, "எவ்வஸ்துவும் தன் ஒரு பகுதியைக் காட்டிலும் பரிமாணத்தில் பெரிது" "செயலும் அதன் விளைவும் ஒன்றே." "சிறுகனத்தினால் பெரியகனத்தை நகர்த்தலாம், இரு கனங்களுக்கும் உள்ள வித்தியாசம், காலத்தால் கரைந்துவிடுகிறது" இன்னும் இவைபோன்ற பல சூத்திரங்களுக்கு அறநெறியிலும் பௌதிகவிஞ்ஞானம் இரண்டிலும் பொருள் கூறலாம். நுணுக்கத் துறையைவிட மனித வாழ்க்கைக்கு இந்தச் சூத்திரங்களைப் பொருத்திப் பார்த்தால் பரந்த பொருள் காணலாம்.

இவ்வாறே சரித்திரப் புகழ்பெற்ற போதனைகளும் பல நாட்டுப் பழமொழிகளும் இயற்கையின் ஒருபகுதியையே அடிப்படையாகக் கொண்டவை. ஒரு அறநெறியை விளக்குவதற்கென்றே ஒவ்வொன்றும் தோன்றியவை. உதாரணமாக, 'உருண்டோடும் கல்லில் பாசிபடியாது' கைப் பழத்தை விட்டு தொரட்டிப் பழத்துக்கு அண்ணாராதே "நொண்டியும் சரியான வழியில் சென்றால் தவறான வழியில் செல்லும் ஓட்டக்காரனையும் தோற்கடிப்பான், காற்

றுள்ள போதே தூற்றிக்கொள்'' "நிறைந்த கிண்ணத்தை சிந்தாமல் சுமப்பது கடினம்'', "மது திராட்சையின் மகன்" 'நிலைத்து நிற்கும் மரம் சீக்கிரமே வேரூன்றும்' போன்ற பழமொழிகளைக் கூறலாகும். இவைகளுக்கு வார்த்தைக்கு வார்த்தை பொருள் கண்டால் அதில் சிறப்பு ஒன்றும் இருக்காது, உவமைச் சிறப்புக்காகவே அவைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறோம். பழமொழிகள் மாதிரியே, கட்டுக்கதைகள், மறை பொருள் கதைகள், உவமைக் கதைகள் யாவும் சிறப்பு மிக்கவை.

அறிவுக்கும் பொருளுக்கும் உள்ள இந்தத் தொடர்பு ஏதோ ஒரு கவிஞனின் கற்பனையல்ல, இது ஆண்டவனின் அருள் விளக்கம். ஆகையால் மக்கள் யாவரும் அறிந்து கொள்ளத் தக்கவை. இது மனிதனுக்குப் புலப்படலாம் அல்லது புலப்படாமலிருக்கலாம். இந்த அதிசயத்தை மன நிம்மதியிருக்கையில் மனிதன் சிந்தித்துப் பார்த்தானல், மற்ற சமயங்களில் தான் கண்ணிருந்தும் பாராது காதிருந்தும் கேட்காத இனத்தைச் சேர்ந்தவனுயிருந்தோமே என நினைத்து வருந்துவான். "கோடைக் கால மேகமண்டலம் நம்மைக் கவிந்து கொள்வது போல் அதிசயங்களும் சாத்தியமா ?'' பிரபஞ்சம் கண்ணாடி போலாகி விடுகிறது. பிரபஞ்சத்தைவிட சிறந்த சக்தி வாய்ந்த வசதிகள் அதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றன. இந்த நிலையான பிரச்னை உலகத் தொடக்கத்தில் இருந்தே, அறிஞர்களின் ஆராய்ச்சி சக்தியைக் கவர்ந்து அதிசயமடையச் செய்திருக்கிறது. எகிப்தியர், அந்தணர் காலத்திலிருந்து பிதகோரஸ் பிளேடோ, பேகன், லெய்ப்னிட்ஸ், ஸ்விடன்பர்க் காலம் வரையில், எல்லா அறிவாளிகளையும் அதிசயத்திலாழ்த்தி யிருக்கிறது. இது எப்படி இருக்கிறதென்றல், ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். வழியோரத்தில் ஆரூடம் கூறும் தேவதை அமர்ந்திருக்கிருள். அவள் போடும புதிரை ஒவ்வொரு சகாப்தத்திலும் தோன்றும் தீர்க்கதரிசிகள் புரிந்துகொள்ள முயற்சிசெய்து வந்திருக்கின்றனர். ஆனல், வெற்றி காணவில்லை. ஆன்மாவுக்கு தன் சக்தியை உலகப் பொருள்கள் மூலம் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. இரவும் பகலும், ஆறும் புயலும், பிராணியும் பட்சிஜாலங்களும், திராவகமும் அதற்கு மாற்றும், ஆண்டவன் திருவுள்ளத்தில் ஏற்கனவே எண்ணங்க

ளாகத் தோன்றியிருக்கவேண்டும் ; ஆன்மீக உலகத்தில் அவைகள் மேலுள்ள பாகத்தின் விளைவாக, பொருள் களாக உருப்பெற்றிருக்கின்றன. ஆன்மீக சக்தியின் முடிவே பொருள். காணாத உலகின் எல்லைக் கோடுகளே காணும் பொருள்கள், "ஜடப்பொருள்கள் சிருஷ்டி தெய் வத்தின் உள்ளத்தின் உருக்கள். உருப்பெற்ற தோற்றத் திற்கும் அதற்கு அடிப்படையாயிருந்த எண்ணத்திற்கும் ஒரு ஒழுங்கான தொடர்பு நிச்சயமாக இருக்கவேண்டும். நம் கண்ணில் தென்படும் இயற்கைக்கு, ஆன்மாவின் அறநெறி அம்சம் இருக்கத்தான் வேண்டும்" என ஒரு பிரஞ்சு தத்துவஞானி கூறுகிறார்.

இந்த தத்துவம் விளங்கக்கூடியதாக இல்லை. புழு, ஆடை, பிரதிபிம்பம் இன்னும் மற்றவைகளின் உருவங்கள் நமது கற்பனைசக்தியைத் தாண்டினால், இதற்கு நுட்பம் வாய்ந்த விமர்சகர்களின் உதவி தேவையாயிருக் கிறது. "ஒவ்வொரு மத சாஸ்திரத்தையும் அதை சிருஷ் டித்தவர் நோக்கத்தை ஒட்டியே புரிந்துகொள்ளவேண்டும், இதுதான் விமர்சன சாத்திரத்தின் அடிப்படையான கோட்பாடு. இயற்கையோடியைந்த வாழ்வு, உண்மை, அறம் முதலியவைகளில் பற்று இருந்தால், இயற்கையின் இன் மொழிகளை நன்கு புரிந்துகொள்ள முடியும். இயற்கை யில் நிலையான உருவங்கள் எந்த அடிப்படையில் உருப் பெற்றன என்பதை, நாம் கொஞ்சங்கொஞ்சமாக அறிந்து கொண்டால், உலகத்தை நாம் எளிதில் புரிந்து கொள்வ துடன் அதில் மறைபொருளாயிருப்பவைகளின் காரண காரியங்களை உணர்ந்துக் கொள்ளலாம்.

இந்த எண்ணம் நம்மை ஆட்கொண்டிருக்கையில் எதிர்பாராத புது அக்கறை ஒன்று தோன்றுகிறது. எவ்வளவு விதமான பொருள்கள் காட்சிகள் நம் முன் நிற்கின்றன என்பதை நினைத்தமாத்திரத்திலேயே பிரமிப்பு அடைகிறோம். ஏனெனில், "ஒவ்வொரு பொருளையும் சரியான முறையில் பார்த்தால் ஆன்மாவின் ஒரு புதிய சக்தியை வெளிப்படுகிறது." ஒரு புலப்படாத உண்மையாயிருந்தது, ஒரு பொருள் மூலம் விளக்கப் பட்ட வுடன் அது நமது ஞானக் களஞ்சியத்தில் சேர்ந்து நமது சக்தியைப் பெருக்குகிறது.

5. கட்டுப்பாடு

இயற்கைக்கு நாம் கண்ட சிறப்புகளிலிருந்து ஒரு புது உண்மை வெளிப்படுகிறது. இயற்கையே ஒரு கட்டுப்பாடு என்பதுதான் அது. இவ்விதக் கட்டுப் பாடுடன் இயங்கும் இயற்கையினால் மனிதன் அடையும் பயன்களில்—நான் முன்னமே இயற்கையில் கண்டபயன் களும் அடங்கியிருக்கின்றன.

இடைவெளி, காலம், சமூகம், காலநிலை, உணவு, அசைவு, பிராணிகள். இயற்கை நுட்பசக்திகள் இவை யாவும் ஒவ்வொரு தினமும் நமக்கு பாடம் கற்பித்து வரு கின்றன. இவைகளிலிருந்து நாம் அறிந்துக்கொள்ளக் கூடிய உண்மைகள், எண்ணற்றது. இது நமது உணர்வு, அறிவு, இரண்டுக்கும் பயிற்சியளிக்கின்றன. ஜடப்பொருள் களின் ஒவ்வொரு தன்மையும் நமது உணர்வுக்கு விருந்து அளிக்கிறது. அதன் கடினம், எதிர்க்கும் சக்தி அசையாத் தன்மை, விரிந்து கொடுக்கும் இயல்பு, அதன் தோற்றம், அதை வகுத்துப் பிரிப்பதற்கான இயல்பு முதலியன வற்றை உதாரணங்களாகக் கூறலாம். நமது உணர்வு அவைகளைக் கூட்டுகிறது, பிரிக்கிறது, ஒன்று சேர்க் கின்றது, அளக்கிறது. இவை மூலம் உணர்வு வளம் பெற்று மேன்மேலும் செயல் புரியும் ஆற்றலையும் பெருக்குகிறது. உணர்வின்மூலம் அறிந்துகொண்ட இந்தப் படிப்பினைகளை, அறிவுப், பொருளுக்கும் மனதுக்கும் உள்ள நித்ய உறவை அறிந்து அவைகளைத் தன் சிந்தனைகள் சிறப்புறுவதற்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

1. அறிவால் புரிந்துக் கொள்ளக் கூடிய உண்மைகளை அறிவதில், உணர்வுக்கு இயற்கைக் கட்டுப்பாடுடன் பயிற்சி அளிக்கிறது. சேதனப் பொருள்களுடன் நமது தொடர்பு பலவித பலன்களை அளிக்கிறது. பொருள்களுள் உள்ள மாறுபாடு, ஒருமைப்பாடு, ஒழுங்கு, அவை இருப்பது, தோற்றமளிப்பது, அபிவிருத்தியடைவது முதலியவற் றைப் புரிந்துகொள்ள உதவுகிறது; குறிப்பிட்ட பொருளி லிருந்து அவைகளுடைய பொதுப்படையான லட்ச ணங்களை அறியலாம்; பலவித சக்திகள் குறிப்பிட்ட ஒரு நோக்கம் நிறைவேற பலவற்றை ஒன்று சேர்த்தல்; ஒரு முக்கிய உருப்படை அமைப்பதற்கான வழிகளைக் கவனத் துடன் பரிசிலனை செய்தல், இம்மாதிரி கவனம் செலுத்து

வதில் தவறக் கூடாது. மக்களின் சாமான்ய அறிவை வளர்த்துப் பக்குவப்படுத்த தினம் தவருமல், வருஷா வருஷம் இடைவிடாது பயிற்சி பெறவேண்டியிருக்கிறது; எவ்வளவு ஓயாத தொல்லேகள், அசௌகரியங்கள், தர்ம சங்கடமான நிலேகளே அனுபவிக்க வேண்டியிருக்கிறது? மனத்துக்கு வழி காட்ட எவ்வளவு கஷ்டங்களே வட்டியும் முதலுமாகப் படவேண்டியிருக்கிறது. "நல்ல எண்ணங்கள் நிறைவேற்றப்படா விட்டால் அவைகள் நல்ல கனவுகளாகத்தான் முடியும்" எனும் உண்மையை அறிய நாம் எத்தகைய கஷ்டங்களே அனுபவிக்க வேண்டியிருக்கிறது?

சொத்து, அதன் உடன் பிறந்தவைகளாகிய வருவாயும் கடனும் இம்மாதிரியே மனிதனுக்கு நன்மை பயக்குகின்றன. ஆளே அரித்துத் தின்னக் கூடிய கடன் தொல்லே, கைம்பெண்களும், அனுதைக் குழந்தைகளும், அறிவாளிகளின் வார்சுகளும் அஞ்சி வெறுக்கின்ற கடன், காலத்தை வீணுக்குகிற கடன், மகத்தான மன உறுதியுள்ளவனேயும் சக்தியற்றவனுகச் செய்துவிடுகிற கடன்தொல்லே; அப்படிப்பட்டக் கடனுல் நாம் கற்றறிந்து கொள்ளக் கூடிய படிப்பினேகள் ஏராளம். அதனுல் அதிகமாகத் அல்லலுறுபவர்களுக்கே இதன்படிப்பினேகள் அவசியமாயிருக்கிறது. சொத்தைப் பனிக்கட்டிக்கு ஒப்பிடுகிருர்கள். "இன்று பனி படியும், நாளே அது சிதறுண்டு விலகிவிடும்." கடிகாரத்தினுள் யந்திரமிருந்து காலம் காட்டும் முள்ளேத் திருப்புகிற மாதிரி இதிலும் ஏதோ யந்திரமிருந்து வேலே செய்கிறது.

வெளித்தோற்றத்தை உணர்ந்து கொள்வதிலுள்ள பண்பாட்டில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டால் மனிதனின் தன்மையும் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது; உதாரணமாக தோற்ற மாறுபாடுகளே நாம் புரிந்துகொள்வதை எடுத்துக்கொள்ளலாம். காலமும், அளவும் எதற்காக இருக்கின்றன? பொருள்களெல்லாம் ஒரே குவியலாக இல்லே. அவைகளேப் பிரித்துப் பிரித்துப் பார்த்தால்தான் அவைகளுக்கு அர்த்தமுண்டு என்பதை அறிந்து கொள்ளவே இருக்கின்றன என்பது விளங்கும். ஒரு மணிக்கும் கலப்பைக்கும் தனித்தனி உபயோகமிருக்கிறது. மணியைக் கொண்டு உழ முடியாது. கலப்பையைக் கொண்டு மணியடிக்க முடியாது. தண்ணீர் குடிப்பதற்கு, நிலக்கரி எரிப்பதற்கு, ரோமம் உடை தயாரிக்க நல்லவை. ஆனுல்

ரோமத்தைக் குடிக்க முடியாது, தண்ணீரை நெய்ய முடியாது, நிலக்கரியை உண்ண முடியாது. புத்திசாலியானவன் பொருள்களைப் பிரிப்பதில், தரத்தை நிர்ணயிப்பதில் தன் அறிவைக் காட்டுகிறான். பிராணிகளை அறிந்து அவைகளின் தரத்தை மதிப்பிடும் மனித சக்தி இயற்கையைப் போல் பரந்தது. முட்டாள்களுக்கு இவ்வளவு பரந்த உணர்வு கிடையாது. அவர்கள் நோக்கில் எல்லா மனிதர்களும் ஒரே தரத்தைச் சேர்ந்தவர்கள் என வைத்துக் கொள்ளலாம். அவர்களுக்கு நல்லதில்லை எனத் தோன்றுவிதை யெல்லாம் தீயது என்பார்கள், வெறுப்புத் தட்டாதவைகளை யெல்லாம் சிறந்தது எனக்கொள்வார்கள்.

இம்மாதிரியே இயற்கை நம்மை எந்த அளவுக்குப் பெருமைப் படுத்துகிறது. நாம் இயற்கைக்கு மாறாக நடந்தால் அது நம்மை மன்னிப்பதில்லை. அது ஆம் என்று சொன்னால் இணக்கம்தான், இல்லை என்று சொன்னால் இல்லைதான்.

விவசாயம், வான சாஸ்திரம், பிராணிகள் சாஸ்திரத்தில் ஆரம்ப நிலையில் இயற்கையின் போக்கைக் கவனித்தால், இந்தத் துறைகளில் நாம் உதவாதது என்று ஒதுக்குபவைகளில் சிறப்பான பயன்கள் இருப்பதைக் காணலாம். பௌதிக விஞ்ஞான சாஸ்திர விதிகளை அறிவு எவ்வளவு நிதானமாக, சுமுகமாகப் புரிந்துகொள்ளுகிறது? சிருஷ்டி ரகஸ்யத்தை மனிதன் அறிந்துகொள்ள முற்படுகையில் அவன் உள்ளத்தில் எவ்வித நுட்பமான உணர்ச்சிகள் பொங்கி எழுகின்றன? இவ்வுணர்ச்சிகள் மூலம் இவ்வுலகில் தான் ஜனித்தது பற்றி எவ்வளவு பெருமையடைகின்றான். இந்த உள்ளுணர்வு அவனை மேன்மையுறச் செய்கிறது. இயற்கையின் வடிவழகு அவன் உள்ளத்தில் ஒளி வீசச் செய்கிறது. மனிதன் தான் நினைப்பதைவிட உயர்ந்தவன். பிரபஞ்சம் இவனைவிடக் கீழ்ப்பட்டது. ஏனெனில் விஞ்ஞான விதிகளை உணர உணர கால அளவு எல்லாம் மறைந்து விடுகிறது.

பிரபஞ்சத்தில் நாம் கல்லாதது உலகளவு என்பதை அறிந்தால் நமக்கு பிரமிப்பும் மலைப்பும் ஏற்படுகிறது. 'கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு'. சமீபத்தில் வெளிவந்த விஞ்ஞான சஞ்சிகையைத் திறந்து அதில் ஒளி, சூடு, மின்சாரம், காந்த சக்தி, உடலமைப்பு, பூமி சாஸ்திரம் முதலியன சம்பந்தமான எவவளவு

பிரச்னைகளைக் குறிப்பிட்டிருக்கின்றனர் எனப் பாருங்கள்; இயற்கை சாஸ்திர ஆராய்ச்சியில் முடிவு ஏற்படுவதற்கு வழி இருக்கிறதா எனப் பாருங்கள்.

இயற்கையில் உள்ள கட்டுப்பாடுகள் பற்றிய ஆராய்ச்சியை முடிக்குமுன் அவைகளில் இரண்டைப் பற்றிக் குறிப்பிடவேண்டும்.

ஒவ்வொரு நிகழ்ச்சியின் மூலம் மனிதன் தன் மன உறுதியையும் அதனால் ஏற்படும் சக்தியை எப்படிப் பயன்படுத்துகிறான் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். குழந்தையா யிருக்கையில் புலன்களின் தூண்டுதலால் செயல் புரியும் காலத்திலிருந்து எல்லாம் “அவன் அருள்” என்று நம்பும் காலம் வரையில் எல்லா நிகழ்ச்சிகளையும் தனது ஆட்சிக்குட்படுத்தும் வகையை மனிதன் அறிந்துகொண்டு வருகிறான். இந்த அறிவின் காரணமாக எல்லாவற்றையும் தன் இயல்பு குணம் இரண்டிற்கும் ஏற்றபடி அமைத்துக் கொள்கிறான். இயற்கை மனிதன் இட்ட பணியைப் புரிகிறது. மனித ரட்சகன் ஏறிச் சென்ற கழுதைபோல் மனித ஆதிக்கத்தை இயற்கை பணிவுடன் ஏற்கிறது. இயற்கை தனது பரந்த ராஜ்யத்தை மனிதன் இஷ்டப்படி அமைத்துக் கொள்ள விட்டுவிடுகிறது. மனிதனும் சலியாமல் இயற்கையைத் தன் வரப்படுத்தி வருகிறான். நுட்பமான காற்றைக் கொண்டு அவன் இனிய சொற்களை அமைத்து விடுகிறான். சொற்கோர்வைகள் மனிதனை மயக்கவும், அவனை ஆட்கொள்ளவும் பயன்படும் முறையில் அவைகளை உருவாக்குகின்றான். அவனுடைய சிந்தனையின் வெற்றி, நாளாவட்டத்தில் இயற்கையை மனிதனின் மாற்றுருவாக்கி விடுகிறது.

2. கண்ணுக்குப் புலப்படும் பொருள்கள் அறிவு எதிர்பார்க்கிறபடியே அமைவதுடன், மனிதனின் மனச் சாட்சியையும் பிரதிபலிக்கிறது. எல்லாப் பொருள்களும் அறத்திற்குட்பட்டவைகளே. அவைகள் எண்ணற்ற மாறுதல்களை அடைவதின் மூலம் ஆத்மிக இயல்பை யொட்டியே பரிணமிக்கின்றன. ஆகையால் தோற்றத்திலும் வர்ண விசித்திரத்திலும், அசைவிலும் இயற்கை மகத்தான கவர்ச்சியுடன் காட்சியளிக்கிறது. கண்ணுக் கெட்டாத தூரத்திலுள்ள பிற கிரகங்களும், ரஸாயனத் துறையில் பண்படாத கல்லிலிருந்து வாழ்க்கை விதிகள்

வரையில் ஒவ்வொன்றிலும் ஏற்படும் மாறுதல்களும், ஒரு இலை துளிர்ப்பதிலிருந்து மரங்கள் காடாக வளர்வதன் மூலம் காணும் தாவர மாறுதல்களும், சிறு புழுவிலிருந்து எமன் போன்ற மனிதர் வரையிலுள்ள ஜீவராசிகளில் காணும் மாறுபாடுகளும், மனிதனுக்கு சூசகமாகவோ இடி முழக்கத்தின் மூலமோ மனிதனுக்குத் தர்ம அதர் மத்தை உணர்த்தி, ஏசுநாதரின் பத்து ஆணைகளையும் வலியுறுத்துகின்றன. ஆகையால் இயற்கையை எப்போதும் சமயத்திற்கு ஏற்ற துணை எனக் கொள்ளவேண்டும். சமயக் கருத்துகளும் கோட்பாடுகளும் இயற்கையின் மூலம் விளக்கமும் வெளிச்சமும் பெறுகின்றன. டேவிட், இஸ்ஸயா, ஏசுநாதர் போன்ற ஞானிகளும் தீர்க்க தரிசிகளும் இயற்கையிலிருந்து ஆழ்ந்த ஆதர்சம் பெற்றிருக்கின்றனர். இந்த அறநெறி அம்சம் இயற்கையை ஊடுருவிப் பாய்வதிலிருந்து இயற்கை அறநெறியை வற்புறுத்தவேதான் தோன்றியதோ என்றுகூட நினைக்க வேண்டியிருக்கிறது. இயற்கையின் எந்தப் பகுதியை தனிப்பட்டோர் பயன்படுத்திக் கொண்டாலும் அறநெறி புகட்டுவது அதன் பொதுவான பயன் எனக் கூறலாம். இயற்கையை முதன் முதல் பயன்படுத்துவதன் மூலம் அப்புறம் அது எதற்கும் உதவாமல் போய்விடும் என்று சொல்லமுடியாது. ஒரு பொருளைப் பூராவும் பயன் படுத்திக் கொண்டபிறகு அதற்குப் புது உபயோகம் காணலாம். கடவுளுக்கு எல்லையே இல்லை. அவரை ஒரு பகுதியில் அறிந்தால் அதே பகுதி மூலம் புதிய கருத்தையும் பயனையும் அறிந்து கொள்ளலாம். ஒரு பொருளைப் பார்த்தால் அது அற்பமாகவும் பொருளில்லாதது போலும் தோன்றலாம். ஆனால் அதிலிருந்தே அதைமேலும் பலவகைகளில் பயன்படுத்தலாம் என்பதை மனிதன் அறிந்து கொள்கிறான். அதாவது ஒரு பொருள் பயன்படும் வரையில்தான் அதற்கு முக்கியத்வமுண்டு. பல பகுதிகளை ஒன்றுபடுத்தி அதன்மூலம் புதுப் பயன் காண்பது மனித வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது. முதலில் இந்த சாமான்ய உண்மையை அறிந்து கொள்வதுதான் பொருள்களையும் தேவைகளையும் மதிப்பிடுவதில் நாம் கற்கவேண்டிய முதல் பாடமாகும்.

இயற்கையில் ஒவ்வொரு அசைவும் ஒரு அறநெறி படிப்பினையின் விளக்கமாகும் என்பதற்கு உதாரணங்கள்

கண்டோம். இயற்கை தர்மத்தின் அடிப்படையில் திகழ்ந்து, தன் ஒளியைச் சுற்றுப்புறமெங்கும் வீசுகிறது. இந்த சிறப்புத்தான் எல்லாப் பொருள்களுக்கும் உள்ள தொடர்பு, ஜீவநாடி, இயங்குமுறை. நாம் கையாளும் பொருள்களெல்லாம் நமக்கு போதிக்கின்றன. ஒரு வயல் நமக்கு மௌனமாக போதிப்பதுவேதம் தவிர வேறென்ன? கோதுமையும் அதனை மூடியிருக்கும் பதரும், செடிகளும் களைகளும், வெளிச்சம், மழை, பூச்சிகள், சூரியன் எல்லாம் வஸந்தகாலப் புத்தொளியிலிருந்து வயற்காடுகளை பனிப் படலம் மூடும்வரையில் யாவும் புனித சின்னங்கள். ஆனால் மாலுமி, இடையன், சுரங்கத் தொழிலாளி, வர்த்தகன், எல்லோரும் தம் தம் துறையில் ஒரேமாதிரி அனுபவம் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் அனுபவங்களிலே யிருந்து ஒரேமாதிரி படிப்பினை பெறுகின்றனர். ஏனெனில் எல்லாவித அமைப்புகளும் ஒரேமாதிரியானவை. காற்றில் கலந்துஅதற்கு மணமளிக்கும் இந்த சன்மார்க்க எண்ணம் தானியத்துடன் வளர்ந்து உலகத்து ஓடை நீருடன் கலந்து, அதை மனிதன் அருந்தி ஆன்ம லாபத்தைச் சிறப்பாயடைகிறான். மனிதனை ஆட்கொள்ளும் சன்மார்க்க சக்தி அவனுக்கு அந்த அளவுக்குப் பல உண்மை களை உணர்த்துகிறது. இந்த சக்தியை எப்படி மதிப்பிடுவது? கடல் நீரால் உரம் பெற்ற கற்பாரை அதற்கருகாமையில் மீன் பிடிக்கும் செம்படவனுக்கு எந்த அளவுக்கு மன உறுதியளித்திருக்கிறது என்பதை யார் அறிவர்? ஆழமில்லாக் கடல்போல் மேலே காணும் நிர்மலமான வானவெளியில் காற்று மேகமண்டலங்களை எவ்வளவு அடித்து விரட்டினாலும் அதில் கடுகளவுகூட களங்கம் விளைவிக்கவில்லை. இந்தக் கண்கவர் காட்சியைக் காணும் மனிதன் எந்த அளவுக்கு மனநிறைவு பெற்றிருக் கிறான்? மிருகங்கள் ஆடும் கூத்திலிருந்து நாம் எந்த அளவுக்கு உழைப்பின் வலிமையும் செயற் சிக்கனமும், சுற்றத்துப் பாசமும் கற்றுக்கொண்டிருக்கிறோம்? ஆரோக் கியத்தின் பல லட்சணங்கள் நமக்கு எவ்வளவு நல்லுப தேசங்கள் செய்கின்றன.

நாம் எங்கு பார்த்தாலும் காணும் இயற்கை பல்வேறு தோற்றங்களில், ஒருவித ஒருமைப்பாடிருப்பதையும் புரிந்து கொள்ளலாம். பொருள்கள் பலதரப்பட்டவையா யிருந் தாலும் அவைகள் நம் மனத்தில் ஒரேவிதமான கருத்

தையே பதிய வைக்கின்றது.

எங்கு நோக்கினும் எல்லாம் ஒருமையை நோக்கியே விழைகின்றன என கிரேக்க அறிஞர் ஜெனபேன்ஸ் தனது முதுமைப் பிராயத்தில் குறைப்பட்டுக் கொண்டார். பல விதத் தோற்றங்களிலும் ஒரே அம்சத்தைக் கண்டு அவர் சலிப்புற்றார். புரோடியஸின் வரலாற்றில் ஒரு நல்ல உண்மையைக் காணலாம். ஒரு இலை, ஒரு துளி, ஒரு கல், ஒரு விநாடி, இவை ஒரு முழு சிருஷ்டியின் பகுதிகள். ஒவ்வொன்றும் முழுதின் பூர்ணத்துவத்தைப் பெற்றவை. ஒவ்வொரு அணுவும் சிறிய அளவில் அண்டமே. அண்டத்திலுள்ளவற்றை எல்லாம் உண்மையாக இந்த அணு பிரதிபலிக்கிறது.

ஒரேமாதிரி அமைப்புள்ள பொருள்களிலும் ஜீவராசிகளிலும் ஒருமைப்பாடு இருப்பது பார்த்தவுடனே விளங்குகிறது. சரித்திர காலத்திற்கு முன்னால் வசித்து இப்போது உலகத்திலிருந்து மறைந்துபோன ஒருவகை முதலை இனப்பிராணிகளின் உடலமைப்பில் மனிதனுடைய கைகள் போலவே உறுப்புக்கள் இருந்ததை உதாரணமாகக் கூறலாம். மேலோட்டமாக ஒரேமாதிரி அமைப்பில்லாத பிராணிகளின் அமைப்பிலும், ஒருவித ஒருமைப்பாடு இருப்பதைக் கூர்ந்து நோக்கினால் காண முடியும். டிஸ்டேலும் (*De Stael*), கதேயும் (*Goethe*) கட்டிட அமைப்புக் கலையை "உறைந்த இசை" என்கின்றனர். விட்ருவியஸ் என்ற ஒரு அறிஞர் கட்டிடம் அமைப்பவன் ஸங்கீத அபிமானியாக இருக்கவேண்டும் என அபிப்பிராயப் படுகிறார்.

"பண்டைக் காலத்திய காதிக் (*Gothic*) முறையில் கட்டப்பட்ட மாதாகோவில் கல்லாய் மாறின மதம் போன்றது" என காலரிட்ஜ் கூறுகிறார். கொத்தன் ஸங்கீதக் கலை தெரிந்தவனாயிருக்க வேண்டும் என்று விட்ருவியஸ் கூறினார். கொல்லனுக்கு உடற்கூறு சாஸ்திரம்கூட தெரிந்திருக்க வேண்டும் என மைக்கேல் ஆஞ்சலோ என்ற பெரியார் சாதித்தார். ஹேய்டன் ஆற்றிய சொற்பொழிவுகள் பற்றிய குறிப்புகள் பாம்பு, மான், யானை போன்றவைகளின் சலனங்களை மட்டுமின்றி புல் தரையின் பசுமையையும் படிப்போர் மனத்தில் பதிந்தன. நதி நீர் ஓடியதனால் கற்பாறை தேய்கிறது. ஒலியின் இன்னிசை பற்றிய விதியே வர்ணத்தின் வசீகரத்திற்குப் பொருந்தும்.

பாறை எப்படி கெட்டிப்படுகிறது என்பது பற்றிய விதிகளுக்கும், பாறைமீது ஓடி அதைத் தேயச் செய்யும் நீர் பற்றிய விதிகளுக்கும் இவைகளில் உஷ்ணம் எதில் கூடுதலாயிருக்கிறது, அல்லது குறைவாக யிருக்கிறது என்பது பற்றியும் வித்தியாசம் காணலாம். ஆறு ஓடும் பொழுது அதன்மேல் வீசும் காற்றை ஒத்தே இருக்கிறது. காற்று அதன்மேல் வீசும் ஒளியை ஒத்தே இருக்கிறது. ஒளி அதனூடு செல்லும் உஷ்ணத்தை ஒத்தே இருக்கிறது. ஒவ்வொன்றும் மற்றொன்றின் மாறுபட்ட உருவம். அவைகளுள் உள்ள மாறுபாடுகளைவிட ஒருமைப்பாடே அதிகம். அவைகளை ஊக்குவிக்கும் தீவிர சக்தி ஒன்றே யாகும். ஒரு கலைக்கான விதியும், ஒரு ஸ்தாபனத்திற்கான சட்டமும் இயற்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தும். இந்த நெருங்கிய ஒருமைப்பாடு இயற்கையின் உள்ளுடையாக அமைந்து இயற்கை எல்லாம் பரம் பொருளிலிருந்துதான் தோன்றியது என்பதை குறிப்பாலுணர்த்துகிறது. இது சிந்தனையிலும் பரவி நிற்கிறது. நாம் வார்த்தைகள் மூலம் தெரிவிக்கும் உலக மொப்பிய உண்மை மற்ற உண்மைகளுக்கு விளக்கமாக அமைகிறது. ஒரு வட்டத்திற்குள் பல வட்டங்கள் அடங்கி ஒன்றி யிருப்பது போலிருக்கிறது இந்த பிரபஞ்ச உண்மை. உண்மை ஒவ்வொரு பகுதியும் ஒரு கோணத்திலிருந்து பார்க்கும் முழு உண்மையாகும். இவ்வாறாக உண்மைக்குப் பல கோணங்கள் இருக்கின்றன.

இயற்கையில் எங்கும் வியாபித்திருக்கும் இந்த ஒருமைப்பாடு செயல் துறையில் பலவித சிறப்புகளை வெளிப் படுத்துகின்றது. மனத்தின் மதிப்பிட முடியாத உருவங்கள்தான் வார்த்தைகள். உண்மையில் காணும் பல பரந்த அம்சங்களை அவைகளால் விளக்க முடியாது. அவைகள் உண்மையைச் சிதைத்து உடைத்து உருவற்றதாகச் செய்யலாம். சிந்தனைக்கு முழு உருக் கொடுத்து வெளிப்படுத்துவதே செயலாகும். ஒரு நல்ல காரியம் கண்ணைக் குளிர வைக்கிறது. அதன் மூலம் இயற்கை யாவற்றுடனும் உறவு கொள்கிறது. "ஒரு ஞானி ஒரு காரியம் செய்வதனால் யாவற்றையும் செய்து விடுகிறான். ஒரு காரியத்தை நேர்மையுடன் செய்வதில் மற்ற நல்ல காரியங்களின் சாயலைக் காண்கிறான்."

சொற்களும் செயல்களும் மிருக இயல்பின் லட்சணங்க

ளல்ல. அவைகள் நம்மை மனித உருவத்திற்கு அறிமுகம் செய்து வைக்கின்றன. மற்ற சிருஷ்டி அமைப்புக்கள் மனித உருவத்தின் சிதைவுகள் போலிருக்கின்றன. இவைகள் சூழ நாமிருக்கையில் மற்றெல்லாவற்றையும் விட நம் உணர்வு அவைகளையே விரும்புகின்றது. அவைகளை நோக்கி மனித உணர்வு, " இவைகள் போன்றவைகள் மூலம்தான் நான் மகிழ்ச்சியுற்றிருக்கிறேன், ஞானம் பெற்றிருக்கிறேன்; இவைகள்மூலம் நான் என்னையே அறிந்துகொண்டேன்; நான் அவைகளுடன் பேசுவேன். அவைகளும் என்னுடன் பேசும். உருவான எண்ணங்கள் உதிக்க அவை எனக்கு உதவிபுரியும் " எனக் கூறுகிறது. உண்மையில் இந்த ஆண் பெண் உருவங்கள் நமதுகண்களுக்கும் மனத்துக்கும் துணையாக வருகின்றன. இயற்கை, உள்ளம், சக்தி முதலியவற்றைப் பற்றி நமக்கு ஞானமூட்டும் சிருஷ்டிகள் இவைகளே. ஆனால், துரதிருஷ்டவசமாக ஒவ்வொன்றும் ஏதோ காயம்பட்டதுபோல் காட்சியளிக்கிறது. வெளிப்பார்வைக்கு ஏதோ குறைபாடுள்ளது போல், மாசு படிந்ததுபோல் காண்கிறது. எனினும் சுற்றியுள்ள இயற்கையின் ஜடப்பகுதி போலல்லாது சிந்தனையும் நற்குணமும் கலந்த ஆழங்காணாத கடலுக்கு நீர்க்குழாய் போலவும், அவைகளுள் புகுவதற்கான நுழைவாயில்கள் போலும் அமைந்திருக்கின்றன.

நமக்குக் கல்வி புகட்டும் சாதனங்கள் அமைந்திருப்பது பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் அதற்கு முடிவு காண முடியாது. நமக்கு விவரந் தெரிந்த வயது வந்த காலங்களில் சில சிநேகிதர்கள் போல் அமைந்துள்ளன. வானமும் நீரும் போல நமது சிந்தனையுடன் அவை இணைந்து நிற்கின்றன. இவைகள் நமது ஆன்ம பாசத்திற்குப் பாத்திரமாகி நமக்கு அந்த அளவுக்குப் பேரின்ப மளிக்கின்றன. அவைகளை மாற்றவோ ஆராய்ந்து அறியும் அளவிற்கு அவைகளை நம் அருகாமையில் அமைத்துக்கொள்ளவோ நமக்குச் சக்தி இல்லை. அவைகளிடம் அன்பு பூண்டுதானாக வேண்டும். ஒரு நண்பனுடன் நெருங்கிப் பழகியதன் விளைவாக நாம் மேம்பட்ட குணமடைந்து, நமது லட்சியத்தைச் சிறப்பிக்க ஆண்டவன் ஒரு மனிதனை அனுப்பினனே எனப் பெருமிதம் கொள்கிறோம். மேலும் அந்த நண்பன் நமது சிந்தனைக் குரியவனுகி விடுகிருன்; அவனுடைய குணம்

இயல்பாகவே பிறருடைய நடத்தையை மேம்பாடடையச் செய்யத்தக்கதாயிருந்தது. நம் மனதில் அந்நண்பன் ஞானத்தின் திருஉருவம்போல் அமைந்து விடுகிறான். இந்த நிலை ஏற்பட்டவுடன் அந்நண்பன் காரியம் முடிவடைந்து சீக்கிரம் அவன் நம்மைவிட்டுப் பிரிந்துவிடுவான் என்பதற்கு அறிவிப்பாகும்.

6. லட்சியவாதம்

இயற்கையின் நிலையான சேடனுகிய மனிதனுக்கு அவனுடைய புலன்கள்மூலம் உலகம் இந்த விவரிக்க இயலாத, ஆனால் புரிந்துகொள்ளக்கூடிய அனுபவ சாத்திய மான பிரபஞ்ச தத்துவத்தைக் கற்பிக்கிறது. இந்த ஒரு படிப்பினையை உணர்த்தவே இயற்கையின் எல்லாக் கட்டுப் பாடுகளும் பகுதிகளும் முனைகின்றன.

ஒரு உயர்ந்த சந்தேகம் இந்தச் சந்தர்ப்பத்தில் எழு கிறது. இந்த ஒரு நோக்கம்தான் பிரபஞ்சம் தோன்று வதற்கு ஆதி காரணமா என்பதுதான் அது. இயற்கை கண்ணுக்குப் புலப்படும் லட்சணங்களுடன் இருக் கின்றதா? உலகம் இருப்பதிலிருந்தே இயற்கையும் இருக்கிறதெனக் கூறிவிடலாம். கடவுள் மனித உள்ளத் திற்கு பல உணர்ச்சிகளை ஏற்படுத்துகிருர். அதனுல் தான் அவர் சூரியன், சந்திரன், ஆண் பெண், வீடு, வியாபாரம் இவைகளை எல்லாம் பாகுபாடு செய்து அறி கிருர். புலன்கள் மூலம் பெறும் உணர்வு உண்மையா என்று தெளிந்தறிய, நாம் இயலாதவர்களாகையால் மிருக சீர்ஷம் (சூரியன்) எனும் நட்சத்திரம் வானவெளியில் இருந்தாலென்ன அல்லது அதன் தோற்றத்தை நம் முடைய ஆன்மா எனும் ஆகாயத் திரையில் சித்திரமாக வரைந்தாலென்ன? ஒரு பகுதிக்கும் அது எதன் பாகமோ அதன் முழுமைக்கும் உள்ள தொடர்பு ஒரே மாதிரி இருப்ப தால், கடலும் நிலமும் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டாலென்ன? காட்சிகள் பல ஒன்ருகக் கலந்தா லென்ன? உலகம் உருண்டு முடிவில்லாமல் மாறுதல் பெற்ருலென்ன? கடல்நீர் அலையலையாக மோதிக் கொண்டாலென்ன? கால இட வரையறையின்றி ஒரு காட்சி பன்முறை மனிதன் அறிவில் பதிந்தால்தானென்ன?

இயற்கைப் புலன்களுக்குத் தெரியும்படி அமைந்தாலும், அல்லது மனத்தின் தோற்ற மயக்கமானாலும் அது நமக்குப் பயன்படத்தக்கது, நமது வணக்கத்திற்குரியது. எது எவ்வாருயினும் அதன் குண விசேஷங்களை அளந்து மதிப்பிட முடியாததனால் அது எனக்கு லட்சியமாகவே தோன்றுகிறது.

இயற்கையை லட்சியமெனக் கொள்ளும் கொள்கையை அற்ப மனிதர்கள் கேலி செய்கிருர்கள். இந்தக் கொள் கையை நாம் மேற்கொள்வதன் பயன் கேலிக்கூத்து போலவும், அதனால் இயற்கையின் நிலையான தன்மை பாதிக்கப்படும் என இவர்கள் கருதுகின்றனர் போலும்! நாம் என்ன நினைத்தாலும் இயற்கையின் தன்மை மாருது. ஆண்டவன் நம்முடன் விளையாடுவதில்லை; இயற்கையின் பவனி விழாவிற்கு சிதைவு உண்டாக்க அவர் இணங்க மாட்டார். இயற்கை விதிகளின் நியதியை நாம் நம்பத் தயங்கினால் நமது அறிவையே அது சீர்குலையச் செய்து விடும். இயற்கையின் ஸ்திரத்தன்மை நமது புனிதமான வணக்கத்திற்குரியது. இதில் மனிதனுக்கு அழியாத நம்பிக்கை இருக்கிறது. இயற்கை நிலையானது என்கிற அச்சின்மேல்தான் மனிதனுகிய சக்கரம் சுழலுகிறது. நாம் கப்பல்போல் ஆடி அசைவதற்காக ஆக்கப்பட்டவர்க ளல்ல, வீடுபோல் நிலையாயிருக்க வேண்டும் எனவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். இந்த அமைப்புக்கு இயல் பான விளைவு யாதெனில், மனிதனின் சிந்தனைசக்தியை விட செயல் திறன் மேலோங்கி நிற்கும்வரையில் ஆன்மாவைவிட இயற்கை அதிகமான அழியும் இயல் புள்ளது என்னும் கருத்தை வன்மையாக எதிர்க்கிருேம் என்பதுதான். ஆன்மாமைவிட இயற்கை அற்ப ஆயுள் உள்ளது என்பதைக் கேட்டால் தரகன், வண்டி தள்ளு பவன், தச்சன், எல்லையில் கட்டணம் வசூலிப்பவன் எல்லோரும் அதிருப்தி யடைவார்கள்.

இயற்கை விதிகள் நிலையானவை என்பதை நாம் ஒப்புக்கொண்டாலும் இயற்கை தனித்தியங்குமா என்பது விவாதத்திற்கிடமானது, சூடு, தண்ணீர் போன்ற இயற்கைத் தோற்றங்களில் சில நிலையானவை என்பதில் நம்பிக்கைத் தளராமல் இருப்பதற்குப் போதிய பண்பாடு நமக்கு போதிக்கிறது. இதே பண்பாடு காரணமாக இயற்கை என்பது பொதுவான நிர்ணயமில்லாத

காட்சியே யொழிய பொருளல்ல என்றும், ஆன்மீகம் இருக்கிறது என்றும், இயற்கை ஒரு யதேச்சையானது, ஒரு விளைவு என்று மதிக்கும்படியும் நமக்கு உணர்த்து கிறது.

புலன்களுக்கும், பண்படாத உள்ளத்திற்கும் இயற்கை தனித்தியங்க முடியும் என்கிற இயல்பான நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த நம்பிக்கை உள்ளவர்கள் மனிதனும் இயற்கையும் ஒன்ருகப் பிணைக்கப்பட்டிருக்கின்றனர் என நம்புகின்றனர். பொருள்கள் முடிவானவை, அவைகளுக்கு அப்பால் ஒன்றுமில்லை என்கிற நம்பிக்கையை அறிவு அசைத்துவிடுகிறது. நாம் இயற்கையின் ஒரு பகுதி என புலன்கள் உணர்த்துகின்றன. புலன்களின் இந்த சர்வாதி காரச் சிந்தனை தோன்றியவுடன் சிதைந்துவிடுகிறது. இதன் விளைவாக இயற்கை நமக்கு அப்பாற்பட்டது, ஏதோ பறக்கும் தன்மைவாய்ந்தது என நினைக்கத் தொடங்கிவிடுகிறோம். சிந்தனை எனும் உயர்ந்த சாதனம் நம்மை ஆட்கொள்ளும் வரையில், நமது கண்களால் தெளி வாக இயற்கையின் எல்லைக் கோடுகளையும் வர்ண விசித் திரங்கள் நிறைந்த தோற்றத்தையும் கண்டோம், ஆனல் அறிவுக் கண் திறந்தவுடன், வெளித் தோற்றத்துடன் இனிமையும், பளபளப்பும் தான் அதிகமாகத் தோன்று கிறது. இந்த எண்ணங்கள் நமது பாசத்திலும் கற்பனையிலும் உதிக்கின்றன. இவைகளின் விளைவாக பொருள்களில் காணப்படும் கோணல்கள் மறையத் தொடங்கின. அறிவுத் திறன்மூலம் நமது பார்வை தெளிவுபட்டால் வெளித் தோற்றங்களும், எல்லைக் கோடு களும் மறைந்து விடுகின்றன. இந்தத் தெளிந்த பார்வை மூலம் பொருள்களின் காரண காரியங்களை அறிந்துகொள் கிறோம். மனிதனின் உயர்சக்திகள் மலர்ந்து, இயற்கை தன்னைப்படைத்தவனுக்கு முன் நின்று வணக்கம் செலுத்தும் தருணங்களில்தான் வாழ்க்கையின் இன்ப மிக்க அனுபவங்கள் சித்திக்கும்.

பண்பாட்டின் விளைவுகளை நாம் கவனிக்கலாம்.

1. இலட்சிய தத்துவத்தின் முதல் படிப்பினையை இயற்கையிடமிருந்தே சூசகமாக அடைகிறோம்.

ஆன்மாவுடன் கூடி நம்மை விடுவிக்கவே இயற்கை தோன்றியது. நமது நிலையில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட் டால் உடனே ஒரு துவந்துவ பாவம், அல்லது இரட்டைத்

தோற்றம் இருப்பது நமக்கு அறிவிக்கப்படுகிறது. ஒரு ஓடும் கப்பலிலிருந்தோ, விமானத்திலிருந்தோ வானத்தின் வர்ண ஜாலங்கள் மூலமோ கரையைப் பார்த்தால் நமக்கு விவரிக்க இயலாத புதுமை உணர்வு ஏற்படுகிறது. நமது நோக்கில் சிறு மாறுதல் ஏற்பட்டாலும் உலகில் ஒரு புதுக் கவர்ச்சியைக் காண்கிறோம். எவ்வித வாகனமும் உபயோகியாமல் நடந்தே பழகிய ஒருவன் ஒரு குதிரை சாரட்டில் ஏறி தனது நகர்த் தெருக்களில் போனாலும் தெருக்களில் காணப்படும் காட்சிகள் எல்லாம் ஏதோ பொம்மலாட்டம்போல் தோற்றமளிக்கும். ஓடி ஆடி, பேசி, வியாபாரம் செய்து, சண்டையிட்டுக்கொள்ளும் ஆண்களும் பெண்களும், யந்திர நுட்பத் தொழிலாளியும் பிச்சைக்காரனும், நாய்களும் சிறுவர்களும் பார்ப்பவரிடமிருந்து தனித்தியங்கி வெறும் தோற்றங்கள் போலப் புலப்படத் தொடங்கிவிடும். நமக்குப் பழக்கமான நிலப்பரப்பை ஓடும் ரயிலிலிருந்து பார்த்தால் என்னென்ன புது எண்ணங்கள் உதிக்கின்றன? நாம்பார்த்துப் பார்த்துச்சலித்த பொருள்களே நாம் பார்க்கும் கோணத்தில் சிறு மாறுதல் செய்தால் புதுவித கவர்ச்சி பெற்று நமக்கு மிகுந்த களிப்பை உண்டாக்குகின்றன. புகைப்படம் எடுக்கும் இருள் நிறைந்த கண்ணாடி மூலம் ஒரு கசாப்புக்கடை வண்டியையோ. நம் குடும்பத்தினரில் ஒருவன் உருவத்தையோ, பார்த்தால் நமக்குப் ஒரு புதுமையைக் காண முடிகிறது. நமக்குத் தெரிந்தவருடைய சித்திரம் நமக்கு மிகுந்த திருப்தியை அளிக்கிறது. சுமார் இருபது ஆண்டுகளாகப் பார்த்த ஒரு இயற்கைக் காட்சியை, இப்போது தலைகீழாக நின்று பார்த்தோமானால் எவ்வளவு புதுமையைக் காண முடிகிறது, கண்டு மனமகிழ்ச்சி ஏற்படுகிறது என்பது விளங்கும். மேற் குறிப்பிட்ட சம்பவங்களில் யந்திர சாதனத்தின் உதவிகொண்டு பார்ப்பதில், பார்ப்போருக்கும் காட்சிக்கும், மனிதனுக்கும் இயற்கைக்கும், உள்ள மாறுபாடு விளங்குகிறது. இதன் மூலம் ஆனந்தமும் பிரமிப்பும் ஒருங்கே ஏற்படுகிறது. உலகம் ஒரு மாறும் காட்சியாயிருக்கையில் மனிதனின் ஒரு பகுதி நிலையாயிருக்கிறது என்பதை அவன் உணர்வதால் ஓரளவு பெருமிதம் கொள்கிறான்.

2. இதே மகிழ்ச்சியை கவிஞன் சற்று மேலான முறையில் தெரிவிக்கிறான். ஒரு சிறு சொற்றொடர் மூலம்

அவன் சூரியன், மலை, நகர், வீரன், பெண் முதலியவர்களை அவரவர்களின் இயற்கை நிலையிலிருந்து தூக்கி உயர நிறுத்தி விடுகிறான். அவைகள் நாம் அறிந்தவைகளானாலும் நிலை பெயர்ந்து சற்று உயரப் பறப்பதுபோல் காட்டப்படுகின்றன. தனிச் சக்தியினால் தரை, கடல் முதலியவைகளை அவைகளின் இருப்பிடங்களை விட்டுப் பெயர்த்து, தனது சிந்தனைச் சுழலில் சுழற்றி அவைகளுக்குப் புது உருக் கொடுக்கிறான். ஒருவித வேகம் அவனை ஆட்கொண்டு விடுவதனால் பொருள்களை அவன் ஆவேசம் உருப்பெறுவதற்குச் சாதனங்களாகப் பயன் படுத்துகிறான். புலன் வசப்பட்ட மனிதன் பொருளுக் கேற்ற சிந்தனையை வெளியிடுகிறான். ஆனால், கவிஞன் பொருள்களைத் தன் சிந்தனைச் சிறப்பிற்கு உயர்த்துகிறான். முதல்வன் இயற்கையில் வேறொன்றி யிருப்பதுபோல் காண்கிறான். மற்றவன் அதை நீரோட்டம் போல் மதித்து தனது அறிவின் திறனைக்கொண்டு அதை ஒளியுறச் செய்கிறான். எதற்கும் அசையாத உலகம் கவிஞனுக்கு வளைந்து கொடுக்கிறது! மண்ணுக்கும் கல்லுக்கும் அவன் மனிதத் தன்மை அளிக்கிறான்; அவைகளை பேரறிவினை விளக்கும் சொற்களாக உருவாக்குகிறான். ஜடப் பொருள்களை அறிவு பயன்படுத்துவதற்குத்தான் கற்பனை என்று பெயர். எல்லா கவிஞர்களையும் விட ஷேக்ஸ்பியரிடம் தனிச் சிறப்பு ஒன்றுண்டு. தனது கவிதைச் சிறப்புக்கு அவன் இயற்கையைத் தன்னிச்சைப்படி கையாண்டார், அவருடைய எல்லையற்ற கவிதா சாமர்த்தியம் இயற்கையை வேண்டியபடி எல்லாம் கையாண்டது. அவருக்கு யதேச்சையாகத் தோன்றும் கற்பனைகளுக்கு உருக்கொடுக்க மற்றக் கவிகளைக் காட்டிலும் ஷேக்ஸ்பியர் இயற்கையை அதிகமாகப் பயன் படுத்திக் கொண்டார். ஒரு நுட்பமான நூலினால் திசைக்கொன்றாக உள்ள பல பொருள்களை நன்றாகக் கோர்த்துக் காட்டினான். இயற்கையின் எட்டாக்கையிலுள்ள பகுதிகளையும் அண்மையில் கொண்டு வந்து நிறுத்தினார். ஜடப்பொருள்களின் பெருமையோ சிறுமையோ அவரது சிந்தனையைப் பொருத்தது. கலைஞனின் ஆவேசத்திற் கேற்ப அற்பமான பொருள்களும் ஒரு சமயம் விரியும். மற்றொரு சமயம் பரந்த பொருள்களும் சுருங்கும். அவனுடைய சிறு செய்யுட்களில் பட்சிகளின் இசை, புஷ்பங்

களின் மணம், நிறம் யாவற்றிலும் காதலன் தனது காதலியின் சாயலைக் காண்கிறான் என வர்ணிக்கிறான்: அவன் தன்னிடம் வராமல் ஏற்படும் தாமதத்திற்குக் காரணமான காலத்தைத் தன் மார்பகம் என உருவகம் செய்கிறான்; தன் மனத்தில் அவன் எழுப்பும் சந்தேகத்தை அவளுடைய அணிகலன் என்கிறான்.

அவனுடைய இந்தக் கற்பனைவேகம் யதேச்சையாக ஏற்பட்டதல்ல; அவன் பேசிக்கொண்டே போகையில் அந்தக் கற்பனை ஒரு நகரம், அல்லது ராஜ்யம் உள்ள அளவுக்கு விரிகிறது. ஒரு விஷயத்தில் ஊன்றிச் சிந்தனையைச் செலுத்துவதால் எகிப்திய தேசத்து பிரமிட்டு என்னும் கூம்புகள்கூட சமீபத்தில்தோன்றியவைபோலும், எளிதில் மாறக்கூடியவை போலும் தோற்றமளிக்கும். இளமையின் புதுமையும் காதலும் அவனுக்கு விடியற் காலை போலக் காட்சியளிக்கிறது. அவன் மிகைப்படுத்திக் கூறுவதில் காணும் கவர்ச்சி மிக்க அழகுக்கு இணை எந்த இலக்கியத்திலும் காணமுடியாது. கவிஞனின் கற்பனை வேகத்தினால் மலை கடுகாகவும், கடுகு மலையாகவும் மாறுவதற்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் எண்ணற்ற உதாரணங்கள் காணலாம்.

பலசம்பவங்களுள் கவிஞன் காணும் ஒருமைப்பாடுகள் மூலம், உலகின் கவர்ச்சி மிக்க காட்சிகளைத் தன் சிந்தனைச் சிறப்பிற்குப் பயன்படுத்திக் கொள்வதனால் ஆத்மாவே யாவற்றிற்கும் தலைமையாயிருப்பதை நிலைநாட்டுகிறான்.

3. கவிஞன் இயற்கையைத் தன் சிந்தனைகளால் அழகுபடுத்துகிறான். ஆகையால், அழகுதான் அவனுடைய லட்சியம்; தத்துவ ஞானியோ இயற்கையில் உண்மையைக்காண முயற்சிக்கிறான். ஆனால், கவிஞனும் ஞானியும் பொருள்களுக்குள் உள்ள தொடர்பையும் ஒழுங்கையும் சிந்தனையின் ஆட்சிக்குட்படுத்துகின்றனர். "தாற்காலிகமாக நிலவுபவைகளை நிலையாக நிற்பதற்கு வழி காண்பதே தத்துவத்தின் அடிப்படை லட்சியம்" என்று கூறுகிறார் பிளேட்டோ.

காட்சியை ஒரு விதி நிர்ணயிக்கிறது; அந்த விதியை அறிந்தால் என்ன காட்சி தோன்றும் என்பதை முன் கூட்டியே அறிந்துவிடலாம் என்பது தான் தத்துவ ஞானியின் நம்பிக்கை. அந்த விதி மனத்திற்குள்தோன்றும் போது அதை எண்ணம் என்கிறோம். அதன் அழகுக்கு

எல்லையே இல்லை. உண்மையான தத்துவ ஞானியும் உண்மையான கவிஞனும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். அழகுதான் உண்மை, உண்மைதான் அழகு என்பதுதான் இருவருக்கும் குறிக்கோள். பிளேட்டோ அல்லது அரிஸ் டாடிலின் விவரங்களிலுள்ள அழகும், ஸோபகிளிஸின் ஆண்டிகோனேயில் காணும் அழகும் ஒரே தன்மையுடையது தானே? இருவகை சிருஷ்டிகளிலும் இயற்கைக்கு ஆன் மாவின் உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது; கெட்டியாக கனமாக உள்ள ஒரு பொருள் சிந்தனை ஊடுருவிச் செல்லு வதனால் கரைந்துவிடுகிறது. இந்த அற்ப பலமுள்ள மனிதன் ஆன்ம உயர்வின் மூலம் இயற்கையில் அண்டத் தைக் கடந்து சென்று அவைகளின் ஒருமைப்பாட்டின் மூலம் தன்னை அறிந்து, இயற்கை இயங்கும் விதியையும் அறிந்து கொண்டு விடுகிறான். பௌதிக விஞ்ஞானத் துறையில் ஒருவன் இங்கிலையை அடைந்து விட்டால் அவன் தான் கற்றபலப் பல விஷயங்களைக் களைந்துவிட்டு, பல நூற்றாண்டுகளாகப் பார்த்த விஷயங்களை ஒரு சூத்தி ரத்தில் அடக்கி விடுகிறான்.

பௌதிக விஞ்ஞானத்திலும் ஆன்மாவுக்குத் தாழ்ந்த தாகவே சிருஷ்டிப்பொருள் கருதப்படுகின்றது. வான சாஸ்திர, ஜியோமிதி ஆசிரியர்கள் தங்களுடைய நுட்ப மான ஆராய்ச்சியை நம்புகின்றனர். உற்று நோக்கியதன் முடிவுகளை அலட்சியம் செய்கின்றனர்.

யூலர் என்பவர் கட்டிடங்களின் வளைவு விதிகளைப்பற்றி தனது மேலான கருத்தைத் தெரிவிக்கையில், "இது முந்திய அனுபவத்திற்கு முற்றிலும் மாறானது, ஆனாலும் உண்மை" என்கிறார். இதன் மூலம் அவர் இயற்கையை மனத்திலிருந்திவிட்டு, பொருளைத் தீண்டத்தகாத சடலம் போல் ஒதுக்கிவிட்டாரா?

4. அறிவு சாஸ்திரக்காரர்கள் பொருள் என்பது இருக்கிறதா என்றே சந்தேகிக்கின்றனர், டர்காட் என்பவர் கூறுகிறார்: பொருள் இருப்பதை சந்தேகிக் காதவன் தத்துவ ஆராய்ச்சிக்குத் தகுதியற்றவன். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுபவன் பெரும்பாலும் எண்ணங்களிலேயே கவனம் செலுத்துகிறான். அவன் முன்னிலையில் புறத்தோற்றங்கள் யாவும் கனவு, நிழல் போன்றது என்று எண்ணத் தொடங்குகிறான். தெய்வங் களின் சன்னிதானத்தில் நாம் காத்திருக்கையில் இயற்கை

ஆன்மாவின் அநுபந்தம் என எண்ணுகிறோம். இயற்கையின் உயர்தட்டில் ஏறியவுடன் இயற்கைப்பொருள்களெல்லாம் பரமாத்வின் எண்ணங்களே என நினைக்கிறோம். "இவைகள் பூமிதோன்றிய காலத்திலிருந்து இருக்கின்றன". ஆண்டவன் மேல்உலகைப் படைத்தபோதே இவைகளையும் சிருஷ்டித்து விட்டான். அவன் மேகத்தை சிருஷ்டித்தவுடன், கடலாழும் கண்டவுடன் இவைகளும் இருந்தன. இவை பரம்பொருளின் அருகாமையிலிருந்தன. அவன் இவைகளைக் கடந்துகொண்டே தனது ஆட்சியை நடத்தினன்."

இயற்கை மனிதனை வசப்படுத்துவது சந்தர்ப்பத்திற்கேற்றது. விஞ்ஞான ஆராய்ச்சியின் தளப்பொருளாகப் பார்த்தால் இவைகளை நெருங்கியவர்கள் சிலரே. ஆனால், தூய்மையாலும் உணர்ச்சிப் பெருக்காலும் எல்லா மனிதர்களும் உயர்வு பெறலாம். இந்தத் தெய்விக சிருஷ்டிகளை நெருங்கிய யாவரும் தெய்விகத்தன்மை யடைகின்றனர். ஒரு புதிய ஆன்மா புதிய உடலை அடைவதுமாதிரி, இவைகள் உடலுக்கு புத்துயிரளிக்கின்றன. அவைகளின் நெருக்கத்தால் நம் உடல் சுறுசுறுப்படைந்து துரிதமாக நடக்க முடிகிறது. நாம் காற்றில் நடப்பதுபோலாகி விடுகிறது. வாழ்க்கையில் அப்புறம் சலிப்புத்தட்டுவதில்லை; இனி நமக்கு வாழ்க்கை சுமையாகத் தோன்றுது என எண்ணுகிறோம். அவைகளுடைய கூட்டுறவில் எந்த மனிதனும் முதுமை, சாவு, துரதிருஷ்டம் முதலியவைகளைக் கண்டு அஞ்சுவதில்லை. ஏனெனில் மனிதன் மாறுதலுக்கு அப்பாற்பட்டவனாகி விடுகிறான். நீதியையும், உண்மையையும் சுயரூபத்தில் பார்க்கையில் பரம்பொருளுக்கும், அழியக்கூடியதற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்கிறோம். பரம்பொருளை நேருக்கு நேர் பார்க்கிறோம். அந்த சமயத்தில்தான் நாமும் இருக்கிறோம் என்பதை உணர்கிறோம். நாம் அழியாத்தன்மை யடைகிறோம். ஏனெனில் காலமும் இடமும் பொருளின் லட்சணங்கள் என அறிகிறோம்; உண்மை உணர்வையும் தூய்மை மிக்க மன உறுதியையும் காலமும் இடமும் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் தெரிந்துக் கொள்ளுகிறோம்.

5. கடைசியாக மதத்தையும் ஒழுக்கத்தையும் எடுத்துக் கொள்வோம். இவ்விரண்டையும் எண்ணங்களைப் பயன்படுத்தும் துறைகள் எனவும், வாழ்க்கைக்கு

எண்ணங்கள் திறவுகோலெனவும் விவரிப்பர், இவை இரண்டும் ஆன்மாவுக்கு இயற்கையை அடிமையாக்கு கின்றன. ஒழுக்கத்திற்கும் சமயத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஒழுக்கம் மனிதர் கடமைகளை வகுக்கின்றது; சமயம் கடவுளைப் பற்றியது. மதத்தில் கடவுளின் உருவம் அடங்கியது, ஒழுக்கம் அவ்வாறல்ல. ஆனால், நமது தற்கால நோக்குக்கு அவை இரண்டும் ஒன்றே. இரண்டும் இயற்கையைக் காலடியில் தள்ளுகின்றன. சமயத்தின் ஆரம்ப, முடிவான போதனை, "கண்களுக்குப் புலப்படுவ தெல்லாம் மறைந்து போகக் கூடியவை. புலப்படாத தெல்லாம் நித்தியமானவை" என்பதுதான். சமயம் இயற்கையை அலட்சியம் செய்கிறது, படிக்காதவர்களுக்கு மதம் இந்த அலட்சிய புத்தியைப் புகட்டுகிறது. இதே அலக்ஷிய மனப்பான்மையை பார்க்லி (*Berkeley*), வியாஸர் (*Vyasa*) போன்ற பண்டிதர்களுக்கு தத்துவம் போதனை செய்கிறது. அறிவில் குறைந்தவர்கள் கூடும் கிறிஸ்தவ மாதாகோவில்களில் ஒரே மாதிரியான பின்வரும் உபதே சத்தைக் கேட்கலாம்: "உலகத்தின் அற்பக் காட்சிகளைக் கண்டியுங்கள்; உலகம் வெறும் பகட்டு, கனவு, நிழல், போலி; மதத்தின் மூலம் உண்மை நிலையை அறியுங்கள்"- பக்தன் இயற்கையை அவமதிக்கிறான். காணும் பொருள் களிடம் வெறுப்பும் ஆத்திரமும்கொள்கின்றனர் ஞானிகள். மானிகியன், புளோடினஸ் புராதனச் சின்னங்களில் அவம திப்புக் காட்டினர், புளோடினஸ் தன் தேகத்தையே நொந்துகொண்டான். இவர்கள் காணும் பொருள்களைப் பற்றிக் கூறியது மைக்கேல் ஆஞ்சலோ புற அழகைப் பற்றிக் கூறியதை ஒக்கும்.

"காலத்தால் மாறக்கூடிய துரும்பு போன்ற உடலைக் கொண்டு ஆண்டவன் ஆன்மாவை அலங்கரித்தான்" என்றான் மைக்கேல் ஆஞ்சலோ, அசைவு, கவிதை பௌதிக, அறிவியல் சாஸ்திரங்கள், மதம், யாவும் புற உலகு உண்மை என்பதில் நமக்குள்ள நம்பிக்கையைத் தளர்த்துகிறது. பண்பாடு இலட்சியவாதத்தில் நமக்கு ஆர்வம் ஏற்படச் செய்கிறது எனும் கொள்கையை அலசி ஆராய்வது நன்றிகெட்ட செயலாகும் என்பது ஓரளவு உண்மை. எனக்கு இயற்கையிடம் பகைமை கிடையாது. குழந்தைக்குத் தாயிடம் உள்ள அன்பு அதனிடம் எனக் குண்டு. தானியமும், முலாம்பழமும் போல உஷ்ணமிக்க

நாட்களில் நான் ஆனந்தமடைந்து என் மனது விரிவடைகிறது. அதனிடம் நாம் நீதியாக நடந்து கொள்வோம். என் அருமைத் தாயின்மீது கல்வீச நான் விரும்பவில்லை, நான் வாழும் கூட்டிலே அசுத்தப்படுத்தவும் விரும்பவில்லை. மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள உண்மையான தொடர்பை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்: உண்மையான கல்வியின் பயனை மனிதன் அடையவே விரும்புகிறான். மனிதனும் இயற்கையும் ஒன்றியிருப்பதுதான் மனித வாழ்க்கையின் லட்சியம், இயற்கை பற்றிய தாழ்மையான அபிப்பிராயங்களை பண்பாடு மாற்றி விடுகிறது. பண்பாட்டின் விளைவாக ஒரு சமயம் நாம் உண்மை என நம்பியதை மாயை எனவும், கற்பனை என்று கருதியதை உண்மை என்றும் அறிந்துகொண்டுள்ளோம். குழந்தைகள் புற உலகையே உண்மையென நம்புகின்றன என்பது உண்மைதான். உலகம் வெறும் தோற்றம் என்பது பின்னர் தோன்றிய எண்ணம். பண்பாடு பெருகப் பெருக இந்த நம்பிக்கை உறுதியடையும்.

பொதுஜன நம்பிக்கையை விட லட்சியவாதக் கொள்கை சிறந்ததாயிருப்பதற்குக் காரணம், மனதிற்கிசைந்த முறையில் உலகை அது நமக்குக் காட்டுகிறது என்பதுதான். இதே கருத்தைத்தான் தத்துவமும், நற்குணமும் ஆதரிக்கின்றன. சிந்தனையளவில் பார்த்தால் உலகம் என்பது கண்ணுக்குகந்த காட்சி. நற்குணம் அதை மனதின் ஆட்சிக்குட்படுத்துகிறது. இலட்சியவாதிகள் கடவுள் மூலம உலகைக் காண்கிறார்கள். மனிதர்களையும் பொருள்களையும், செயல்களையும், சம்பவங்களையும் தேசத்தையும் மதத்தையும், ஏதோ நலிவுற்ற கடந்த காலக் குவியலாக லட்சியவாதிகள் காண்பதில்லை. ஆன்ம சிந்தனைக்குரியதாக ஆண்டவன் தீட்டிய சித்திரமாகவே அவர்கள் காண்கிறார்கள், ஆகையால் பிரபஞ்சத்தை அணு அணுவாக ஆராய்வதை ஆன்மா விரும்பவில்லை. முடிவில் தான் அதற்கு அதிக நாட்டமே தவிர சாதனங்களில் அவ்வளவாக அக்கறையில்லை. கிரிஸ்தவ பாதிரிமார்களின் தனி வாழ்க்கை ஊழல்கள் பற்றி வம்பளப்பதைவிட கிறிஸ்தவ மதத்தை ஆராய்வதில் அதற்கு அதிக ஆர்வமுண்டு. தனிப்பட்டவர்கள் அற்புதங்கள் முதலியவற்றை அறிந்து கொள்ள ஆவல் கிடையாது; சரித்திர சம்பந்தமான சான்றுகளைப் பற்றியும் கலக்கமடைவதில்லை.

உலகில் மதத்திற்கு தூய்மையான வியப்பூட்டும் சின்னமே கடவுள் என்பதை அது ஒப்புக் கொள்கிறது, பிற மனிதர்கள் தன்னுடன் சேர்வதனாலோ எதிர்ப்பதனாலோ அது உற்சாகமடைவதுமின்றி, மனத்தளர்ச்சி படைவதுமில்லை, எம்மனிதனும் அதற்குப் பகைவனல்ல. எது நிகழ்ந்தாலும் அதை விதி என ஏற்றுக் கொள்கிறது. அது காவலாளியே ஒழிய செயலாளியல்ல ; அப்படியே செயல் புரிந்தாலும் சிறப்பாகக் காவல் புரிவதற்கே செயல் புரிகிறது.

7. ஆன்மா

இயற்கையையும் மனிதனையும் சரிவர புரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கான கொள்கை முற் போக்குள்ளதா யிருக்கவேண்டும். மனிதனுக்குச் சிறப் பான இருப்பிடமாயிருக்கும், மனிதனின் திறமைகள் யாவும் பூரணப் பொலிவுடன் பிரகாசிப்பதற்கு சந்தர்ப்பமளிக்கும் இயற்கையின் மூலம் இதுவரை அடைந்த பயன் முடிவான தல்ல. சுருங்கக் கூறின் இயற்கை மனிதனின் செயல் திறனுக்கு எல்லையில்லாத சந்தர்ப்பமளிக்கிறது. அதன் விசாலமான எல்லைக்குள் அது தோன்றியதன் லட்சி யத்தை நிறைவேற்றத் தக்கதாய் அமைந்திருக்கிறது. அது ஆன்மாவைப் பற்றிப் பேசுகிறது அதைப் பார்க்குங்கால் பரம்பொருள் பற்றிய சிந்தனை எழுகிறது. அதன் பரந்த நிழல் மூலம் அதற்குப் பின் சூரியன் இருக் கிறது என்பதை நமக்கு ஞாபகமூட்டுகிறது.

இயற்கையின் தன்மை பணிவு அல்லது வணக்கம் எனலாம். ஏசுநாதரின் திருவுருவம் மாதிரி அது தலை வணங்கி, மார்பின்மீது கைகட்டி நிற்பது போலிருக்கிறது. இயற்கை மூலம் வழிபடும் வகையறிந்தவன்தான் மாந்த ருக்குள் ஆனந்த வாழ்வு துய்க்கக் கூடியவன்.

சொல்லிற்கப்பாற்பட்டதாய், ஆனால் எல்லாவற்றி லும் சாரமாக உள்ளதுதான் ஆன்மா. ஆன்மீகத்தில் ஈடுபடுபவன் அதிகமாக சிந்திப்பான், குறைவாகப் பேசு வான். தொலைவிலுள்ள இயற்கைப் பொருள்களிலும் நாம் ஆண்டவனைக் காணலாம். ஆனால் ஆண்டவனை விவரிக்க, வர்ணிக்க முற்பட்டால் அதற்கான வார்த்தைகள் அகப் படாது. நாம் முட்டாள்கள், காட்டுமிராண்டிகள் போலவும்

நிர்க்கதியாகி விடுகிறோம். இந்த வாழ்க்கையின் சாரமான ஆன்மாவை சூத்திரங்களாக எழுதிப் பதிவு செய்ய முடியாது. ஆனல் அறிவுபூர்வமாக அதை ஒருவன் வணங்கி விட்டானானல், இயற்கை ஆண்டவனின் பரந்த நிழலாகக் காட்சியளித்து நம்மைப் பரவசப்படுத்தும். இயற்கையின் மூலம்தான் பரமாத்மா தனிப்பட்ட மனிதனுடன் உறவாடி அவனைத் தன் வசப்படுத்திக் கொள்கிறது.

ஆன்மா பற்றி நாம் ஆராயும்பொழுது, மேற்கூறிய கருத்துக்கள் மனிதனின் எல்லா அம்சங்களையும் விவரித்ததாகாது. அது சம்பந்தமாக மேலும் சில சிந்தனைகளை நாம் விவரிக்க வேண்டும்.

மனித உள்ளத்தில் இயற்கை மூன்று பிரச்னைகளை எழுப்புகின்றது. பொருள் என்பது என்ன? எங்கிருந்து அது வந்தது? அது எங்கு போகப்போகிறது. முதல் கேள்விக்கு மட்டும்தான் இலட்சியவாதம் பதில் கூறுகிறது. பொருள் என்பது தோற்றமே ஒழிய உண்மை வஸ்துவல்ல. நாம் இருக்கிறோம், உலகம் இருக்கிறது, இவ்விரண்டிற்கும் உள்ள நேர்மாறான நிலைமையை இலட்சியவாதம் விளக்குகிறது. நாம் இருக்கிறது உண்மை. ஆனல், உலகத்தைப் பற்றி எதுவும் நிச்சயமாகக் கூற முடியாது. பொருள்களின் அமைப்பில் மனிதன் ஒரு பகுதி. உலகம் ஒரு தெய்விகக் கனவு போன்றது. அதிலிருந்து நாம விழித்துக் கொண்டால், பகல் பொழுதின் உன்னதத்தையும் உண்மை நிலையையும் நாம் உணர்வோம். தச்சுவேலை, ரஸாயனம்போல் தெளிவான காரணங் கூறமல் இயற்கைக்கு ஊகத்தினல் இலட்சியவாதம் காரணம் கூறுகிறது. ஆனல் இலட்சியவாதம் பொருள் இருக்கிறது என்பதை மறுத்தாலும் அந்த மறுப்பினல் ஆன்மாவைத் திருப்தி செய்யமுடியாது. அது கடவுளை மனிதனுக்கு அப்பால் நிறுத்தி விடுகிறது. அது என்னை, என்னுடைய எல்லையற்ற சிந்தனை உலகில் ஓயாமல் சுற்றி அலைய விட்டுவிடுகிறது. ஆனல் இந்த முயற்சியை உள்ளம் எதிர்க்கிறது. ஆணும், பெண்ணும் உரமான பேர்வழிகள் என்பதை மறுப்பதன் மூலம் மனிதனின் ஆராபாசங்களுக்கு இடமின்றிச் செய்து விடுகிறது. இயற்கையும் மனித வாழ்க்கையும் பின்னிக் கிடப்பதால், இயற்கையின் ஒவ்வொரு அணுவிலும் மனித

அம்சம் துலங்குகிறது. ஆனால் இந்தக் கொள்கை இயற்கையை நமக்குப் புரியாததாகச் செய்து, அதற்கும் நமக்கும் உள்ள தொடர்புக்கு அர்த்தங் கூற முடியாத நிலையில் வைத்து விடுகிறது.

தற்போது நமக்குள்ள அறிவைக் கொண்டு பார்த்தால், ஆன்மாவுக்கும் உலகுக்கும் உள்ள நிலையான வித்தியாசத்தை நமக்கு உணர்த்தவே இந்த இலட்சியவாதம் பயன்படுகிறது.

இவ்வாறே சிந்தனையைச் செலுத்திக் கொண்டு போனால், பொருள் எங்கே இருந்து தோன்றுகிறது, எங்கு செல்கிறது எனும் கேள்விகள் எழுகின்றன. நமது உள்ளுணர்வின் மூலம் பல உண்மைகள் வெளி வருகின்றன. மனிதனுடைய ஆன்மாவுக்குப் பல உயர்வான விஷயங்கள் புலனாகின்றன; பிரபஞ்சத்தின் அடிப்படை ஞானமுமில்லை, அன்புமில்லை, அழகுமில்லை, சக்தியுமில்லை; இவை யாவும், சேர்ந்தோ, தனித் தனியாகவோ இவைகளுக்குத்தான் எல்லாப் பொருள்களும் படைக்கப்பட்டன; ஆன்மாவால் சிருஷ்டிக்க முடியும்; இயற்கைக்குத் துணையாகவும், இயற்கையினுள்ளும் ஆன்மா இருக்கிறது. ஆன்மா நமக்குப் புறம்பாக இன்றி நம்முள்ளிருந்தே நம்மை இயக்குகிறது; ஆகையால் ஆன்மா அல்லது பரம் பொருள் இயற்கையை நம்மைச் சுற்றி அமைப்பதில்லை, மரத்தின் உயிர் கிளைகளையும், இலைகளையும் துளிர்க்கச் செய்வதுபோல், நம் மூலமே அமைக்கிறது. செடி பூமியில் இருப்பது மாதிரியே மனிதனும் கடவுளின் மடியில் படுத்திருக்கிறான்; வற்றாத ஊற்றின்மூலம் அவன் வளம் பெறுகிறான். தேவையானபோது எல்லையில்லாச் சக்தி பெறுகிறான். மனிதனின் சாதனை சக்திக்கு எல்லை வகுக்க முடியுமா? விண்ணுலகக் காற்றை நுகர்ந்தால், நீதி, உண்மை இரண்டின் அப்பழுக்கில்லாத பரிசுத்தத் தன்மையை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டதும், ஆண்டவனின் திருவுள்ளத்தை அறிந்துகொண்டு தானே தோன்றி மறையக்கூடியவைகளை சிருஷ்டிக்கிறவனாகிறான். இந்தக் கருத்து மூலம் ஞானம், சக்தி இரண்டின் உறைவிடத்தை அறிந்து, ஒழுக்கமே நித்தியமான நிலைக்குத் திறவுகோல் என்பதை எனக்கு உணர்த்துகிறது. இந்த உணர்வுதான் உண்மையானது, ஏனெனில் ஆன்மீகத் தூய்மைமூலம் என்னிஷ்டப்படி உலகைச் சமைத்துக்

கொள்ள உதவுகிறது.

மனிதனுள் துலங்கும் ஆன்மாதான் உலகத்தையும் சமைக்கிறது. உலகம் கடவுளின் கிழ்ரகமான அவதாரம். ஆனால் உலகத்திற்கும் மனிதனுக்கும் சிறு வித்தியாசம் இருக்கிறது. உலகம் மனித ஆட்சிக்கு உட்பட்டதல்ல. அது கடவுளின் திருஉள்ளத்தை நமக்குத் தெரிவிக்கிறது. உலகை வைத்துக்கொண்டு நாம் அதை விட்டுப் பிரியும் காலத்தை நிர்ணயிக்கலாம், நாம் கீழ் நிலை அடைந்தால் நமக்கும் உலகுக்கும் உள்ள மாறுபாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. நாம் கடவுளுக்கும் இயற்கைக்கும் அன்னியர்களாகி விடுகின்றோம். பட்சி ஜாலங்களின் இசை நமக்கு விளங்குவதில்லை. நரியும், மானும் நம்மைக் கண்டு ஓடுகின்றன, கரடியையும் புலியையும் பார்த்து நடுங்குகிறோம். செடிகளில் சிலவற்றின்—சோளம், ஆப்பிள், உருளைக் கிழங்கு, திராட்சை போன்ற—பயன்களைத்தான் நாம் அறிகிறோம். இயற்கைக் காட்சியின் கவர்ச்சியினால் ஆண்டவனின் திருவுருவம் தெரியவில்லையா? இதிலிருந்து மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள மாறுபாடுகளை நாம் அறிந்துக் கொள்ளலாம். பக்கத்து வயலில் தொழிலாளிகள் வெட்டிக்கொண்டிருந்தால் இயற்கையை சுமுகமாகக் கண்டு ஆனந்திக்க முடியாது. பிறர் பார்த்துக் கொண்டிருக்கையில் கவிஞன் இயற்கையைக் கண்டு களிக்க நாணுகிறான்.

8. எதிர்காலம்

உலகத்தை இயக்கும் விதிகளையும், பொருள்களின் வெளித் தோற்றங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்வதில் அவைகளுக்கு நாம் காணும் சிறப்பான காரணமே உண்மையான காரணமுமாகும். இதுதான் காரணமாயிருக்கக் கூடும் என நமக்கு லேசாகத் தோன்றினால் அதற்குக் காரணம் அது நம் மனத்தில் ஆழ்ந்து கிடப்பதுதான். விஞ்ஞான ஆராய்ச்சி நம் அறிவைத் திரையிட்டு மூடிவிடலாம். உலகம் பூராவும் ஒன்றெனக் காணும் திறத்தைக் காரண காரியங்கள்பற்றிய உணர்வை இழந்து விடலாம். ஞானி கவிதா சக்தியற்றவனாகலாம். ஆனால், உண்மைத் தத்துவத்தில் ஆழ்ந்த பக்தி

செலுத்தும் இயற்கை சாஸ்திரப் பண்டிதன், தனக்கும் உலகுக்கும் உள்ள உறவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது நிரம்ப இருக்கிறது என்பதை அறிகிருன் ; ஏற்கனவே தெரிந்தவைகளை கூட்டியோ, குறைத்தோ, ஒப்பிட்டுப் பார்த்தோ அதை அறிந்துகொள்ள முடியாது. இயல்பான ஆன்ம சிந்தனை வேகத்தினுலும், இடைவிடாது மெய்யுணர்வு பெற முயற்சிப்பதனுலும், பூரணமான பணிவினுலும்தான் புரிந்துகொள்ள முடியும். ஆராய்ச்சி செய்யத் தொடங்குபவனுக்கு நிர்ணய புத்தியும் தன் கருத்தில் தன்னம்பிக்கையும் மட்டும் இருந்தால் போதாது, இதைவிடச் சிறந்த பண்புகள் வேண்டும். மறுப்புக்குக் கூட இடமின்றி நிச்சயத்துடன் கூறுவதை விட ஊகம் மிகுந்த பயனளிக்கக் கூடும் ; நூறு விதமான சோதனைகளை விட ஒரு கனவு இயற்கையின் ரகசியங்களை அறிந்துகொள்ள பேருதவி புரியலாம்.

உடற்கூறு சாஸ்திரியும், தாவர சாஸ்திரியும் விளக்க மறந்துவிடுவதுதான் முக்கியமாகத் தீர்க்க வேண்டிய பிரச்னைகள். பிராணிகள் வர்க்கத்தில் என்னென்ன விதங்கள் உள்ளன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவ்வளவாக முக்கியமில்லை. ஆனுல், தனது அமைப்பில் ஏன் இந்தச் சலிப்பூட்டும் ஒற்றுமை காணப்படுகின்றது, இந்த அமைப்பில் பல அங்கங்களாகப் பிரித்து, ஆனுல் அவைகளை ஒரே உடலில் ஏன் அமைக்க வேண்டும் என்பனவற்றை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். நாம் கவர்ச்சி மிகுந்த ஒரு இயற்கைக் காட்சியைப் பார்க்கையில் அதில் அடுக்கடுக்காக என்ன அம்சங்கள், எந்த வரிசையில் அமைந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனுல் பல அம்சங்கள் ஒன்றறக் கலந்து, ஒருமைப்பாடுள்ள கண்குளிரும் காட்சி எப்படி அமைந்தது என்பதை அறிந்து கொள்வதுதான் முக்கியம். பொருள்களுக்கும் அவை பற்றிய சிந்தனைகளுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதற்கல்லாமல், காட்சி அம்சங்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள நான் விரும்புவதில்லை. கடற் சங்குகளின் வரலாறு, தாவர சாத்திரம், கவி விமர்சனம், புஷ்பங்களில் பல ரகம், சிப்பி, பிராணிகள் வகை, கட்டிட சாஸ்திரம் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளவும், அவைகளைக் கொண்டு விஞ்ஞானத்தை

வளர்க்கவும்தான் காட்சியில் அமைந்துள்ள பொருள்கள் பற்றிய தகவல்கள்தேவை. இயற்கை சாஸ்திர அறிவுக்குத் தான் பிரம்மாண்டமான விசித்திரமான மிருகங்கள், மீன், பூச்சி வகைகள் பற்றிய விவரங்கள் தேவை. அன்னிய நாட்டு முறையில் அமைந்த கட்டிடங்களைக் கண்டு பழகிய அமெரிக்காவில் அடைந்து கிடந்த பிரஜை, ரோமாபுரியில் ஸெயின்ட் பீட்டர் ஆலயத்தைப் பார்த்தால் அதுவும் பிறநாட்டு கட்டிட முறையில் அமைந்ததோ என ஆச்சரியமடையலாம். மனிதனுக்கும் உலகிற்கும் உள்ள ஒருமைப் பாட்டைக் கவனிக்காத விஞ்ஞானியும் மனிதப் பண் பாட்டை இழந்து விடுகிறான். மனிதன் உலகின் மன்னன். இந்த உயர் பதவியை அவன் வகிக்கக் காரணம், உலகில் அவன்தான் மிக நுட்பபுத்தி வாய்ந்தவன் என்பதனால் அல்ல, அவன்தான் உலகத்தின் மூளையும் உள்ளமும் படைத்தவன் என்பதனால்தான்; பெரிதிலும், சிறிதிலும், மலையிலும், எல்லா வர்ண விசித்திரத்திலும், வான சாஸ் திரத்திலும், சூழ் நிலையினால் அடையும் மேம்பாட்டிலும் தனது அம்சங்களில் ஒரு பகுதியை அவன் காண்கிறான் என்பதனால், இந்த மர்மத்தை அறிந்ததனால்தான் பதினே ழாம் நூற்றாண்டில் தெய்விகப்பாடல்களை இசைத்த ஜார்ஜ் ஹெர்பர்ட் எனும் கவிஞர் மனிதனைப் பற்றி அருமையான கவிதை எழுதியிருக்கிறார், அதன் சாராம் சத்தைக் கீழே காணலாம் :

"மனிதனின் ஒரு அங்கமும் மற்றொரு அங்கமும் ஏற்றத்தாழ்வின்றி சீராக அமைந்த சித்திரமாகவும், அவன் உலகத்தினோடு ஒன்றியும் அமைந்துள்ளான். கீழுள்ள அங்கம் மேலுள்ளதை உடன்பிறந்தான் என அழைக்கத் தக்க ஒற்றுமை; தலைக்கும் காலுக்கும் உள்ள தொடர்பு, சந்திரனுக்கும் கடலலைகளுக்கும் உள்ளது போன்று உயிர்க் காடுபோல் அமைந்துள்ளது. எட்டாக் கையிலுள்ளவைகளையும் அவன் எட்டிப்பிடித்துவிட்டான். விண்மீன்களையும் அவன் கண்கொண்டு பார்க்கிறான், இந்த அண்டத்திலெல்லாம் அவன் ஒன்றியிருக்கிறான். மூலிகைகள் மனிதனின் உடல் நோயைத் தீர்ப்பது ஏன்? அதன் நண்பனை நம் உடலில் அது காண்பதனால்தான்.

"காற்று நமக்காகவே வீசுகிறது, நமக்காகவே பூமி நிலைத்திருக்கிறது, விண்ணும் அதிருகிறது, ஊற்று ஜலம் புரண்டோடுகிறது. நாம் பார்ப்பதெல்லாம் நமது

நன்மைக்கே, நமது உவகைக்கே, நமது உடமைகளே. பிரபஞ்சம் எல்லாம் நமது உணவுக் கூடமாகவும், கோரிக்கை மடமாகவும் பயன்படுகிறது.

"நட்சத்திரங்கள் நம்மை படுக்கைக்கு அனுப்புகின்றன. இரவு நம்மீது திரையிடுகிறது. சூரியன் திரையை விலக்குகிறது. இசையும் ஒளியும் நமக்குக் களிப்பூட்டுகின்றன. எல்லாப் பொருள்களும் தணிந்து நம்மைச் சுற்றியிருப்பதால் நம்மிடம் அன்பு பூண்டிருக்கின்றன. பொருள்கள் மேலே காண்பதும், அதன் காரண காரியங்களும் நமது அறிவுக்கு விருந்தாயிருக்கின்றன.

"மனிதன் கவனித்தறிந்து கொள்வதற்கும் அதிகமாக அவனுக்குப் பணியாட்கள் இருக்கின்றனர். அவன் திரும்புமிடமெல்லாம் அவன் நோய்வாய்ப்பட்டு மெலிந்திருக்கையில் அவனுக்குப் பணிபுரியத் தயாராயுள்ள நண்பர்கள் தென்படுகின்றனர்.

"ஆ! அன்பே! மனிதனே ஒரு உலகம். அவனுக்குப் பணிவிடை செய்ய மற்ருேர் உலகம்."

இந்தப் பேருண்மைகள் மனிதர்களை விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இழுக்கிறது. ஆனுல், ஆராய்சிக்கான சாதனங்களில் ஈடுபட்டு அவர்கள் உண்மையை மறந்து விடுகின்றனர். விஞ்ஞானிகளின் இந்த அறைகுறை ஆர்வத்தால் பிளேட்டோ, "சரித்திரத்தை விட கவிதை அடிப்படை உண்மையை நன்கு அறிகிறது" என்று கூறியதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது, ஊகங்களும் தீர்க்க தரிசன மொழிகளும் ஒரளவு நமது மதிப்பிற்குரியவை. உருப்படியான யோசனை கூருத சுலோகங்களை விட உண்மையை லேசாகக் காட்டும் ஊகங்களுக்கு நாம் அதிக மதிப்பளிக்கிருேம். ஆராய்ந்து எழுதுவதன் நோக்கம், இதுவரையில் யாருக்கும் தெரியாத சிந்தனைகளை வெளியிட்டு ஆன்ம தாகத்தைத் தீர்ப்பதுதான் என்பதை அறிவுமிக்க எழுத்தாளன் உணர்வான்.

ஆகையால், இயற்கை, மனிதன் இரண்டின் சம்பிரதாயங்களைப் பற்றி என்னிடம் பாடிய கவிஞனின் கருத்துக்களை வெளியிட்டு இக்கட்டுரையை முடிக்கின்றேன். இந்தக் கருத்துக்கள் ஏற்கனவே உலகில் நிலவியிருப்பதால், அவைகள் சரித்திரத்தில் இடம்பெற்றவை யாகும், ஒரளவு எதிர்காலத்தை முன் கூட்டியே சொல்வதுமாகும்.

"மனிதன் பொருளிலிருந்து தோன்றியவனல்ல,

ஆன்மா மூலம் தோன்றியவனே. ஆன்மாவின் தனிச் சிறப்பு அது அழியாதது என்பதுதான். ஆகையால், ஆன்மாவிற்குப் பல சம்பவக் கோர்வைகளும் பழங்கால நிகழ்ச்சிகளும் புதுமையாகவும், இளமையாகவும் தோன்றும், ஆதி மனிதனிலிருந்து பின்னர் தனிப்பட்ட மனிதர்கள் தோன்றினார்கள். மனித சரித்திரத்தில் ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு மைல்க் கல்லாகும். சரித்திரம் என்பது மனிதனின் வீழ்ச்சியில் ஒரு சகாப்தம்.''

"இயற்கையிடம் பாசம் இருப்பதை நாம் நம்புவதில்லை, அதை மறுக்கவும் செய்கிறோம். இவ்விஷயத்தில் முடியிழந்து, அறிவிழந்து, மாடுமாதிரி புல் தின்ற நெபுகட்னெஸர் (*Nebuchadnezzar*) மன்னனுடைய நிலையில் நாம் இருக்கிறோம். ஆனால், இந்த நிலைமையை மாற்றிக் கைதூக்கிவிட ஆன்மாவுக்குள்ள சக்தியை யார் மதிப்பிடவல்லவர் ?

" மனிதன் சீர்கெட்டுப் போன கடவுள்மாதிரி. மனிதர் நிரபராதிகளாயிருந்தால் நீண்டநாள் வாழ்ந்த கனவிலிருந்து விழித்துக் கொள்ளும் மாதிரி மென்மையாக அமர பதவியடையலாம். மனிதச் சீர்குலைவு பல நூற்றாண்டுகளுக்கு நிலவுமானால், உலகம் பூராவிலும் பித்தர்களும் வெறியர்களுமே நிலவுவார்கள். இந்தப் பைத்தியக்கார நிலைக்கு வராமல் நம்மைக் காப்பது மரணமும், குழந்தைமையும் தான். குழந்தைப் பருவம் தேவதூதர் மாதிரி மனிதனிடம் வந்து 'தேவலோகத்திற்குத் திரும்பி வந்துவிடு' என்று அவனை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறது.

' மனிதன் தன்னையே சிறுமைப்படுத்திக் கொள்கிறான். ஒரு காலத்தில் அவனை ஆன்மிகம் ஆட்கொண்டிருந்தது. தன்னுடைய ஆன்மிக உணர்வை அவன் இயற்கைமீது பரவச் செய்தான். ஆடவனிடமிருந்து சூரியனும், பெண்களிடமிருந்து சந்திரனும் தோன்றினார்கள். அவன் மனதில் நிலவிய ஒழுங்கு சாதிகளும், அவன் செயல்களின் திட்டங்களும் பகல் இரவு, வருஷத்தில் பல பருவங்கள் ஆகிய பாகுபாடுகளைத் தோற்றுவித்தன. தனக்கான இப்பெரிய உறைவிடத்தைச் சமைத்துக் கொண்டதும் அவனுடைய உற்சாகம் குன்றியது. 'அவனுடைய நரம்புகளில் ரத்த ஓட்டம் குறைந்து அவன் குன்றிப்போய் விட்டான்.' இந்த அமைப்பு அவனுக்கு ஏற்றதாயிருந்தாலும் அளவுக்கு மிஞ்சிய மேல்சட்டை போலாகிவிட்டது. அதாவது, அது ஒருகாலத்தில் அவனுக்கு ஏற்றதாயிருந்தது. இன்று அது

அளவுக்கு மிஞ்சிப் பெரிதாகப் போய்விட்டது. தன் வேலையைப் பற்றி பெருமைப்பட்டுக் கொள்ளவே அவன் தயங்குகிறான். இப்பொழுது ஆடவன் சூரியனைப் பின்பற்றுகிறான்; பெண் சந்திரனைப் பின்பற்றுகிறாள். ஆனால், சில சமயம் திடீரென தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு தன்னைப் பற்றியும் தான் வாழும் இவ்வுலகைப் பற்றியும் வியப்புறுகிறான். இரண்டிற்கும் உள்ள ஒருமைப்பாட்டைக் கண்டு பிரமிக்கிறான். தான் இட்டதே சட்டம் எனும் நிலை இன்னமும் நீடிக்குமானால், தன்னிடம் இன்னும் உயிர் சக்தி துடிக்குமானால், அவன் வார்த்தைகள் பொன்போலப் போற்றப்படுமானால், அது அவன் உணர்வோடு கையாளும் சக்தியினால் அல்ல, அவனுடைய இயல்பான உள்ளுயிர்களால்தான்." இவ்வாறு என் கவிநண்பர் பாடினார்.

தற்காலம் மனிதன் தன் சக்தியில் பாதியைத்தான் இயற்கையின்மீது பிரயோகிக்கின்றான். உலகத்தின்மீது தன் அறிவு கொண்டுதான் ஆட்சி புரிகிறான். அவன் உலகில் வாழ்ந்து தனது கடுகளவு புத்திகொண்டு அதனை ஆள்கிறான். உலகில் மிகுந்த உழைப்பை மேற்கொள்பவன் அரை மனிதன்; அவனுடைய கை கால்கள் பலமுள்ளதாகவும், அவனது ஜீரணசக்தி சிறப்பாகவும் இருந்தாலும் அவனது மூளை மிருகத்தன்மை வாய்ந்தது, அவன் ஒரு சுயநலக் காட்டுமிராண்டி. இயற்கைக்கும் அவனுக்கும் உள்ள உறவும், அதன்மேல் அவன் வசிக்கும் ஆதிக்கமும் உணர்வின் மூலம்தான். பூமியை எரு வளப்படுத்துவது போல் அவன் உணர்வு இயற்கையைச் சிறப்பிக்கிறது. தீ, காற்று, தண்ணீர், மாலுமியின் திசைக்கருவி, நீராவி, நிலக்கரி ரஸாயனம்மூலம் விவசாயம் யாவற்றையும் சிக்கனமாகப் பயன்படுத்தி இயற்கையை வளப்படுத்துகிறான். பல் வைத்தியனும், ரண வைத்தியனும் மனித தேகத்தைச் செப்பனிடுகின்றனர். மனிதன் தனது சக்தியைப் பயன்படுத்துவது எப்படி இருக்கிறதெனில், நாடு கடத்தப்பட்ட அரசன் ஒரேயடியில் இழந்த சிம்மாசனத்தைக் கைப்பற்றுவதற்காக அந்த ராஜ்யத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்குவது போலிருக்கிறது. இதற்கிடையில் நள்ளிருளில் சிறு சிறு ஒளிவீச்சுகளையும் காண்கிறோம். மனிதன் தனது முழு சக்தியையும் பயன் படுத்தி—அறிவு, உணர்வு இரண்டின் மூலமும் இயற்கையை ஆட்கொள்ளப் பார்ப்பதற்கு அவ்வப்போது சில உதாரணங்கள்

தெரிகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் சரித்திரத் தொடக்கத்தில் நிகழும் அற்புதங்கள் : ஏசுநாதரின் சரித்திரம் ; அடிமைத்தன ஒழிப்பு, அல்லது மத, அரசியல் புரட்சிகள் மாதிரி கொள்கை வெற்றிபெறுதல்—ஸ்விடன்பர்க், ஹோஹன்லோஹே, ஷேகர்கள் முதலியோர் மாதிரி உற்சாக மேலிட்டால் நிகழும் அற்புதங்கள் ; மிருகக வர்ச்சி, பிரார்த்தனை, சொற்பொழிவு, இயற்கை வைத்தியம், குழந்தைகள் பேரறிவு போன்ற உதாரணங்களைக் கூறலாம். இந்த உதாரணங்கள் மூலம் அறிவு சில சமயங்களில் செங்கோலைக் கைப்பற்ற முயற்சிக்கிறதைக் காணலாம். இந்தச் சக்தி இடம், காலத்தால் கட்டுப்பட்டதல்ல ; இயற்கையாகவே ஊற்றெடுத்தாற்போல் வந்து மனிதனுக்கு சக்தியூட்டுகிறது. மனிதனின் உண்மையான சக்திக்கும், அவனுக்கு இயற்கை வலுவால் ஏற்படும் சக்திக்கும் பண்டிதர்கள் மாறுபாடு காண்கின்றனர். மனித அறிவை அந்தியகால அறிவென்றும், ஆண்டவன் அறிவை உதயகால அறிவு என்றும் அவர்கள் விவரிக்கின்றனர்.

உலகிற்கு ஆதியிலிருந்து அழியாத அழகளிக்க வேண்டுமானால் ஆன்மா விடுதலையடைய வேண்டும். இயற்கையை நாம் பார்க்கும்பொழுது அது சூன்யமாகவோ சிதைந்திருப்பதாகவோ நமக்குத் தோன்றினால் அது நம்முடைய கண்ணின் கோளாறு. நமது திருவடியின் அடிப்படையும் உலகப் பொருள்களின் அடிப்படையும் ஒரே கோட்டில் அமையவில்லை. ஆகையினால் வெறுங் கண்ணாடி போலல்லாமல், முகம் பார்க்கும் கண்ணாடிபோலிருக்கிறது. உலகம் ஏன் ஒன்றுபட்டு ஒழுங்கானதாகத் தோன்றாமல் இடிந்து விழுந்த முட்டுகள்போல் தென்படுகிறது என்றால் மனிதன் தன் இயல்புக்கு மாறாக நடப்பதுதான். ஆன்மத் தேவைகள் யாவற்றையும் அவன் திருப்திசெய்ய முடியாவிட்டால் அவன் சிறந்த இயற்கை பக்தனாயிருக்க முடியாது. அவனுக்கு அன்பு மட்டுமிருந்தால் போதாது, ஊடுருவிப்பார்க்கும் தன்மையும் வேண்டும். இந்த இரு லட்சணங்களில் ஒன்றில்லாவிட்டால் மற்றது சோபிக்காது. வார்த்தைகள் நுட்பமான பொருளில் சிந்தனை பக்திக்குரியது, பக்தி சிந்தனைக்குரியதாகும், அலையும் அலையும் மோதிக் கொந்தளிப்பது போல. ஆனால் பிரத்தியட்ச வாழ்க்கையில் சிந்தனையும் பக்தியும் ஒன்றுசேர்ந்து காண்பது அரிது. அப்பாவி மனிதர்கள் தங்கள் மூதாதையரைப் பின்

பற்றி ஆண்டவனை வழிபடுகின்றனர். ஆனால், அவர்கள் கடமையுணர்ச்சியைப் பூரணமாகப் பயன் படுத்துவதில்லை. ஆனால், பொறுமை மிக்க இயற்கை சாஸ்திர பண்டிதர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஆராய்ச்சித் திறனின் பனிப் படலத்தில் ஆராய்ச்சிப் பொருளை மறந்தே விடுகின்றனர். பிரார்த்தனை என்பதே உண்மை பற்றிய ஆராய்ச்சி யல்லவா? யாரும் கண்டிராத பரம்பொருளை நாடி ஆத்மா செய்யும் யாத்திரையல்லவா? மனமாரப் பிரார்த்தித்தவன் கடுகளவாவது அறிந்து கொள்ளாமற் போனதில்லை. உண்மை ஒளியுள்ள சிந்தனையாளன் எந்தப் பொருளையும் விருப்பு வெறுப்பின்றி சிந்தனை சக்தியொன்றினால் மட்டும் நோக்கினால் புனிதமான பற்றுதலுடன் விஞ்ஞானத்தை வளம் பெறச் செய்வான். அப்படிச் செய்வானானால் ஆண்டவன் மீண்டும் தமது சிருஷ்டித் தொழிலைத் தொடங்குவார்.

அறிவு அறிந்துகொள்ளத் தயாராயிருந்தால் ஆராய் வதற்காகப் பொருள்களைத் தேடிக்கொண்டு அலைய வேண்டியதில்லை. சாமான்யமான பொருள்களில் அதிசயத் தைக் காண்பவன்தான் ஞானி. பகல் பொழுது என்பது யாது? வருஷம் என்றால் என்ன? கோடைகாலம் என்றால் என்ன? பெண் என்பது யார்? குழந்தை எது? தூக்கம் என்பது என்ன? பார்க்கத் தெரியாத நம் கண்களுக்கு இவைகள் எல்லாம் ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. ஒரு உண்மையின் தெளிவை மறைத்து அது அறிவின் உயர்வான ஒழுங்குக்கு உட்பட்டது என்றுசொல்வதற்காக அதை அளக்கிறோம். ஒரு புதிய எண்ணத்தின் ஒளிபட்டு உண்மை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தவுடன், நாம் கட்டின கதையின் குட்டு வெளிப்பட்டு, உண்மையான உயர்ந்த ஒழுங்கைத் தெளிவாகக் காண்கிறோம். ஞானிக்கு ஒரு சிறு உண்மை நல்ல கவிதையாகவும், கவர்ச்சி மிக்க கதையாகவும் படுகிறது. இந்த அதிசயங்களை நம் கண் முன் காண்கிறோம். நீயும் ஒரு மனிதன்தான். ஆண் பெண், அவர்களுடைய சமுக வாழ்வு, ஏழ்மை, உழைப்பு, தூக்கம், அச்சம், அதிருஷ்டம் யாவும் நீ அறிந்தவைகளே. இவைகளெல்லாம் வெறும் மேல் பூச்சுகளல்ல என்பதை அறிந்துகொள்: ஒவ்வொரு சம்பவமும் மனதின் இயக்கம் அல்லது பாசத்திலிருந்து எழுந்தது என்பதை அறிந்து கொள். இவைகள் பற்றிய பிரச்னைகள் கொள்கையளவில்

உன் அறிவைக் கவர்ந்திருக்கையில், இயற்கை இவைகளை பிரத்தியட்சமாக உன் முன் நிறுத்திப் பிரச்னைகளை நீயே உன் கையால் தீர்க்கச் சொல்கிறுள். தினம் தினம் நம் மனதில் தோன்றும் எண்ணங்களையும், அவை சம்பந்தமாக எழும் பிரச்னைகளையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் எப்படித் தீர்த்தோம் என்று ஒப்பிட்டுப் பார்ப்பது ரஸமான ஆராய்ச்சியாகும்.

ஆகையால் உலகைப் புதுக் கண்கொண்டு பார்ப்போம். இப்படிப் பார்த்தால் நம் அறிவு கேட்கும் முடிவில்லாத கேள்விகளுக்கு நாம் பதில் காணவேண்டி வரும். உண்மை என்பது யாது? அதனுல் ஏற்படும் ஆசாபாசங்கள் யாவை? நல்லது என்பது எது? பண்பட்ட மனவலிமைக்குப் பணிவதா? இதை எல்லாம் அறிந்து கொண்டால் என் கவிதை நண்பர் கூறியது நிகழும்: "இயற்கை நிலையானதல்ல, ஓட்டமுள்ளது. உருவகப்படுத்துகிறது, இயக்குகிறது. இயற்கை ஆண்மை அதை மாற்றுகிறது, உருவகப்படுத்துகிறது. இயற்கைஅசையாம விருப்பது, மிருகத்தனமாயிருப்பது, அதில் ஆன்மா இல்லை என்பதுதான். தூய்மையான ஆன்மாவுக்கு அது ஓட்டமுடையது. கொந்தளிப்பு மிக்கது, பணிவாயிருக்கிறது. ஒவ்வொரு ஆன்மாவும் தனக்கென ஒரு இருப்பிடத்தை அமைத்துக் கொள்கிறது. இருப்பிடத்திற்கப்பால் உலகத்தைச் சமைத்துக் கொள்கிறது, அதற்கும் அப்பால் அமர உலகைத் தோற்றுவிக்கிறது. ஆகையால், உலகம் உனக்காகத்தானிருக்கிறதென்பதை அறிந்துகொள். உனக்குத்தான் உலகம் பூரணமானக் காட்சியளிக்கிறது. நாம் என்ன நினைக்கிறோமோ அதைத்தான் பார்க்கமுடியும். ஆதாமிடமிருந்ததை நீயும் அடையலாம், ஸீசர் புரிந்ததை நீயும் புரியலாம். ஆதாம் தனது வீட்டை மண்ணும் விண்ணும் என்றழைத்தான். ஸீஸர் தனது வீட்டை ரோமாபுரி என்றழைத்தான். உன் வீடு ஒருவேளை சக்கிலியின் குடிசையாயிருக்கலாம். அல்லது, நூறு ஏகரா பண்பட்ட பூமியாயிருக்கலாம். அல்லது புலவனின் குடிசையாயிருக்கலாம். ஆனுல், பகட்டான பட்டப் பெயர்கள் சூட்டிக்கொள்ளா விட்டாலும் உலகத்தின் மீது உன் ஆதிக்கம் வீராதிவீரர்களுடையதற்கு சிறிதளவும்குறைந்ததல்ல. ஆகையால், உன் எண்ணத்திற்கேற்ப உன் உலகை நீ சமைத்துக்கொள். உன் மனதில் எழும் தூய

எண்ணங்களுக்கேற்ப உன் வாழ்க்கை ஒட்டியதாயிருந்தால் நீ மகத்தான காரியங்களைச் செய்ய முடியும். ஆன்ம எழுச்சிக்கேற்ப உன் வாழ்க்கையிலும் புனிதமான புரட்சி ஏற்படும். உடனே விரும்பத்தகாத காட்சிகள். பன்றிக் கூட்டங்கள், சிலந்திப் பூச்சிகள், பாம்புகள், விஷப்பூச்சிகள், பைத்தியக்கார விடுதிகள், சிறைக்கூடங்கள், பகைவர்கள்—யாவும் பறந்தோடி மறைந்துவிடும். இயற்கையில் எழும் துர்நாற்றத்தையும், அடையும் அழுக்கையும் இயற்கை காய்ந்து காற்று அடித்துக்கொண்டுபோய்விடும். தெற்கே இருந்து கோடை வந்ததும் பனி கரைந்து பூமியும் பசும்புல் நிறைந்ததாகக் காட்சி யளிப்பதுபோல் முன்னேறி வரும் ஆன்மிகக் காற்று வழியெங்கும் அலங்கரித்து, தனது அழகை அள்ளி வீசிக்கொண்டு, தன் இன்னிசையால் யாவரையும் மயக்கும். அதன் இன்வீச்சினால் அழகிய திருமுகங்கள், பூரிக்கும் உள்ளங்கள், ஞானம் மிக்க நல்லுறைகள், வீரச் செயல்கள் எங்கும் நிறைந்து தீமையே பூண்டற்றுப்போகும். மனிதனின் தீர்க்க திருஷ்டியில் கிட்டாத இயற்கையின் மீது மனித ஆதிக்கத்தை—அம்மாதிரி ஆதிக்கத்தைக் காண்பது கடவுளைக் காண்பதைவிட அரிதானது—கண்ணிழந்தவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வைபெறுவது போல் இயல்பாகவே பெற்றுவிடுவான்."

அரசியல்

"இரும்பினாலும் தங்கத்தினாலும் என்ன பயன்? அவைகளைக்கொண்டு மேலும் இரும்பும், தங்கமும் வாங்கலாம்.

"உலகத்திலுள்ள ஆட்டு மந்தைகளையும் உணவுப் பொருள்களையும் கொண்டு மேலும் ஆட்டு மந்தைகளும் உணவுப் பொருள்களும் வாங்கலாம்.

"ஞானி மெர்லின் என்பவன் நெப்போலியன் பெரியோன் என நிரூபித்தான்.

"பொருள், நாணயம் இரண்டையும் கொண்டு அவைகளின் மதிப்புக்கு அதிகமான பொருள்களை வாங்க முடியாது. அதேபோல் அச்சம், சூது, பேராசை முதலியவைகளினால் ஒரு அரசாங்கத்தை அமைத்து விட முடியாது.

"மண்ணைக் கொண்டு மண் தன்மைக்கு மேலான கட்டிடம் அமைக்க முடியாது. எப்படி எனின் அரசாங்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு ஒரு கவிதை மூலம் விடை அளிக்கப்படுகிறது.

"கவிதா தேவதைகள் ஒன்பதின்மரும், நற்குண தேவதைகளும் ஒன்றுகூடி அட்லாண்டிக் மகா சமுத்திர மத்தியில் ஆட்சி பீடம் அமைத்து, அந்த ராஜ்யத்தில் சூரியவெளிச்சத்தால் பழத் தோட்டம் வளர்ந்து, ஆட்சியாளர்களைக் கைப்பிடித்திழுத்து, கோதுமை பயிரிட்டு, ஆலயங்களுக்கு மக்கள் மதிப்பு வைத்து, ஆட்சியாளர் பீடம் மக்கள் வாழ் இல்லம்போல் அமைந்தால், அன்று தான் குறைபாடே இல்லாத ராஜ்யம் உருவாகிறது. ஒவ்வொரு பிரஜையும் அரசனென அவன் இல்லத்தில் விளங்குவான்."

—**கவிதையின் சாரம்**

ராஜ்யத்தைப் பற்றிச் சொல்லும்போது அதன் பல்வேறு ஸ்தாபனங்கள் எல்லாம், நாம் பிறக்குமுன்பே செயல் புரிந்து வந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். ஆட்சி முறைகள் பிரஜைகளைவிட உயர்ந்தவை அல்ல,

அவைகள் தனி மனிதனாலேயே நிறுவப்பட்டன. சட்டமும் பழக்க வழக்கமும் சமூக வாழ்வில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தை சமாளிக்க மனிதனால் கைக் கொள்ளப்பட்ட சாதனம், அதே மாதிரி சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் மற்ற சமூகத்தினரும் இயற்றலாம் அல்லது பின்பற்றலாம், மாற்றலாம். அதுபோலவே, நாமும் அம் மாதிரியே நல்ல சட்டங்களையோ அவைகளையும் விட சிறப்பானவைகளையோ இயற்ற முடியும்—இவை யாவும் உண்மையே யானாலும் ஆட்சிமுறை பற்றி ஆராய்பவர்கள் அதுவும், அது சம்பந்தமான ஸ்தாபனங்களும் புராதன மானவை யல்ல, நாகரிகம் அறியாதவர்களால் அமைக்கப் பட்டவை யல்ல என்பதை மறந்துவிடலாகாது. ஒரு இளம் பிரஜைக்கு சமூகம் என்பது ஒரு மாயத் தோற்றம், அது மரத்திம்பைப் போல உணர்வற்று உறங்குவதாகவும், மரம் வேருன்றி யிருப்பதுபோல் அது சம்பந்தமான சில பெயர்களும் ஸ்தாபனங்களும் மாத்திரமே அவைகளை யொட்டி நிலவுவதாகவும் தோன்றலாம். ஆனால் அனுபவம் நிறைந்த ராஜதந்திரிக்குச் சமூகம் என்பது நீரோட்டம் போன்றது, அதற்கு உற்பத்தியும் கிடையாது முடிவும் கிடையாது. எந்தப் பகுதியும் எந்தச் சமயத்திலும் முக்யத்துவம் பெற்று மற்றபகுதிகள் தன்னைச் சுற்றி இயங்கும்படி செய்யும் ஆற்றலுள்ளது என்பதை அறிவான். மிக்க உறுதி வாய்ந்த பிஸிஸ்டிரேடஸ் (*Pisistratus*), அல்லது கிராம்வெல் (*Cromwell*) போன்றவர்கள் சிலகாலம் அரசாங்கத்தையே, தங்கள் ஆளுகைக்குட்படுத்தி யிருந்தார்கள். ஆனல் சில காலம்தான். சத்தியவாதிகளான பிளேட்டோ, பால் போன்றவர்கள் நிலையான புகழுடன் மக்கள் உள்ளத்தில் இடம் பெறுவார்கள் என்பதையும் பழுத்த ராஜ தந்திரிகள் அறிவர். ஆனல் அரசியலுக்கும் தேவைப் பாடுள்ள அஸ்திவாரம் அவசியமாகையால் அதை அலட்சிய நோக்குடன் பார்க்கலாகாது. குடியரசு பற்றி இளைஞர்கள் கருத்து யாதெனில், சட்டங்கள் மூலம் நகரங்களை வளம் செய்யலாம், கொள்கையிலோ, வாழ்க்கை முறையிலோ, தொழில் நடத்துவதிலோ, வர்த்தகம், கல்வி, மதம் முதலிய துறைகளிலோ மக்களின் ஓட்டுகளைக் கொண்டு சமுகத்தை ஆக்கலாம், அழிக்கலாம் என்றும் சட்டமியற்றப் போதிய ஓட்டு பலம் இருந்தால் ஒரு திட்டத்தை மக்கள் மீது நிறுத்திவிடலாம் என்பதும்தான்.

அசட்டுத் தனமான சட்டங்கள் மணலைக் கயிருகத் திரிப்பது போன்றது. நிலைத்து நிற்காது. பிரஜையை அரசாங்கம் பின்பற்றி அவனை மேன்மைப் படுத்த வேண்டுமே தவிர அவரை ஆட்டிவைக்கும் ஸ்தாபனமாகக்கூடாது!

அதிகாரத்தைக் கைப்பற்றுகிறவனை சீக்கிரத்தில் அப்புறப்படுத்தி விடலாம், உயர்ந்த இலட்சியங்களின் மூலம் தான் நிலையான அரசியல் ஸ்தாபனங்களை நிறுவ முடியும். ஒரு அரசாங்கம் அதில் விரும்பி வாழும் மக்கள் பண்பாட்டின் பிரதிபிம்பம் என்பதை அறிஞர்கள் நன்கு அறிவார்கள். சட்ட மென்பது சாதாரண ஒரு குறிப்புதான். நாம் மூடப் பழக்க வழக்கங்களில் பற்றுள்ளவர்களாதலால் சட்டத்திற்கு ஓரளவு மதிப்பளிக்கிறோம். அது மக்களிடம் எந்த அளவு மதிப்புப் பெற்றிருக்கிறதோ அந்த அளவுக் குத்தான் நிலைத்திருக்கும். நேற்று சில சட்டங்களை நாம் ஏற்றுக் கொண்டோமே, இன்றும் அவைகளை ஏற்க மறுத்தால் அவைகளுடைய கதி என்ன ஆகும்? சட்டம் என்பது நமது உருவத்தை முத்திரையாகக் கொண்ட நாணயம்போல. அந்த உருவம் மங்கிவிட்டதும் செல்லாக் காசு மீண்டும் நாணயப்பதிவு நிலையத்திற்கு வந்து விடுவது போல் சட்டமும் செயலற்றுப் போகும். இயற்கை ஜனநாயகவாதியுமல்ல, வரம்புக்குட்பட்ட அதிகாரமுடைய அரசனுமல்ல; அது சர்வாதிகாரம் படைத்தது. அதனு டைய குழந்தைகளாகிய நாம் கூறும் ஆட்சேபங்களைக் கேட்டு அசையவும் அசையாது, ஏமாறவும் ஏமாறாது. பொது மக்கள் அறிவு அடைய அடைய சட்டத்தின் குறைபாடுகள் வெளியாகின்றன. அதனிடத்துள்ள முரண் பாடுகள் தெரிகின்றன. அவைகள் தெளிவாகப் புலப்படுவ தில்லை, அவைகளைத் தெளிவடையச் செய்ய வேண்டும். இதற்கிடையில் பொது மக்களின் அறிவாற்றல் தங்கு தடையின்றிப் பெருகிக் கொண்டே வருகிறது. உண்மை யில் பற்றுள்ளவர்கள், எளிய வாழ்க்கை நடத்துபவர்கள் தீர்க்கதரிசிகள் கலையுள்ளம் படைத்த இளைஞன் இன்று காணும் கனவுகள், செய்யும் பிரார்த்தனைகள், தீட்டும் சித்திரங்கள் முதலியவை பகிரங்கமாக வெளிவரத் தயங் கலாம்; ஆனால், இவைகள்தான் சீக்கிரத்தில் பொது ஸ்தாபனங்களின் தீர்மானங்களாக விளங்கக் கூடியவை. இந்தத் தீர்மானங்கள் மக்களின் குறைபாடுகளின் பட்டிய லாகவும், உரிமைச் சாஸனமாகவும் மக்களிடையே

கடுமையாக விவாதிக்கப்பட்டு, அவைகளுக்காக யுத்தம் நிகழ்ந்து, கடைசியில் நூறு வருஷத்திற்கான சட்டங்களாக இடம் பெறும்; அவை பழமையானவுடன் புதிய தீர்மானங்கள், பிரார்த்தனைகள் உருப்பெற்றெழும். அரசாங்கத்தின் வரலாறு சிந்தனையின் மேலோட்டமான வரலாறு தான். மக்களின் பண்பாட்டையும், அபிலாஷைகளையும் இவை நெருங்கிப் பின் தொடரும்.

மனிதர்களைப் பெரிதும்கவர்ந்துஅதைத் தங்களுடைய சட்டம் அல்லது புரட்சிகள் மூலம் வெளிப்படுத்திய அரசியல் கொள்கைப்படி, அரசாங்கம் மக்களையும் அவர்களது உடமைகளையும் இரண்டு தனிப் பொருளாகப் பாவித்து அவைகளைப் பாதுகாப்பதற்கு தோன்றிய ஒரு ஸ்தாபனம். மனிதர் யாரும் ஒரே இயல்பினராயிருப்பதால் எல்லோருக்கும் மனிதன் என்ற அம்சத்தில் சம உரிமை உண்டு. இந்த சமஉரிமையை உணர்ந்ததால் தான் மக்கள் ஜனநாயகத்தைக் கோருகின்றனர். எல்லா மக்களுடைய உண்மையும் அறிவு படைத்ததன் காரணமாக மக்கள் என்கிற முறையில் சமமாயிருந்தாலும் அவர்கள் சொத்துரிமையில் மிகுந்த ஏற்றத் தாழ்வு காண்கிறோம். ஒருவனுக்குத் தனது உடைகள் தான் எல்லா உடமையுமாயிருக்கலாம்; மற்றொருவனுக்கு ஒரு ஜில்லாவே சொந்தமாக அமையலாம். இப்படி நேருவதற்கு மனிதர்களின் திறமையிலுள்ள தாரதம்மியங்களும், குடும்ப சொத்து வாரிசுக்கிரமத்தில் கிடைக்கும் வித்தியாசங்களும் காரணமாகலாம். மனிதஉரிமை எங்கும் ஒரே மாதிரியாயிருக்கிறது. மனித உரிமை அடிப்படையில் ஜனத்தொகை விகிதாசாரப்படி அரசாங்கம் அமையவேண்டும் எனக் கோருகிறது. சொத்துரிமையுள்ளவர்கள் சொத்து அடிப்படையில் ஆட்சி முறை அமைய வேண்டும் என வாதம் செய்கின்றனர். உதாரணமாக லபான் என்னும் ஒருவனுக்கு ஆட்டுமந்தைகள் இருக்கின்றன; அவைகள் திருட்டுப்போகாமல் பாதுகாக்க எல்லைப்புறங்களில் காவலாளிகள் நியமிக்கவேண்டும் என அவன் கோருகிறான். இதற்காக அவன் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறான். ஜேகப் என்னும் மற்றொருவனுக்கு ஆடுமாடுகளே கிடையாது. ஆகையால் அவன் அதற்காக காவலாளிகள் பொருட்டு வரி செலுத்துவதில்லை. ஆனாலும் தங்கள் உயிரைக் காப்பதனால் அந்தக் காப்பாளரைத் தேர்ந்

தெடுக்க லபான், ஜேகப் இருவருக்குமே உரிமையுண்டு. ஆனால், ஆடுமாடுகளைக் காக்கும் அதிகாரியைத் தேர்ந்தெடுக்க லபானுக்கு மட்டும் தான் உரிமையுண்டு. அதிகப்படியான காவலர்களும், காவல் நிலையங்களும் வேண்டுமானால் இதை முடிவு செய்யப் பிறருக்குப் பாதுகாப்பளிப்பதற்காக தனது கால்நடைகளை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடிய லபான், ஐஸக் போன்றவர்களுக்கே நாடோடியாக பிறர் கைச் சோற்றுக்கு எதிர்பார்த்து நிற்கும் ஜேகபைவிட அதிக உரிமை உண்டல்லவா?

சமுதாயத்தின் தொடக்கத்தில் சொத்துள்ளவர்கள் அந்த சொத்துக்களை அவர்களே தங்கள் உழைப்பால் சம்பாதித்தார்கள். இந்த நிலைநீடித்திருந்தவரையில் சொத்துக்கான சட்டத்தை சொத்துள்ளவர்களே இயற்ற வேண்டுமெனவும், மனிதர்களுக்கான சட்டங்களை மனிதர்களே இயற்றவேண்டும் எனும் நியதியை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

தானம் செய்வதன் மூலமும், வாரிசு உரிமையின் மூலமும் சொத்து அதை சம்பாதிக்காதவர்களுக்கும் வந்து சேர்ந்து விடுகிறது. தானத்தின் மூலம் கிடைக்கும் சொத்தும் உழைத்துப் பெற்ற சொத்து மாதிரியே கருதப்பட்டு வந்தது. பிதிரார்ஜிதமாகக் கிடைக்கும் சொத்தைப் பற்றி இயற்றப்படும் சட்டம் ஒவ்வொரு மனிதனும் எப்படி உரிமை கொண்டாடினால் பொது அமைதி குலையாமலிருக்கும் எனக் கருதுகிறார்களோ அதைப் பொறுத்து இயற்றப்பட்டது.

சொத்துள்ளவர்களே சொத்துக்கும், தனிமனிதர்களே மனிதனுக்கும் சட்டமியற்ற வேண்டும் எனும் கொள்கை நடைமுறையில் சாத்தியமில்லை. ஏனெனில் மனித உரிமைகளும் சொத்துரிமைகளும் ஒன்றுக் கொன்று பின்னிக் கிடக்கும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி எழுந்தன. கடைசியாக சொத்துள்ளவர்களுக்குச் சொத்தில்லாதவர்களை விட அதிகப்படி ஓட்டுரிமை வழங்குவதே சிறந்தது எனத் திட்டம் செய்யப்பட்டது. இந்த திட்டம் கிரேக்க நாட்டில் ஸ்பார்ட்டா மக்களிடையே நிலவிய, "நியாயமானதே சமத்துவமானது, ஆனால் சமத்துவமானது நீதியாகாது" எனும் கொள்கையைப் போலிருக்கிறது எனலாம்.

முன் காலத்தில் இருந்ததுபோல் இந்தக்கொள்கையின் மேன்மை இப்பொழுது அவ்வளவாக ஒப்புக்கொள்ளப்படுவ

நில்லே. இதற்கு ஓரளவு காரணம் சட்டங்கள் சொத்துக்கு அதிக உரிமையளிப்பது நியாயமா என மக்கள் சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டதுதான். இப்படி சொத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதனுல் சொத்துள்ளவர்கள் அதிகமாக ஏழைகளின் உரிமைகளைக் கவருவதற்குக் காரணமாயிருக்கிறது. இதனுல், ஏழைகள் ஏழைகளாகவே இருக்கவும் காரணமாகிறது. ஆனுல். சொத்துள்ளவர்களுக்கு அதிகப்படி உரிமைகள் வழங்கலாகாது என்பதற்கு முக்கியமான காரணம் தற்போதுள்ள சொத்துரிமை முறை தீமை விளைவிப்பது என்பதை வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் மக்கள் பொதுப்படையாக உணர்ந்துவிட்டனர் என்பதும், இந்த முறை மக்களுடைய குலத்தைக் சீர்குலேயச் செய்துவிடுகிறது என்பதும்தான். அரசாங்கம் மனிதர்களுக்கே அதிக மதிப்பளிக்கவேண்டும். ஏனெனில் மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் சொத்துரிமையை இழக்கமாட்டார்கள். அரசாங்கத்தின் நோக்கம் மக்களின் பண்பாட்டை வளர்ப்பதுதான். மனிதர் பண்பட்டால் அவர்களால் நடத்தப்படும் ஸ்தாபனங்களும் சீர்பட்டு அறநெறி அடிப்படையிலேயே சட்டங்களும் இயற்றப்படும்.

இந்தப் பிரச்னேயில் எவ்வளவு உண்மை உள்ளது என்பதை நேர்மையாகக் கண்டு உணராவிட்டால் அதனுல் குறைபாடுகள் ஒன்றும் இல்லே. அதனுல் ஒரு கெடுதியும் நேரிடாமல் காக்க இயற்கையான பாதுகாப்புகள் இருக்கின்றன. நாம் தேர்ந்தெடுக்கும் மாஜிஸ்டிரேட்டுகளைவிட இந்த இயற்கை அரண்கள் அதிகமான பாதுகாப்பளிக்கின்றன. சமுகத்தில் பெரும்பாலோர் இளேஞர்களும், அசடர்களும்தான். நீதிஸ்தலங்கள், ராஜ தந்திரிகள் முதலியவர்களின் வஞ்சனைகளே அனுபவித்த முதியோர்கள் தங்களுடைய சந்ததிகளுக்கு இதைப் பற்றி எச்சரிக்கை யாதும் செய்யாமல் இறந்துவிடுகின்றனர். அவர்களுடைய மூதாதையர் பிறர் சொல்லுவதை நம்பி வாழ்ந்த மாதிரி இவர்களும் பத்திரிகைகளே நம்பி வாழ்கின்றனர். பெரும்பாலோர் இம்மாதிரி அறிவற்றவர்களாகவும், ஏமாறுபவர்களாகவும் இருந்தால் அரசாங்கம் நசித்துவிடும். ஆனுல் அரசியல் நிர்வாகிகளின் அசட்டுத்தனத்திற்கும் தவறுகளுக்கும்கூட எல்லேயுண்டு. மனிதர்கள் மாதிரியே பொருள்களுக்கும்

ஒரு நியதி உண்டு. பொருள்கள் மனிதர்களின் அசட்டைக்கும் அக்கிரமத்திற்கும் உட்பட மறுக்கின்றன. சொத்து தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் இயல்புடையது. திட்டமிட்டு எருவிட்டாலொழிய பயிர் வளராது. விளையும் பயிரை, தானே அறுவடை செய்ய முடியும் எனும் நம்பிக்கையில்லாவிட்டால் குடியானவன் உழுது பயிரிடமாட்டான். எந்த ஆட்சி முறையிலும் மனிதருக்கும் சொத்துக்கும் அதற்குள்ள ஆதிக்கம் இருந்தே தீரும். பொருள் பிற பொருள்களைக் கவர்வதுபோல் ஒழுங்காக மனிதர்களும் சொத்தும் தங்களுடைய செல்வாக்கையும் சக்தியையும் பயன்படுத்திக் கொள்கின்றன. ஒரு பவுண்டு நிறையுள்ள மண்ணை எவ்வளவு சாமர்த்தியமாக வேண்டுமானாலும் மூடி வையுங்கள், அதை வெட்டிக் கொத்துங்கள், அதை நீராகவோ வாயுவாகவோ மாற்றுங்கள். எந்த உருவத்திலும் அது மொத்தத்தில் ஒரு பவுண்டு எடைதானிருக்கும. இந்த ஒரு பவுண்டு கனத்திற்குள்ள சக்தியினால் இது பிற பொருள்களை ஈர்த்தோ அல்லது செயவொட்டாமல் தடுத்தோ இயங்கும். அதே மாதிரி ஒரு மனிதனின் இயல்புகள், அவன் அறிவு, அவன் அறநெறிப் பண்பு எல்லாம் சேர்ந்து எவ்வளவு கொடுங்கோல் ஆட்சியையும் நேரடியாக முடியாவிட்டாலும் மறைமுகமாக வாவது எதிர்க்கும் சக்திபெற்றவை. அந்த சக்தி, சட்டத்தை ஆதரிக்காவிட்டால் அதை எதிர்க்கும்; நன்மை முறையால் வெற்றி கிட்டாவிட்டாலும், தீய வழியில் உரிமையுடன் முடியாவிட்டாலும் கலாச்சாரமாகவாவது எதிர்த்தே தீரும்.

தனிப்பட்ட மனிதனுடைய செல்வாக்கு என்று குறிப்பிடமுடியாது. ஏனெனில் மனிதர்கள் அறநெறியின் அவயவங்கள். உயர்ந்த சக்தி படைத்தவர்கள். பிரஜா சுதந்திரம், சமயப்பற்று போன்ற எண்ணங்கள் ஜனக்கூட்டத்தினரை ஆட்கொண்டுவிட்டால் அதனால் அந்தக் கூட்டத்தினத்திரிடம் ஏற்படும் சக்தியை அளந்து கூறமுடியாது. மக்கள் மனம் ஒருமைப்பட்டு சுதந்திரம் பெறவேண்டியோ அல்லது பிறநாடுகளை கைப்பற்றவேண்டிய இயக்கங்களிலோ மக்கள் ஈடுபட்டால் அவர்களுடைய சக்தியை அளவிட புள்ளி விவர நிபுணர்களின் கணக்குகள் எல்லாம் அதற்கெதிரில் நின்று செயல் புரியமுடியாது; அந்தக் கூட்டத்தினர் அவர்களுக்குள்ள சாதனங்களுக்கும் மிறிய

செயல்களில் ஈடுபடுவார்கள். இதற்கு உதாரணமாக கிரேக்கர்கள் (*Greeks*), ஸாரஸன் (*Saracens*) ஜாதியினர், ஸ்விஸ் (*Swiss*) நாட்டினர், அமெரிக்கர், பிரஞ்சுமக்களின் சரித்திரங்களைக் கூறலாம்.

இம்மாதிரியே சொத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தனி ஈர்க்கும் சக்தி இருக்கிறது. ஒரு சதம் எனும் நாணயம் குறிப்பிட்ட அளவுள்ள தான்யம் அல்லது பிற பொருள்களின் மதிப்பைக் குறிக்கும். பசி உள்ள மனிதனின் தேவைகளைப் பொருத்திருக்கிறது பொருளின் மதிப்பு. அது தேவையான சூடு, அல்லது ரொட்டி, தண்ணீர், அல்லது நிலமாயிருக்கலாம். சொத்துக்கு உடையவனை சட்டம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், சொத்துக்குள்ள சக்தி அந்தச் சொத்துக்கு இருந்தே தீரும், சொத்துள்ளவர்களுக்கு ஓட்டுரிமையில்லை, அவர்கள் தவிர பிறருக்கே அதிகாரமுண்டு எனப் பைத்தியக்காரத்தனமாக ஒரு சட்டம் திட்டமிடலாம். ஆனால், ஆண்டுதோறும் சொத்தை பாதுகாத்துக் கொள்ளும் சட்டத்தை சொத்துரிமையுள்ளவர்களே வகுக்கும்படியான சக்தியை எல்லோருக்கும் அப்பாற்பட்ட சக்தி அளிக்கும். சொத்தில்லாதவன் சொத்துள்ளவன் சொற்படி நடக்கும் செயலாளனாயிருப்பான். சொத்துரிமையுள்ளவர்கள் விருப்பப்படியே சொத்துக்குள்ள சக்தி சட்டசம்மதத்துடனே அல்லது சட்டத்தை மீறியோ நிறைவேற்றிக் கொள்ளும். இப்படிக் கூறுகையில் நான் பெரிய சொத்துடைமை யுள்ளவர்களைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. சொத்துள்ள எல்லோரைப் பற்றியும்தான் கூறுகிறேன். அநேக சந்தர்ப்பங்களில் நிகழுவதுபோல் பணக்காரர்களுடைய கட்சி தோல்வியுறுமானல், ஏழைகளின் பணம், சிறு பணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதன் ஒருமித்த சக்தியினால்தான் தோல்வியடைகிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஓரளவு சொத்து இருக்கிறது. அது ஒரு பசுவாயிருக்கலாம், அல்லது ஒரு கைவண்டி யாயிருக்கலாம், அல்லது அவனுடைய ஆயுதங்களாயிருக்கலாம். அவைகளை விற்க அவனுக்கு உரிமையுண்டு.

மாஜிஸ்டிரேட்டின் தவறுக்கு உட்படாமல் மக்களையும் சொத்தையும் காப்பதற்கு ஏற்பட்ட அவசியம்தான் அந்தந்த நாட்டின் பழக்க வழக்கங்களுக்கும், சிந்தனை முறைக்கும் ஏற்ப ஆட்சி அமைப்பையும் அதன் நடை

முறைகளையும் நிர்ணயிக்கிறது. ஒரு நாட்டிற்கும், மக்களுக்கும் தகுந்த ஆட்சி முறையை மாறுபட்ட பழக்கவழக்கமுள்ள நாடுகளுக்கு வழங்க முடியாது, ஒவ்வவும் ஒவ்வாது. இந்நாட்டு மக்களின் நினைவு தெரிந்த காலத்தில் இந்த தேச ஆட்சி ஸ்தாபனங்கள் தோன்றின. நம் நாட்டு மக்களின் குணம், வாழ்க்கை நிலையில் விளைவாகவே தோன்றின. அவர்களுடைய விருப்பு வெறுப்புகளை இன்னும் அவை பிரதிபலிக்கின்றன. வேறு நாட்டு அரசியல் முறைகளைவிட இவைகளே நமக்குப் பெரிதும் பிடித்திருக்கின்றன என நாம் பெருமை யடித்துக் கொள்கிறோம். இந்த ஸ்தாபனங்கள் மிக உயர்வானவை என்று சொல்ல முடியாவிட்டாலும் அவை நமக்கேற்றவை. தற்காலத்தில் ஜனநாயக முறையே மிகச் சிறந்தது என நாம் கூறலாம். ஆனால், பிற நாடுகளில் முடியாட்சியே மத ஆதரவு பெற்றிருக்கிறது. அந்நாட்டினர் முடியாட்சியே சிறந்தது என்றே சாதிக்கலாம். நமக்கு ஜனநாயகமே சிறந்தது என்பதற்குக் காரணம், தற்போதுள்ள சமயக் கருத்துகளுக்கு அதுவே ஏற்றதாயிருக்கிறது என்பது தான். நாம் ஜனநாயக வாதிகளாகவே பிறந்து விட்டதால் முடியாட்சியைப் பற்றித் தீர்ப்புக் கூற நாம் தகுதியற்றவர்கள். ஆனால், முடியாட்சி காலத்தில் வாழ்ந்த நம் மூதாதையருக்கு அந்த ஆட்சி முறையே சிறந்தது என்று தோன்றிற்று. நமது ஸ்தாபனங்கள் காலத்திற்கேற்றவையாயிருந்தாலும் பிற ஆட்சி முறைகளில் காணும் குறைபாடுகள் நமது முறைகளைப் பாதிக்காது என்று கூறி விடுவதற்கில்லை. ஒவ்வொரு ஆட்சியிலும் ஊழல் இருக்கிறது. நல்ல மனிதர்கள் சட்டங்களுக்கு முழு மதிப்பு அளித்து அதை ஒப்பி நடக்கலாகாது. ஆட்சிமுறையைக் கேலி செய்ய அரசியல் எனும் வார்த்தையைவிட சிறந்த வார்த்தை காண முடியாது. எனெனில் அரசியல் என்றால் எல்லாக் காலத்திலுமே தந்திரம் என்றே அறியப்பட்டது. ஆகையால் அரசாங்கம் என்பது தந்திரம் என்று ஏற்படுகிறது.

அரசாங்கத்தை ஆதரிப்போர் எதிர்ப்போர் என இருகூறாகப் பிரிந்து நிற்கும் கட்சிகள், உரிமைகளின் அவசியத்தை ஒருபுறம் ஊக்குவிக்கிறது, அதேபோல அவைகள் தோன்றியதும், அவைகளில் ஊழல்களும் கூடவே தோன்றுகின்றன. கட்சிகள் தோன்றுவதற்கு மனித இயல்பு

களும் ஒரு காரணமாகும். ஆகையினால்தான் கட்சிகளின் நோக்கங்கள் நிறைவேறத் தலைவர்களின் சாமர்த்தியத்தை விட மனித இயல்புகள் வகுக்கும் சாமானிய நோக்கங்களே வழிகாட்டிகளாயிருக்கின்றன. கட்சிகள் தோன்றியதற்கு தவறான காரணங்கள் இல்லாதிருக்கலாம். எனினும், நடைமுறையில் கட்சிகளுக்கும் தவறான நடவடிக்கைகளுக்கும் ஒரு நெருங்கியத் தொடர்பு உள்ளது போலவே எண்ணத் தோன்றும். காற்றடிப்பதை நாம் ஆட்சேபித்து நிறுத்த முடியாதது போல, தங்களுக்குள்ள உரிமைகளை அவர்கள் காப்பாற்றிக்கொள்ளக் கட்சிகள் தோன்றுவதையும், அவைகள் செயல்புரிவதையும் தடுக்கமுடியாது. கட்சியின் அங்கத்தினர்கள் ஒரு கட்சியில் இருப்பதற்கே குறிப்பிட்ட காரணம் கூறமுடியாது. அவர்களுக்கு எந்த விஷயத்தில் அக்கறையுள்ளதோ, அதற்குள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே அவர்கள் அங்கே இருக்கிறார்கள். இது அவர்களுக்குள்ள இயல்பான நிலைதான்.

யாராவது ஒரு தலைவரின் தூண்டுதலினாலோ, அல்லது சுயநலத்தின் விளைவாகவோ அவர்கள் இந்த இயல்பான நிலையை விட்டு உடமைகள் அல்லது அவைகளின் அமைப்புக்கு முரணான உண்மைகளைக் கைக்கொள்ள முற்படும்போதுதான் அவைகள் ஆட்சேபத்திற்குள்ளாகின்றன. கட்சிகளை ஓயாமல் கெடுப்பது தனிப்பட்ட தலைவர்கள்தான். இதனால் கட்சி ஸ்தாபனத்தை நாம் அயோக்கியர்கள் என்று கூறவில்லை. ஆனால், அவைகளைக் கெடுக்கும் தலைவர்களை நாம் மன்னிக்க முடியாது, அவர்கள் ஆட்டிவைக்கும் பாமர மக்களின் பேம்படியும் தன்மை உற்சாகம் முதலியவைகளினால் கிடைக்கும் பலன்களை தலைவர்கள்தான் அனுபவிக்கின்றனர். சாதாரணமாகக் கட்சிகள் சந்தர்ப்பச் சேர்க்கைகளால் தோன்றியவைகளே ஒழிய, கொள்கை ஆர்வத்தினால் தோன்றியவைகளல்ல. அவை தோட்டக்காரர்களுக்கும் வர்த்தகர்களுக்கும், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் முரண்பாடுகளின் பயனாகத் தோன்றியவை. நன்னெறி ஆர்வத்தில் இரு கட்சிகளும் ஒரேமாதிரியிருக்கலாம், ஆனால் திட்டங்களை ஆதரிப்பதில் இன்று ஒரு சார்பில் இருந்த கட்சி, மற்றொரு சமயம் வேறு சார்பை ஆதரிக்கலாம். கொள்கையடிப்படையில் இயங்கும் மத கோஷ்டிகள், சுதந்திர வர்த்தகக் கொள்கை

யாளர், எல்லோருக்கும் ஒட்டுரிமை வழங்கவேண்டும் எனக் கோருபவர்கள், மரண தண்டனையை ஒழிக்க விரும்பு பவர்கள், அடிமைத்தனத்தை ஒழிக்க விரும்புபவர்கள் முதலியோர் கொள்கை ஆர்வத்தைவிட்டுத் தனிப்பட்ட தலைவர்களைப் பின்பற்றும் நிலைக்கு வரலாம், அல்லது உற்சாகம் பெருகும்படி பணி புரியலாம். நம் நாட்டிலுள்ள பிரதான கட்சிகளின் குறைபாடு என்னவென்றால் ஆழ்ந்த கொள்கைப்பற்றுடன் பணிபுரியாமல், சமூகத்திற்கு நன்மையளிக்காத தாற்காலிகமான, ஒரு பகுதிக்குமட்டும் சம்பந்தமான சிறு பிரச்னைகளைத் தீர்ப்பதில் தலை கால் தெரியாமல் ஈடுபடுகின்றனர். தற்சமயம் நாட்டு மக்களின் பற்றுதலை சமமாகப் பெற்றுள்ள இரு கட்சிகளில் ஒன்றில் நல்ல கொள்கைப் பற்றிருக்கிறது, மற்றொன்றில் சிறந்த தலைவர்கள் இருக்கின்றனர். தத்துவதரிசிகள், கவிஞர்கள், மதப்பற்றுள்ளவர்கள் முதலியோர் தங்களது ஓட்டுகளை ஜனநாயகக் கட்சிக்கு, சுதந்திர வர்த்தகத்திற்கு, பெரும் பாலோருக்கு ஓட்டுரிமை யளிப்பதற்கு, குற்றச் சட்டத்தில் மக்களைத் துன்புறுத்தும் பகுதிகளை ஒழிப்பதற்கு, இளைஞர் களும் ஏழைகளும் செல்வம்பெறும் வசதிகளைத் தாராள மாகப் பெறுவதற்கு அளிப்பார்கள். ஆனால், இந்த நல்ல காரியங்களை ஆதரிப்பவர்கள் என்று அவர்கள் முன் நிறுத்தப்படும் அபேட்சகர்களை, அவர்கள் ஒப்புக்கொள் வார்கள் என்று சொல்வதற்கில்லை. ஜனநாயகத்தின் மூலம் பெறக்கூடிய நற்பண்புகளிலோ, நம்பிக்கையிலோ இந்த அபேட்சகர்கள் கருத்துள்ளவர்களல்ல. அமெரிக்க தீவிரவாதத்தின் சக்தி திட்டமான நோக்குடையதல்ல என்பதுடன் நாசத்தில் நாட்டங் கொண்டது. தீவிரவாதி களிடம் அன்பில்லை. அவர்களுக்கு தெய்விக ஆர்வமில்லை, வெறுப்பும் சுயநலமும் அவர்களிடம் நிறைந்திருப்பதால் அழிவுக்கே வழி காட்டுகின்றனர். ஆனால், மற்றொருபுறம் பிற்போக்காளர்கள் இருக்கின்றனர். அவர்கள் மிகவும் நிதானஸ்தர்கள்; திறமையும் நற்பண்பும் நிறைந்தவர்கள். ஆனால், கோழைகள் சொத்தைப் பாதுகாப்பதிலேயே கருத்துள்ளவர்கள். இந்தக் கட்சி எந்த உரிமையையும் ஆதரிப்பதில்லை, நற்காரியம் செய்வதில் ஆர்வம் கொள்வ தில்லை, தீமையை எதிர்த்துப் போராடுவதில்லை, தாராள மான கொள்கைகளை வகுப்பதில்லை, எதையும் நிர்மாணிப்ப தில்லை, எழுத்து வன்மை படைத்தவர்களன்று, கலையைப்

பேணி வளர்ப்பதில்லை, மதத்தை ஆதரிப்பதில்லை, பள்ளிகள் தொடங்குவதில்லை, விஞ்ஞானத்தை ஆதரிப்பதில்லை, அடிமைகளை விடுவிக்க முற்படுவதில்லை, ஏழைகளை நேசிப்பதில்லை, இந்தியக் குடிகளை போஷிப்பதில்லை, அகதிகளை வரவேற்பதில்லை. இந்த இரு கட்சிகளில் எது அதிகாரத்திலிருந்தாலும் நாட்டிலுள்ள வசதிகளுக்கேற்ப விஞ்ஞானம், கலை, சமுதாய நலன் முதலிய துறைகளில் உலகம் எவ்வித நற்பயனையும் எதிர்பார்க்க முடியாது.

இந்தக் குறைபாடுகள் இருந்தபோதிலும் நமது குடியரசின் எதிர்காலத்தைப் பற்றி என் நம்பிக்கை தளரவில்லை. யதேச்சையாக நிகழக்கூடிய சம்பவங்கள் அல்லது விபத்துகளால் நமக்குத் தீங்கு வந்து விடாது. மாருக, ஆத்திரமிக்க கட்சிகளுக்குள் ஏற்படும் சச்சரவுகளின் விளைவாக மனிதத் தன்மை சிறப்புற்று விளங்குகிறது. போட்டனி விரிகுடாவிலுள்ள சிறைக்கைதிகளின் குழந்தைகளும் மற்ற பகுதிகளிலுள்ள குழந்தைகளைப் போலவே நற்பண்புகளுடன் தான் வளர்கின்றன. நிலப்பிரபுத்வம், நிலவும் ராஜ்யங்களிலுள்ளவர்கள் நமது ஜனநாயக ஸ்தாபனங்களின் போக்கைக் கண்டு, அவைகள் அராஜகத்தில் தான் முடியுமோ என்று கூட ஐயுறுகின்றனர்; ஐரோப்பாவின் சரித்திரத்திலிருந்து கற்ற படிப்பினைகள் மூலம் நம்மில் முதியோரும் நிதான புத்தியுள்ளவர்களும் கூட நமது சுதந்திரத்தின் விளைவாகக் காணப்படும் கட்டுப்பாட்டுக்கிணங்காத ஆர்ப்பாட்டங்களைப் பார்த்து அஞ்சுகின்றனர். அரசியலமைப்புக்குத் தாராளமாக பொருள் காண்பதன் மூலமும், பொது ஜன அபிப்பிராய ஆதிக்கத்தின் மூலமும், அபாய காலங்களில் நமக்கு பாதுகாப்பளிக்க வல்ல ஊன்றுகோல்கள் இல்லை என்று கூறுகின்றனர். ஆனல், நம்முடைய ஸ்தாபனங்களைக் கூர்ந்து கவனித்த ஒரு அன்னியர் நமது விவாக முறைக்குள்ள புனிதத் தன்மையே நமக்குப் போதிய பாதுகாப்பாகும் எனக் கருதுகிருர். மற்ருெருவர் சமய சம்பந்தமாக கால்வின் மார்க்கத்தில் நமக்குள்ள பற்றே போதிய பாதுகாப்பாகும் என அபிப்பிராயப்படுகிருர். அரசியல் விஷயமாக எழுதிய பிஷர் ஏம்ஸ் பொதுஜன பாதுகாப்பைப் பற்றி உண்மை ததும்பும் உவமை கூறியுள்ளார். முடியரசையும் குடியரசையும் ஒப்பிடுகையில் அவர் “முடியரசு ஒரு வர்த்தகக் கப்பல்போன்றது, அது தண்ணீரில் நன்ருகச்

செல்லும். ஆனால் அது ஏதாவது பாறையில் மோதினால் உடைந்து முழுகி விடக்கூடும். குடியரசு கட்டு மரம் போன்றது. அது முழுகவே முழுகாது. ஆனால், அதில் செல்பவன் கால்கள் எப்பொழுதும் தண்ணீரிலேயே இருக்கும்" எனக் கூறியுள்ளார். பொருள்கள் இயங்கும் விதிகள் நமக்கு உதவிபுரியும் வரையில், எந்த அரசியல் முறையும் ஆபத்து விளைவிக்க முடியாது. வெளியிலிருந்து நம்மை அழுத்தும் கனத்திற்கேற்று நெஞ்சுறுதியிருந்தால் நம்மை எதுவும் ஒன்றும் செய்து விட முடியாது. வெளிச் சக்திகளை எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரிக்கலாம். ஆனால் உள்ளத்தில் எதிர்ப்புச் சக்தியும், அதே அளவுக்கு பெருகி வந்தால் அது நம்மை நசுக்க முடியாது. எந்தச் சக்தியும் இயல்பாகவே அதனுடைய எதிர்ப்பு சக்தியையும் வலுப்படுத்துகிறது. கட்டுக்கடங்காத சுதந்திரம் மக்களின் மனச் சாட்சியை இரும்பாக்கிவிடுகிறது. சுதந்திரம் குறையக் குறைய சட்டமும் ஒழுங்கும் பலப்பட்டு மனச்சாட்சி உணர்வற்று விடுகிறது. தான் என்கிற அகம்பாவமும், கடின சித்தமும் உள்ள தலைவர்கள் உள்ள இடத்தில்தான் ஜனத்திரள் தனிப்பட்டோர் உயிரை மாய்க்க முற்படுகிறது. உணர்ச்சிவசப்பட்ட ஜனத்திரள் எப்போதும் நிலையான மனோபாவத்துடன் இருக்காது; இருக்கவும் கூடாது. ஒவ்வொருவருடைய நலனும் ஜனத்திரள் ஆதிக்கத்திற்கு எதிராகத்தான் உள்ளது. நீதிதான் எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

எல்லாச் சட்டங்களிலும் அவைகளின் அவசியமும் நன்மை விளைவிக்கும் தன்மையும் பிரகாசிக்கின்றன. அதை சந்தேகத்திற்கு இடமின்றி என்றென்றும் நாம் நம்பவேண்டும். சில்லகள், பாட்டுகள் ரயில் பாதைகளில் துவங்குவது போல் சட்டங்களில் மனித இயல்பு மலர்கிறது. எல்லா நாடுகளின் சட்டங்களையும் ஆராய்ந்தோமானால் அவைகளில் மக்களின் பொதுவான மனச்சாட்சி பிரதிபலித்திருப்பதைக் காணலாம். மக்களின் ஒருமித்த நன்னோக்கத்திலிருந்துதான் அரசாங்கங்கள் தோன்றுகின்றன. எக்காரணத்திற்காக ஒரு நாட்டில் அரசாங்கம் அமைந்ததோ, அதே காரணத்தினால்தான் பிற நாடுகளிலும் ஆட்சி முறை தோன்றின. ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறு நோக்குடன் இயங்கினாலும், அவைகளுக்கெல்லாம் பொதுவான குறிக்கோள் உண்டு. ஒவ்வொரு மனிதனும் தனது

சாமான்ய தேவைகளுக்கும் செயல்களுக்கும் ஆதரவு தேடுகிறுன்; அவைபற்றி தன் மனத்திற்குள் முடிவு செய்து கொண்டு, அந்த முடிவே உண்மையானது, புனிதத்தன்மை வாய்ந்தது என்று நினைக்கிறுன். இந்த முடிவுகளை எல்லாப் பிரஜைகளும் ஒப்புக்கொள்கிறுர்கள். இவைகளைத்தான் ஏற்றுக்கொள்ளுகிறுர்களே ஒழிய, எது உண்டால் உடம்புக்கு நல்லது, எந்த உடை தரித்துக்கொண்டால் அழகாயிருக்கும், காலத்தை எப்படிக் கழித்தால் நல்லது, ஒவ்வொருவரும் எவ்வளவு நிலம் அல்லது பொது உதவி கோர உரிமையுண்டு என்பனபோன்றவைகளில் அவர்கள் ஒன்று சேரமாட்டார்கள். அவர்கள் உண்மை நியாயம் என்று கருதும் கொள்கைகளை நிலத்தைப் பிரிப்பதற்கு, ஆட்சியினர் உதவியைப் பங்குபோடுவதற்கு, தனிப்பட்டவர்கள் அல்லது அவர்கள் சொத்துகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். இந்தத் துறைகளில் அவர்களுடைய முதல் முயற்சி அவ்வளவு சிறப்பாயிருக்காது. கலப்பற்ற நியாயம்தான் அரசாங்கத்தின் அடிப்படை; இல்லாவிட்டால் ஆட்சிமுறை கலப்படமான மத ஆட்சியாகிவிடும். ஒவ்வொரு ஜாதியினரும் சட்டத்தை இயற்றுவது அல்லது அதை மாற்றுவது ஒரு ஞானியின் தூண்டுதலால்தான். ஆனுல் இயற்கை சிருஷ்டிகளில் ஞானியைக் கண்டு பிடிப்பது அரிதாயிருப்பதால், ஞானிகளின் ஆட்சியைப் பெறுவதற்காக பலவிதமான அரைகுறையான ஆனுல் சிரத்தைமிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு திட்டம்பற்றியும் ஒவ்வோர் கருத்தையும் அறிவது, முதலில் ஒரு தேர்தல் நடத்தி தேர்ந்தெடுத்தவர்களைக் கொண்டு சிறந்தவர்களைத் தேர்ந்தெடுப்பது, அல்லது பிரஜைகளில் சிறந்தவர்களைப் பொறுக்குவது, திறமையும் உள்நாட்டு அமைதியும் ஒருங்கே பெறுவதற்காக ஆட்சியை ஒருவரிடமே விட்டு விட்டு, அவரையே தன்னிஷ்டப்படி உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிப்பது போன்ற முறைகள் யாவும் ஞானியைத் தேடுவதில் சிலவகைகள். எல்லா ஆட்சி முறைகளிலும் ஒரு அழியா ஆட்சி வன்மை இருக்கிறது, இது எல்லா மன்னர் ஆட்சிக்கும் பொதுவானது, அது இயங்குவது ஆட்சிபுரிபவர்களின் எண்ணிக்கையைப் பொருத்ததல்ல. அவை இரண்டுபேர் கொண்டதாயிருந்தாலும் சிறப்பாகவும், ஒருவரே ஆட்சி நடத்ினுல் மிகச் சிறப்பாகவும் விளங்கும்.

ஒவ்வொரு மனிதனும் தன் இயல்பிலிருந்தே பிற மக்களையும் நன்கு புரிந்து கொள்ளலாம். எனக்கு எது சரி எது தவறு என்று தோன்றுகிறதோ அவ்வாறே பிறருக்கும் தோன்றுகிறது. எனக்கேற்றதைச் செய்து, ஏற்காததைத் தவிர்க்கையில் நான் கையாளும் முறைகளை, என் அண்டை வீட்டுக்காரனும் ஏற்று அவ்வாறே ஓரளவு இருவரும் ஒரே வழியில் செல்லுகிறோம். என் காரியங்களில் மட்டும் ஈடுபட்டிருப்பது போதாது; பிறரையும் எனக்குட்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியவுடன் நான் உண்மையிலிருந்து பிறழ்ந்து அயலாருடன் என் உறவில் போலித்தன்மை கலந்துவிடுகிறது. அயலானை விட எனக்கு அதிகத் திறமையும் பலமும் இருப்பதால் அவன் தன் மனத்திலுள்ள குற்றச் சாட்டுகளை நன்கு எடுத்துக்கூற முடியவில்லை என நான் நினைத்து சந்தோஷப்படலாம். ஆனால் இது பொய். இந்தப் பொய் அவனையும் என்னையும் ஒருங்கே பாதிக்கும். அவனைவிட நான் உயர்ந்தவன் என நினைப்பது அன்பு முறைக்கும் மனித இயல்புக்கும் மாறானதாகையால் அதை ஒரு செயற்கைப் பொய் மூலம் மறைக்க வேண்டியிருக்கிறது. இப்படி மறைப்பதுதான் அரசியலில் பலாத்காரமுறை. பிறருக்காக நானே செயல்புரிய முற்படுவது என்ற மாபெரும் தவறுதான், உலக ஆட்சிகள் யாவற்றையும் பெரிதும் களங்கப்படுத்துகிறது. இரண்டு பேர் சேர்ந்து நடத்தும் ஆட்சி மாதிரியேதான் பல பேர் சேர்ந்து புரியும் ஆட்சி. ஆனால் மக்கள் ஆட்சியை அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ளமுடியாது. நான் தன்னடக்கத்துடன் வாழ்வதற்கும், பிறரை என் மாதிரியே வாழவேண்டும் என வற்புறுத்துவதற்கும் உள்ள மாறுபாட்டை நான் நன்கு அறிவேன். ஆனால், உலக மக்களில் கால்வாசிப்பேர் சேர்ந்து நான் என்ன செய்யவேண்டும் எனத் திட்டமிட்டால், அதனால் ஏற்படும் மனக்குழப்பத்தின் விளைவாக, அவர்கள் கட்டளையின் அசட்டுத்தனத்தை நான் புரிந்து கொள்ள முடியாமலிருக்கலாம். ஆகையால் தனிப்பட்டோர் முடிவுகளைவிட பொதுஜன முடிவுகள் தெளிவற்றதாகவே இருக்கின்றன. தங்களுடைய நலனுக்குப் புறம்பான விஷயங்களில், மனிதர் சட்டமியற்றப் புறப்படுவது கேலிக்கூத்தாகவே இருக்கிறது. நான் என் குழந்தையின் நலனுணர்ந்து நானும் அதுவும் ஒரே மாதிரி எண்ணமிட்டு

விஷயங்களைப் புரிந்துகொண்டால் அந்த உணர்வு எங்கள் இருவருக்கும் ஒத்த சட்டத்தை இயற்றும். நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் ஒரே மாதிரி செயல் புரிகிறோம். ஆனால் நான் அவனைப்பற்றி நினைக்காமல், அவன் எண்ணத்தை ஊகித்து அதுதான் அவன் நோக்கமாக இருக்கக் கூடும். எனத் தீர்மானித்து, அவரை அதைச் செய், இதைச் செய் என உத்தரவிட்டால் அவன் கீழ்ப்படிந்து நடக்கவே மாட்டான். இதுதான் அரசாங்கங்கள் தோன்றிய வரலாறு—அதாவது ஒருவன் மற்றொருவரைக் கட்டுப்படுத்துவதற்காக செயல் புரிவது. எனக்குப் பழக்கமில்லாத ஒருவன் எனக்கு வரிவிதிக்கிறான். எட்டாக் கையிலிருந்து என்னைப் பார்த்து என் உழைப்பில் ஒரு பகுதி ஏதோ ஒரு காரணத்திற்குப் பயன்பட வேண்டும் என உத்தரவிடுகிறான்—அதுவும் நான் நினைக்கும் முறையில் அல்ல ; அவனுக்குத் தோன்றிய முறையில். இதனுடைய விளைவைப் பாருங்கள். எல்லாக் கடன்களிலும் வரிக் கடனைத்தான் மக்கள் மனமொப்பிக் கொடுப்பதில்லை. ஆட்சி முறைபற்றி என்ன கேலியான விமர்சனம் பாருங்கள். மற்ற செலவுகளிலெல்லாம் பணத்திற்கேற்ற பயன் கிடைக்கிறது என நம்புகின்றனர். ஆனால், வரிப் பணம் மட்டும் வீண் செலவெனவே மதிக்கின்றனர்.

ஆகையால் ஆட்சி எவ்வளவுக்கெவ்வளவு குறைவாயிருக்கிறதோ. அவ்வளவுக்கவ்வளவு நல்லது. சட்டங்கள் குறைவாயிருந்தால் அதிகார ஆர்ப்பாட்டமும் குறைவாயிருக்கும். ஆட்சி முறைச் சீர்கேட்டுக்குத் தக்க மாற்று தனிப்பட்டவர்களின் குண மேன்மையே, தனிப்பட்டோரின் சரிய வளர்ச்சிதான், பிரதிநிதியை மேற்பார்வை பார்ப்பதற்கேற்ற யஜமான் தோன்றல் ; அதாவது அறிவாளி தோன்றவேண்டும். இப்படிப் பார்த்தால் தற்கால ஆட்சி முறையில் போலி அறிவாளிகள் மலிந்திருக்கின்றனர் என்றுதான் கூறவேண்டும். நற்குணம், நற்பண்பு என்றால் என்ன ? மக்களுக்கு அறிவுபுகட்ட வல்லது, சுதந்திரம், பயிற்சி, மக்களுக்குள் பரஸ்பர உறவு, இவைகளை வளர்த்தலே நற்குணம். பிரபஞ்சத்தின் தலைமை தாங்கத்தக்க மனிதனுக்கு, மகுடம்சூட்டுவதுதான் இயற்கையின் இறுதி இலட்சியம். புத்திசாலியை அறிஞனாக்கவே ராஜாங்கம் இருக்கிறது. அறிஞன் தோன்றியதும் அரசாங்கம் மறைந்துவிடுகிறது. நற்குணம் படைத்தவர்கள் வாழு

மிடங்களில் அரசாங்கத்திற்கு அவசியமே இல்லாமல் போய் விடுகிறது. அறிஞனே அரசாங்கமாகிவிடுகிறான். அவனுக்கு படைபலம் தேவையில்லை, கோட்டை கொத்தளங்கள் வேண்டாம், கடற்படையும் அவசியமில்லை. அவன் மக்களை அளவு கடந்து நேசிக்கிறான். அவனுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டாம், விருந்து உபசாரம் நடத்த வேண்டாம், அவனுக்கு அரண்மனை வேண்டாம், நண்பர்களை வசியப் படுத்த அவனுக்கு இதுதான் கேந்திரமான இடம், இந்தச் சந்தர்ப்பம்தான் சௌகரியமானது என்பதுஇல்லை. அவனுக்கு நூல் நிலையம் தேவையில்லை, ஏனெனில் அவன் சிந்தனை செய்வதை நிறுத்திவிடவில்லை. அவனுக்கு ஆலயங்கள் வேண்டாம். ஏனெனில் அவனே தீர்க்கதரிசி. சட்டப்புத்தகம் தேவையில்லை, ஏனெனில் அவனேதான் சட்டமியற்றுபவன். பணம் வேண்டாம். அவனே நன்மதிப்பின் அவதாரம். அவன் உலாவ ரஸ்தா வேண்டாம், ஏனெனில் அவன் இருப்பிடத்திலேயே பொழுதை இன்பமாகப் போக்கவல்லவன். அவனுக்கு அனுபவம்வேண்டாம், ஏனெனில். ஆண்டவன் அவனுள் இருந்து அவன் கண்மூலம் உலகத்தை ஊடுருவிப் பார்க்கிறான். அவனுக்கு நெருங்கிய நண்பர்கள் கிடையாது, ஏனெனில் மக்களின் பிரார்த்தனையையும் தூய்மையையும் ஈர்க்கவல்ல காந்தசக்தி அவனிடமிருக்கிறது; ஆகையால் தனது கவிதை வாழ்க்கையில் பங்குபெறும்படி யாரையும் அவன் பயிற்றுவிக்க வேண்டிய அவசியமில்லை. அவனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு தெய்வத்தன்மை வாய்ந்தது; அவன் நினைவே மக்களிடம் நறுமணம் வீசச் செய்யும், அவன் பிரசன்னமே தீபதூப, புஷ்பாஞ்சலி செய்வதுபோன்ற மகிழ்ச்சியளிக்கும்.

நமது நாகரிகம் உச்ச நிலையடைந்து விட்டதாக நினைக்கிறோம். ஆனால், அது இப்பொழுதுதான் உதயமாயிருக்கிறது. நமது காட்டுமிராண்டி சமூகத்தில் நற்குணத்தின் பயன் இளம் பிராயத்திலிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அரசியல் சக்தியூட்டவும், ஆளுபவர்களை ஆட்சி பீடத்திலிருந்து வாழ்த்தவும் நற்குணத்திற்கு இன்னும் வல்லமை ஏற்படவில்லை. மால்தஸும், ரிகார்டோவும் தங்களுடைய நூல்களில் நற்குணத்திற்கு இடமளிக்கவே இல்லை. மற்றும் பல்வேறு அகராதிகளில் அது இடம் பெறவில்லை. ஜனாதிபதியின் பிரசங்கத்திலோ, ராணியின்

உரையிலோ அதைப் பற்றிய குறிப்பே இல்லை. இவர்கள் குறிப்பிடாததால் நற்குணம் இல்லை என்றாகிவிட்டது. அறிவுபடைத்தவர்களும், புனிதமானவர்களும் செய்யும் சிந்தனைகள் உலகத்தை மாற்றுகின்றன. அதிகாரிகளிடத்தில் போராடுபவர்கள் தங்களுடைய கடுமையான போராட்டங்களுக்கிடையே, மதிப்புவாய்ந்தவர்களைக்கண்டு மயங்குகிறார்கள். வர்த்தகத் துறையிலும், பேராசை பிடித்தவர்கள் நடவடிக்கைகளிலும் காணும் சச்சரவே மகான்கள் இருக்கின்றனர் என்பதற்கு அறிகுறியாகும். இந்தத் துறைகளில் காணும் வெற்றியே இவைகளில் உள்ள வெட்கக்கேடான அம்சங்களை மறைக்கும் போர்வையாகின்றது. எல்லாத் துறைகளிலும் தயங்கியாவது மதிப்புக்கு மதிப்பளிப்பதை நான் காண்கிறேன். நம்மிடத்தில் எவ்வளவு மகத்தானதை எதிர்பார்க்கிறார்கள் பிறர் என்பதை அறிந்தே நம்மிடத்தில் உள்ள சிறு தகுதிகளைப் பெரிதாகக் காட்டுகிறோம்; நற்குண நற்பண்புகளுக்கு மேன்மை எப்போதும் இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஆனால், அந்த உணர்வுக்கேற்றபடி ஒழுங்காக நாம் நடந்து கொள்வதில்லை. நம் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒருவகைத் திறமையிருக்கிறது. நாம் ஏதாவது பயனுள்ளவேலை, இனிய பணி, அல்லது சிறப்பான காரியம், வேடிக்கையான செயல், லாபகரமான தொழில் செய்யலாம். இவையெல்லாம், பிறர் மெச்சும் நல்ல காரியங்களைச் செய்ய நாம் முடியாதவர்கள் என்பதற்கு பிறரிடம் மன்னிப்புக் கோருவது போலிருக்கின்றன. நமது இந்த வேலைகளைப் பிறர் கவனத்திற்குக் கொண்டுவரும் போதும், இவை நமக்கே திருப்தியளிப்பதில்லை. இவை பிறரை ஏமாற்ற உதவலாம். ஆனால் நாம் தெருவில் செல்லும்போது நிம்மதியுடன் நிமிர்ந்து நடக்க நமக்குத் தென்பளிப்பதில்லை; நாம் நம் தவறுக்கு மனம்வருந்தி நடந்து செல்கிறோம் என்பதற்கு, நமது அறிவாற்றலே பரிகாரம் போலிருக்கிறது. நாம் சிறப்பாக நடந்துகொண்ட சமயங்களில் கூட பணிவுடன் தலைகுனிகிறோம்; நமது இயல்பான பல நற்செயல்களில் இது ஒன்றென நினைக்காமல் நற்செயல் புரிந்ததற்குப் பெருமை கொள்ளுவதுபோல் நடந்து கொள்கிறோம். திறமை வாய்ந்தவர்களில் பெரும்பாலோர் சமூகத்தில் தோன்றும்பொழுது, பிறர் தயவால் வாழ்பவர்கள் போல் நடந்துக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும்

"நான் இங்கு இல்லேயே" என்று சொல்லுவதுபோலிருக்கிறது அவர்கள் தோற்றம். செனெட் சபை அங்கத்தினர்களும், ஜனாதிபதிகளும் மிகப் பாடுபட்டுத்தான் அப்பதவிகளை அடைந்துள்ளனர். அவர்கள் மேன்மையடைந்ததற்குக் காரணம் அந்தப்பதவிகள் அவர்களுக்குப் பிடித்திருக்கின்றன என்பதனுல் இல்லே. ஆனுல், நம் கண்முன் அவர்கள் பெரிய பதவிகள் வகிக்கத் தகுந்தவர்கள் என்று பகட்டாகக் காட்டிக்கொள்வதற்கே, தங்களுடைய தகுதிக் குறைவுக்கு அவர்கள் அடையும் நஷ்ட ஈடுதான் இந்தப் பெரிய பதவி. அவர்களால் இயன்றதை அவர்கள் செய்தே ஆகவேண்டும், சில காட்டு மிருகங்கள் போன்றவர்கள் இவர்கள். ஒன்று உயர ஏறவேண்டும். சமூகத்தில் சிறந்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தனது இனிமையான சுபாவத்தால் தன்னுடைய வாழ்க்கையை மேலாக, கம்பீரமாக நடத்தக்கூடிய சிறப்புடையவன் என ஒருவன் நம்பினுல், தம்மை ஆதரிக்கும் பத்திரிகைகளேயும், நண்பர்களையும் மீறி சாமான்ய அரசியல் வாதி மாதிரி பகட்டாக வாழ அவன் விரும்புவானு? சிரத்தையுடன் வாழக்கூடியவன் என்றும் டம்பாசாரியாக இருக்க விரும்ப மாட்டான்.

காலத்தின் போக்கு சுய ஆட்சிக் கொள்கைக்கு ஆதரவளிக்கிறது; அதன் கீழ் தனிப்பட்டவன் தன் சிறப்புக்கும் தாழ்வுக்கும் ஏற்ற வெகுமதியையோ நஷ்டத்தையோ அடைகிருன். செயற்கைத்தடைகள் மூலம்தான் முன்னேற முடியும் என நாம் எண்ணிக் கொண்டிருக்கையில், மனித இயல்பு துரிதமாகத் தனது பணியைச் செய்துகொண்டு போகிறது. இந்தப் போக்கு, தற்கால சரித்திரத்தில் சிறப்புற்று விளங்குகிறது. கண்மூடித்தனமாகவும், தகாத முறையிலும் பல நிகழ்ச்சிகள் நடந்தாலும், புரட்சியின் சிறப்பு புரட்சியாளர்களின் குறைபாடுகளால் சீர் கெட்டுப் போகவில்லே. எனினும் புரட்சி யென்பது புனிதமான சக்தியால் தூண்டப்பட்டு இயங்குவது. இந்தப் புனிதப் போக்கை சரித்திரத்தில் எந்தக் கட்சியும் மேற்கொண்டதில்லே, மேற்கொள்ளவும் முடியாது. இந்த சக்தி கட்சியிலிருந்து தனிப்பட்டவரைப் பிரித்து அவர்களே தேச மக்களுடன் பிணைத்து விடுகிறது. தனிப்பட்டோர் சுதந்திரம், சொத்திற்குப் பாதுகாப்பு முதலியவைகளேவிட, உயர்தரமான உரிமைகளுக்கு இந்தப் புனித சக்தி உத்தர

வாதாமளிக்கிறது. ஒரு மனிதனுக்கு பேறு பெற உரிமையுண்டு, தன்னை நம்ப வேண்டும் எனக் கோரும் உரிமையுண்டு, அன்புக்குப் பாத்திரமாகும் உரிமையுண்டு, மதிக்கப்படும் உரிமையுண்டு. அன்பு அடிப்படையில் அரசாங்கம் அமைத்து இதுவரை யாரும் பார்த்ததில்லை. சமுதாய சம்பிரதாயங்களில் எல்லோரையும் இணங்கும்படி நிர்ப்பந்திக்கத் தவறினால், குழப்பம் ஏற்படும் என நாம் கருதலாகாது. பலாத்கார அடிப்படையில் இயங்கும் அரசாங்கம் கவிழ்ந்தால் ரஸ்தா போட முடியாது, தபால் எடுத்துச் செல்ல முடியாது, உழைப்பின் பயனைப் பாதுகாக்க முடியாது என்றும் நாம் எண்ணலாகாது. போட்டியே இல்லாமல் நடக்கும்படி நமது முறைகள் அவ்வளவு சீர்பட்டு விட்டனவா? நட்பினால் பிணைக்கப்பட்ட நாட்டு மக்கள் இன்றும் சிறந்த முறைகளை வகுக்க முடியாதா? ஆயுதத்தைத் துறப்பதனால், பலாத்காரத்தைக் கைவிடுவதனால் அபாயம் ஏற்படும் என மிகுந்த கோழை அல்லது பிற்போக்காளன்கூட அஞ்ச வேண்டாம். ஏனெனில் நமது மனவலிமைக்கும் மேம்பட்ட இயற்கை நியதிப்படி சுயநலம் மிக்கவர்கள் உள்ள இடங்களில் பலாத்கார அடிப்படை கொண்ட ஆட்சி நிலவும். ஆனால் பலாத்காரத்தைத் துறந்து வாழுட தூய்மை கொண்ட மக்கள் உள்ள இடத்தில் தபாலாபீஸ், ரஸ்தா போடுதல், வியாபாரம் செய்தல், சொத்து பரிவர்த்தகக் கண்காட்சிசாலை அமைத்தல், நூல் நிலையங்கள் கலா நிலையங்கள் அமைத்தல் முதலியவற்றிற்குச் சீரான ஏற்பாடுகள் செய்ய முடியும்.

நாம் மிகக் கீழான உலக நிலையிலிருக்கிறோம். ஆயுதந் தாங்கும் ஆட்சிகளை விருப்பின்றி வணங்குகிறோம். மதப் பற்றும், ஒழுங்கும் நிறைந்த நாட்டினரிடையே மிகுந்த மதபக்தியும் ஒழுங்கும் உள்ளவர்கள்கூட நீதியின் அடிப்படையிலும் இயற்கை அமைப்பின் ஒழுங்கிலும் நம்பிக்கையுடைவர்களாக இல்லை. சூரிய மண்டலம் போல் இந்த உலகையும் செயற்கைக் கட்டுப்பாடுகளின்றி நடத்தலாம் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. சிறைப் பயம் அல்லது சொத்துப் பறிமுதல் பயமின்றித் தனிப்பட்டவன் ஒழுங்காக நடக்க முடியும் என்றுகூட அவர்கள் நம்புவதில்லை. ஆட்சியை நீதி, அன்பு அடிப்படையில் திருத்தி அமைக்கலாம் என்பதில்கூட இவர்களுக்கு நம்பிக்கை

இல்லாதிருப்பது விந்தையாயிருக்கிறது. இப்படி நம்பிக்கையுள்ளவர்களும் அரைகுறை சீர்திருத்தக்காரர்கள். அவர்களும் குறைபாடுள்ள ஆட்சி முறையாவது இருந்தாக வேண்டும் எனும் கருத்துள்ளவர்கள். தனது அறநெறி உணர்வின் மேன்மையைக் கொண்டு சட்டங்களின் ஆதிபத்யத்தை எதிர்க்க முடியும் என நினைத்த ஒரு மனிதன் இருந்ததாகக்கூட எனக்கு ஞாபகமில்லை. அப்படியே ஒருவன் சிறப்பான எண்ணங்கொண்டாலும் அது வெறும் கானல் நீர் என்றே கொள்வார்கள். இந்த எண்ணங்கள் அனுபவ சாத்தியமானவை என்று ஒருவன் துணிவுடன் கூறுவானானால், அதைக் கேட்டுப் பண்டிதர்களும், மதகுருக்களும் சலிப்படைவார்கள். அறிவு படைத்த ஆண்களும் மென்மை எண்ணங்கள் கொண்ட பெண்களும், அம்மாதிரி கருத்துள்ளவனை வெளிப்படையாக உதாசீனம் செய்வார்கள். ஆனால் இம்மாதிரி எண்ணங்கள் மூலம் வாலிபர்களை உற்சாகமடையச் செய்ய இயற்கை தவறுவதில்லை. இம்மாதிரி உயர் எண்ணம் படைத்தவர்கள்—பன்மையில் கூறுவது தவறு—ஒருவருடன் நான் சமீபத்தில் பேசிக் கொண்டிருந்தேன். நேர்மாறான அனுபவம் எவ்வளவோ ஏற்பட்டிருந்தாலும் ஆயிரக்கணக்கான மக்கள்—நண்பர்குழாம் அல்லது காதல் ஜோடி மாதிரி உயர்ந்த நட்புரிமையுடன் வாழ முடியும் என்பதில் இவருக்குத் தளராத நம்பிக்கை இருக்கிறது.

—1844-ம் ஆண்டில் எழுதியது

கல்வி

உயர்ந்த அளவுக்கு அறிவு சக்தியை வளர்ப்பதற்கு எவ்வளவு பணம் செலவு செய்தாலும் அது அதிகமாகாது. உலகம் தோன்றியதன் பயன் மனிதன் அதனுடைய நியதியை அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான். மனித சமுதாயம் இந்த உண்மையை நன்கு அறிந்து கொண்டுள்ளது. செல்வத்திற்குத் தனியாக மேன்மை எங்குமே அளிக்கப்படவில்லை. "செல்வம்" என்பது ஒரு சாதனம். மனிதன்தான் இலட்சியம் என்று விவரித்ததி லிருந்தே இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம். உண்மை அர்த்தத்தைக் குறிப்பிட வார்த்தைகளை எவ்வளவு அழகாக உபயோகித்திருக்கின்றனர் என்பது உடனே விளங்கும்.

இந்தக் காரணத்தினால்தான் நியூஇங்கிலாந்தை நான் வாழ்த்துகிறேன். உலகத்திலுள்ள மற்ற நாடுகளைவிட அங்கேதான் கல்விக்காகப் பணத்தைத் தடையின்றிச் செலவுசெய்கின்றனர். நாம் இங்கு குடியேறியவுடன் முதன் முதலாக உலகம் கண்டிராத புரட்சியொன்று செய்தோம். இந்தப் புரட்சி மூலம் இந்த நாட்டின் எதிர்காலமே திட்டம் செய்யப்பட்டது. ஏழையானவன் பட்டினிகிடந்து மடியும் தருவாயில்கூட சட்டசம்மதமின்றி ஒரு பிடி தான்யம்கூட எடுக்கமுடியாது. பனியால் விரைத்துப்போன பாதங்களுக் கணிய ஒரு ஜதை மிதியடி பெற முடியாது. ஆனால், அதே ஏழை பணக்காரனுடைய ஜேபியில் தாராளமாக கை விட்டு "நான் படிக்கப் பணம் கொடு; அதுவும் உன் இஷ்டப்படியல்ல, என்னிஷ்டப்படி படிக்கப் பணம் கொடு; இயற்கையைப்பற்றி மட்டுமல்ல—மொழி, வெள்ளாண்மை, கலை, முதலியவைகளில் பயிற்சி பெறப் பணம் கொடு" என்று சட்டப்படிக் கேட்க அனுமதிக்கப் பட்டுள்ளான். பொதுப் பணத்திலிருந்து அடிப்படையான கல்விபெற, விஞ்ஞானம், கலைத் துறைகளில் முழுப் பயிற்சி பெற அர சாங்கம வகைசெய்யவேண்டும். குழந்தைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய கல்வி வளர்ச்சி அரசாங்கத்தின் பொறுப்பு. பொதுச் செலவில் கல்வி

எல்லோருக்கும் அளிக்கப்பட வேண்டும். இதுவே நம் நாட்டில் நாம் செய்துள்ள புரட்சி.

மனிதப் பண்பின் நோக்கில் பள்ளி, கல்லூரி, சமூகம் எல்லாவற்றிலும் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் பாராட்டப் படுகிறுன். அலாவுதீன் மாயக் கதைகள், கைஜஸ் கூடுவிட்டுக் கூடுபாயும் கதைகள், ஒரு தாயித்தைத் தேய்த்தால் அரண்மனைகள் திறந்து வழிவிடுவதும், அல்லது பூமிக்கு அடியிலே மாய மாளிகைகள், பாதாள கடலுக்கு அடியில் மாயமாளிகைகள ஆகிய அதிசயங்களையும் காணலாம் என்பனபோன்ற அபூர்வக் கற்பனைகள் மனிதனின் அறிவு விசாலமடைந்திருப்பதையே காட்டுகின்றன. மற்றபடி அவைகள் கட்டுக் கதைகளே. ஒரு முட்டாள் அறிவாளியாவதும், ஒரு மனிதன் அசடாயிருந்து சாமார்த்தியசாலியாக மாறுவதும் — இவையெல்லாம் மங்கியிருந்த அறிவை எல்லையின்றித் திரியும் கனவு உலகிற்குக் கொண்டுபோய் விடுகின்றன. இந்த நிலையடைந்துவிட்டால் தொடுவானம்கூட மறைந்து வான வெளிகூட விசாலமடைகிறது ; மனிதன் எதனுடைய மூல காரணத்தையும், பொருள்களுக்குள் உள்ள தொடர்புகளையும் அறிந்துவிடுகின்றுன்.

சரித்திர வரலாற்றில் கவலை தரும் பிரச்னை நாகரிகம் எப்பொழுது தோன்றிற்று என்பதுதான். மனிதனையே பின்பற்றி அவனுக்கு உழைத்து வளரும் பிராணிகளின் இனம் மனித வர்க்கம் முன்னேறுவதுபோல் முன்னேறுவதில்லை. வீட்டில் பழகிய பிராணிகள், மனிதனிடமிருந்து வேடிக்கையளிக்கும் சில நன்மை பயக்கும் சில பழக்கங்களைக் கற்றுக்கொள்ளும் சாமர்த்திய முள்ளதாக இருக்கின்றன. ஆனால், அவைகள் இந்தப் பழக்கங்களைத் தங்கள் இனத்திற்குக் கற்பிக்க முடியாது. ஒவ்வொரு பிராணிக்கும் தனித்தனியே கற்றுத் தரவேண்டும். பயிற்சி பெற்ற ஒரு நாயால் மற்றொரு நாய்க்குப் பயிற்சி அளிக்க முடியாது. பிராணிக்குள்ள இந்த அறியாமை மனிதர்களில் சில இனத்தாரிடமும் காணலாம். ஆயிரம் ஆண்டுகளாகக் காட்டில் வாழும் காட்டுமிராண்டிகள் தங்கள் உணவுக்கும் உடைக்கும் வகை செய்துகொள்வது தவிர எந்தக் கலையையோ, திறமையையோ கற்றறிய முயற்சி செய்யவில்லை. கரடிகள், ஓநாய்களைவிட அறிவுள்ளவர்கள் காட்டுமிராண்டிகள். இவர்களைவிட இனிமையான

சீதோஷ்ண நிலையில் வசிக்கும் சில இனத்தார் சற்றுக் கூடுதலான அறிவுள்ளவர்களாக இருந்திருக்கின்றனர்.

பொருள்களை தன் வசப்படுத்துவது மனிதனின் வேலை. இந்த நிலை அடையும் வரையில் மனிதனைப் பொருள்கள் வசப்படுத்தப் போராடி அவனை இழிவுபடுத்தி வந்தன. மனிதனின் முன்னேற்றத்தில் அபாயங்கள் நிகழ்வதற்குக் காரணம், உலகமே தனது ஆசான், சூரிய சந்திரர், செடிகள் பிராணிகள் யாவும் அவனை ஊக்குவிக்கின்றன என்பதை அவன் அறியாததுதான். அவைகளின் அழகைக் கண்டு அவன் மயங்குகிறான்; அவைகள் தனது சுகவாழ்வுக்காகவே இயங்குகின்றன என எண்ணி இன்புறுகிறான்; அவைகளைத் தனது சாதனங்கள் என எண்ணுகிறான்; இந்த மயக்கத்தினால் மனிதன் அவைகளுடைய அடிமையாகிக் கடைசியில் அவைகள் பார்ப்பதற்குக்கூட சகிக்க முடியாத எரிச்சலூட்டுகின்றன.

மனிதனுடைய அறிவாற்றல், அவனுடைய தேவைகள் யாவும் இயற்கை தன் பல்வேறு சிறப்புகள் மூலம் தனக்குப் பணிபுரிய வேண்டும் என எதிர்பார்க்கின்றன. ஒளி, சூடு, தண்ணீர், மரம், ரொட்டி, குளிர்காக்கும் உடை மூலம் இயற்கை இவனுடைய அறிவை வளர்க்கின்றது. படைப்பின் பல்வேறு இனங்கள் ஒன்றுக்கொன்று பின்னிக்கிடப்பதால் மனிதன் வேட்டையாடுவது, பசும் புல் வளர்ப்பது, விவசாயம், வியாபாரம், நெசவு, இணைப்பு, கொத்துவேலை, வடிவியல், வானசாஸ்திரம் முதலியவைகளை அறிந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உலகத்தை இயற்கை நியதிகள் குடைந்து வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. உலகம் பலவித பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, சொத்துரிமை ஏற்பட்டிருக்கிறது. இவைகளால் ஆதிமனிதன் பலவித கட்டுப்பாடுகளுக்குள்ளாக நேர்ந்தது. படைப்பின் பல்வேறு பகுதிகளுடன் மனிதன் தொடர்புகொண்டு ஆரோக்கியம், நோய்வாய்ப் படுவது பற்றித் தெரிந்து கொள்ளவேண்டி வந்தது. காயம் பட்டால் அபாயம் என அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டது; புறநலன்களில் ஆசை கொள்ள ஆரம்பித்தான்; செல்வமும், சக்தியும் பெறும் ஆசையும் அவனைக் கவர்ந்தன. இல்லறம் மனசக்தியின் தன்மையை அறிந்து கொள்ளும் பள்ளிக்கூடம். சோகமும் இன்பமும் கலந்த வாழ்க்கையின் தன்மையை அங்கே அறிந்துகொள்ளலாம்.

அங்கே தான் இரவும், பகலும் மாறிமாறி வரும் அற்புதத்தின் ரகஸ்யத்தை அறியலாம். இந்தப் பாடத்தை அறிவதன் மூலம் மனிதனை ஒன்றுபடுத்தும் அல்லது பிரித்துவைக்கும் புனித உறவுகளையும் உணர்ச்சிகளையும் அறிந்துகொள்ளலாம். இங்கே தான் வறுமையையும், அதனால் ஏற்படும் கஷ்டங்களையும் தேவைகளையும் அறிந்து அதன் மூலம் அறிவின் ஒளியைப் பெறலாம். இங்கே தான் உழைப்பாளி கஷ்டப்பட்டுப் பிழைக்கிறான், பாசங்கள் வளருகின்றன, நற்குணத்தின் ரகஸ்யங்கள் கற்பிக்கப்படுகின்றன. இங்கு தான் ஆணும், பெண்ணும் நற்குணங்களால் எப்படி பாதுகாப்புப் பெறலாம் என்பதை அறிகின்றனர்; இந்த அறிவினால் அவர்கள் தங்கள் கடமைகளை சிறப்பாக ஆற்றி நலம் பெறுகின்றனர். பழக்கம் தரும் மயக்கத்தினால் மக்கள் மதியிழந்து சில சமயம் பேயாட்டம் ஆடுகின்றனர். இங்கே தான் சிக்கனம், பேரானந்தம், அதிதி உபசாரம், சடங்குகள், நேர்மையாகப் பேசுதல், விபத்துகள், சாவு, நம்பிக்கை யாவற்றையும் பற்றி அறிந்துகொள்கின்றனர்.

ஒவ்வொருவரும் சக்திக்குப் பொறுப்பாளியா யிருக்கின்றனர், ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சிறுவனுக்கும் ஓரளவு ஆதிக்கம் இருக்கிறது. அந்த ஆதிக்கம் ஒரு பசு, உருளைக்கிழங்கு பயிராகும் நிலம், அல்லது கப்பல் படை, அல்லது ஒரு ராஜ்யத்தின் சட்டங்கள் மீதிருக்கலாம். இந்த அதிகார ஆசை எவ்வளவு செயல் திறனுக்குக் காரணமா யிருக்கிறது! இதற்காக எவ்வளவு உழைப்பை சலியாமல் மேற் கொள்கின்றனர்? இந்த ஆசையினால் மனிதன் நோக்கு கூர்மை யடைகிறது, அவனது ஞாபகசக்தியால் எவ்வளவு விஷயங்களுக்கு இடம் கிடைக்கிறது? ஒரு மனிதன் பல ஆண்டுகள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கலாம். பொருளும், மனமும் இயங்கும் நியதிகளை அவன் இடைவிடாது இத்துறையில் அறிந்து கொள்கிறான். இயற்கையுடன் நேரடியான தொடர்பு கொள்ளாமல், அந்த தொடர்பின் மூலம் புது ஞானமும் புது அனுபவமும் பெருமல் ஒருடாலர் பெறுமான முள்ள சொத்தைக் கூட அடைய முடியாது. இந்தத் துறையில் செயல் புரிவதனால் மனிதனின் பல்வேறு சக்திகளுள் போட்டி நடக்கிறது. எந்தவகையில் செயல் புரிந்தால் தக்க பயன்பெறலாம் என்று ஆராய்ந்து முடிவு

செய்ய வேண்டியிருக்கிறது. இதன் மூலம் அவன் சக்தி பெருகுகிறது. இந்த செயல் சக்தியைப் பெருக்கினால் அவனுடைய சிறப்பான குணங்கள் நுட்பமடைந்து வர்த்தகத்தின் மூலம் அவன் ஞானம் வளர்ந்து, அவன் நற்பண்புகளில் சிறந்தவனாகிறான்.

காற்றின் ஒவ்வொரு அசைவும் இயோலியன் வீணையில் (*Aeoliun Harp*) நாதத்தை எழுப்புவதுபோல் இயற்கையின் ஒவ்வொரு பகுதியும் மனிதனின் உள்ளத்தில் இசையை எழுப்புகிறது. நான் செய்யும் ஒவ்வொரு செயலும், நான் அனுபவிக்கும் ஒவ்வொரு வேதனையும் என்னை எல்லா விதத்திலும் புதிய மனிதனாக மாற்றுகின்றன, வறுமை, அன்பு, அதிகாரம்: கோபம், நோய், துயரம், வெற்றி எல்லாம் நம் மனத்தில் புதைந்து கிடக்கும் பல்வேறு சக்திகளை வெளிக் கொணர்கின்றன. இவைகளினால் நமது அற்ப ஆசைகள் பாதிக்கப்பட்டாலும் நமது மனோசக்தி பெருகுவது தடைப்படுவதில்லை. ஒரு மனிதன் என்ன செய்தாலும், அல்லது அவனுக்கு என்ன நேர்ந்தாலும் அவை மூலம் அவனுடைய உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சி, புது சிந்தனை, புதிய சக்தி பிறக்கிறது. இந்த அதிசயமான சக்திகளை உண்டாக்கி அனுபவிக்கவே மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை நாம் உணருகிறோமல்லவா?

மனிதனை விஞ்ஞானத்திற்கு இழுப்பது யாது? நள்ளிரவில் வானவெளியில் ஒரு சிறு சுடரை, அல்லது ஒரு பிரகாசத்திடலை காலம் போவது தெரியாமல் மனிதன் தேடி நிற்பதன் காரணம் என்ன? இவ்வாறு தேடுகையில் அவன் மகத்தான சக்தி பெறுவதாக உணர்கிறான்; தன்னுடைய அமைப்பிலேயே அவைகள் இயங்கும் சக்தி இருப்பதை உணர்ந்து தன் எண்ணப்படியே வானவெளியில் பல காலமாக நிலவும் ஒளிகள் இயங்குகின்றன என்பதையும் அறிகிறான். நியூடன் தோன்றி, ஒரு பொருள் விழுந்தால் அது மட்டும் தனித்து வாழ்வதில்லை, பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் ஒரே மாதிரி எப்பொழுதும் விழுந்து கொண்டிருக்கின்றன என்றும், இயற்கையிலுள்ள ஒவ்வொரு அணுவும் இயற்கையிலுள்ள புது அணுக்களுடன் ஈர்க்கப்படுகிறது என்றும் அறிந்து கூறினால் அவனுடைய மனோ சக்தியை தான் வாழும் உலகிலுள்ள கன அணுமேல் செலுத்துவ

துடன் அவன் பார்த்திராத எல்லா உலக கன அணுமீதும் செலுத்துகிறான். உலகத்தின் ஒவ்வொரு பகுதியும், புதிய செடியும், காற்று. மேகம், கடற் சுழல்கள், ரஸாயனப் பொருள்கள் அமைப்பு கலவை முதலியவற்றில் ஹம்போல்ட் என்பவருக்கு என்ன கவர்ச்சி இருக்கிறது? இதேமாதிரி பல உண்மைகளை ஆராய்ந்து பார்த்ததில் மனிதனின் ஆராய்ச்சிக்கு அகப்படாத பல காட்சிகளை அவருடைய அறிவு பாகுபாடு செய்து வகுக்க முடியும். அந்தக் காட்சிகளில் உள்ள குழப்பம் தரத்தக்க அம்சங்களை அகற்றி அவைகளைத் தனது அறிவாட்சிக்குட்படுத்தி அதன் மூலம் உலகில் எல்லாப்பகுதிகளும் தனது ஆட்சியை நிலை நாட்டமுடியும் என்பதை அவர் உணர்ந்திருப்பது தான் இயற்கைப் பொருள்களில் காணும் கவர்ச்சி.

இயற்கைப் நிலையாயிருப்பதனால் அறிவு ஒரேமாதிரி பயிற்சி பெறுகிறது. அறிவுள்ளவர் ஒருவரையொருவர் அறிந்து கொள்கின்றனர். நாமிருக்கும் நிலையில்தான் நமது மொழியும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் வகையில் இருக்கிறது. மொழிக்கும் அதன் பயனுக்கும் முடிவே கிடையாது.

ஒருவகையில் வாழ்க்கையின் குறிக்கோள் அண்டத்தை மனிதன் தன்னுடன் பிணைத்துக் கொள்வது தான். அண்டத்தில் எதையும் அநாதையாக விட்டுவிடலாகாது. தூரத்தில் தெரிகிற மலை அவன் உள்ளத்தில் உருக்கொள்ள வேண்டும். அங்கே தெரியும் வானத்தையும் அவன் அறிந்துகொள்ள வேண்டும். சந்திரன், கிரகங்கள் சூரியனின் கதி, காலப்பாகுபாடு, வால் நட்சத்திரம், இரட்டை நட்சத்திரங்கள் ஆகிய யாவற்றையும் அறிந்து அவைகளின் உறவையும், இயங்கும் நியதியையும் புரிந்து கொள்ள வேண்டும். இதன் விளைவாக கோழையாக ஒன்று மறியாத பையன்கூட ஆர்க்கிமிடீஸ், பிதகோரஸ், கொலம்பஸ், நியூட்டன் போன்ற பௌதிக, விஞ்ஞானப் பேரறிஞர்கள் நிலைக்கு வரலாம். அந்தந்தத் துறையில் சிறந்த அறிவாளி எனத் திகழ்ந்து உலக அமைப்பின் நியதியை விவரித்துக் கூறும் வல்லவனுவான்.

மனிதர் உயிர் வாழ்வதனால் என்ன பயன் ஏற்படும் என்பதிலிருந்துதான் உண்மையில் உலகில் ஜனத்தொகை பெருகத் தொடங்கியது. எவ்வகையில் வெளியிட்டால் பொருள் தெளிவாகத் தெரியுமோ அதற்கேற்பவே

உண்மை உருப் பெறுகிறது. சரித்திரத்தை உற்று நோக்கினால் சந்திரன் வானவெளியில் நிலவி மனிதவர்க்கத்தைப் பார்ப்பதுபோல் எண்ணமும் நிலவுகிறது. உடனே மக்களின் உள்ளுணர்வை அந்த எண்ணம் ஆட்கொள்ளுகிறது. மனித அறிவை வளப்படுத்தவே உலகம் இருக்கிறது; உலகக் காட்சிகள் ஞான உலகில் புகுந்து தன் ஞானத்தை ஒளியுறச் செய்யும்படி மனிதரை அழைக்கின்றது; அதே சமயத்தில் இந்த உலகக் காட்சிக்காக மனிதனின் உள்ளுணர்வுக்கே விளக்கம் தருகின்றன. இந்த உண்மைகளை மனிதன் அறியும்படி செய்வதே கல்வியின் அடிப்படை நோக்கம்.

வாழ்க்கை என்பது ஒரு சூசகம் என்பதை நாம் அறிந்துகொள்ளும் வரையில் எவ்வித ஞானமும் அடைய முடியாது. நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. தினம் தினம் பல கவர்ச்சியில்லாத விசித்திரமான. அலட்சியம் செய்யத்தக்க உண்மைகளை அறிந்து கொள்கிறோம். பொழுதை எப்படியாவது போக்க விரும்புகிறோம். கண்முன் தோன்றும் காட்சிகளை விட்டு மனதைத் திருப்ப நினைக்கிறோம். நாம் அலட்சியம் செய்த காட்சிகளில் திடீரென பொன்னையும், நவரத்தினங்களையும் காண்கிறோம். ஒரு நாள் முழுதும் கண்ட காட்சிகளில் ரத்னக் கோட்டையையே காண்கிறோம். ஒரு காட்சி அல்லது நாம் கண்ட உண்மை ஆண்டவனின் விசுவரூபம் போல் தெரிகிறது.

வாழ்க்கை, மதம், தத்துவம்பற்றி நமக்கு பிரத்தியேகக் கொள்கை உண்டு. ஒவ்வொரு நிமிஷமும் நிகழும் சம்பவங்கள்—மழை நீராவிப்படகு மூழ்கியது, ஒரு அழகான முகத்தைக் கண்டது, ரத்தக் கொதிப்பினால் நமது அண்டை வீட்டான் மாண்டது—எல்லாம் நமது கொள்கையைச் சோதனை செய்கின்றன. இந்தச் சோதனையில் கண்ட முடிவைத்தான் உண்மை என்றோம் அதிலுள்ள குறைபாடுகளை வெளியிடுகிறோம். உண்மையை நாடும் ஆர்வத்தை நான் கைவிட்டுவிட்டு, வெளிப்படையான ஒரு கோட்பாடு, அல்லது பழைய மதம் அல்லது புதிய மதம், அல்லது ஸ்வெடன்பர்க் அல்லது கலின் போன்றவர்களின் கொள்கையை மேற்கொள்ளுவோமானால் முடிவில்லாக் காலத்தின் ஒரு பகுதியான ஒரு மணி நேரத்தில் காணும் புதிய சம்பவங்களின் பொருளை அறிய முடியாதவனாகி விடுகின்றேன். அரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத்

தெரியாத கட்டுண்ணி போல ஆகிவிடுகிறேன். கடவுள் தனது சுதந்திரத்தைக் கைவிட்டு ஆட்சியை வேறு ஒருவர் கையில் ஒப்படைத்து விட்ட நிலை ஏற்படுகிறது.

எனது அறிவுக்கோயிலில் ஆண்டவன் நுழைவதை நான் பார்க்கையில், வெறும் பகட்டுப் பேர்வழி, குடிகாரனின் மூளைகளில்கூட அவனையறியாமலே எண்ணங்கள் புகுவதைப் பார்க்கையில் மனித நற்குணத்தில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் என எதிர்பார்க்கலாம். மேதை லெபினிட்ஸ், "கல்வியை எவ்வளவோ சீர்திருத்த முடியும் என்பதைக் கண்கூடாகப் பார்க்கையில் சமூகத்தையும் சீர்படுத்த முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்று கூறியுள்ளதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது.

கல்வி எனும் பதம் எவ்வளவு சாதாரணமாக உணர்ச்சியற்று வழக்கில் தினசரி உபயோகப்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கையில் எதிர் காலத்தைப்பற்றிச் சிறிது பயப்பட வேண்டியிருக்கிறது. கல்வியைப்பற்றி ஒரு கட்டுரை, அதைப்பற்றி ஒரு மகாநாடு, ஒரு சொற்பொழிவு,— இவைகளைப்பற்றி நினைத்தாலும் கேட்டாலும் நமது ரத்த ஓட்டமே நின்றுவிட்டது போல் கொட்டாவி விடத் தோன்றுகிறது. கல்வியை சட்டம் திருத்த முற்பட்டால் நமக்கு உற்சாகம் ஏற்படுவதில்லை. கல்வி மனிதனைப்போல் பரந்ததாயிருக்கவேண்டும். மனிதனிடமுள்ள அம்சங்களை கல்வி வளர்த்து ஒளியுறச் செய்ய வேண்டும். அவன் புத்தி கூர்மையுள்ளவனாக யிருந்தால் கல்வி அதன் கூர்மையை மேலும் தீட்டி அதை வெளிக் கொணரவேண்டும். அவனுடைய கூர்மையான சிந்தனையால் மனிதர்களைப் பாகுபாடுசெய்யும் திறனுள்ளவனாயிருந்தால் கல்வி அதை மேலும் கூர்மையாகச் செய்ய வேண்டும்; அவன் சமூகத்தை ஒன்றுபடுத்தும் தன்மையுள்ளவனாயிருந்தால் கல்வி அவனுடைய அறிவுத் திறனை இந்த வேலையில் ஊக்குவிக்க வேண்டும். அவன் உற்சாகமுள்ளவனாகவோ, இளகிய மனதுள்ளவனாகவோ, பரந்த உள்ளம்படைத்தவனாகவோ, திறமை மிக்க தொழில் நுட்பம் தெரிந்தவனாகவோ, வலிமைவாய்ந்த தளகர்த்தனாகவோ, சக்தி வாய்ந்த நண்பனாகவோ, சாமர்த்தியம் மிக்க, பயனுள்ள இனிய போக்குள்ள சாதுர்யப் பேச்சுத் திறன், தீர்க்கதரிசனம், பலரைக் கூர்ந்துபார்க்க வல்லவ

ஞகவோ இதில் எந்த சிறப்பு வாய்ந்தவனுகவேனும் இருந்தால் — இம்மாதிரியானவர்களின் பணி சமூகத்திற்குப் பெரிதும் தேவையாயிருக்கும். மனிதனின் கற்பனைத் திறனை வளர்க்கவேண்டும். இயற்கையை உட்புகுந்து பார்க்காமல் ஏன் மேலோட்டமாகப் பார்க்கவேண்டும்? இயற்கையை விஞ்ஞானக் கண்கொண்டு பார்ப்பதும் மேலோட்டப் பார்வைதான். கவிதை உள்ளத்துடன் பார்த்தால்தான் இயற்கையை உட்புகுந்துபார்க்க முடியும். பரந்த வெளியே மனத்தின் ஒரு அம்சமல்லவா? ஆனால், என்ன கல்வி கற்றாலும், தினசரி நடப்புகளைப்பற்றி எவ்வளவு புத்தகங்கள் படித்தாலும் பரந்த வெளியை அறிந்துகொள்ள முடியுமா?

நமது பண்பாடு புலன்களுக்குப் பணிந்துவிட்டது. இவ்வாறு புலன்வசமாதல் ஆண்மைக்கு அழகல்ல. பரந்த வெளியையும் ஆத்மாவையும் மறந்துவிட்டால் பிரத்யட்சமானதும், அறநெறி உணர்வும் மட்டும் நம்மைத் தீரர்களாகவோ, சுதந்திரமுள்ளவர்களாகவோ ஆக்கிவிடமுடியாது. நம்மாதிரியே வளரும்படி நமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறோம். அவர்களுடைய ஆசைப்படி இயலாதமட்டும் உயரும்படி நாம் அவர்களுக்கு போதிப்பதில்லை. அவர்கள் கம்பீரமான இயல்புள்ளவர்கள் என நம்பி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில்லை. அவர்கள் உடலுறுதிபெற நாம் எதுவும் செய்வதில்லை. அவர்கள் கண் பார்வை, கைபலம் சீர்பட நாம் உதவுவதில்லை. சில உண்மைகளை அவர்கள் தெரிந்துகொண்டு அவைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும், கணக்கில் தேர்ச்சிபெறவும், மொழியில் வல்லமை அடையவும் நாம் பயிற்சியளிக்கிறோம். அவர்களைக் கணக்கர்கள், வக்கீல்கள், அல்லது இஞ்சினியர்கள் ஆக்கப்பார்க்கிறோம். திறமை மிக்க, சிரத்தை மிக்க, பரந்த உள்ளம் படைத்தவர்களாக அவர்கள் திகழ்வதற்கான பயிற்சிகளை நாம் அளிப்பதில்லை. வாழ்க்கை லட்சியத்திற் கேற்றதாக இருக்க வேண்டும் கல்வியின் மகத்தான குறிக்கோளும், கல்விக்கு அறநோக்கும் வேண்டும்; அது தன்னம்பிக்கை புகட்ட வேண்டும்; இளைஞனை தன் திறமையை வளர்ப்பதில் சிரத்தை கொள்ளச் செய்யவேண்டும்; தனது இயல்பை அறிந்துகொள்வதில் அவன் ஆவல் கொள்ளவேண்டும்; அவனுடைய மனத்திற்கு என்ன சக்தி இருக்கிறது என்பதை அவன் அறியவேண்டும். அவனிடம் நிரம்பிய

சக்தி இருக்கிறது என அவனுக்குக் கற்பித்து, ஆண்டவன் எதிரில் பரவசமடையும் பேராற்றல் அவன் பெறும்படி செய்யவேண்டும். அப்பொழுதுதான் கல்வி, ஆண்டவனுடன் ஒன்றுபட்டு இயங்கும். தனக்காகத் தானே உழைக்கையில் மனிதன் ஒரு துரும்புபோல் இருக்கிறான்; ஆனால், அவன் அன்பு, நீதிபோன்ற அறங்களை எடுத்துரைப்பவனாக மாறியவுடன் ஆண்டவனைப் போலாகிவிடுகிறான், அவன் சொல் எல்லா நாடுகளிலும் செலாவணியாகின்றது; எல்லா மனிதர்களும்,—அவனுடைய பகைவர்கள்கூட, அவனுடைய நண்பர்களாக அவனுடைய சொல்லுக்குச் செவிசாய்க்கிறார்கள்.

மனிதன் அமைப்பில் அறநெறி உணர்வே பிரதானமாயிருக்கவேண்டுமென வற்புறுத்துவதிலிருந்து இந்த ஒன்றை மட்டும் முக்கியமாகக் கொண்டு ஒரு பள்ளியைத் துவக்கவேண்டும் எனக் கொள்ளலாகாது, மனிதனுடைய பிற சக்திகளையும், உணர்வுகளையும் இந்த அம்சம் விழுங்கிவிட வேண்டும் என நான் கூறமாட்டேன். ஆனால், அறநோக்குதான் தலைமையாயிருக்கவேண்டும். அந்நோக்கு ஏகபோக ஆட்சி புரியுமானால் அதற்கு இடம் கொடுக்கும் மனிதனுடைய மனம் பண்படவில்லை; தன்னிடமுள்ள செல்வங்களை அவன் இன்னும் உணரவில்லை என்றுதான் நினைக்கவேண்டும். அவன் ஒரே எண்ணத்திற்கு இரையாகி அதில் மாத்திரம் பற்றுள்ளவனாகிவிட்டான் எனும் நிலைக்கு வந்து விடுகிறான். மனிதனின் அறிவும், செயல் திறனும் வளர்க்கப்பட்டு முதிர்ச்சி பெற வேண்டும். காலத்தின் கோலங்களை உற்றுநோக்கிய அதே பார்வையுடன் கல்விபற்றியும் ஆராயவேண்டும். மனிதனிடம் உள்ள எல்லையில்லாத பல்வேறு சக்திகளை கவனிக்க வேண்டும். உலகில் யாவும் இதைத்தான் நமக்குக் கற்பிக்கிறது.

ஒரு விஷயம் எனக்கு திருப்தியும் அளித்து, நம்பிக்கையும் ஊட்டுகிறது. நாம் நற்குணம் படைத்தவர்களாயிருக்கும் வரையில் இந்த நித்யயௌவனத்தை நாம் துறந்துவிட முடியாது. முந்திய தலைமுறையினரும், பிந்திய தலைமுறையினரும், ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளுவதில்லை. இளையவனுக்கு எவ்வித குறிக்கோளும் கிடையாது. அவனிடமிருந்து பயனுள்ள காரியம் எதையும் எதிர்பார்க்க முடியாது என முதியவர் நினைக்கிறார்.

எதையும் புரிந்துகொள்ள முடியாது, கல் மண்டையுள்ளவரிடம் எதையும் விளக்கிக் கூறிப்பயனில்லை என இளமை முறுக்குள்ளவன் கிழவரைப்பற்றி நினைக்கக் கூடும். இளையவன் எதிர்காலத்தை உற்றுநோக்கிப் பெரியவரிடம் சற்று பொறுமையாயிருக்கட்டும். அவன் ஆத்திரம்பூண்டு களைப்புற்று பெரியோர்களை அசட்டுத்தனமாக மட்டந் தட்டாமலிருக்க வேண்டும்.

நமது கல்வி முறையில் பொறுமையிழந்ததன் சின்னம் காணப்படுகிறது. இதைத் திருத்தவோ புரட்சிகரமாக மாற்றவோ வேண்டுமானுல் நம்பிக்கையைக் கைவிடலாகாது. இயற்கை அன்னை புதிதாக ஒரு மனிதனை சிருஷ்டிக்கையில் அந்த மனிதன் உலகில் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிருளோ அதில் அவனுக்கு முன் கூட்டியே ஆர்வத்தை உண்டாக்கி விடுகின்ருள். இந்தப் புதிய சிருஷ்டி என்ன செய்யப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். மஹோவசியமுள்ள இந்த புதிய சிருஷ்டியை உண்டாக்கியபோது அதனிடமிருந்து இயற்கை என்ன எதிர்பார்க்கிருள் என்பதையும் பார்ப்போம். உலகமாகிய இந்தத் தோட்டத்தில் தோன்றிய இந்தப் புதிய மனிதன் இந்தத் தோட்டத்திலுள்ள பிராணிகளின் பெயர்களை வகுக்கலாம், அல்லது விண்ணிலுள்ள தேவதைகளை அறியலாம். இந்தப் புதிய சிருஷ்டியைப் பிறர் தங்கள் மொழிகளாலும் கருத்துக்களாலும் பாழ் படுத்தாமலிருப்பதற்குப் போதிய பாதுகாப்புகளை ஆண்டவன் அளித்திருக்கிருர். வாழ்க்கை கவர்ச்சிகரமாயிருப்பதற்குக் காரணம் அதில் பலதிறப்பட்ட மேதைகள் இருப்பதும், உண்மையில் பலமாறுபட்ட சாயல்களும் மணமும் ஆண்டவன் அமைத்திருப்பதும்தான். அதனுல் தான் இந்தத் தன்மையைக் களங்கப்படுத்த மக்கள் விழைகின்றனர் ; இந்தப் புது சிருஷ்டி தங்கள் எண்ணப்படியும், தங்கள் மாதிரியும் நடந்த கொள்வதற்கான முயற்சிகளை ஓயாது செய்து வருகின்றனர். பெற்றோர்களிடத்தில் ஒரு கிழத்தரமான சுய மதிப்பு இருப்பதனுல் தங்கள் குழந்தை தங்கள் மாதிரியே இருக்கவேண்டும் என ஆசைப்படுகின்றனர். ஆனுல், இந்த நோக்கத்தை குழந்தை ஈடேறச் செய்வதேயில்லை.' தாயைப் போல் சேய்' என்கிற கோட்பாட்டை நிலைநாட்ட விரும்புவோமானுல் குழந்தைகள் இயற்கை அறிவின் போக்கின்படி வளராமல்

சாதாரணமாகவும் மந்தபுத்தி யுள்ளவர்களாகவும் வளரு கிறார்கள். ஒரு சிறுவனின் இயல்புக்கு மாறாக ஒரு தந்தை தன் கருத்துப்படி நடக்க கட்டாயப்படுத்துவதைப் பார்த் தால் என் மனம் வேதனையடைகிறது. மக்களை தங்க ளிஷ்டப்படி வாழ்ந்து இன்பமாக வளர விட்டு விட லாகாதா? மற்றொருவனை உன் மாதிரியே வளருவதற்கு முயற்சி செய்கிறாய். உன் மாதிரி நீ ஒருவன் இருப்பதே போதுமே.

துருக்கியர்கள் ஆலயச் சுவர்களில் கிரேக்கர்கள் தங்கள் சிற்பக் கலையின் மேன்மையைத் தீட்டியிருந் தார்கள். அதை துருக்கியர் சுவர் ஒரே மாதிரி இருப்பதற் காக வெள்ளையடித்தனராம். சிறுவர்கள் தன்மையையும் அவர்களுடைய மேதைதயையும் அறியாமல் அவர்கள் யாவரும் ஒரே மாதிரி திகழுவதற்குச் செய்யும் முயற்சி துருக்கியர் வெள்ளை யடித்ததைப் போன்றே இருக்கிறது. குழந்தைகள் இளமையே நீடித்து மனிதர்களாக விட்டு விடுவோம். அப்பொழுதுதான் இவர்கள் குணமும் அவர் களுடைய இயல்புபோல் வளரும்; அப்பொழுது தான் அவர்கள் திறமை மிக்கவர்களாயும், தீரச் செயல் புரிவதற் கேற்றவர்களாகவும் வளர்வார்கள்; அப்பொழுதுதான் இன்று நாம் எங்கும் காணும் பண்படாத உடலில் பண்பட்ட கண்கள் இயங்கும் காட்சியை பார்க்காம லிருப்போம்.

தெருப்பிள்ளைகளுக்கு தலைமை தாங்கி, விளையாட்டு மைதானத்திலும் பெயர் பெற்ற பிள்ளைகளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எல்லாவிதமான கடைகள், ஆறுகள், நகரக் கூட்டங்கள், ஜனக் கூட்டங்கள், குறிவைத்துச் சுடும் இடங்கள் ஆகியவைகளில் தாராளமாகப் புகுந்து பழகும் பிள்ளைகள் என்னைப் பெரிதும் கவர்கிறார்கள். இவர்கள் எங்கு நுழைந்தாலும் அந்த வீட்டைச் சேர்ந்த வர்கள்போல் அநுயாசமாக நுழைவார்கள். அவர்கள் பையில் பணம் இருக்காது. ஆனால், வறுமையைப்பற்றிக் கவலை கொள்ளாதவர்கள் அவர்களைப் பற்றி யாரும் சந்தேகிக்காத படி நடமாடி, அங்குள்ளவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே சென்று அங்குள்ள காட்சிகளைப் பார்ப்பார்கள், அவர்களிடத்தில் எதையும் ரகஸ்யமாக வைத்திருக்க முடியாது. தீயணைக்கும் நிலையத்தில் நடப்ப தெல்லாம் அவர்களுக்குத் தெரியும். என்ஜின்களுடைய

நுட்பங்களை அறிந்திருப்பார்கள், அதை ஓட்டுபவரைப் பற்றிய விஷயங்கள் யாவும் அறிவார்கள், எப்படி என்ஜினை நிறுத்துவது, அதை எப்படி ஓட்டுவது. என்பனவற்றை யெல்லாம் தாங்களே சோதனை செய்து பார்த்து விடுவார்கள் ; இவ்வாறே ரயில் பாதையில் ஓடும் ரயில் களின் நுட்ப திட்பங்களை அறிவார்கள், எஞ்சின் ஓட்டுபவ னுடன் நயமாகப் பேசி எஞ்சின் நிலையத்திற்கு அதைத் தாங்களே ஓட்டிச் செல்லும் வசதிபெறுவார்கள். இவர்கள் விளையாட்டாகத்தான் எங்கும் செல்வார்கள், தாங்கள் பள்ளியில் படிப்பவர்கள் என்பதை மறந்து சுற்றுவார்கள். தாங்கள் நீதிஸ்தலங்களில். கால் நடை மந்தைகளில் எங்கு சென்றாலும் ஒரு மணிக்கு முன் கணக்கு வகுப்பில் இருந்த மாதிரியே இவ்விடங்களிலும் பழகுவார்கள்.

ரஸாயன சாஸ்திரி உலோகத்தை அறிவதுபோல் இவர்கள் மெய்பொய்க்குள்ள வித்தியாசத்தைக் கண்டு பிடித்துவிடுவார்கள். உன்னுடைய நடை உடை பாவனை, பார்வையிலுள்ள குறைபாடுகளை நீ வாய்திறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே கண்டுபிடித்து கண்மூடிக் கண் திறப் பதற்குள் தங்கள் கருத்தை வெளியிட்டு விடுவார்கள். அவர்கள் தவறு செய்வதில்லை. அவர்களிடம் படாடோபம் கிடையாது, அனுபவத்தில் முழு நம்பிக்கை கொண்ட வர்கள். பந்து அல்லது கிரிக்கெட் தேர்தலில் தகுதி யறிந்து ஓட்டுச் செய்வார்கள். அவர்கள் முடிவு சரியான தாயிருக்கும். நீந்தக் கற்றுக்கொள்ளு முன்பு தாங்கள் நீந்தத் தெரிந்தவர்கள் என அவர்கள் பாசாங்கு செய்வ தில்லை ; படகோட்டத் தெரிந்த பிறகே துடுப்பைக் கையாளுவார்கள். அவர்களுடைய அலட்சியத்திற்குள் ளாகாமலிருக்கவே நான் விரும்புகிறேன். அவர்களிடம் நான் நல்ல பெயர் வாங்கிவிட்டால் அவர்களுடைய பெற்றோரின் நற்சாட்சிப் பத்திரம் பெறுவது சுலபம்.

பையன்கள் தங்களுக்குள் உற்சாகமாகப் பேசிப் பழகு வதைக்கண்டு எல்லோரும் ஆனந்திக்கின்றனர். அவர்கள் பேச்சில் சிரத்தை, நகைச்சுவை, குறைகூறுவது, நயமாகப் பேசுவது, அன்பு கோபம் எல்லாம் கலந்திருக்கின்றது. அவர்கள் விளையாட்டிலும் இப்படியேதான் நல்லியல்பும் வீராப்பும் கலந்திருப்பதைக் காணலாம். நமக்கு வயதான காலத்தில் இந்த இன்பம் நிறைந்த இளைஞர்களை நினைத்துப் பொறாமைப் படுகிறோம் ; இவர்கள் ஆர்வத்

துடன் விளையாடி, உடல் வளைய ஆடிப்பாடியதால் தான் பள்ளி அல்லது கல்லூரி நாட்களில் சிறப்பாக விளங்கினர். விளையாட்டின், உழைப்பின் பொருளை உணர்ந்தனர். அவர்களுடைய விகடங்களின் மூலமும், வக்கிரச் செயல்கள் மூலமும் தான் ஹோரேஸ் அடைந்தது போன்ற சிறப்பை அவர்கள் அடைந்தனர். எல்லையற்ற திறம்படைத்த இந்த இளைஞன் வேட்டையாடிவிட்டுத் திரும்பியதும் தனது அனுபவங்களை ரஸமாக எடுத்துரைக்கிறுன். அவனது உரை கிரேக்கப் பேராசிரியர்கள் ஹோமர், வர்ஜில் பற்றியும், கல்லூரிப் பாட்டுகள் பற்றியும், ஆங்கில ஆசிரியர் வால்டர் ஸ்காட் பற்றியும், இன்னும் லிஸர் பற்றியும் குறிப்பிட்டு ஒரே கதம்பமாக இருக்கும். ஆனல், அவன் பேச்சில் கோர்வை தவருது. அவன் வேட்டையிலும், மீன் பிடிப்பதிலும் உள்ள உற்சாகத்துடன் புத்தகங்களைப் படித்தானுல் அவன் படிப்பும் அநுபவமும் ஒன்றுக்கொன்று துணை நின்று சோபிக்கும். இந்த சுத்தமான செயல் திறனும், கதை சொல்லும் உற்சாகமும், அவனுடைய நகைச் சுவையும் பாமர மக்களுக்குள்ள சொல் அலங்கார சாமர்த்தியமும் அவன் பெரியவனனவுடன் இளமையில் கண்ட முரட்டுத்தனம் நீங்கி ஒளியுற்று விளங்கும் என்றே எல்லோரும் விரும்புவர். அவனுடைய வேட்டையாடும் அநுபவமும் சுற்றித் திரிதலும் அவனுக்கு அடித்தளத்திற்குள்ள உறுதியளித்து விட்டன. இத்துடன் அவன் கெட்டவர்கள் பழக்கத்தைவிட்டு நல்லோர் சேர்க்கையைப் பெறவேண்டும் என விரும்புகிறுன். அவனுடைய அமர்க்களம் நிறைந்த மேதைக்கு விளையாட்டிலும், சொற்போட்டியிலும், சமூகப் பாடல்களிலும், கவிதை புனைவதிலும் ஓரளவு வழிகாட்டுவோர்வேண்டும்; இது தவிர அவனுடைய சிறந்த, ஞானமிக்க நண்பர்களுக்கு அவன் நீடித்துக் கடிதம் எழுதிப் பழகவேண்டும். நட்பு என்பது பிரபுத்வம் அடைவதில் ஒருபடி, நட்பின் உதவியால் நாம் அறிந்து கொண்டதன் விளைவாக இயற்கையுடன் நேருக்கு நேர் பழகும் பண்பு பெறலாம். ஒருவனுக்குப் பிறர் கூட்டுறவு இல்லையேல் சக்தியற்றவனுகிவிடுகிறுன். பள்ளி செல்வதால் தற்பெருமை நீங்குகிறது, பரப்பு அகலுகிறது, அடித்துப் பேசுவதும், புத்தி மந்தமும் மறைகின்றன; பள்ளி செல்வதனுல் ஒருவன் தன் சகமாணவர்களின் இயல்பும் அனுபவமும் மலர்

வதைக் காண்கிறான். அங்கு அவன் விரும்புவது நல்லெண்ணம், அழகு, புத்தி சாதுர்யம், தேர்ந்த ஞானம். அங்கே பேசியும், பிறர் பேசுவதைக் கேட்டும் பழகிப் பயன் பெறுகிறான்.

இதற்கிடையில் பிறர் கூட்டுறவால் சமூக நலன் கிடைக்காதென்றால் தனிமையிலும் நாம் கற்கக் கூடியவைகள் இருக்கின்றன. தனிமையில் தான், ஊர் பேர் தெரியாத இளைஞன் தனது நற்பண்புகள் பற்றி படித்தறிந்துகொள்வதைக் கூட அநுபவ மூலம் அறிந்து கொள்கிறான். ஜனக் கூட்டத்தின் உணர்ச்சியும், விருப்பு வெறுப்பும் உண்மையின் மெல்லிய எல்லைக் கோட்டை அறிந்துகொள்ளாமல் தடை செய்கின்றன. ஞானமும் சக்தியும் பெற வேண்டுமானால் உடமைகளிலிருந்தும் விடுபடவேண்டும், சுபிட்சத்தினாலும், உபரியாக உடமைகள் பெறுவதாலும் ஞானம் அடைய முடியாது. எல்லாவற்றையும் துறந்து, தனிமை நாடி, கஷ்டப்பட்டால்தான் ஞானம் பெற முடியும். நம்மிடமிருந்து எவ்வளவுக்கெவ்வளவு பறிக்கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நமது வாழ்க்கையே மதிக்கத் தக்க செல்வம் என்பதை உணர்வோம். தனிமையிலிருப்பவன் சிந்தனையின் சாரத்தை உணர்வான்,— ஆனால் பண்டிதன் அதன் மேல் தோற்றத்தை மட்டுமே அறிவான். துறவு வாழ்க்கை வாழ்ந்தவர்களே சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத நன்மைபுரிந்தவர்கள் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் இருக்கின்றன. துறவுப் பாதையில் செல்லுகிறவனைத் திருப்ப முடியாது. அவன் ஒருவேளை ஊமையோ செவிடோ என்று கூட சந்தேகிக்கத் தோன்றும். அவன் குறுகிய நோக்குடன் தனியே வாழ விரும்புகிறானோ என்று கூட எண்ணத் தோன்றும். தனிமைக் கலையை நன்கு அறிந்து அப்புறமும் மனமுவந்து அவன் விதி விட்ட வழியே செல்லட்டும். இவனுக்கும் சமூகத்திற்கும் எவ்வித உறவும் இல்லை என்பது விதியானால் அதனால் வரும் நலனைப் பெறலாமே? அதற்காக ஏன் கவலைப்பட வேண்டும், முகத்தைச் சுளிக்க வேண்டும்? மகா ரகஸ்யங்களை, மகத்தான எண்ணங்களை மனதில் கொண்டவர்களை பிடித்துத் தனிமையில் இருக்கச் செய்வதன் மூலம் ஆண்டவன் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றார். இனிய சுபாவமும் நற்பண்பும் நிறைந்தவர்கள் சமூகத்திலும்

தனிமையிலும் மாறி மாறி இருந்து அவைகளின் படிப்பினைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவர் வாழ்விலும் இரண்டாவது இளமைக் காலம் தோன்றும்; அச்சமயம் கற்பனைத்திறன், பளிச்சிடும் அழகின் சக்தி, புத்தகங்களின் சக்தி, கவிதையின் சக்தி எல்லாம் அவனை ஆட்கொள்ளும். பண்பாட்டின் விளைவாக நூல்கள் உண்மையான நண்பர்களாகப் பணி புரியும்; அவைகளில் நடமாடும் பாத்திரங்கள் ஒளியுடன் தென்படும்; உயிருள்ள நண்பர்களைவிட அதிக சக்தியுடன் இந்தப் பாத்திரங்கள் படிப்போரைப் பக்குவப் படுத்தும். பரிட்சார்த்தமாகவாவது நவினங்களை இளைஞர் கையில் கொடுக்கத் தவறாதீர்கள், அவைகள் கையிலிருக்கையில் படிப்பவன் ஓய்வு நேரத்தைக் கழிப்பதுபோல் உன்மத்தம் கொள்வான். எல்லாவற்றையும்விட கவிதைகளை அவர்கள் கையில் கொடுங்கள். அவைகள் மகா காவியங்களானாலும் சரி, சோகம், காதல் எதானாலும். நல்ல கவிதைகளை அவர்களுக்கு அளிக்க வேண்டும் அவர்கள் கற்பனையை தூண்டுவனவாயிருந்தால் நாம் அவர்களுக்கு உதவி செய்தவர்களாவோம், நமது உதவியை அவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள். அவர்கள் ரக்பியில் டாம்பிரௌன், ஆக்ஸ்போர்டில் டாம் பிரௌன், டில்லி அரசனைச் சிறைப்படுத்திய ஹாட்ஸனின் வாழ்க்கைச் சரித்திரம் முதலிய நூல்களைப் படிக்கட்டும். இவைகள் யாவும் ஒரே உண்மையைக் கற்பிக்கின்றன— "எவ்விதத் தோற்ற மயக்கங்களுக்கிடையிலும், எவ்விதக் கஷ்டத்திற்கிடையேயும் உங்களுடைய சுய தகுதியை நம்பியே பணிபுரியுங்கள். தந்திரங்கள், சூழ்ச்சிகள், பிறரை ஆதரிக்கும் பிரபுபோன்ற பாவனை முதலியவைகளைக் கைக்கொள்ளாதீர்கள்" என்பதுதான் அந்தப் படிப்பினை.

கல்வியின் ரகசியம் மாணவனை மதிப்பதுதான் என்பதை அனுபவத்திலிருந்து நாம் அறிந்துகொண்டு விட்டோம் என நான் நினைக்கிறேன். மாணவன் எதைத் தெரிந்து கொள்ளவேண்டும், அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் திட்டம் செய்யலாகாது. அது முன்னமேயே திட்டம் செய்யப்பட்டு விட்டது. அதன் ரகஸ்யம் அவனுக்கு மட்டும்தான் தெரியும். நீங்கள் தலையிட்டுத் தடை விதித்து அவனைத் துன்புறுத்திக் கட்டிமேய்க்கப் பார்த்தால் அவனது சுயஅறிவு விசாலம் அடையாது.

அவனது குறிக்கோளை அவன் அடைய முடியாது. குழந்தையை மதியுங்கள். இயற்கையில் புதுசிருஷ்டி எப்படி மலருகிறது என்று காத்திருந்து பாருங்கள். இயற்கை புதுமைகளை விரும்புகிறதே ஒழிய செய்ததையே திருப்பிச் செய்வதை விரும்புவதில்லை. ஆகையால், குழந்தையை மதியுங்கள், நீங்கள் அவனுடைய பெற்றோர் என்பதை அதிகம் நினைத்து அவதிப்படாதீர்கள். அவனுடைய தனிமையில் நீங்கள் தலையிட்டுக் கெடுக்காதீர்கள்.

இந்தக் கருத்துக்கு மாறுபட்டவர்களின் பேரொலியும் என் காதில் விழுகிறது. வீட்டிலும் வெளியிலும் குழந்தைகளுக்குள்ள கட்டுப்பாட்டைக் கைவிடுவதா? ஒரு குழந்தை தன் உணர்ச்சி வசப்பட்டுப் பேயாட்டம் ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதா? இந்தப்பெருங் குழப்பத்தை—அராஜகத்தை 'குழந்தையின் இயல்பை மதிப்பது' என்று அலங்காரமாகக் கூறுவதா? இதற்கு நான் அளிக்கும் பதில் 'குழந்தையை மதியுங்கள், கடைசிவரையில் மதியுங்கள், ஆனால், உங்களையே மதித்துக் கொள்ளுங்கள். அவனுடைய சிந்தனையில் துணை புரியுங்கள், அவனுடைய நட்புக்கு ஆதரவளியுங்கள் அவன் நற்குணங்களைப் போற்றுங்கள். ஆனால், அவனது தீச்செயல்களுக்குத் துணைபுரியாதீர்கள். நீங்கள் உங்களுடைய நற்பண்புகளைக் கைவிடாதவர்கள் என்பதையும், அவனது தீய அம்சங்களுக்கு மீளா எதிரி என்பதையும், அவனது அற்ப குணங்களை அவமதிப்பவர்கள் என்பதையும் அவன் அறிந்து கொள்ளட்டும்" என்பதுதான்.

ஒரு பையனுக்குப் பயிற்சியளிப்பதில் இரண்டு விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அவனுடைய இயல்பில் தலையிடலாகாது. அவனது ஆர்ப்பாட்டம், அளவுக்கு மீறிய விளையாட்டு முதலியவைகளைக் கைவிடும்படி செய்யலாம். ஆனால், இயல்பு, அதன் போக்கின்படி வளர்வதற்கான ஞானத்தை அவனுக்குப் புகட்ட வேண்டும். நாம் கவனிக்க வேண்டிய இரு உண்மைகள் மேதையும், பயிற்சியும் தான். மேதை என்பது நல்ல சூழ்நிலையில் பிறந்த வளமிக்க பையனின் ஆதர்சமும், இயற்கை பற்றி அவன் கொண்டிருக்கும் புது நோக்கும், வெளித் தோற்றங்களில் அவன் காண்பது, இசையில் அவன் கேட்டது, கணக்கில் அவன் அறிந்து கொண்டது, யந்திரத் துறையில் எதைச் செய்ய முடியும்

என அவன் நினைப்பது, அரசியல், சமூகத்தில் என்ன நேரலாம் என அவன் ஊகிப்பது; இவைபோன்ற விஷயங்களில் மற்றவர்களுக்குத் தோன்ருத பல புது எண்ணங்கள் அவனுக்குத் தோன்றும், புதுவாழ்வில் முடிவின்றி நிகழும் அதிசயம் இதுதான்; மடிந்துபோன உலகத்தில் கடவுள் படையெடுத்து வருகிருர்; சந்ததியில்லாத வீடுகளில் ஒரு புது எண்ணங்கொண்ட ஆத்மாவை அனுப்புகிருர்; அந்த ஆத்மா, அங்கே இருக்கவேண்டிய—ஆனால் காணப்படாத ஒரு விஷயத்தைத் தேடுகிறது; அந்த எண்ணம் மங்கலாகத் தோன்றுகிறது, ஆனல், அதுபற்றி அந்த ஆத்மாவுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. ஆகையால் அது சலிப்பின்றி அதைக் கண்டுபிடிக்க வழிவகைகளைத் தேடிக்கொண்டிருக்கிறது. தனது கருத்தை விளக்க அதற்கு அருகாமையில் உள்ளவர்களின் ஆதரவைப்பெற பெருமுயற்சி செய்கிறது. தனது எண்ணத்தை வெளியிடத்தக்க வார்த்தைகள் காணுமல் தவிக்கிறது. அது தேடுவது இந்த வீட்டில் அல்லது இந்த நகரத்தில் இல்லாவிட்டாலும் வேறு நகரத்தில் வேறு வீட்டில் தனக்கு வழிகாட்டக் கூடிய மகான் இருக்கலாம் எனச் சிந்திக்கிறது. ஒரு எண்ணத்தால் கவரப்பட்ட இந்தக் குழந்தை ஆனந்த பரவசமடைகிறது, ஏனெனில் இந்த எண்ணம் அதைப் பரவசப்படுத்தி புதிய வனாந்தரங்களுக்கும் நகரங்களுக்கும் இழுத்துச் செல்கிறது, இந்த எண்ணத்தை நல்ல பெயர் வந்தாலும் கெட்ட பெயர் வந்தாலும், நல்லோர் கூட்டுறவுடனே, தீயோர் ஆதரவு பெற்றோ அவன் நிறைவேற்றட்டும்; அந்த எண்ணம் ஈடேறும். அது அவனை உண்மைப் பற்றுள்ளோரின் உன்னதக் கூட்டத்தினரில் ஒருவனாகக் கொண்டு சேர்த்து விடும்.

லண்டனில் ஒரு தனிப்பட்டவர் வியாபார நிலையத்தில் ஸர் சார்லஸ் பெல்லோஸ் என்பவருடைய பழக்கம் எனக்கு ஏற்பட்டது, அவர் ஏஜியன் கடலில், ஸாந்தஸ் என்னுமிடத்தில் ஒரு துருக்கியனைச் சந்தித்தார், அந்த துருக்கி நாட்டவன் தன் தடியால் லேசாக மண்ணில் புதைந்திருந்த ஒரு கல்லில் சித்திரம் செதுக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக் காட்டினான். பெல்லோஸ் கல்லின்மீதிருந்த தூசியை அகற்றி விட்டுப் பார்த்தால் அணிகலன்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தார், அருகாமையில் உள்ள

இடங்களையும் சோதித்துப் பார்க்கையில் மற்றும் பல சிற்பங்கள் தென்பட்டன. உடனே தொழிலாளர்கள் பலரை அமர்த்தி அந்த இடங்களையெல்லாம் தோண்டச்செய்தார்; புதைந்து கிடந்த கற்சிற்பங்களை வெளியே எடுத்தார். அவர் இங்கிலாந்திற்குத் திரும்பி வந்து கிரேக்க இலக்கணம் ஒன்று வாங்கி கிரேக்க பாஷையையும் கற்றுக்கொண்டார். பழைய கால கிரேக்க சரித்திரத்தைப் படித்து பழங்காலக் கலைகளைப் பற்றிக் கற்றறிந்து கற்சிற்பங்களின் பொருளை அறிந்து கொள்ள முயன்ருர். சிற்ப நிபுணர் கிப்ஸனுக்கும் இதில் அக்கறை ஏற்படச்செய்தார். ஆங்கில ஆட்சியினர் ஆதரவையும் கோரினர். கற்களை ஆராய்ச்சிசெய்ய ஸர் ஹம்பிரிடேவியின் உதவியைநாடினர். மேலும் பழங்கால நாணயங்கள் பற்றி அறிந்த பண்டிதர்கள் உதவியையும் பெற்ருர். கடைசியாக மூன்ரும் முறை அங்கு சென்று கற்சிலைகள், சிற்பங்கள், தந்தச் சிற்பங்கள் யாவற்றையும் இங்கிலாந்திற்குக் கொண்டு வந்தார். நன்கு ஆராய்ச்சி செய்ததின் பயனுக இன்று அவைகள் பிரிட்டிஷ்காரர் காட்சிசாலையில் காட்சியளிக்கின்றன. கிரேக்கநாட்டில் பூகம்பத்தாலும், விக்ரகவெறுப்பு கிறிஸ்தவர்களாலும், துருக்கியராலும் நாசம் செய்யப்பட்ட ஏதன்ஸ் நகரத்தில் காணப்பட்ட கலைப் பொருள்களுக்கு ஐம்பது வருஷங்களுக்கு முந்தியே ஆக்கப்பட்டவைகள் தான், இன்று பிரிட்டிஷ் கண் காட்சி சாலையில் இருக்கின்றன என்பதையும் ஸ்தாபித்தார். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில் இவ்வளவு கஷ்டப்பட்டதால் ஸர் பெல்லோஸின் கல்வியே பண்பட்டது, இதன் மூலம் பல பண்டிதர்களுக்கு அக்கறை ஏற்படுத்தி அவர்களுடைய கூட்டுறவால் புகழ் பெற்ருர் என்பது தான். கடைசியாக அவர் நாடிச் சென்ற குருநாதர்களைக் கண்டார். மேதை என்றுமே மேதையை நாடுகிருர், அவர் என்றும் மாணவனுகவே இருக்க விரும்புகிருர், என்றும் மாணவனுயிருந்தால் பிறர் உதவி பெற்றும் பூரணத்துவம் அடையலாமல்லவா?

உற்சாகம், பயிற்சி இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல. அழகின் லட்சணம திட்டமானது. 'மூளை' எனும் பதத்திற்கு அரிஸ்டாடில் சரியான பொருள் கூறுகிருர்: "எதன் மூலம் பதங்களையும் எல்லைகளையும் அறிகிருேமோ அது" ஒரு பையனுக்குக்

கூர்ந்து கவனிக்கக் கற்றுக்கொடுங்கள், ஒரே மாதிரி காணப்பட்டாலும் அவைகளுக்குள் மாறுபாடுகள் என்ன இருக்கின்றன என்பதை அவனுக்குக் கற்பியுங்கள். ஒவ்வொரு பொருளையும் அதற்குற்ற பெயர் சொல்லி அழைக்கச் சொல்லிக் கொடுங்கள். அவன் தவறு செய்தால் மன்னிக்காதீர்கள். இவ்வளவையும் செய்தால் அவன் ஆயுள் உள்ளவரையில் எல்லா விதத்திலும் உங்களுக்குத் திருப்தியளிப்பான். சொல்லலங்காரம், அற நெறித் தத்துவம் முதலியவற்றைக் கற்பிப்பதைவிட குழந்தைக்கு, கணக்கும் லத்தின் மொழி இலக்கணமும் கற்பிப்பதே சிறந்தது. ஏனெனில் கணக்கிலும், இலக் கணத்திலும் திட்டமாக பதில் கூற வேண்டும். இவை களில் பாடங்களைக் கசடறக் கற்கவேண்டும்: படித் தறிவதைவிட படித்ததை எடுத்துச் சொல்வதே சிறப் பானது என இத்துறைகளில் கருதப்படுகிறது. கற்றுக் கொள்ளும் திறன் பெற்றுவிட்டால் முக்கியமான எதையும் அவன் கற்றுக்கொண்டு விடலாம். கருவியைப் பயன் படுத்தத் தெரிந்து விட்டால் ஒரு புதுத் தொழிலில் வேலை செய்வது எளிது என தொழில் நுணுக்கப் பண்டிதர்கள் சொல்வதில் பொருள் இருக்கிறது.

எழுத்தெழுத்தாக வார்த்தை வார்தையாகக் குழந்தை படிக்கக் கற்கிறது. இவ்வாறாக நாளாவட்டத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் பொருளை வீட்டிலுள்ளோ ருக்குத் தெரிவிக்கும் திறமை பெற்றுவிடுகிறது. படிப் படியாக நிதானமாக பயிற்சிபெறுவதால் முதலில் பள்ளிப் பேச்சுப் போட்டியிலும், போலி நீதிமன்றங்களிலும் நாக் குளறிய பையன் மாபெரும் சபைகளில் பேச்சில் வாகை மாலை சூடியவனாகின்றான். அவன் வெற்றியின் சிறப்பில் ஆதியில் அவன் தடுமாறியதையும் பயிற்சி பெற்றதையும் கூட மறந்து விடுகின்றான்.

ஆனால், மனித அறிவை மலரச் செய்வதில் ராணுவ முறையையோ, யந்திரத் துறைபோன்ற திட்டங்களையோ கையாளுதல் கூடாது. இயற்கையை அவன் நம்ப வேண்டுமே யொழிய சாதாரண சாமர்த்தியத்தை நம்பி முன்னேற முடியாது, முறைகளை அலட்சியம் செய்தல் கூடாது. ஆனால் அதனுடைய சாரத்தையே கைக் கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு தூரம் அனுவசிய மாகத் தலையிடுகிறோம், எவ்வளவு கஷ்டப்பட்டுத் தவறு

செய்கிறோம் என்பதை நினைத்தால் விந்தையாயிருக்கிறது. நமது சொந்த வேலையில் இயற்கை முறைகளையே கையாளுகிறோம் என்பதை அனுபவத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால், கல்வித் துறையில் நமது பொது அறிவு பயன்படாமல் இயற்கைக்கு மாருக விலை மதிப் புள்ள யந்திரங்களை பல்கலைக்கழகங்களில் கையாளுகிறோம்.

இயற்கை முறை நமது சோதனைகளின் முடிவைப் பொய்ப்பித்து விடுவதால் திரும்பத் திரும்ப இயற்கை யையே நாடி வருகிறோம். பிள்ளைப் படிப்பெல்லாம் ஆயா அல்லது அன்னையின் மடியில்தான் நிறைபெறுகிறது. அம்மா எவ்வளவு உற்சாகமாக அறிவு புகட்ட விரும்பு கிருளோ அவ்வளவு உற்சாகமாகக் குழந்தையும் அதை ஏற்கத் தயாராயிருக்கிறது. இதில் பரஸ்பரம் மகிழ்ச்சி பொங்குகிறது. அனுபவம் மிகுந்த பாட்டிகளிட மிருந்து குழந்தை எவ்வளவு உற்சாகமாகக் கதை கேட்கிறதோ, அதே உற்சாகத்தை இளவயதில் பையனைப் பெறச் செய்ய வேண்டும். பையன் பனிச் சருக்கல் பழக விரும்புகிருன், பனிக் கட்டியை குறிபார்த்து எறிய ஆவல்கொள்கிருன். இந்த ஆவலுள்ள பையனுக்கு அவனை விட சற்று மூத்தவன் அவைகளை மகிழ்ச்சியுடன் கற்றுத் தரத் தயாராயிருக்கிருன். க்ஷேத்திர கணிதம் ,ரஸாயனம், நன்கு படிப்பது அல்லது, கவிதையையோ, உரை நடைப் பகுதியையோ மனப்பாடம் செய்து முறையாக ஒப்பித்தல், நாட்டு வரலாறு அல்லது மனித வரலாற்றில் சில சம்ப வங்களை எடுத்துக் கூறல் முதலியவற்றைச் சொல்லித் தருவதிலும், கேட்பதிலும் இணையற்ற மகிழ்ச்சி இருக்கிறது.

ஒரு சிந்தனை தோன்றியவுடன் அதைப் பிறருக்குத் தெரிவிக்கவேண்டும் என்கிற பேராவலையும் மனிதனுக்கு இயற்கையன்னை அருளியிருக்கிருள். இதை ஒவ்வொரு கலையிலும், விஞ்ஞானத்திலும் காணலாம். ஒரு புது உண்மையை வெளியிட மனிதன் துடியாய்த் துடிக் கின்ருன். அதேமாதிரி மற்ருெருவன் அதைக் கேட்க ஆவலாயிருக்கிருன். ஒரு புது ரணசிகிச்சை செய்வதைப் பார்க்க ஒரு இளம் டாக்டர் எவ்வளவு தூரம் வேண்டு மானாலும் செல்லத் தயாராயிருக்கிருன். நியூயார்க்கி லிருந்து ஒரு புதுமாதிரி வண்டி வந்ததைப் பார்க்க வண்டி செய்யும் கடையிலுள்ள வேலையாட்கள் யாவரும் வெளியே

ஓடி வந்ததை நான் பார்த்தேன். அம்மாதிரியே இலக்கியத் துறையில் கவிதை அல்லது உவமைகள், உயர் சிந்தனைகளில் ஆர்வமுள்ள சிறுவன் தன் அறிவுக்கு உணவு நாடி தன்னைவிடப் படித்தவனிடம் ஓடி தனது ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள முயற்சிக்கிறான். இதே துடிப்புடனும் மகிழ்ச்சியுடனும் அந்த பண்டித நண்பனும் தான் கற்றறிந்த இலக்கிய ரத்தினங்களைப் பிறருக்குப் படைக்கிறான்.

இயல்பாகவே கற்பிக்கும் திறனுள்ள ஆசிரியன் தன்னைச் சுற்றி ஒரு கல்லூரியை அமைத்து இன்புறுகிறான். கிரேக்க நாட்டில் ஏதன்ஸ் நகரில் இப்படித்தான் இளைஞர்கள் மகான் சாக்ரடீஸைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். அலெக்ஸாண்டிரியாவில் பிளாடினஸைச் சுற்றியிருந்தனர். பாரிஸ் நகரில் அடிலார்டைச் சுற்றினர். ஜெர்மனியில் பிக்டே, நெபுஹார், கதே முதலிய மகா பண்டிதர்களைச் சுற்றியிருந்தனர். இவ்வாறே ஒவ்வொரு மகானையும் சுற்றிக் கற்கும் ஆசை கொண்டவர்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தனர், கல்லூரி என்பது மேதையை வளர்க்கும் தாயகமாயிருக்கவேண்டும். ஒவ்வொரு இளைஞனும் பிறப்பிலேயே ஓரளவு உறுதி கொண்டு பிறக்கிறான், அவன் மேதையாக வரக்கூடும். ஆனால் இதற்குப் பல தடைகள் ஏற்பட்டு அவனுடைய மேதா விலாஸம் வளருவதில் தாமதம் ஏற்படலாம். அவன் அறிவு வளர்வதற்கு முன் புலன்கள் வளர்ந்து விடுகின்றன. அவர்கள் அறிவைவிட உணர்ச்சியே பிரதானமாயிருக்கிறது. பசியும் மந்தபுத்தியுமிருக்கிறது. ஆனால் உற்சாகம் இல்லை. இப்படிப்பட்டவர்கள் ஏராளமாகக் கல்லூரிகளில் சேர்ந்து விடுகின்றனர். இவர்களில் மேதைகள் மிக மிகக் குறைவு. கல்லூரியில் படிப்பு, மந்தமாயிருக்கும் பலருக்கு ஏற்றதாய் அமைகிறதே யொழிய மேதைகளுக்கு ஏற்றதாயில்லை. ஆகையால் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஆர்வமும் சாதுர்யமும் மட்டும் இருந்தால் போதாது. ஒழுங்காக திறமையுடன் கற்பிப்பவர்களே வேண்டும். மேலும் மேதை படைத்த இளைஞர்கள் கட்டுப்பாட்டுக்கு இணங்காதவர்களாயிருப்பார்கள், கட்டுப்பாட்டுக்குட்பட மாட்டார்கள், முன்கோபக்காரர்களா யிருப்பார்கள், அவர்கள் என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது, கொந்தளிப்

படையக்கூடிய மனப்பாங்குடையவர்களா யிருப்பார்கள். தனிமையை நாடுபவர்களா யிருப்பார்கள். உலகப் போக்கை அறிந்தவர்களாயிருக்க மாட்டார்கள். அவர்களுடன் நீடித்துத் தொடர்பு கொள்ளக்கூடியவர்களாயும் இருக்க மாட்டார்கள், கல்லூரி நிர்வாகிகளே, மாணவக் கூட்டத் தைச் சமாளிப்பவர்களே ஒழிய தனிப்பட்டவர்களை கவனிக்கக் கூடியவர்களல்ல; மட்டமான அறிவுள்ளவர் களையும் திறன் கொண்டு செலுத்துவதற்கேற்ப அவர் களுடைய பயிற்சித் திட்டத்தை வகுக்கவேண்டும். ராணுவ முறை மாதிரி கட்டுப்பாடும், பாடத்திற் கேற்ப போதனை முறையுமாக இருக்கும். இம்மாதிரி கல்லூரிகளிலிருந்து எப்படி வீரதீரர்களைத் தயாரிக்க முடியும்? இம்மாதிரி கல்லூரிகள் எப்படி நம்பிக்கை யூட்டும்? இந்தக் கல்லூரி கள் எப்படி சீர்திருத்த ஆர்வமுள்ளவர்களைச் சிருஷ்டிக்க முடியும்? மனித குலத் த உயர்த்தும் கவிதை புனை பவர்களை இந்த கல்லூரிகள் எப்படி ஆக்கமுடியும்? இந்த கல்லூரிகளில் இயற்கை நியதிகளை அறிந்து மக்களுக்கு பொருள்களை இயக்கும் ஒழுங்கை அறியக்கூடியவர்களைப் எப்படித் தோற்றுவிக்க முடியும்? இந்தக் கல்லூரியில் தயாரானவர்கள் தானம் செய்து மக்களை எப்படி ஊக்கு விக்க முடியும்? பொறுமையையும், தியாக உணர்வும், பணிவும் கொண்ட ஞானிகளை இந்தக் கல்லூரிகள் தோற்றுவிக்க முடியுமா? நமது கல்வி நிலையங்கள் இன்னும் பரந்த நோக்க முடையவைகளாக அமையவேண்டும் என்பது தெள்ளெனத் தெரியவில்லையா? கல்லூரிகள் துணி வின்றி, போன தலைமுறைப் பயிற்சி முறைகளைக் கை யாண்டு வருவதால் என்ன பயன்?

அறிவுபடைத்தவர்கள், சுயமாகச் சிந்திக்கும் ஆற்ற லுள்ளவர்கள், மனித சமுதாய நலனைக் கருத்தில்கொண்ட வர்கள், புதிய இலட்சியங்களை மேற்கொண்டால் அதற்காக என்ன அதிகப்படி தியாகம் செய்யவேண்டும என்பதை அறிந்து துணிவுடன் இளைஞர்களை ஒரே வாழ்வுக்குத் தயார் செய்ய முன்வரவேண்டாமா? பள்ளி மாடத்தில் பிள்ளைகளின் அறநெறி ஆர்வத்தை வளர்க்கும் முறையில் போதனை செய்யவேண்டும். உண்மை, நற்குணம் இரண் டையும் பயில விரும்புபவர்கள் எனச் சிறுவர்களை மதித்து அவர்களுக்கு போதிக்கவேண்டும்.

ஒரு குழந்தையை, ஒரு இளைஞனைப் பராமரிப்பதற்கு

எல்லையற்ற பொறுமை வேண்டும். ஆன்மா எதையும் சீர்திருத்தவல்லது என்கிற நம்பிக்கையுள்ளவர்களுக்குத் தான் இந்தப் பொறுமை வரும் நீ இளைஞனுடைய புலனுணர்ச்சியைப் பார்க்கிறாய்; நற்பண்பு, அதனால் ஏற்படும் சக்தியைப் பாதுகாப்பதற்கான நல்ல ருசிகள் இல்லை என்பதை அறிகிறாய். இதெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால், அவனிடம் பிற குணங்களும் இருக்கின்றன. அவனுடைய தீய பகுதியைச் சரிக்கட்டும் நற்பண்புகளும் அவனிடம் இருக்கின்றன. ஒவ்வொருவனும் தனது செயல் திறமையைக்காட்டச் சந்தர்ப்ப மளிக்கவேண்டும். அப்புறம் அவனுடைய நல்லதும் கெட்டதும் சமநிலையடைவதைக் காணலாம். குழந்தைகளை மதிப்பிடுவதில் ஒரு புகழ்பெற்ற சீர்திருத்தவாதிக்குள்ள தீர்க்கதரிசனம் இருக்கவேண்டும். அந்த சீர்திருத்தவாதி "ஒரு மொட்டு நூறு ஆண்டுகளுக்குப்பிறகு எம்மாதிரி மலரும் என்பதை அறியத்தக்க பொறுமையுடையவர்" என்று கூறப்பட்டிருக்கிறது. பழக்கம் எனும் நொண்டி அதற்குமுன் பறக்கும் கொள்கை எனும் பறவையைப் பிடிக்கவேண்டுமென்றால் பழக்கத்திற்கு நாம் இரக்கம் காட்டாமல் என்ன செய்வது? மிகச் சிறந்த பள்ளிகளில் உங்களுடைய திட்டங்களைப் பயன்படுத்திப் பாருங்கள். படிப்பவர்கள் வயதிலும், மனப்பாங்கிலும், திறமையிலும் பலதரப்பட்டவர்களாயிருப்பார்கள். அவர்களை திட்டமாகப் பாகுபாடு செய்வதும் கடினம். சிலர் மிகக் குறைந்த வயதினராயிருப்பார், சிலர் கற்பதில் நிதானமாயிருப்பர், சிலர் வக்கிர புத்தியுள்ளவர்களாயிருப்பர். ஒவ்வொருவரையும் நன்கு கவனிக்கவேண்டும், காலையில் முன்னேற்றம் திருப்திகரமாயிருக்கும் மாலையில் மனக்கவலையளிப்பதாக முடியும். ஒவ்வொரு பையனையும் தனித் தனியாகக் கவனித்தால் அவனை வழிக்குக் கொண்டுவர எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கும். அட்டவணைப்படி வேறு செய்யவேண்டி வரும், ஆனால் திட்டத்திற்கு மிறிய முயற்சி தேவையாயிருக்கும். நமது வேலை முறை என்னவானாலும் மற்ற பள்ளிக்கூட நிலை ஒரே மாதிரியாயிருக்கிறது. ஆறு மணி நேர வேலை மாணவர் எண்ணிக்கை முப்பது அல்லது ஐம்பது அல்லது நூற்றைம்பது ஆக இருக்கலாம். ஆனால், ஏதாவது செய்யவேண்டும்— அதுவும் உடனடியாகச் செய்ய வேண்டும். இந்த அவஸ்தையில் மிகுந்த அறிவாளிகள்கூட,

தெய்வீக சக்தி கொண்டு பணிபுரிய எண்ணியவர்கள் கூட பையன்களை அடித்து மிரட்டி, கடுமையான கட்டுப்பாடுகள் விதித்து என் வழிக்குக் கொண்டுவரலாகாது என முனைந்துவிடுகின்றனர். சில்லறை விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்தினால் உபாத்தியாயர் மனப்பாங்கு சீர் குலைந்து விடுகிறது ; அவர் தனது மேதையைப் பயன் படுத்த முடியாது ; தன்னிடம் படிக்கும் இளைஞர்களுடன் அவர் கூடிக் குலாவ முடியாது ; ஏனெனில் அவர் கடிகா ரத்தைப் பார்த்துக்கொண்டே வேலை செய்யவேண்டிய, துடன் பொழுது சாய்வதற்குள் இருபது வகுப்புகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. மேலும் அவர் மேதையைக் கண்டு களிக்கையில் குணம் குறைவாயிருப்பவனை எப்படிச் சீர்திருத்த முடியும் ? போக்கிரித்தனமும் மந்த புத்தியும் உள்ள பையன்கள் ஓரளவு பள்ளிகளில் புகுந்து விடுகின் றனர். இவர்களையும் உபாத்தியாயர் கவனித்துக்கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. இதில் காலமும் செலவா கிறது. இதன் விளைவாகப் பிள்ளைகளிடம் தேவதா விசுவாசம் காட்ட விரும்பிய உபாத்தியாயர் வெறும் சட்டாம்பிள்ளையாகி, தன்னிடம் படிப்பவர்களை சந்தேகக் கண்ணுடன் பார்ப்பவராகிவிடுகிறார். கடைசியில் போலீஸ் கோர்ட் நீதிபதி குற்றங்கள்பற்றி அறிந்தவராகி விடுவது போல் உபாத்தியாயரும் மாறி, கல்வி கற்பிப்பதிலுள்ள ஆர்வம் குன்றி வெறும் இலக்கணமும் கணக்கும் சொல்லிக் கொடுக்கும் சாதாரண ஆசிரியர் நிலைக்கு வந்து விடுகிறார்.

பள்ளிக்கூட விதிகள் அமைப்பது வெகு எளிது. அதை நிறைவேற்ற மனிதனே தேவையில்லைபோல் தோன்றும் அளவுக்கு எளிதாக இருக்கிறது. அப்படி யானால் பள்ளிக்கூட நிர்வாகத்தை யந்திரத்திடம் ஒப்படைத்து விடலாம். இப்படிச் செய்துவிட்டால் உழைப்பு மிச்சம், யோசனை செய்வதற்கும் அவசியமிராது. இதனால் பெரிய பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு பைய னுடைய தேவைகளைத் தனித்தனியாகக் கவனித்து பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமில்லை எனக் கருதுகின்றனர். ஆனால், இப்படி யந்திரமயம் ஆக்குவதனால் என்ன பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது தெரியுமா ? நமது கல்வி முறைகள் எல்லாவற்றையும் துரிதப்படுத்தி உழைப்பை மிச்சப் படுத்தப் பார்க்கின்றன. ஒவ்வொருவருக்கும் தேவை

யானதை பணிவுடன் தனித் தனியாக கவனிப்பதைவிட்டு மக்களை மொத்தமாக கவனித்துச் செயல் புரிய விரும்பு கின்றனர், ஆனால், மக்கள் கூட்டத்தினரை ஒரு மூட்டை மாதிரி நினைத்து கடைத்தேற்ற முடியாது. பார்க்கப் போனால் ஒரு மாணவனைப் படிக்கவைக்க உலகமே திரண்டு வரவேண்டுமென்று கூறுவது பொருத்தமா யிருக்கும் ஆடம்பர ஆர்ப்பாட்ட போதனைமுறையில் பல நன்மைகள் இருப்பதாகத் தென்னென விளங்கும். இந்த முறையால் காலம் வீணாகாமல் மிச்சப்படுகிறது ; நிதான மான பிள்ளைகளையும், தீயவர்களையும் எளிதில் வழிக்குக் கொண்டுவருகிறது ; இந்த முறையைக் கையாள பேதைமையோ, கவிஞனோ தேவையில்லை. புதிதாக நியமிக்கப் பட்ட உபாத்தியாயர்கூட இதை எளிதில் கையாளலாம். சுகபேதி சூரணம்மாதிரி இந்த முறை பொதுஜன ஆதரவு பெற்றிருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், இந்தக் கடுமை முறையைக் கடுகளவுகூடக் கையாளாமல், சாதாரணக் கட்டுப்பாடு, பிள்ளைகளின் இயல்புக்கு இடங்கொடுப்ப தானது நீண்டகாலம் பிடிப்பதுடன் உபாத்தியாயர்கள் சிந்தனைக்கு அதிக வேலைகொடுக்கும். இந்த முறையில் நீண்டகாலம் பிடிப்பதுடன் பழக்கப்படவேண்டும். உபாத்தி யாயருக்கு தீர்க்கதரிசனம் வேண்டும். ஆண்டவனின் திரு அருள் வேண்டும் ; இந்த முறையைக் கையாளுவது பற்றி யோசிப்பதற்குக்கூட நிறைந்த நற்பண்பும், ஆழ்ந்த அறிவும் வேண்டும் ; இந்தக் கட்டுப்பாடான முறையைக் கைக்கொள்பவர் நல்லவராகவும், புகழுக்குரியவராகவும் ஆகிவிடுவார். படாடோப முறைக்கும் அருள் முறைக்கும் உள்ள மாறுபாடு தடியடி வழிக்கும், அன்பு முறைக்கும் உள்ள மாறுபாட்டை ஒத்தது. ஒரு கெட்ட பையனை அடித்து, அடக்கிப் பணியவைத்து விடுவது எளிது. ஆகையால் இந்த அவசரம் நிறைந்த உலகில் பையன் தன்னடக்கம் அடைந்து அறிவுள்ளவனாகும்வரை காத் திருக்கப் பொறுமையின்றி, அப்படியே காத்திருந்தாலும் பையன் திருந்துவான் என்கிற நம்பிக்கையும் இல்லாத தால் தடியடி முறையை எளிதில் மேற்கொள்கின்றனர். ஆனால், தீயவனைத் திடீரென அடக்கிவிடுவதனால் ஏற்படும் தீமைகள் அவன் தடையின்றித் தீயவழியில் செல்வதை விட அதிகமாகும் என்பதையும் நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

கண்மூடி வைத்தியம் போன்ற இந்தக் கல்வி முறையைத் திருத்துவது வாழ்க்கையின் தேர்ந்த ஞானத்தினால் தான் முடியும். இந்த ராணுவ தடபுடல் முறையைக் கைவிட்டு இயற்கையின் நிதானத்தைப் பின்பற்றுவது சிறந்தது. இயற்கையின் மர்மம் அதனிடம் காணும் பொறுமை; இயற்கையின் ரகஸ்யத்தை அறிந்த பண்டிதன் எப்படி காடு, செடி, பட்சிகள், பிராணிகள், விஷஜந்துக்கள் கடல் அல்லது நதிகளிலுள்ள மீன்கள் முதலியவற்றின் ரகஸ்யங்களை அறிந்து கொள்கிறான் தெரியுமா? அவன் காட்டுக்குள் நுழைகையில் பட்சிகள் ஒன்று விடாமல் ஓடி விடுகின்றன. ஆற்றின் கரைக்கு அவன் செல்லுகையில் மீன்களும், மற்ற நீர்ப்பூச்சிகளும் ஓடி மறைந்து விடுகின்றன. அவன் பொறுமைதான் பயனளிக்கின்றது. அவன் கையைக் கட்டிக்கொண்டு சிலை அல்லது கட்டை மாதிரி உட்கார்ந்து விடுவான். இந்த ஜந்துக்கள் காலத்தின் மதிப்பை அறியா. அம்மாதிரியே அவனும் காலம் போவது தெரியாமல் உட்கார்ந்திருக்க வேண்டும். பிடிவாதமாக வாய்திறவாமல் உட்கார்ந்திருப்பதனால் பூச்சி, பட்சி, மீன் யாவும் தம்மிருப்பிடம் செல்லாமல் அவன் இருக்குமிடம் வருகின்றன. அப்பொழுதும் அவன் சும்மா உட்கார்ந்திருக்கிறான். அவைகள் அவனை நாடி வருகையில் அவன் அமர்ந்திருக்கும் கல்போல் அசைவற்றிருக்கிறான். அவைகளுக்கு பயம் நீங்குகிறது. அவைகளும் அவனைப் பற்றி அறிந்து கொள்ள ஆசைப்படுகின்றன. இந்த ஆசையினால் அவைகளிடம் இருந்த அச்சம் அகலுகிறது. பயம் நீங்கியதும் மீன்கள் நீந்திவருகின்றன. பட்சிகள் பறந்து வருகின்றன அவனைநாடி. அப்பொழுதும் அவன் அசைவற்றிருப்பதால் அவைகள் தங்கள் இருப்பிடத்திற்கும் இவனிருக்குமிடத்திற்குமாகப் போய் வந்து கொண்டிருக்கின்றன. நாளடைவில் அவை நேர்த்தியாக வந்து இரண்டு கால் மனிதன்கூட இவ்வளவு நாகரிகமாக இருக்கிறானா எனும் வியப்பில் அவனுடைய நட்பைப் பெறுகின்றன. இம்மாதிரியே உங்களுடைய நிம்மதியான நடத்தையினால் குழந்தையின் அவசரத்தையும் ஆத்திரத்தையும் வெல்ல முடியாதா? இயற்கையும் ஆண்டவனும் மாதிரி நீங்களும் குழந்தை மலரும் வரையில் காத்திருக்க முடியாதா? அணில், பாம்பு, எலி, மான் முதலியவற்றை அறிந்து கொள்ள ஆவல் காட்டுவதுபோல குழந்தையின் ரகஸ்

யத்தை, மனதை, அவன்பாவனைகளை அறிவதற்குக் காத்திருக்கலாகாதா? குழந்தையிடம் ரகஸ்யமிருக்கிறது, அதிசயமான பழக்கங்கள் இருக்கின்றன; ஒவ்வொரு குழந்தையும் ஒரு புதுமாதிரி மனிதன். அவனுக்கு அவகாசமும் சந்தர்ப்பமும் அளியுங்கள். நீங்கள் கொலம்பஸைப் பற்றியும், நியூட்டனைப் பற்றியும் பேசுகிறீர்கள். அதோ சற்றுமுன் அந்தக் குடிசையில் பிறந்த குழந்தை கொலம்பஸ், நியூட்டன் நிகழ்த்திய மாதிரி அதிசயப் புரட்சியை நிகழ்த்தக்கூடும். ஆனால், நீங்கள் குழந்தையை நம்ப வேண்டும்; உங்களுக்கு அதன் எதிர்காலத்தை அறியும் தீர்க்கதரிசனம் வேண்டும். அவனிடம் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என நீங்கள் விரும்பும் தன்னம்பிக்கை உங்களுக்கு வேண்டும். உங்களுடைய போதனையும் கட்டுப்பாடும் இயற்கை மாதிரி தன்னடக்கமாகவும் மௌனமாகவும் இருக்கவேண்டும். நீங்கள் அதிகம் பேசாமல் அவர்களையும் வாயை அடக்க வழிகாட்டுங்கள். குறைவாகப் பேசுங்கள்; கோபத்தைக் காட்டாமலிருங்கள், எரிச்சலுடன் பேசாதீர்கள், உங்கள் கண்மூலம் ஆட்கொள்ளுங்கள். அவர்களுக்கு எது தேவை என்பதை அறிந்து அதைச் சரியான வழியில் ஒழுங்கு செய்யுங்கள்.

நமது போதனு முறைகளில் என்ன சீர்திருத்தம் செய்யலாம் என்று கேட்டால் எனக்குத் திட்டமாகப் பதில் கூற முடியவில்லை. பள்ளி நிர்வாகக்கமிட்டி, அல்லது கல்வி நிலையங்களை மேற்பார்ப்பவர்கள் அவர்களுக்கு அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரங்களைக் கொண்டு இத்துறையில் உள்ள சிக்கல்களையும் சங்கடங்களையும் தவிர்த்து விடமுடியாது. ஸ்தாபனங்களை மறந்து தனிப்பட்டவர்களிடம் பொறுப்பிருந்தால் இந்த சிக்கல்களும், சங்கடங்களும் இயல்பாகவே தீர்ந்துவிடும். ஆணுக்கு உள்ள ஆக்க சக்தி எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்து தன்னிஷ்டப்படியே பிறர் நடக்கும்படி செய்து பிள்ளைகளை ராணுவ முறையில் கட்டுப்படுத்துகிறது. இதனுல் புகழத்தக்க பலன் கிடைக்கலாம். ஆனுல், இந்த முரட்டு முறையை அளவுக்கு மீறிக் கையாண்டால் அப்புறம் மென்மையான நிர்வாகம் என்பதே அற்றுப்போகும். அநுதாபம் எனும் பெண் சக்தியைப் பயன் படுத்திப் பாருங்கள். அது நிலைமையை உடனே சமாளிக்க முடியாமலிருக்கலாம், எதிர்ப்புச்சக்தியைத் தகர்க்க முடியாமலிருக்கலாம். ஆனுல்,

அந்தச் சக்தி நுட்பமானது, அதனால் நீடித்த பலன்கிட்டும்; அதற்கு ஆக்க சக்தியும் உண்டு. ஆகையால் உபாத்தியாயர்கள் சாதுர்யம் எனும் பண்பைப்பேணி வளர்க்கும்படி யோசனைகூறுகிறேன். அதற்கு அன்னைக்குள்ள ஈர்ப்பு சக்தி இருக்கிறது நீங்கள் இலக்கணம், படிப்பு, எழுத்து, கணக்கு எல்லாவற்றையும் ஒழுங்காகக் கற்பிப்பீர்கள் என எண்ணுகிறேன். இதைக் கற்பிப்பது எளிது. ஆனால், இவைகளுடன் சற்று சாதுர்யம், கற்பனைத்திறன், சிந்தனை சக்தி முதலியனவற்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடனிருப்பவர்களுக்குப் பிடிக்கவில்லை யென்று ஏதாவது ஒரு ருசியை அடக்கி வைத்திருந்தால் அந்த நண்பர்களிடம் சொல்லுங்கள். பள்ளிக்கூடத்தில் அதிலிருக்கும் ஒழுங்கு எதுவாயிருந்தாலும் ஒரு வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதாவது பிள்ளைகள் ரகஸ்யமாகப் பேசுதல் கூடாது. அதுவும் அவர்களுக்குள் வெளிப்படையாகவும் பேசிக் கொண்டிருக்கலாது. ஆனால், பிள்ளைகளில் ஒருவன் புத்திசாலித் தனமாக ஏதாவது சொன்னால் அதை ஆரவாரத்துடன் ஏற்றுக்கொள்ளுங்கள், அதைக் கேட்டு மற்ற பிள்ளைகள் கைகொட்டி ஆரவாரம் செய்யட்டும். பள்ளிக்கூடத்தில் பாடபுத்தகங்கள் தவிர வேறு புத்தகங்கள் இருக்கலாகாது. ஆனால், ஒரு பையன் புளூடார்க், அல்லது ஷேக்ஸ்பியர், அல்லது டான்குவிக்ஸோட் புத்தகத்தையோ அல்லது ஏதாவது வேறு ஒரு நல்ல நூலையோ கொண்டுவந்திருந்து, அவைகளிலிருந்து அவன் படிப்பைப் புரிந்து கொள்வானானால் அவனை வகுப்புக்கு முதல்வனாகக் கொண்டுவந்து நிறுத்துங்கள். யாரும் ஒழுங்கு மீறி ஓடி ஆடித்திரிதல் கூடாது; உபாத்தியாயர் அனுமதியின்றி இடத்தை விட்டு அகலக் கூடாது; ஆனால் ஒருபையனோ, பெண்ணோ தீப்பிடித்து விட்டது என அறிந்து அதை அணைக்கவோ அல்லது அடாவடிப் பையனாது ஒருவனை துன்புறுத்தாமல் காப்பாற்றவோ தனது இடத்தை விட்டுத் துள்ளி எழுந்து காப்பாற்றச் சென்றால் நல்லபடிப்புக்காக பதக்கம் பெற்று முதல் ஸ்தானத்திலிருப்பவனுக்குப் பதிலாக இந்தத் துணிகரமாகக் காப்பாற்றச் சென்றவனுக்கு அந்தப் பதக்கத்தை அளித்து முதலிடம் அளியுங்கள். ஏதாவது ஒருபையன் தனக்கு வானசாஸ்திரம், தாவரங்களின் வரலாறு, பட்சி சாஸ்திரம், கல்வி வளர்ச்சி ரகஸ்யம், நாட்டு வரலாறு

முதலியவற்றில் ஏதாவது தெரியும் என்று காட்டிக் கொண்டால் வகுப்பில் மற்றவர்களை வாயை மூடச் செய்து விட்டு, இந்தப் பையனுக்குத் தெரிந்ததை வகுப்பினருக்குச் சொல்லச் செய்யுங்கள். இப்படியெல்லாம் செய்தால் பள்ளிக்கூடம் உலகம் போலாகும். குழந்தைகளுக்குத் தன்னடக்கம் வேண்டும், உபாத்தியாயர்களிடம் மதிப்பு வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்துவீர்கள். ஆனால், நீங்கள் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு பையன் இடை மறித்து நீங்கள் சொல்வது தவறு என்று கூறி உங்களைத் திருத்தினால் அவனை அன்புடன் அணைத்துக் கொள்ளுங்கள்.

நான் நேர்மை மனம் படைத்தவர்களுக்கும் தூய உள்ளம் படைத்தவர்களுக்கும் கூறுவது இதுதான். "மனிதர்களுக்குக் கல்வி போதிப்பது உங்கள் பொறுப்பு. உங்களது எளிய வாழ்க்கையாலும் பரந்த ஆத்ம சக்தியினாலும் அவர்களுக்கு ஆதர்சமளியுங்கள், அவர்களைத் திருத்துங்கள். அவர்களுக்குப் போதியுங்கள். இந்த உங்கள் திருப்பணியின் மூலம் நீங்கள் எல்லோரையும் உயர்த்தி ஒளியுறச் செய்கிறீர்கள். உங்கள் செயல் மூலம் உங்களைக் கண்ணுறுபவன் எப்படி அனுபவ சாத்தியமான பணி புரிவது என்பதை அறிந்து கொள்வான். வாழ்க்கையில் எதெதை நீங்கள் ஆழ்ந்து அறிகிறீர்களோ அதிலிருந்து உங்கள் முயற்சியின் தீவிரத்தையும், உங்கள் நடத்தையின் மேன்மையையும் பிறர் அறியச் செய்வீர்கள்.

உலகத்தின் இனிமையான இயல்பு உங்களுடைய வாழ்க்கையில் இன்பத்தையும் சக்தியையும் பிணைத்து விட்டது. கடமையே கண்ணாக—நேர்மையாகப் பணி புரியுங்கள். அதன் மூலம் உலக வாலிபர்கள் யாவருக்கும் ஊக்கமளித்தவர்களாவீர்கள். உங்களுடைய உயர் சிந்தனைக் கேற்ற சாதனமாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள். உடனே பிறர் யாவரும் உங்களுக்குக் கடன்பட்டவர்களாகி விடுவார்கள். உலகத்தார் யாவருக்கும் நன்மைபயக்கும் மகாசக்தியின் உறைவிடமாகி விடுவீர்கள் நீங்கள்.

—1884-ல் எழுதியது.

அனுபவம்

நாம் எங்கிருக்கிறோம்? நாம் இருக்கும் நிலைக்கு எல்லை காணமுடியாது, எல்லையில்லை எனவே நம்புகிறோம். தூக்கத்திலிருந்து விழிப்புற்றவன் போல், ஒரு நாள் விழித்துக்கொண்டு நம்மைச் சுற்றிப் பார்த்தால் மாடிக்குச் செல்லும் ஒரு படிக்கட்டின்மேல் இருப்பதாக அறிகிறோம். நாம் ஏறி வந்த படிகள் கீழே இருக்கின்றன, மேலே ஏறிப் போக மேலும் நிரம்ப படிகள் இருக்கின்றன. ஆனால், கடைசிப் படிக்கட்டிலிருந்து மேல் படிக்கட்டைக் காண முடியவில்லை. கண்ணுக்கெட்டிய வரையில் படிக்கட்டுகள் போய்க்கொண்டே இருக்கின்றன. நம்மை இவ்வுலகிற்கு அனுப்பிய பரம்பொருள் நம்முடைய பூர்விகத்தைப் பற்றி நாம் விவரமாகத் தெரிந்து கொள்ளாமலிருப்பதற்காக மறதியை ஊட்டும் ஏதோ ஒரு மதுவை நமக்கு அருந்தக் கொடுத்துவிட்டார் போலும்! அதனால்தான் பிறவியில் தோன்றிய சோம்பலை நடு வயதில் உதறித்தள்ள முடியாத நிலையிலிருக்கிறோம். அத்திபரத்தில் எப்பொழுதும் இருள் சூழ்ந்திருக்கும் தோற்றம்போல நம் ஆயுளெல்லாம் தூக்கக் கலக்கத்திலேயே இருக்கிறோம். நாம் பார்க்கும் பொருள்களெல்லாம் ஒளிவீசி நீந்தி ஓடுவது மாதிரி காட்சியளிக்கின்றன. நமது வாழ்க்கைக்கு இதனால் அவ்வளவாக ஆபத்தில்லை, நமது அறிவின் பார்வைக்குத்தான் அபாயம் ஏற்படும் போலிருக்கிறது. இயற்கையூடே நாம் பேய்மாதிரி நடமாடுகிறோம். இந்த நிலையில் நம்முடைய உண்மை நிலையே நமக்கு மறந்துபோய்விடுகிறது. இயற்கை சோம்பி கஞ்சத்தனமாயிருக்கையில் நாம் ஒருக்கால் பிறந்தோமா என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் நமக்கு இயற்கை ஏன் அறிவின் அம்சத்தைக் குறைவாகவும், அழியும் பொருள்களின் இயல்பை அதிகமாகவும் அளிக்கவேண்டும்? அறிவும் ஆரோக்கியமும் இருந்தும் நமக்கு ஏன் செயல் புரியும் ஆற்றல் இல்லை? புது சிருஷ்டிகள் செய்யும் ஆக்கத்திறன் குறைவாயிருப்பது ஏன்? வருஷம் பூராவும் உயிர் வாழ்வதற்கான வசதியிருக்

கிறதே யொழிய பிறருக்கு அளிப்பதற்கோ, அல்லது முதலீடு செய்வதற்கோ இடமில்லை. நதியின் தலைப்பில் உள்ள ஆலை முதலாளிகள் ஆற்று நீரெல்லாவற்றையும் பயன்படுத்திக் கீழ்ப் பகுதியிலிருக்கும் ஆலைகள் நீரின்றித் தவிப்பதுபோன்ற நிலையில் நாமும் இருக்கிறோம். இதனால் நதியின் தலைப்பில் இருப்பவர்கள் அணைபோட்டு நீரைத் தடுத்துவிட்டனரோ என்று கூடச் சந்தேகிக்கிறோம்.

நமக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணிக் கொண்டிருக்கையில் நாம் என்ன செய்கிறோம், எங்கு செல்கிறோம் என்று கூடக் கூறமுடிவதில்லை. இன்று நாம் சுறுசுறுப்பா யிருக்கிறோமா சோம்பிக்கிடக்கிறோமா என்று கூடத் தெரிவதில்லை. நாம் சோம்பியிருந்ததாக எண்ணிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் பல விஷயங்களை சாதித்துவிட்டதாக, பல விஷயங்களைத் தொடங்கிவிட்ட தாகப் பின்பு நாமே அறிகிறோம். பொழுதை வீணாக்கிக் கொண்டிருக்கையில் நாள் முழுதும் வீணாகிவிட்டதே என வருந்துகிறோம். ஆனால், இதன் இடையில்தான் நம்மிடம் ஞானம் கவிதா சக்தி, நற்பண்பு முதலியவை எப்படியோ வந்தடைகின்றன. இவைகள் நமக்கு எப்பொழுது கிடைத்தன என்று வியப்புறுகிறோம். இவைகளைக் குறிப் பிட்ட ஒரு நாளில் அடைந்தோம் என்று திட்டமாகக் கூற முடியாது. சந்திரனின் உதவியால் ஹெர்மிஸுக்கு ஒரிஸ் என்ற பிள்ளை பிறந்தமாதிரி இந்த ஞானம். கவிதா சக்தி நற்பண்பு யாவும் இடையிலே ஒரு புனிதமான நாளில் மனித உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும். பிறர் துன்பத்திற்குள்ளானவன் பின்னர் ஞானி எனப் புகழப் படுகிறான். ஆனால், அவன் துன்பப்படுகையில் அந்தச் சம்பவம் அற்பமாகவே தோன்றும். கப்பல்கள் தூரத்தி லிருந்து பார்ப்பதற்கு ரம்மியமா யிருக்கின்றன. ஆனால், நாம் அதில் ஏறினால் அந்தக் கப்பலின் (Romance) கவர்ச்சி மறைந்து விடுகிறது. அப்புறம் பிற கப்பல்கள்தான் நேர்த்தியானவைகளாகத் தோன்றுகின்றன. அதேபோல நமது வாழ்வு நமக்கு அற்பமாகத் தோன்றுகிறது. அதே போல் நமது வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்ய நாம் விரும்புவதில்லை. தொடுவானத்தைப் பார்த்துப் பார்த்து மனிதர்கள் பின்வாங்கிக்கொண்டே யிருக்கக் கற்றுக் கொண்டு விட்டனர். "அதோ தெரிகிற புல்தரை வளமாயிருக்கிறது, என் அண்டை வீட்டாருக்கு

செழிப்பான தோட்டமிருக்கிறது, என் நிலம் மட்டும் கட்டாந்தரையாக அமைந்திருக்கிறது" என்று அங்கலாய்க்கிறான் ஒரு குடியானவன். இப்படி அந்தக் குடியானவன் சொல்லுகிறான் என நான் கூறுகையில் அவன் என்னைப்பற்றியும் இவ்வாறே வர்ணிக்கிறான். இயற்கையின் மாயா ஜாலத்தால் மனிதர் இந்நிலைக்கு வந்துவிட்டனர். ஒன்றுமில்லாத விஷயத்தைப்பற்றி ஏராளமான ஆர்ப்பாட்டம் நடக்கையில் யாரும் அறியாமல் இயற்கையின் முக்கிய பயன் விளைகிறது. உட்புகுந்து பார்க்காமலிருக்கும் வரையில் ஒவ்வொரு வீடும் வெளிப் பார்வைக்கு பகட்டாகவே காண்கிறது. ஆனால், உள்ளே சென்று கவனித்தால், சோகம், துக்கம், ஸ்திரீகளின் ஓலம், கணவன்மார்களின் கொடூரம் முதலியவை மலிந்து கிடப்பது தோன்றும். ஏதோ விபரீதம் நடந்துவிட்டதோ என அஞ்சி "என்ன சேதி?" என்று கேட்கவும் தோன்றும். ஆடவர்களெல்லாம் "என்ன சேதி" என்று கேட்கின்றனர்; பழங்காலமெல்லாம் தீயது என்று நினைப்பவர்கள் போல சமூகத்தில் எத்தனைபேர் உள்ளனர் என எண்ண முடியுமா? எவ்வளவு செயல்கள், எவ்வளவு கருத்துக்கள் எனத் திட்டமாகக் கூற முடியுமா? எவ்வளவோ காலத்தை முன்கூட்டி முயற்சிப்பதில் செலவிடுகிறோம், எவ்வளவு காலத்தைத் திட்டமான காரியங்கள் செய்வதில் செலவிடுகிறோம், எவ்வளவு காலத்தை முன் நிகழ்ந்தவைகளை நினைத்துப் பார்ப்பதில் செலவிடுகிறோம்? இம்மாதிரி பாகுபாட்டினால் ஒருவனுடைய அறிவு சில மணி நேரம் வேலை செய்வதற்கேற்பச் சுருங்கிவிடுகிறது. இலக்கியத்தின் வரலாறு—உதாரணமாக டிராபோஸ்கி, வார்ட்டன், ஷ்லெகல் முதலியோருடைய இலக்கியங்களின் மொத்தப் பயனை எடுத்துக் கொள்வோம்—சில எண்ணங்களின் விரிவுரை அல்ல, சில அசல் கதைகள்தான் என்பது புலப்படும். மற்றப்படி இதே விஷயங்களைப் பல்வேறு முறையில் விவரித்திருப்பார்கள். நம்மைச் சுற்றியுள்ள பரந்த சமூகத்தைத் தீவிரமாக ஆராய்ந்து பார்த்தால் இயல்பான செயல்கள் மிகக் குறைவாயிருப்பதை அறியலாம். எல்லாம் பழக்கங்களும் பண்படாத உணர்வுமாயிருக்கும். சில கருத்துக்கள்—அதுவும் ஒரு சிலரிடம் இயல்பாகக் காண்பவைகளும் உலகின் இயல்பை மாற்றும் ஆற்றலில்லாதவைகளாக இருக்கும்.

விபத்துக்களில் எவ்வளவு மயக்கந்தரும் அம்சங்கள் இருக்கின்றன! அவைகளை அனுகிஞல் பிரம்மாண்டமாகத் தோன்றுகிறது. ஆனல் அதில் நெரிசல் அம்சம் இல்லை. அதன் மேல்பூச்சும் சாதாரணமானதாயிருக்கிறது.

மக்கள் அனுவசியமாகக் கவலைப்பட்டு அழுகிருர்கள். ஆனல் உண்மையில் அவர்கள் நிலை அவ்வளவு மோசமாயில்லை. சில சமயம் கஷ்டத்தை வரவேற்கும் மனப்பாங்குடையவர்களாக இருக்கிரேம். ஏனெனில் கஷ்டத்திலாவது உண்மையை அல்லது உண்மையின் சில அம்சங்களையாவது காணலாம் என நினைக்கிரேம். ஆனல் அது போலியாக, காகிதத்தில் எழுதிய சித்திரம் போலாகி விடுகிறது. துக்கத்திலிருந்து நான் அறிந்து கொண்டது, அது ஆழமானதில்லை என்பதுதான். மற்ற இயல்புகள் போல் இதுவும் மேலோட்டமானது, உண்மைக்கு வழி காட்ட முடியாதது. உண்மையை துயரத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியுமானல் அதற்காக வயிற்றில் பிறந்த பிள்ளைகள், காதலர் காதலிகளை இழந்தாவது துயரப்படலாம். உடல் உடலுடன் தொடர்பு கொள்ளாது என்று கண்டு பிடித்துக் கூறியவர் பாஸ்கோவிக்தானே? ஆன்மா எப்பொருளுடனும் சம்பந்தப்படுவதில்லை. நமக்கும் நாம் பேச விரும்புபவர்களுக்கும் இடையே நாம் எதிர் நோக்கும் பொருள்கள், போக்குவரத்துக்கு உபயோகப் படாத கடலின் அலைகள் போல் ஓசையின்றி அடித்துப் புரளுகின்றன. துயரமும் நம்மை இலட்சியவாதிகளாக்கும். இரண்டு வருஷத்திற்கு முன் என் மகன் இறந்தான், அந்த சம்பவம் நான் ஏதோ அழகான பண்ணையை இழந்தது போல் என் மனத்தில் ஒருவகை எண்ணத்தை உண்டாக்கியதே தவிர அதற்கு மேற்பட்ட கலக்கத்தை விளைவிக்கவில்லை. அதற்கு மேல் என் மனத்தை அந்த சம்பவம் கலங்க வைக்கவில்லை. என்னிடம் கடன் வாங்கியிருந்தவர்கள் யாவரும் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையடைந்துவிட்டனர் என நான் கேள்விப்பட்டால்—என் சொத்து கைவிட்டுப் போனதனல் பல ஆண்டுகளுக்குப் பல சங்கடங்கள் நேருமானலும் அதனல் என் உண்மை நிலை உயரவோ தாழவோ செய்யாது. அது போலவே என் மகன் இறந்த செய்தியும் என்னைப் பாதிக்கவில்லை. என் உடம்போடு ஒட்டியது, அதைப் பிரித்தால் என்னைப் பிரிப்பது போலாகும், அது பிரிவுற்ருல் என் உள்ளம் பெருமித

மடையும் என்று நான் நினைத்தது பிரிந்து போய்விட்டது. ஆனால் அதனால் என் உள்ளத்தில் எவ்விதத் தழும்பும் ஏற்படவில்லை. அது ஏதோ மாயம்போல் மறைந்து விட்டது. துயரத்தின் மூலம் ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லையே என்றுதான் நான் துயரடைகிறேன். அதன் மூலம் இயற்கையை அறிந்து கொள்வதில் என் அளவும் முன்னேறவில்லை எனவும் வருந்துகிறேன். "காற்று அவன்மீது வீசக்கூடாது, நீர் அவனை அணுகி நனைக்கக்கூடாது, தீ அவனை எரிக்கக்கூடாது" என்று ஒரு இந்தியன் சபிக்கப்பட்டானும். நம் நிலையும் சற்றேறக் குறைய அம்மாதிரியே இருக்கிறது. நாம் விரும்பும் சம்பவங்கள் யாவும் கோடை மழை மாதிரி. நாம் எல்லோரும் அந்த மழைத் துளிகள் மேலே விழாமல் தடுக்கும் ரப்பர் சட்டை மாதிரி. சாவு தவிர நாம் எதிர்நோக்க வேண்டியது வேறொன்றுமில்லை. நாம் மன நிறைவுடன் அதை எதிர் நோக்கி நிற்கிறோம். அதிலாவது நம்மை ஏமாற்றாத உண்மையைக் காணலாம் என்று எண்ணுகிறோம்.

நாம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் நம் கையைவிட்டு நழுவிப் போய்விடுகிறது எனும் வாழ்க்கையின் அநித்யம்தான் நம் நிலையில் வருத்தம் தரும் அம்சம். இயற்கை நமது காட்சிப் பொருளாயிருக்க விரும்பாததால், அது நம்மை அதன் விளையாட்டுப் பொருளாகக் கருதி ஆட்டுவிக்க விரும்புகிறது. உலகத்தை நாம் விளையாடும் பந்தாகக் கருதலாம். ஆனால், நம் தத்துவத்தை விளக்கும் சிறு கனியாகக் கருத முடியாது. அதை நேரடியாகத் தாக்கும் சக்தியை நமக்கு ஆண்டவன் அளிக்கவில்லை. நாம் அடிக்கும் அடியெல்லாம் பக்கவாட்டில் விழுகின்றன. யதேச்சையாக நிகழ்வன. நமக்குள் உள்ள உறவும் மறைமுகமானது, அகஸ்மாத்தானது.

கனவு வயப்பட்டால் மேற்கொண்டு கனவு கண்டு கொண்டேயிருக்கவேண்டியதுதான். கனவு உலகில் மாயத்திற்கு எல்லையே இல்லை. வாழ்க்கை என்பது ஜபமணி மாதிரி சித்தப்போக்கின் தொடர்ச்சிதான். அவைகள் மூலம் பார்த்தால் ஒவ்வொரு மணியின் வர்ணம் மாதிரியே உலகும் நமக்குத் தென்படும். ஒரு மலையிலிருந்து மற்ற மலைகளைப் பார்க்கலாம். நாம் முடிந்தமட்டில் பிறவற்றை ஊக்குவிக்கிறோம். நாம் எதை ஊக்குவிக்கிறோமோ

அதைத்தான் பார்க்கிறோம். இயற்கையும் புத்தகங்களும் அவைகளைப் பார்க்க வல்ல கண்களுக்கேதான் விளங்கும். மனிதனின் மனப்பாங்கைப் பொறுத்திருக்கிறது அவன் சூரியன் மறையும் சிறப்பையும், கவிதையின் மேன்மையையும் புரிந்துகொள்ளவது. சூரியன் ஒவ்வொரு நாளும் தான் மாலையில் மறைந்து கொண்டிருக்கிறது. மேதாவிகளும் தோன்றிக் கொண்டுதா னிருக்கிறார்கள். ஆனால், சூரியாஸ்தமனத்தையோ, கலை விமர்சனத்தையோ, குறிப்பிட்ட கால அளவுக்குத்தான் நிம்மதியாக ரசிக்கலாம். அதிகமாக ரசிப்பதோ குறைவாக ரசிப்பதோ இயற்கை அமைப்பு அல்லது மனப்பாங்கைப் பொருத்திருக்கிறது. மனப்பான்மை என்பது ஜபமணிகள் கோர்ப்பதற்கான இரும்புக் கம்பிபோன்றது. ஆர்வமில்லாத, மந்தபுத்தியுள்ளவனுக்கு பணமோ புத்திசாலித்தனமோ எப்படிப் பயன்படும்? நாற்காலியிலேயே தூங்கி விழுபவனுக்கு, அர்த்தமின்றிச் சிரிப்பவனுக்கு, எதற்கெடுத்தாலும் மன்னிப்புக் கேட்பவனுக்கு, அகம்பாவம் பிடித்தவனுக்கு, எப்போதும் பணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பவனுக்கு சிறு வயதில் தந்தைப் பேறுபெற்றவனுக்கு என்ன நுண்ணறிவும் பகுத்தறிவும் இருந்து என்ன பயன்? சிறிது தூரத்தில் உள்ளதைப் பார்க்க முடியாதவனுக்கு மேதை இருந்து என்ன பயன்? தன் செய்கையின் பயனில் போதிய அக்கறையுடன் செயல் புரியும் ஆற்றலில்லாதவனுடைய மூளை விறுவிறுப்பா யிருந்தாலென்ன மந்தமாயிருந்தாலென்ன? மூளை மிக மிக மென்மையாயிருப்பதனால் சந்தோஷத்தாலோ கஷ்டத்தாலோ கொதிப்படைபவன், தெரிந்து கொண்டதை வெளியிட சக்தியற்றவனுக்கு மூளை இருந்துதான் என்ன பயன்? சீர்திருத்த ஆர்வம் இருந்து ஆனால் பழைய முறையிலேயே நடந்து வருபவனால் என்ன பயன்? ஒருவனுடைய மத ஆர்வம் பருவ காலங்களையோ அல்லது அவனுடைய ரத்த ஓட்டத்தையோ பொருத்ததாயிருந்தால் அந்த ஆர்வத்தால் என்ன நற்பயன் விளைந்து விடப்போகிறது? இது சம்பந்தமாக எனக்குத் தெரிந்த வைத்தியர் நகைச்சுவையுடன் கூறும் ஒரு விஷயம் என் ஞாபகத்திற்கு வருகிறது. குடலில் கோளாறு இருப்பவன் கிறிஸ்தவர்களில் கால்வின் மார்க்கத்தைச் சேருவான் என்றும், குடல்! ஒழுங்காக இருந்தால் யூனிடரி பகுதியைச் சேருவான் என்றும் அவர்

கூறுவதுண்டு. இப்படி ஒரு உடல்கோளாறு அறிவின் போக்கை நிர்ணயிக்கிறது என்பது வருந்தத்தக்க ஒரு அனுபவம். புது உலகைச் சிருஷ்டிக்கப் போவதாகச் சில இளைஞர்கள் கட்டியம் கூறுவார்கள். ஆனால், அவர்கள் அதை நிறைவேற்ருமலே இளமையிலேயே இறந்து விடுகின்றனர். தப்பித்தவறி உயிர்வாழ்ந்தாலும் சாதாரண மக்களிடையே ஒருவராக மறைந்து விடுகின்றனர்.

மன மயக்கத்திற்கு மனப்பாங்கு ஒரு காரணம். அது நம்மைக் கண்ணுடியறைக்குள் வைத்துப் பூட்டிவிடுகிறது. அதில் நம் முகம் தெரிகிறதே ஒழிய வெளி உலகம் தெரிவதில்லை. நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனையும் மயக்கமடைந்த கண்ணுடன் பார்க்கிறோம். உண்மையில் அவர்கள் ஒவ்வொருவரும் ஒருவித மனப்பான்மை உடையவர்கள். அவர்கள் இன அமைப்புக்கேற்றபடி நடப்பார்கள், அந்த எல்லையை மீறிப்போக மாட்டார்கள். அவர்களை நாம் பார்க்கும் போது அவர்கள் உயிருடனிருப்பதால் உணர்ச்சி யுள்ளவர்கள் என மதிக்கிறோம். அந்த மதிப்பீடு அந்தச் சமயத்திற்குச் சரியானதுதான். ஆனால், வருஷக் கணக்காகப் பார்த்தால் சாவி கொடுத்த கிராமபோன் தான் அம்மனிதன் என்பது புலப்படும். மனித உணர்ச்சி கால தேச, நிலைகளுக்கும், மதவெறிக்கும் அப்பாற்பட்டது எனும் கொள்கைகளை மக்கள் காலையில் எதிர்க்கிறார்கள். ஆனால், மாலையில் அதே கருத்துக்களுக்கு இணங்கி விடுகின்றனர்.

அறநெறி உணர்வு ஒரு மட்டோடு இருப்பது நல்லது என்று ஒரு சமயம் தோன்றினலும் தனிப்பட்டவர்கள் அந்த அடிப்படையில் செயல்புரிந்து வாழ்க்கை இன்பத்தை நுகர்வது சிறந்தது என்று கருதுகின்றனர்.

சாதாரண வாழ்க்கையை நான் அறிந்துகொண்டதிலிருந்து இந்த விதி நிலவுகிறது எனக் கூறுகிறேன். ஆனால், இந்த விதிக்கும் முக்கியமானதொரு விலக்கு இருப்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். மனப்பாங்கினல் ஏற்படும் சக்தியை தன்னைத் தவிர மற்றவர் யாரும் புகழலாகாது என்கிறுன் ஒவ்வொரு மனிதனும். விஞ்ஞானம் எனப்படுவதால் சக்தி குன்றுகிறது என்பதை பௌதிக விஞ்ஞான மேடையிலிருந்து நாம் எதிர்க்க முடியாது. மனச் சலனம் தெய்விகத் தன்மையையே மாய்த்துவிடுகிறது. வைத்தியர்களின் மனப் போக்கை நான்

நன்கறிவேன். வெளித் தோற்றத்திலிருந்து உள் நோக்கை அறியும் சாஸ்திரிகளின் பெருமைப் பேச்சு என் காதில் ஒலித்துக்கொண்டுதானிருக்கிறது. மனித வர்க்கத்தை அடிமைகொள்ள விரும்புபவர்கள், அடிமைகளைக் கட்டி மேய்ப்பவர்கள் ஒரு மனிதன் மற்றொருவரை அடிமை கொண்டு அவனைத் தன் விரலில் சுற்றி வளைத்து ஆட்டிவைக்கலாம் என்றும், ஒருவனுடைய தாடியின் நிறத்திலிருந்தும் பின் மண்டையின் அமைப்பிலிருந்தும் அவனுடைய எதிர்காலத்தையும் குணத்தையும் திட்டமாகக் கூற முடியும் என்றும் கருதுகின்றனர். மிகுந்த அறியாமையை விடக் கொடியது இந்த எல்லாந் தெரிந்தது போல் ஜம்பமடித்துக் கொள்வது. தாங்கள் உலகத்தில் பற்றில்லாதவர்கள் என்று வைத்தியர்கள் கூறிக்கொள்ளுகின்றனர். ஆனால், அவர்கள் உலகப்பற்றுள்ளவர்களே. ஆன்மா என்பது பொருளின் மிகுந்த மென்மை என்கின்றனர் இவர்கள். தனக்குத் தானே காட்சியாயிருப்பதே ஆன்மா. அன்பைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் இவர்கள் கருத்து மிகவும் விந்தையானது. இந்த வார்த்தைகளை அவர்கள் வாயால் சொன்னால் கூட அவைகளுக்குக் களங்கம் ஏற்பட்டுவிடும். ஒரு மனிதனின் தலையின் அமைப்பைப் பார்த்து அதற்கேற்ப அவருடன் பேசும் கனவானை நான் பார்த்தேன்! வாழ்க்கையின் எல்லையற்ற சாதனைகளைக் கொண்டுதான் அதை மதிப்பிட வேண்டும் என நான் எண்ணியிருந்தேன்; ஒரு புது மனிதருடன் பேசினால் எனக்கு என்னென்ன புதுமைகளை எதிர்பார்க்கலாம் என்பதைச் சொல்லமுடியாது என்பதிலிருந்து வாழ்க்கையை மதிப்பிடுவேன். என் அறிவின் திறவுகோல் எப்பொழுதும் என் கையிலிருக்கும். ஆண்டவன் எந்த விசித்திர உருவின்மூலம் தோன்றினாலும் அந்தச் சாவியை அவன் காலடியில் எறியத் தயாராயிருப்பேன். அருகாமையில் கூட்டத்திலும் அவன் கலந்து கொண்டு நடமாடலாம் என்பது எனக்குத் தெரியும். நான் சந்திக்கும் மனிதர்களுக்கேற்ப என் பேச்சை அமைத்துக் கொள்வதனால் என் எதிர் காலத்தை நான் பாழ்படுத்திக் கொள்ளலாமா? அந்த நிலைக்கு நான் வந்துவிட்டால் வைத்தியர்கள் ஒரு காசுக்கு என்னை வாங்கிவிடுவார்கள். "ஐயோ! வைத்திய சாஸ்திர வரலாறு என்ன

ஆவது, ஆராய்ச்சி நிலைய அறிக்கை என்ன ஆவது, நிருபிக்கப்பட்ட சான்றுகள் என்ன ஆவது" எனக் கேட்கலாம். சான்றுகளிலும், அவைகளிலிருந்து கண்ட முடிவுகளிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. மனப்பான்மை என்பது நமது மூளையின் மற்ெருரு அம்சம்; தலை தூக்கிப் பாழ்செய்யாமல் காப்பதற்காக நியாயமாக அமைக்கப்பட்டுளளது. இதை நியாயத்திற்கு விரோதமாகப் பயன் படுத்த இணங்கலாமா? நற்குணம் நிறைந்திருக்கையில் மற்ற சக்திகள் உறங்குகின்றன. மனச்சாட்சிக்குச் சம நிலையில், அல்லது இயற்கைக்கு முன் மனப்பாங்குக்கு முடிவான சக்தி இருக்கிறது. விஞ்ஞானங்களின் பிடியில் மனிதன் அகப்பட்டுக்கொண்டால் அவன் உடல் வசியத்தின் அடிமையாவதிலிருந்து மீளவே முடியாது. ஒரு குறிப்பிட்ட கருவிலிருந்து ஒரு மாதிரி மனிதன்தான் வளரமுடியும். இவ்வுலகில் ஒரு புலனுக்கடிமையாகி விட்டால் அவன் வாழ்க்கை தற்கொலையில்தான் முடியும். ஆனால், ஆக்க சக்திக்கு அழிவே இல்லை. ஒவ்வொருவன் மூளையிலும் ஒரு கதவு என்றும் திறந்தே இருக்கிறது. அதன் மூலம் ஆண்டவன் நுழைகிருர். பூரண உண்மையை அறிய ஆவல் கொண்டுள்ள அறிவும், பூரண நற்பண்பை நாடிச்செல்லும் உள்ளமும் நம்மைக் காக்கவே இருக்கின்றன. இவைகளின் சிறு அறிகுறி மூலம் தீய பண்புகளுடன் நடத்தும் வீணன போராட்டங்களிலிருந்து விடுதலை பெறுகிறோம். அவைகளைப் பாதாளத்தில் உதைத்துத் தள்ளிவிட்டு அவைகள் உள்ள திக்கைக் கூடத் திரும்பிப் பார்க்கமாட்டோம்.

உலகமே மாயம் என்கிற கொள்கை மனப்பாங்கும் பொருள்களும் அடிக்கடி மாறி வரும் அவசியத்தினின்றும் தோன்றியது. ஏதாவது ஒன்றை நம்பி ஆறுதல் பெற லாம் என்ருல் நாம் நம்பியது ஆற்றில் உளைமண் மாதிரி மறைந்து விடுகிறது. இயற்கையின் இந்தத் தந்திரத்தை நாம் சமாளிக்க முடியாது. இரவில் நான் சந்திரனையும் நட்சத்திரங்களையும் பார்க்கையில் நான் நிலையாயிருப்பது போலும், அவைகள் காண்பவைபோலும் தோன்றுகிறது. உண்மை நிலையில் நமக்குள்ள பற்றுதல் நாம் நிலையா யிருக்கக் காரணமாயிருக்கிறது. ஆனல், உடல் ஆரோக் கியத்திற்கு ரத்த ஓட்டமும், அறிவுச் சிறப்பிற்கு பல தரப் பட்ட காட்சிகளும், பிறருடன் எளிதாக உறவாடுதலும்

அவசியம். பார்த்ததையே பார்க்காமல் புதியவைகளைக் காணவே விரும்புகிறோம். ஒரே எண்ணத்தில் தீவிரமாகப் பற்றுக் கொள்வது சலிப்பூட்டுகிறது. நாம் பைத்தியக்காரர்களிடையே வாழ்வதால் அவர்களுடன் நயமாகப் பழகிக் காலந்தள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப் பைத்தியக்காரர்களுடன் பழகுவதால் பேசுவது குறைந்து விடுகிறது. ஒரு சமயம் மாண்டெய்ன் நூல்களைப் படிப்பதில் நாட்டங் கொண்டிருந்ததால் வேறு ஆசிரியர்களின் நூல்களைப் படிக்கவே வேண்டாம் என்று எண்ணினேன். அதற்குமுன் இம்மாதிரியே ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஒன்றியிருந்தேன். பிறகு புளூடார்க் என்னைக் கவர்ந்தார். ஒரு சமயம் பேகன் எனது அபிமான ஆசிரியராயிருந்தார், மற்றொரு சமயம் கதே என்னை ஆட்கொண்டார். பெட்டைன் நூல்களைக்கூட விரும்பிப் படித்தேன். இவர்களுடைய அறிவு விலாசத்தில் இப்போதும் எனக்கு மதிப்பிருந்தாலும் அவர்களுடைய நூல்களை வேண்டா வெறுப்பாகவே புரட்டுகிறேன். இம்மாதிரியேதான் ஓவியத்திலுள்ள நாட்டமும் மாறி வருகிறது. ஒவ்வொரு சித்திரம் ஒவ்வொரு சமயத்தில் என் கவனத்தை ஈர்க்கும். அந்தப் படங்களையே பார்க்கவேண்டுமென்றாலும் அவைகளின் கவர்ச்சி நீடித்ததாயில்லை. ஆகையினால் சித்திரங்களைப் பற்றி எனது கொள்கை என்னவென்றால் ஒரு நல்ல படத்தை நன்றாகப் பார்த்துவிட்டு அப்புறம் அதைப் பார்க்கவே கூடாது என்பதுதான். படங்களைப் பார்த்ததில் நான் நல்ல படிப்பினைகள் கற்றுக் கொண்டதனால் இப்பொழுதெல்லாம் படம் பார்த்தால் நான் பரவசமடைவதில்லை. ஒரு புதிய புத்தகம் அல்லது புதிய நிகழ்ச்சி பற்றித் தேர்ந்த ஞானமுள்ளவர்கள் கூறும் கருத்துக்களிலிருந்து நாம் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் கருத்திலிருந்து அவர்களுடைய மனநிலையை அறிந்து கொள்ளலாம். புதிய நிகழ்ச்சியின் தன்மையைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், அந்த ஞானிக்கும் அவர் கூறும் கருத்து அல்லது விவரிக்கும் நிகழ்ச்சிக்கும் தொடர்பிருப்பதாகக் கொள்ளலாகாது, ஒரு குழந்தை தனது தாயை நோக்கி, "அம்மா நேற்று நீ கூறிய கதையை இன்று கூறினால் ஏன் அவ்வளவு நன்றாக இல்லை" என்று கேட்கிறது. பாவம்! தெய்விகக் கருத்துக்கள்கூட திரும்பச் சொன்னால் சலிப்பைத்

தருகின்றன என்பதை அக்குழந்தை அறியவில்லை. "நீ பரம்பொருளிலிருந்து தோன்றினாய். ஆனால், இக்கதை அந்தப் பூரணத்தில் ஒரு பகுதிதான்" என்று கூறினால் அந்தக் குழந்தை திருப்தியடையுமா? இந்த உண்மையைக் குறிப்பாக அறிவு, கலைத்துறைகளில் காலங் கடந்தே அறிந்து கொள்ளுகிறோம். இதனால் மனவருத்தம் அடைகிறோம். இந்தத் துயரத்திற்குக் காரணம் மக்கள், நட்பு, அன்பு முதலியவற்றில் சோகத்தின் சாயை இருப்பதுதான்.

கலைகளில் நாம் காணும் அசையாத் தன்மையும் விரிந்து கொடுக்கும் ஆற்றலின்மையும் கலைஞனிடம் அதிகமாகக் காண்கிறோம். மனிதனிடத்தில் விரிந்து கொடுக்கும் ஆற்றல் இல்லை. நமது நண்பர்கள் சில கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அதன் பிறகும் புதுக் கருத்துக்களோ, அல்லது பழையவற்றின் விரிவுரையோ அவர்களிடம் காண்பது அரிது. சிந்தனை, ஆற்றல் எனும் கடலின் கரையிலேயே அவர்கள் நிற்கின்றனர். ஆனால், அதில் நுழைந்து விளையாடுவதற்கான செயல் ஏதும் அவர்கள் செய்வதில்லை. மனிதர்கள் லாப்ரடாரில் காணும் (வைரம்) கற்கள் மாதிரியானவர்கள். அந்தக் கல்லைக் கையில் திருப்பித் திருப்பி ஒரு குறிப்பிட்ட கோணத்தில் பார்த்தால் ஒளி வீசும். அந்தக் கோணம் வந்ததும் ஆழ்ந்த பலப் பல வண்ணங்கள் தெரியும். எல்லோருக்கும் இசைந்தாற்போல் தன்னை அமைத்துக் கொள்ளும் ஆற்றல் மனிதனிடமில்லை. ஆனால் ஒவ்வொருவரிடமும் ஒரு குறிப்பிட்ட திறமை இருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட திறமையை எந்த சந்தர்ப்பத்தில் பயனுள்ள வகையில் உபயோகிக்கலாம் என்பதை அறிந்தவர்களே வாழ்க்கையில் வெற்றி காண்கின்றனர். எதைச் செய்ய வேண்டும் எனும் கட்டாயம் ஏற்படுகிறதோ அதையே தான் செய்கிறோம். இந்த நிலையில் நாம் ஏதோ தெரிந்து செய்து வெற்றி கண்ட மாதிரி புகழப்படவேண்டும் என ஆசைப் படுகிறோம். தற்செயலாக நேர்ந்த இதை நமது சொந்த முயற்சியால் நிகழ்ந்ததுபோல் அழகான பெயர் சொல்லிப் பெருமை கொள்கிறோம். சில மனிதர்கள் ஏன் பிறந்தனர் என்று கூடக் கேட்கத் தோன்றுகிறது. இது மிக மிக வருந்தத்தக்க விஷயமல்லவா? வெறும் தந்திரம் செய்து பிழைப்பதற்காகவா நாம் பிறந்து

வாழ்கிறோம் ?

வாழ்க்கையில் நேர்த்திமிக்க ஒருமைப்பாடு காண வேண்டுமானால் சமூகம் பூராவும் ஒத்துழைக்க வேண்டும். வர்ணம் தீட்டிய சக்கரம் வெகு வேகமாக சுழன்றால்தான் அது வெள்ளை நிறத்தைத் தோற்றுவிக்கும். அசட்டுத் தனமாகவும் குறைபாடுகளுடனும் பேசுவதிலும் ஓரளவு நன்மை பிறக்கிறது. கடைசியாக அசட்டுத் தனத்தினால் யாருக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் நாம் நன்மை யடைகிறோம். நமது அசட்டுத் தனத்திலும், தோல்வி யிலும்கூட கடவுள் நமக்குத் துணை நிற்கிறார். குழந்தைகள் விளையாட்டு அசட்டுத் தனமாயிருந்தாலும், அதன்மூலம் நாம் நல்ல போதனை பெறலாம். வர்த்தகம், அரசாட்சி, ஆலயம், திருமணம் ஒவ்வொருவர் உண்ணும் உணவு, அதை அடைவதற்கு எவ்வளவு முயற்சி தேவைப் பட்டது போன்ற பெரிய விஷயங்களிலும் குழந்தை விளையாட்டிலிருந்து கற்ற மாதிரி நல்ல படிப்பினைகளை நாம் அறிந்துகொள்ளலாம். ஒரு பட்சி எங்கும் நிலையாக அமராமல் மரத்துக்கு மரம் தாவிக்கொண்டே செல்வது மாதிரி, ஆக்கசக்தி யாரிடமும் நிலையாயிருப்பதில்லை. ஒரு சமயம் ஒருவர் மூலம் பிரகாசிக்கும், மற்றொரு சமயம் வேறொருவர் மூலம் பிரகாசிக்கும்.

ஆனால், இந்த நுட்பமான சித்தாந்தங்களாலும் பாண்டித்யம் மிக்க விமர்சனங்களாலும் என்ன பயன்? வாழ்க்கை என்பது தர்க்க விஷயமல்ல. குணதோஷ விமர்சனம் செய்வதில் பயனில்லை என்று இக்காலத்தில் கூறுவது நாம் அறிந்ததுதான். உழைப்பு, சீர்திருத்தம் முதலியவை பற்றி நமது இளைஞர்கள் வெகுவாகச் சிந்தித்தும் எழுதியும் இருக்கிறார்கள். ஆனால், அவர் களுடைய சிந்தனைகளினாலும் எழுத்துக்களினாலும் அவர் களோ உலகமோ கடுகளவுகூட முன்னேறவில்லை. அறிவு மூலம் வாழ்க்கையைத் துய்ப்பது உடல் உழைப்புக்கு மேற் பட்டதாகி விடாது. ஒரு ரொட்டித் துண்டை விழுங் கினால் தொண்டையில் சிக்கிக்கொண்டு இறந்துவிடு வோமோ என ஏங்கித் தவிர்த்தால் பட்டினி கிடக்க வேண்டியதுதான். கல்வி நிலையத்தில் வாழ்க்கை பற்றிய சரிய கொள்கை மாணவ மாணவிகளை எவ்வகையிலும் மேம்படுத்தவில்லை என்பதை வருத்தத்துடன் அறிந்து கொண்டோம். அந்தக் கொள்கைகள் வைக்கோலைக்

கூட அசைக்காது, ஒரு குதிரையைக்கூடப் பாதிக்காது ; இளம் பிள்ளைகளேயும், பெண்களையும் அது கட்டுப்படுத்த வில்லை என்பதில் ஆச்சரியம் என்ன ? ஒரு அரசியல் சொற்பொழிவாளர் தமது அரசியல் கட்சியினரின் வாக் குறுதிகளை மேற்குப் பகுதியிலுள்ள ரஸ்தாக்களுக்கு ஒப்பிட்டு நகைச்சுவையுடன் பேசியிருந்தார். அந்த ரஸ்தாக்கள் ஆரம்பத்தில் அகன்றிருக்குமாம் ; இருமருங் கிலும் மரங்கள் வளர்க்கப்பட்டு பிரயாணிகளை அவ்வழியே செல்லும்படி மயக்குமாம். ஆனால், போகப் போகப் பாதை குறுகலாகிக் கடைசியில் அணில் வளையில் கொண்டுபோய் மரத்தில் முட்டிக்கொள்ளும்படி அவ்வளவு குறுகிவிடு மாம். இம்மாதிரியேதான் நமது பண்பாடும் இருக்கிறது. அது நமக்குத் தலைவலி உண்டாக்குகிறது. சில மாதங் களுக்குமுன் வாழ்க்கை மிகுந்த கவர்ச்சியுள்ளது என்று எண்ணியவர்களுக்கு இன்று ருசியற்றது என விளங்கு கிறது. "இராணியரிடையே இன்று சுயமதிப்போ, ஒழுங் கான செயல் முறையோ சிறிதளவும் இல்லை". குறை கூறுகிவர்களுக்கும் குணதோஷ விமர்சனத்திற்கும் அளவே இல்லை. ஒவ்வொரு வாழ்க்கை முறைக்கும், செயல் திட்டத்திற்கும் எதிர்ப்பு கூறப்படுகிறது. இவ் வளவு எதிர்ப்புக்கிடையே ஒன்றும் செய்யாமலிருப்பதே சிறந்தது என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்து விடுகிறோம். வாழ்க்கையின் அமைப்பே வாளாவிருத் தலையே போதிக்கிறது. அதிகமாகச் சிந்தனை செய்து பைத்தியம் பிடித்துவிடப் போகிறது. நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு இஷ்டப்படி போ. வாழ்க்கை என்பது அறிவாற்றலுமல்ல, ஆராய்ந்து பார்ப்பதுமல்ல, உறுதி யுடன் உழைப்பதுதான். எல்லோருடனும் சரளமாகப் பழகிக், கிடைத்ததை வெறுக்காமல் அனுபவிப்பவர்கள் தான் வாழ்க்கையில் நலம் காணுவார்கள். அதிக ஆவல் காட்டுவதை இயற்கை வெறுக்கிறது. நமது தாய்மார்கள் குழந்தைகளிடம் "போட்டதைச் சாப்பிடு, அதற்கு மேல் பேசாதே" என்று போதனை செய்வதில் பொரு ளிருக்கிறது. பொழுதைத் துளிக்கூட வீணாக்காமலிருப்பது தான் இன்பம். பொழுதைப் போக்குவதிலும், பிறகு வருந்துவதற்கு இடமில்லாமலும், பிறர் ஆதரவுக்குக் காத் திராமலும், நேரத்தைப் பயன்படுத்த வேண்டும். நாம் மேலோட்டமாக வாழ்கிறோம். ஆகையால் மேலேயே

ஊர்ந்து செல்வதுதான் வாழ்க்கைக் கலை. பழைய மாசு படிந்த சம்பிரதாயத்தைக் கைக்கொள்பவனும் நவநாகரிக மனிதன் மாதிரி சிறப்பாக வாழ்வதற்குக் காரணம் அவனிடம் உள்ள இயல்பான சக்தி. அதாவது சந்தர்ப் பங்களை சாமர்த்தியமாகப் பயன் படுத்துவது. அப்படிப் பட்டவன் எங்கும் பிழைத்துக் கொள்வான். வாழ்க்கை என்பது சக்தி, வெளித்தோற்றம் இரண்டின் கதம்ப மாகும். இவ்விரண்டில் எது தூக்காக இருந்தாலும் தாங்காது. நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வாழ்க்கையின் இலட்சியத்தை நினைவு வைத்தே செல்ல வேண்டும். ஒரு விநாடியும் வீணாக்கலாகாது. இவ்விரண் டையும் நினைவு வைத்து செயலாற்றுவதுதான் தேர்ந்த ஞானத்தின் இலட்சணம். மனித ஆயுள் எவ்வளவு குறு கியது என்பதை எண்ணிப் பார்த்தால் நாம் வறுமையில் உழலுகிறோமா, சுபிட்சத்தில் திளைக்கிறோமா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டியதில்லை என்று நல்ல மனிதர்கள் கூறமாட்டார்கள், வெறியர்கள்தான் அவ்விதம் நினைப் பார்கள். ஒவ்வொரு விநாடியும் முக்கியமானதால் அதை சிக்கனமாகச் செலவிட வேண்டும். இன்றைய வாழ்க் கையில் ஐந்து நிமிஷம் என்பது அடுத்த சகாப்தத்தில் கிடைக்கக்கூடிய அதிக மதிப்புடையது. ஆகையால் இன்றைய பொழுதை மன நிறைவுடன், புத்திசாலித் தனமாகச் செலவிடுவோம். நாம் பழகும் ஆடவர்களையும் பெண்களையும் கண்யமாக நடத்துவோமாக! அவர்கள் மனிதத் தன்மையுள்ளவர்கள் என மதித்து நடத்துவோ மாக! உண்மையிலேயே மனிதத் தன்மையுள்ளவர்களா யிருக்கலாம். மனிதர்கள் குடிவெறியால் ஊன்றி உழைக்க முடியாமல் கைகால் உதறுகிறவர்கள்போல் கற்பனையில் திளைத்திருக்கின்றனர். இந்தக் கற்பனைக் கொந்தளிப்பில் மனிதனைக் காப்பாற்ற வல்லது நிகழ் காலத்தை மதித்து நடந்துகொள்வதுதான் என்று எனக்குத் தோன்று கிறது. இவ்வளவு ஆடம்பரக் காட்சிகளுக்கும் அரசியல் ஆர்ப்பாட்டங்களுக்குமிடையில் நான் ஒரு கொள்கையில் நம்பிக்கையுடனிருக்கிறேன். அது என்னவெனில் நாம் எதையும் தள்ளிப் போட்டுக்கொண்டு காலங் கடத்த லாகாது; நாம் யாருடன் எந்தச் சந்தர்ப்பத்தில் பழகினாலும், நாம் பழகும் மனிதர்கள் சாதாரணமானவர் களானாலும் விரும்பத் தகாதவர்களானாலும் அவர்களுடன்

நீதியாக நடந்துகொள்ளவேண்டும்; நம்மை மகிழ்விப்ப தற்காக அவர்களை ஆண்டவன் படைத்திருப்பதாக நினைத்து நடந்துகொள்ளவேண்டும் என்பதுதான். நாம் பழகுபவர்கள் தீயவர்களாயிருந்து நமது கூட்டுறவால் திருந்துவார்களானால் அது நீதியின் வெற்றியாகும். இந்த வெற்றியானது கவிஞர்களின் தீஞ்சுவைப் பாடல்கள், புகழ்பெற்றவர்களின் ஆதரவு இரண்டையும்விட நமது உள்ளத்திற்கு நிரம்பிய மகிழ்ச்சியளிக்கும். ஒரு சிறந்த சிந்தனையாளன் எவ்வளவுதான் கூட்டுறவின் சந்தோஷத் தால் பாதிக்கப்பட்டாலும் சிறப்பான மேதை வாய்ந்தவர் களின் சீரிய குணங்களைக் கண்டு அவன் பரவசமடையாம லிருக்க முடியாது. பண்படாத மனப்பாங்குள்ளவர்கள்கூட மேலோரைக் கண்டால் வணங்குகிறார்கள்.

வாலிபம் ததும்பும் இளைஞர்கள் வாழ்க்கையை நிந்திக் கின்றனர். எனக்கும் என்போன்று ஜீரண சக்தியை இழக்காதவர்களுக்கும் ஒவ்வொரு தினமும் சுவைநிறைந்த தாகும். பொழுதைப் பிறருடன் கூடிக் குலாவித்தான் கழிக்கவேண்டும் என விரும்புவது அவ்வளவு சிறந்த குணமல்ல. நான் பிறர் கூட்டுறவால் நட்புரிமை நாடு பவனாக ஆகிவிட்டேன். எனினும் என்னைத் தனியாய் விட்டுவிட்டால் உல்லாசச் சங்கங்களில் துய்க்கக்கூடிய ஆனந்தத்தை தனிமையிலேயே ஒவ்வொரு மணியும் பெறுவேன். நான் அற்ப சந்தோஷக்காரன். பிரபஞ்சத்தில் சிறந்ததென்று கருதப்படும் ஒவ்வொன்றிலும் சிறிதளவு குறைந்தால்கூட திருப்தி அடையாத என் நண்பர் ஒருவ ருடைய அனுபவத்துடன் என்னுடைய அனுபவத்தை ஒப்பிட்டுப் பார்த்தேன். அதிலிருந்து என்னைப் பற்றி நான் அறிந்துகொண்டது என்னவென்றால்கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைபவன் நான் என்பதுதான். மாறு பட்ட மனப்பான்குள்ளவர்களுடன் சேர்ந்து வாழ முடியும் என நான் கருதுகிறேன். ஓயாமல்பேசுபவர்கள், குடிகாரர்க ளுடன் கூட நான் சரளமாகப் பழகினும் என் நிலையி லிருந்து பிறழாமலிருக்க முடியும். சதா மாறிக்கொண்டி ருக்கும் உலகுக்கு அவர்கள் உண்மை உருக்கொடுக்கின் றனர். நான் காலையில் கண்விழித்ததும் பழைய உலகத்தையே பார்க்கிறேன் —மனைவி, குழந்தைகள், அன்னை, கான்கார்டு, பாஸ்டன் ஆகிய ஊர்கள்—பிரியமான பழைய ஆத்மீய உலகம் மட்டுமல்ல, பழைய பாபக் காட்சி

களும் தென்படுகின்றன. நம்மை எதிர்ப்படும் நன்மைகளைத் தடுக்காமல் ஏற்றுக்கொள்வோமானால் எல்லையற்ற நன்மை பெறலாம். நாம் பெறும் நலன்கள் திர யோசித்து முயற்சி செய்ததினால் பெற்றவை அல்ல. நல்லது என்று கருதப்படுபவை எல்லாம் நம் கண்முன்னே இருக்கின்றன. நம் வாழ்க்கையில் மத்தியரேகையும் பூமத்தியரேகையும் போல அதிக உஷ்ணமோ அதிக குளிரோ இல்லாத சிதோஷ்ண நிலை போன்றது. சதா விஞ்ஞான உலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தால் குளிரால் உறைந்துபோகும் நிலையடைவோம். இல்லாவிட்டால் புலன்களுக்கடிமையாகி, பாதாளத்தில் விழுந்துவிடுவோம். இந்த இரண்டு கோடிகளுக்கும் இடையில்தான் வாழ்க்கை, சிந்தனை, ஆன்மிகம், கவிதை முதலியன உள்ள குறுகிய பூமத்திய ரேகை இருக்கிறது. நல்லதெல்லாம் கண்ணுக்கெதிரே இருக்கிறது என்பதுதான் பொதுஜன அனுபவம். பிரபல சித்திரக்காரர்களின் ஓவியங்களை நாடி ஒரு சித்திர ஆர்வமுள்ளவர் ஐரோப்பாவிலுள்ள ஓவிய நிலையங்களையெல்லாம் தேடுகிறார். ஆனால், கிறிஸ்துவ வேதத்திலுள்ள அரிய காட்சிகளெல்லாம் போப்பாண்டவர் மடம் போன்ற இடங்களில் நிரம்ப இருக்கின்றன. அவைகளை வண்டி யோட்டுபவன் கூட எளிதில் கண்டு களிக்கிறான். இதையெல்லாம்விட சிறந்த காவியம் இயற்கை அழகை நாம் தெருக்களில் பார்க்கலாம் என்பதுதான். சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இரண்டையும் யாவரும் தினம் தினம் எங்கும் கண்டு களிக்கலாம். மனித அமைப்பு எனும் சிற்பத்தை எங்கும் காணலாம். ஷேக்ஸ்பியர் கையெழுத்திட்ட ஒரு காகிதத்தை லண்டனில் ஒரு ரஸிகர் நூற்று ஐம்பத்தேழு கினிக்கு (சுமார் இரண்டாயிரத்து ஐநூறு) ரூபாய் மதிப்புக்கு ஏலத்தில் எடுத்தார். ஆனால், ஒன்றும் கொடுக்காமல் ஒரு பள்ளிமாணவன் ஷேக்ஸ்பியர் "ஹாம்லெட்" நாடகத்தைப் படித்து அதில் இது வரை யாரும் வெளியிடாத மேன்மையான உணர்ச்சியின் இரகசியங்களைக் கண்டுபிடிக்கலாம். நான் எப்பொழுதும் சாமான்யமான புனித புத்தகங்களையே படிக்க விரும்புகிறேன்—பைபில், ஹோமர், தாந்தே, ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவர்களின் நூல்கள். ஜனக்கூட்டத்தில் வசிப்பதில் வெறுப்புற்று நாம் தனிமையான இடங்களுக்கு விரைகிறோம். இந்தியர்களின் மனவேறு

பாடுகள், வேடர்கள், தேனீக்கள் பிடிப்பவர்கள் முதலியவர்களுடைய சித்திர வேலைப்பாடுகளைக் கண்டு களிக்க நாம் விரும்புகிறோம். இந்த உலகத்திற்கு நாம் புதியவர்கள். இங்கே வசித்தவர்கள் வேடனும், காட்டுமிராண்டிகளும் பட்சிகளும்தான் என எண்ணுகிறோம். ஆனால், நமது இந்த மனப்பான்மை அந்த நாட்டுப் பிராணிகளையும் காட்டுமிராண்டிகளையும் பிடித்துக்கொள்கிறது. நரி, மரங்கொத்தி, நத்தை முதலிய ஜந்துக்களும் இந்த உலகத்தின் தாற்காலிகவாசிகள் என எண்ணத் தொடங்கிவிடுகின்றன. பல துளி பெரு வெள்ளமாகிறது எனும் தத்துவப்படி அணுக்கணுவு இடைவெளி யிருக்கிறது என்கிற சித்தாந்தம் ஏற்படுகிறது. இதிலிருந்து உலகம் வெளித்தோற்றமே ஒழிய அதற்கு உட்புறம் என்பதோ இல்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

இரு ஓரங்களையும் விட்டு நடுப்பாதையில் நடப்பதே நல்லது. இயற்கை உலகம் துறந்த துறவியல்ல. நாம் அறிந்த மட்டில் கிறிஸ்தவ ஆலயங்கள், துறவிகள், அஞ்ஞானிகள், தானியத்தை உண்பவர்கள் முதலியோரிடம் இயற்கை தனியாகச் சலுகை ஏதும் காட்டுவதில்லை. இயற்கை உண்கிருள், குடிக்கிருள், பாபத்திற்கஞ்சுவதில்லை. அவளுடைய அருமைக் குழந்தைகளான பெரியோர்கள், வீரர்கள், அழகு மிக்கவர்கள் நமது உலக நியதிகளுக்குக் கட்டுபட்டவர்களல்ல; அவர்கள் சமயப்பாடசாலைகளில் படித்துத் தெரிந்தவர்களல்ல; அவர்கள் உணவு விஷயத்தில் கட்டுப்பாடில்லாதவர்கள்; ஏசுநாதரின் பத்து ஆணைகளை சிரமேற்தாங்கி நடப்பவர்களுமல்ல. இயற்கையின் வளமையை நாமும் பெறவிரும்புவோமானால் பிற நாடுகளிலிருந்து நாம் பெற்றுள்ள மனச்சாட்சிக்கு மதிப்பு வைக்கும் பழக்கத்தை அவ்வளவாக மேற்கொள்ளலாகாது. சென்றதையும் வரப்போவதையும் நினைத்து இன்று நடக்கவேண்டியதை மறந்து விடாதே. அதைச்சிறப்பாகச் செய். எவ்வளவோ விஷயங்களில் திட்டமான முடிவு ஏற்படவில்லை. அவைகளை முடிவு செய்யவேண்டியதும் அவசியம்தான். அவைகள் முடிவாகிறபடி ஆகட்டும். அதற்காக நாம் செய்துகொண்டிருந்ததை நீடித்துச் செய்து வருவோம். வர்த்தகத் துறையில் எது நீதியானது என்பது பற்றி விவாதம் நடந்து வருகிறது. அந்த விவாதம் ஒன்று

அல்லது இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் முடிவடையப் போவதில்லை. புதிய இங்கிலாந்தும், பழைய இங்கிலாந்தும் இடையில் வியாபாரத்தைக் கைவிட வேண்டியதில்லை.

தேசியப் பதிப்புரிமை, சர்வதேசப் பதிப்புரிமை பற்றி சட்டமியற்றுவதற்காக விவாதம் நடக்கிறது. அதற்கிடையில் நமது புத்தகங்களை நல்ல விலைக்கு விற்றுக் கொண்டிருப்போம். இலக்கிய சிருஷ்டி அவசியமா, இலக்கிய சிருஷ்டியின் காரணகாரியங்கள், சிந்தனையை எழுத்துமூலம் பதியலாமா எனும் பிரச்னை யாவும் விவாதத்திற்கு உட்பட்டிருக்கின்றன. விவாதத்தில் இரண்டு கட்சிகளிலும் ஓரளவு நியாயம் இருக்கிறது. இந்த விவாதம் உணர்ச்சியுடன் நடந்து கொண்டிருக்கையில், என் அருமைப் பண்டிதரே உமது அசட்டு வேலையைக் கைவிடாதீர்! ஒவ்வொரு மணியிலும், இடை இடையிலும் ஒவ்வொரு வரியாக எழுதிக்கொண்டே இருங்கள். நில உரிமை, சொத்துரிமை ஆட்சேபிக்கப் படுகிறது. இவை பற்றி மகாநாடுகள் நடக்கின்றன. மகாநாடுகளில் ஓட்டெடுப்பதற்குள் உங்களுடைய தோட்டத்தைப் பயிரிடுங்கள். உங்கள் சம்பாத்தியத்தை நற்பணியில் செலவு செய்யுங்கள், வாழ்க்கை நீர்க்குமிழி ; அதை நம்புவதற்கு இல்லை ; தூக்கத்திற்குள்ளே ஒரு தூக்கம் போன்றது அது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அது எப்படியாவது இருக்கட்டும், அதை நாம் ஆட்சேபித்துக் கொண்டிருக்க வேண்டாம். ஆனால் ஆண்டவனின் அருமைக் குழந்தைகளாகிய நீங்கள், உங்கள் சொந்தக் கனவில் கவனம் செலுத்துங்கள். இந்த மாயவாதத்தில் மதியிழந்து விடவேண்டாம். அதற்காகத் தனி மனிதர்கள் பலர் இருக்கின்றனர். நீங்கள் உங்களுடைய அறையிலிருந்து கொண்டு அவர்கள் ஒரு முடிவிற்கு வரும் வரையில் உழைத்துக்கொண்டிருங்கள். உங்கள் நோய் காரணமாக, உங்கள் பழக்கங்கள் காரணமாக நீங்கள் சிலவற்றைச் செய்யவேண்டும், சிலவற்றைச் செய்யலாகாது என்று அவர்கள் திட்டமிடுவார்கள். ஆனால், உங்கள் வாழ்க்கை நிலையானதல்ல. ஓடிக்கொண்டே இருப்பது. வாழ்க்கை என்பது இரவுக்குத் தங்கும் கூடாரம். நாம் குறிப்பிட்ட வேலையைக் குறித்த காலத்தில் செய்யவேண்டும் என்பதை உணரவேண்டும். நீங்கள் நோய்வாய்ப் பட்டிருந்தாலும்,

உங்கள் நிலை மேலும் மோசமாக ஆகாது, உங்களைப் பொன்போலக் கருதும் உலகும் மேம்படவேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மனித வாழ்க்கையில் இரண்டு அம்சங்கள் சேர்ந்திருக்கின்றன—சக்தியும், தோற்றமும். வாழ்க்கை இனிமையாகவும் சிறப்பாகவும் இருக்கவேண்டுமானால் இவ்விரு அம்சங்களும் அததனுடைய அளவிலிருக்கவேண்டும். இவ்விரண்டில் எது அதிகப்பட்டாலும் வாழ்க்கை பாழடைந்துவிடும். இந்த அம்சங்கள் குறைவாயிருப்பதனால் ஏற்படக்கூடிய தீமைகளைவிட அதிகமான தீமை பயக்கும். நல்ல அம்சங்கள்கூட அளவுக்கு அதிகமாகப் போய்விட்டால் கெடுதியே ஏற்படுகிறது. மனிதனின் நடவடிக்கைகள் எல்லாமே அளவுக்கு மீறிப்போய் நாசத்திற்கு வழிகாட்டுகிறது. ஒவ்வொரு மனிதனின் பிரத்தியேக அம்சம் மிதமிஞ்சிப் போக இயற்கை தூண்டுகிறது. இந்த விளைவுக்கு இங்குள்ள பண்டிதர்களை உதாரணமாகக் கூறலாம். இங்குள்ள கலைஞன், பேச்சாளன், கவி முதலியவர்களுடன் நீங்கள் நெருங்கிப் பழகுகிறீர்கள். இவர்கள் விவசாயி அல்லது தொழிலாளியைவிட எவ்விதத்திலும் சிறந்தவர்களல்ல என்று தோன்றுகிறது. உடனே இவர்களை, பண்டிதர்களல்ல போலிகள் எனத் தீர்ப்புக் கூறிவிடுகிறீர்கள். மேலும், இந்தக் கலைகள் இவர்களுக்கேற்றதல்ல என்றும் முடிவுகட்டி விடுகிறீர்கள். ஆனால், உங்கள் முடிவு இயற்கைக்கு மாறானது. இயற்கை மனிதனை இவ்வாறு படைத்தாள், இவ்வாறே இலட்சக்கணக்கில் தினம் படைத்துக்கொண்டிருக்கிறாள். ஒரு பையன் புத்தகம் படிக்கிறான் அல்லது சித்திரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். இவ்வாறு படித்துக்கொண்டும், பார்த்துக் கொண்டும் இருக்கும் இலட்சக்கணக்கானவர்கள் ஆரம்ப எழுத்தாளர்கள், சிற்பக்கலை பயிலுபவர்கள். இதே சிறுவர்களுக்கு இன்னும் சற்றுக் கூடுதலான திறனை அளித்தால் அவர்கள் சிறப்பான எழுத்தாளர்களாகவும், சிற்பிகளாகவும் ஆகிவிடுவார்கள். இவர்கள் ஆதியில் எப்படிக் கலை பயிலத் தொடங்கினார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் இயற்கை துணை புரிந்ததால்தான் பின்னர் சிறப்புற்றார்கள் என்பதை உணரலாம். நுட்பமான பிராணிக்கு மனிதன் ஒரு சிறந்த உதாரணம். அவன் நடக்கவேண்டிய பாதை நூல் இழைபோல் மெல்லியது,

குறுகலானது. ஆகையால் அறிவாளிகள் அதிகப்படியான அறிவினால் அசடர்களாகிவிடுகின்றனர்.

விதி துணை புரியுமானால் எவ்வளவு எளிதாக நாம் இவ்வழகான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாழ்க்கை நடத்தலாம்? காரணகாரிய அமைப்புக்கு உட்பட்டு இயைந்து வாழலாம்? வாழ்க்கையின் பல அம்சங்களைத் தெருக்களிலும், பத்திரிகைகளிலும் பார்க்கிறோம். உறுதியுடன் எக்காலத்தும் திட்டத்திற்கேற்ப வாழ்க்கை நடத்தினால் வெற்றி காணலாம் என நம்பும்படி இக்காட்சிகள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. ஆனால், திடீரென ஒரு அற்புதம் நிகழ்கிறது. மேற்கூறிய நம்பிக்கையைத் தகர்த்து எரிகிறது. இந்தத் தெய்விக நிகழ்ச்சி நடந்த மறுநாள் மீண்டும் சாதாரணத் திட்டப்படியே சொல்லி வைத்தபடி எல்லாம் நிகழ ஆரம்பிக்கின்றது. சாமான்ய அறிவுக்குக்கூட பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. மேதாவியாய் இருப்பவனுக்கும் சாமான்ய அறிவு இருக்கவேண்டும். எந்தத் தொழிலுக்கும் அனுபவம்தான் மனிதனின் கால், கைபோல் பயன்படுகிறது. ஆனால், இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வேலை செய்கிறவன் பயன் ஏதும் பெறுவதில்லை. நமது இச்சை, திட்டம் இவைகளுக்கு மாறான மறைமுகமான பாதையையே மனிதனின் ஆற்றல் பின்பற்றுகிறது. நாம் ராஜதந்திரிகள், வைத்தியர்கள், நிதானஸ்தர்கள் என எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இவ்வாறான எண்ணம் ஏமாற்றத்திற்கே வழிகாட்டும். வாழ்க்கையில் பெரிதும் எதிர்பாராததே நடக்கிறது. இப்படி இல்லாவிட்டால் வாழ்க்கைக்குப் பயனோ பொருளோ இருக்காது. கடந்த காலம், எதிர்காலம இரண்டையும் அறிந்துகொள்ள முடியாமல் நம்மைத் தனித்து வைப்பதில் ஆண்டவனுக்கு அலாதி ஆனந்தம். நாம் முன்னும், பின்னும் பார்க்கிறோம். ஆனால், ஆண்டவன் இருபுறமும் தந்திரமாகத் திரைபோட்டு மறைத்துவிடுகிறார். “உன்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது, நீ எதிர்பார்க்கவும் முடியாது” என அவர் நம்மைப் பார்த்துக் கூறுவதுமாதிரி இருக்கிறது அவர் திரையிட்டு மறைப்பது. நல்ல சம்பாஷணை, நன்நடத்தை, நற்செயல் எல்லாம் பழையவற்றை மறந்து நிகழ் காலமே சிறந்தது என்கிற இயல்பான உணர்வினால் ஏற்படுபவை. கணக்குப் பார்த்துச் செயல் புரிபவர்களை இயற்கைக்குப் பிடிக்காது. அதனுடைய

முறைகளெல்லாம் திடீரெனவும் உள்ளுணர்விஞலும் தோன்றுபவை. ரத்தத் துடிப்பிஞல் வாழ்கிருன் மனிதன்! நமது நடமாட்டமே ரத்தத் துடிப்பிஞல் இயங்குபவை. இதஞல் ஏற்படும் இயக்கத்திலும் ஏற்றத் தாழ்வுகள் காணலாம், ஒரேமாதிரியான போக்கும் இருக்காது; உடல் துடிப்புக்கேற்ற முறையில் இயங்குவதில்லை; மனது நீடித்து ஒரே மாதிரியாகவும் இயங்குவதில்லை. எதிர்பாராது நிகழ்பவைகளால்தான் நாம் வளர்கிருேம். நமது சிறப்பான அனுபவங்கள் எதிர்பாராமல் நிகழ்ந்தவைகள்தான். மக்களில் கவர்ச்சிகரமானவர்கள் நேரடியான செயல்களிஞல் புகழ்பெற்றவர்கள் அல்ல. அவர்கள் மேதைகள்தான் என்ருலும் மேதாவிகள் என அங்கீகாரம் பெருதவர்கள். அவர்களுடைய அறிவின் சுடரை அனுபவிக்க நாம் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. அவர்களுடைய சிறப்பு, பட்சிகள். காலைக் கதிரவனின் ஒளிபோன்று இயல்பானதே ஒழிய கலைச் சிறப்புப் போன்று முயற்சியின் விளைவல்ல. மேதையின் சிந்தனையில் எப்பொழுதும் ஆச்சரியப்படத்தக்க அம்சத்தைக் காணலாம். அதஞல் தான் அதன் அறநெறிக் கருத்தில் புதுமை தோன்றுகிறது. அது முது கிழவர்களுக்கும் புதிதாய்ப் பிறந்த குழந்தைக்கும் புதுமையாயிருக்கிறது. "நாம் பார்வைக்குத் தப்பித் தோன்றும் ஆட்சி" போன்றது இந்தப் புதுமை. அம்மாதிரியே நடைமுறையில் வெற்றி காண்பதற்கும் அதிகப்படியான முன்னேற்பாடு கூடாது.

ஒரு மனிதன் சிறப்பாகச் செய்யக்கூடியது பிறர் கண்ணில் படாது. அவன் செயலில் ஏதோ மாயாஜாலம் இருந்து பிறர் கண்ணை மறைக்கிறது போலும்! அது உங்கள் கண் முன் நிகழ்ந்தாலும் உங்கள் பார்வையை மயக்கி கண்ணில் படாமல் செய்துவிடுகிறது. வாழும் கலையில் ஒருவிதமான தன்னடக்கமிருந்து அது பிறர் கண்ணுக்குப்படாமல் செய்துவிடுகிறது. ஒரு மனிதன் பிறப்பதற்குமுன் இம்மாதிரி மனிதன் பிறப்பான் என்று கூறமுடியாது. ஒரு காரியத்தில் வெற்றிகாணும் வரையில் அது கைகூடாதது போலவே தோன்றுகிறது. கடைசியாக நம்மாலாவது ஒன்றுமில்லை, அவனின்றி அணுவும் அசையாது என்ற முடிவை பக்திமான்களும் சந்தேகப் பிரகிருதிகளும் ஒருமித்து ஒப்புக்கொள்கின்றனர். கடுகளவு பெருமையடைபவர்கூட இயற்கை நமக்கு

இடந்தரமாட்டாள். நம் எழுத்து, நம் செயல், நம் உடமை எல்லாம் ஆண்டவன் அருளால் கிடைத்தவை. நான் ஒழுங்காக நடந்து சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மனமொப்பி உட்படத் தயார்; மனிதனின் சக்திக்கு மதிப்பளிக்கவும் சம்மதிக்கிறேன்; ஆனால், நேர்மையாக நடந்துகொள் வதென முடிவு செய்திருக்கிறேன். ஆகையால் வாழ்க் கையில் நாம் காணும் வெற்றிக்கும் தோல்விக்கும் பரம் பொருள் அளிக்கும் சக்தியின்றி வேறு காரணம் காண முடியவில்லை. வாழ்க்கையின் முடிவும் பயனும் என்ன என்று திட்டமாகக் கூறமுடியாது. நாம் அன்றாட வாழ்க் கையில் எதையும் அறிந்து கொண்டதாக அச்சமயம் புலப்படாது. ஆனால், பல ஆண்டுகள் கழித்துப் பார்த் தால் எவ்வளவோ அறிந்துகொண்டிருப்பதை உணரு கிறோம். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் வருகிறார்கள், போகிறார்கள், எவ்வளவோ காரியங்களைத் திட்டமிடுகிறார் கள், செய்யவும் செய்கிறார்கள். ஆனால், இவைகளின் பயன் நாம் எதிர்பார்த்ததல்ல. தனி மனிதன் எப்போதும் தவறு செய்பவன். அவன் எவ்வளவோ திட்டமிடுகின்றான், எவ்வளவோ பேர்களைச் சேர்த்துக்கொண்டு அதை நிறைவேற்ற முயற்சிக்கின்றான், அவர்களுடன் முரண்டிக் கொள்ளவும் செய்கிறான், எவ்வளவோ தவறுதலும் செய் கிறான். கடைசியில் காரியமும் ஒரளவு முடிகிறது. முடிவைப் பார்த்தால் தனி மனிதன் தவறுதான் செய்து விட்டான் என்பது விளங்கும். அவன் என்ன செய்து முடிப்பதாக அறிவித்தானோ அதற்குமாறான பயனே கிட்டுகிறது,

மனித வாழ்க்கையில் எந்த அம்சத்தைப் பற்றியும் திட்டமாகக் கூற முடியாததால் நமது முன்னோர்கள் விதிக்குத் தெய்வத்தன்மை அளித்து விட்டனர். இது எப்படி இருக்கிறது என்றால் நெருப்பிலேயே குளிர் காய்வது போல் இருக்கிறது. குளிரைப் போக்குவதற்கு மாறாக மனிதனையே அது பொசுக்கிவிடும். ஆனால், பிரபஞ்சம் முழுதும் இந்த உஷ்ணம் பரவலாக அமைந்திருக்கிறது என்பதை நாம் உணருவதில்லை. வாழ்க்கை ஒரு அற்புதம். அது நீடித்த அற்புதமாகவே இருப்பதாலும் அதற்கு விளக்கம் காண முடிவதில்லையாகையாலும் அதில் ஒரு புதுமை இருக்கிறது. கருவளர்ச்சி பற்றி ஸர் ஏவரார்டு ஹோம் என்பவர், 'அது வளர்ச்சி ஒரு முனையில்

மட்டும் தொடங்குவதில்லை, ஒரே சமயத்தில் இரண்டு அல்லது மூன்று முனைகளில் தொடங்குகிறது' என்று கூறுகிறார். முன்பு நடந்தவைகள் வாழ்க்கைக்கு ஞாபகம் இருப்பதில்லை. ஒன்றன்பின் ஒன்றாக நிகழும் சம்பவங்கள் ஞாபகமிருக்கலாம். ஆனால், ஒரே சமயத்தில் நிகழ்பவை உள்ளுணர்வின்றி ஆழ்ந்த காரணங்களால் எழுபவை களுக்குத் தங்களது போக்கு யாது என்று கூடத் தெரியாது. இதேமாதிரிதான் நம்முடைய நிலையும். தோற்றங்களும் விளைவுகளும் சமமான மதிப்புள்ளவை களாயிருந்தாலும், சில சமயம் மாறுபட்ட விளைவுகளுள்ள வையாயிருப்பதால் எதைப் பற்றியும் நமக்கு நிர்ணயமு மில்லை, ஒருமைப்பாடு மில்லை. ஆத்ம நியதியை அறிந்து கொள்ளுகையில் நாம் மதப் பற்றுள்ளவர்களாக இருக் கிறோம். இந்தக் கலை தரும் குறைபாடுகளைப் பொறுத்துக் கொண்டிருந்தால் மனிதனின் பல பகுதிகளும் ஒன்று பட்டு ஒரே நியதிக்கு உட்பட்டு இயங்கும். இந்த ஒரே நியதிதான் நமது கவனத்தை ஈர்த்து நமது நம்பிக்கைக்கு உறுதியளிக்கிறது. இதன் விளைவாக வாழ்வு என்பது நன்மையை எதிர்பார்க்கும் நிலையடைந்து மதமாக மாறு கிறது. ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட அற்ப விஷயங் களுக்குப்பின் இனிமையான பூரணத்துவம் துலங்குகிறது; இலட்சியம் நமக்குத் துணை நிற்கிறது. விண்ணுலகு விரியா மல் விள்ளாமல் தென்படுகிறது. ஞானோதயம் பெறும் முறையைமட்டும் தவறாமல் பின்பற்ற வேண்டும். ஒரு மேதாவியின் நூல்களைப் படிக்கையிலோ, தனிமையில் என் உயர் சிந்தனைகளில் திளைத்திருக்கையிலோ, தாகத் திற்குத் தண்ணீர் குடிப்பது குளிர் காயத் தீயை நாடுவது போன்ற திருப்திடையவதில்லை. வாழ்க்கையில் புதிய உன்னதமான பகுதியை நெருங்கிவிட்ட உணர்வு பெறு கிறேன். நான் நீடித்துப் படித்து, சிந்தித்துக் கொண்டி ருந்தால் இந்தப் பகுதி மேலும் என் கவனத்தை ஈர்க் கிறது. மேகம் இடை இடையே நீங்கி, மலைச் சாரல்களும் அதில் ஆடுமாடுகள் மேய்வதும், இடையர்கள் ஆடுவதும் பாடுவதும் தெரிகிறமாதிரி பேரின்பத்தை நான் அனுப விக்கிறேன். இந்த இன்பஉணர்வு என்னுடைய ஆன்ம ஞானத்தின் தொடக்கம்தான். இந்த உணர்வு மேலும் பெருகும். என்பதற்கு முதல் காட்சி ஒரு சூசகமே யாகும். இந்தக் காட்சிக்கு நான் காரணமல்ல. நான்

அங்கு வருவதற்கு முன்பே அது அங்கு கோலாகலமாக இருந்ததை இப்பொழுதுதான் நான் பார்க்கிறேன். நானுவது இந்தக் காட்சியை ஆக்கவாவது! இதைப் பார்த்துக் குழந்தை மாதிரி நான் கைத்தட்டிக் கூத்தாடு கிறேன். இந்த மகத்தான காட்சியைக் கண்டு நான் வியப்புறுகிறேன். பல காலமாக இருந்த இந்தக் காட்சிக்கு என் வணக்கம் கலந்த பக்தியைச் செலுத்து கிறேன். வனாந்தரத்தில் ஆலயத்தைக் கண்ட ஆனந்த உணர்வு பெறுகிறேன். இந்தக் காட்சியைக் கண்டவுடன் எதிர்காலத்தைப் பற்றியும் விரிந்த உறுதியான நம்பிக்கைபிறக்கிறது. புது அழகிஞல் பரவசமடைந்த நான் புது உள்ளத்துடிப்பு பெற்ற இன்பத்தை அனுபவிக்கிறேன். நான் மறைந்து, மேற்கே நான் கண்டு பிடித்த அமெரிக்க நாட்டில் மீண்டும் வந்து பிறக்க ஆசைப்படுகிறேன். இந்த எண்ணம் எனக்கு இன்ரே நேற்ரே தோன்றவில்லே. இந்த எண்ணம் எப்போது உதித்தது என்பதை யாரும் அறிந்து கூற முடியாது. வாழ்வு என்பது மஞே நிலேயின் பல்வேறு மாறுதல்கள் என்று விவரித்தேன். ஆஞல், நம்மில் மாருது நிலேத்திருக்கும் அம்சங்களும் இருக்கின்றன என்பதையும் குறிப்பிடவேண்டும். ஒவ்வொரு மனித னிடமும் உள்ள உள்ளுணர்வு நழுவும் தன்மை வாய்ந்தது. அது ஒரு சமயம் உலகின் ஆதிகர்த்தாவிடம் ஒன்றி யிருக்கும், மற்ரெரு சமயம் உடலுணர்ச்சிகளின் வழியே செல்லும். எந்த உணர்வின் விரைவாக நீ செயலாற்று கிருயோ அதைப் பொருத்திருக்கிறது அதனுடைய உயர்வும் தாழ்வும். நாம் கவனிக்கவேண்டிய விஷயம் நாம் எதைச் செய்தோம் அல்லது செய்யாமலிருந்தோம் என்ப தல்ல. யார் கட்டளேப்படி செயல் புரிந்தோம் அல்லது வாளாயிருந்தோம் என்பதுதான்.

இந்த எல்லேயில்லாத சக்திக்கு பார்ச்சூன், மினர்வா, மியூஸ், ஹோலிகோஸ்ட் எனும் விசித்திரமான பெயர்களேச் சூட்டுகிருேம். ஆஞல், இவைகளெல்லாம் அவ்வளவு பொருத்தமான பெயர்களல்ல. இந்த ஆதிகர்த்தாவுக்கு பெயர் காணமுடியாது. திகைப்படைந்த அறிவு அதனிடம் பணிந்து வணங்கவேண்டும். அதற்கு என்ன பெயர் சூட்ட லாம் என்பதை அறிய மேதாவிகள் தேல்ஸுக்கு தண்ணீர் என்றும், அனுக்ஸிமினஸுக்கு காற்று என்றும், அனக்ஸ

கோரஸாக்கு சிந்தனை என்றும், ஜொராஸ்தருக்கு தீ என்றும் ஏசுநாதருக்கும் ஏனைய தற்கால மேதைகளுக்கும் அன்பு என்றும் பெயர் சூட்டியுள்ளனர். இந்த உவமைகள் ஒவ்வொன்றும் ஒரு மதத்திற்கு அடிப்படையாகத் துலங்குகிறது. சீன மேதை மென்ஷியஸ் இவ்விஷயத்தை விளக்க முயன்றிருக்கிறார்: "மொழியில் எனக்குத் தேர்ந்த ஞானம் உண்டு; என்னுடைய பொங்கிவரும் சுறு சுறுப்பை நான் நன்கு பேணி வளர்க்கிறேன்." மென்ஷியஸின் இந்தக் கூற்றைப் பற்றி அவருடைய நண்பர் 'பொங்கி வரும் சுறு சுறுப்பு' என்றால் என்ன எனக்கு விளங்கவில்லையே என்று கேட்டார். அதற்கு மென்ஷியஸ் தந்த விளக்கமாவது; "அதை விளக்குவது சற்று கடினம்தான். இந்தச் சுறுசுறுப்பு அமிதமானது. அது யாருக்கும் பணியாது. அதைத் தடை செய்யாமல் பேணி வளர்த்தால் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் உள்ள இடத்தைக் கைப்பற்றுவதற்கு உதவும்." இந்தச் சுறு சுறுப்பு நீதிக்கும் அறிவுக்கும் ஒத்து உதவி புரியும். அதனால் வறுமை நீங்கும் இந்தப் பொதுப்படையான வ்வரணையை திட்டப்படுத்திக் கூறவேண்டுமானால் அதை இருத்தல் (*Being*) என்று குறிப்பிடலாம். இதுவும் பூரண திருப்தியளிக்காது; நமது சக்திக்கெட்டிய மட்டில் அந்த சக்தியைப் பற்றிக் கூறியதேயாகும். நம்முடைய அறிவு, விவரணை மூலம் நமது பிரயாணம் தடைப்படவில்லை. நாம் குட்டிச் சுவரில் மூட்டிக்கொண்டு அப்பால் செல்லமுடியாத நிலையில் இல்லை. பெரிய கடல்கள் நம் முன் தோன்றுகின்றன. அவைகளைக் கடந்தே நாம் செல்லவேண்டும். நமது வாழ்க்கையில் நிகழ் காலத்தைப் பற்றிக் கவலையில்லை. எதிர் காலத்தைப் பற்றியே நாம் சிந்திக்கவேண்டும். வாழ்க்கையில் பெரும்பகுதி நமது சக்தியை விளம்பரப் படுத்துவதிலேயே செலவாகிறது. நம்மை நாம் குறைவாக மதிப்பட்டுக் கொள்ளலாகாது என்று போதிக்கப்படுகிறோம். நாம் சாமான்யமானவர்களல்ல. சிறப்பு வாய்ந்தவர்கள் எனப் புகழப்படுகிறோம். நமது பெருமை நமது செயலைப் பொருத்ததல்ல நமது மனோபாவத்தின் போக்கைப் பொருத்தது. நாம் விதியை நம்பவேண்டுமேயொழிய விதி விலக்கையல்ல. இந்த நம்பிக்கை மூலம் பெரியோர்களுக்கும் அற்பர்களுக்கும் உள்ள மாறுபாடுகளை அறிந்து கொள்கிறோம். உணர்ச்சிகளின் போக்குப்படி நடப்பது

என்பதை ஒப்புக்கொள்வதிலிருந்து ஆன்மாவின் அழிவற்ற தன்மையைப் பற்றி நமது கருத்து என்ன என்பது முக்கியமல்ல, அந்தத் தன்மையில் நம்பிக்கை கொள்வதற்கான ஆற்றல் நமக்கு இருக்கிறதா என்பதே முக்கியமானது. உலக வரலாற்றில் இந்த ஆற்றலின் விளைவுதான் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. இந்த ஆற்றல்தான் நேரடியாக வேலை செய்கிறது என்று கூறுவது பொருத்தமாயிருக்குமா? ஆன்மா ஆதாரவற்ற அனுதையல்ல, அதற்கு உலக சாதனங்களின் உதவி தேவையில்லை. அதற்கு மிகுதியான சக்தி இருக்கிறது. அதற்கு உலக விவகாரங்களை உருவகப்படுத்தவதற்கு முடியும் என யாவரும் அறிந்துகொள்ளலாம். அதற்குப் பிறருடைய விளக்கம் தேவையில்லை. நான் செயல் புரியாமலே என் சக்தியை அறிய முடியும். நான் இல்லாத இடங்களில்கூட என்னை அறிய முடியும். ஆகையால், நீதிமான்கள் தங்களைப் பற்றிய புகழுரைகளில் திருப்தியடைகிறார்கள். அவர்கள் தங்களைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய புதிய செயல்களே அவர்கள் பற்றிய விளக்கம் தருகின்றன. பேச்சின்றியே நமது கருத்துக்களைப் பரப்பலாம் என அவர்கள் நம்புகின்றனர். நம்முடைய நற்செயல்கள் நம்முடைய நண்பர்களை மேம்படுத்துகின்றன எனவும் நம்புகின்றனர். செயலின் விளைவுக்கு எல்லை கிடையாது. என்னை எதிர்பார்த்த இடத்திற்கு நான் போய்ச் சேர முடியவில்லையே என்று நான் ஏன் கவலைப்படவேண்டும்? நான் ஒரு கூட்டத்திற்குச் செல்லமுடியவில்லை என்றால் அங்கு செல்லுவதனால் ஏற்படுவதைவிட நான் இருந்த இடத்திலேயே இருப்பதனால் ஞானப் பெருக்கத்திற்கும், நட்புரிமை வளர்ச்சிக்கும் அதிகமான பணி புரியலாம். என்னுடைய சக்தி எங்கும் நிறைந்து பணி புரிகிறது. இவ்வாறுதான் நமது மகத்தான லட்சியம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. இலட்சியம் என்றும் பின் தங்கியதில்லை. நமக்கு ஏற்படும் அனுபவம் என்றும் நமக்கு பூரண திருப்தியளித்ததில்லை. ஒரு நண்பனை அதைவிடச் சிறப்பான பணிக்கு வழி காட்டுகிறது. நாம் செய்யவேண்டியது மேலே மேலே போய்க்கொண்டிருப்பதுதான். சுதந்திர ஆர்வம் பெருகுகையில் புது வாழ்வும் புதிய கடமையும் காத்திருக்கும் காட்சியை நாம் காண்கிறோம். உங்களைச் சுற்றியுள்ளவர்கள்

மனங்களிலும் தற்போதுள்ளதைவிடச் சிறப்பான வாழ்க்கை வழிக்கான திட்டம் உதயமாகிக்கொண்டிருக்கிறது. இந்தப் புதுத் திட்டத்தில் சமூகத்தின் சந்தேகங்களும் நம்பிக்கைகளும் இடம் பெற்றிருக்கும். பல்வேறு அவநம்பிக்கைகளிலிருந்து ஒரு ஒழுங்கான கோட்பாடு தோன்றலாம். சந்தேகங்களும் ஒரு ஒழுங்குக்குப் புறம்பானதல்ல. அவை ஒரு நல்ல சித்தாந்தத்திற்கு எல்லைக் கோடுகள். புதிய சிந்தாந்தம் பழைய நம்பிக்கைகளுடன் இவைகளையும் அறிந்து தனது வழி வகைகளை வகுக்க வேண்டும்.

உலகில் தோன்றிவிட்டோம் என்பது வருந்தத்தக்க விஷயம்தான். ஆனால் இந்த உண்மையைக் காலம் கடந்தே உணர்ந்திருக்கிறோம். இதைத்தான் 'மனிதனின் வீழ்ச்சி' என்று கூறுகின்றனர். ஆதி காலத்திலிருந்தே நமது உடலமைப்பு சாதனங்களையே நாம் நம்புவதில்லை. நாம் எதையும் நேராகப் பார்ப்பதில்லை, எதன் மூலமாகவாவதுதான் பார்க்கிறோம் என்பதை அறிந்துகொண்டு விட்டோம். நாம் பார்ப்பதற்கான சாதனங்களின் குறைபாடுகளால் ஏற்பட்ட தவறுதல்களைக் கணக்கிட முடியாது, பார்வைச் சாதனங்களுக்கு ஒருவேளை ஆக்க சக்தி இருக்கலாம், அல்லது நாம் பார்த்ததாக நினைத்த பொருள்கள் இல்லாமலிருக்கலாம். ஒரு சமயம் நாம் கண்ட காட்சிகளிலேயே ஒன்றிப் போயிருந்தோம். ஆனால், இப்பொழுதோ இந்தப் பார்க்கும் சக்தியே நம்மை முழுதும் ஆட்கொண்டுவிட்டது. இயற்கை, கலை, மனிதர்கள், எழுத்துக்கள், மதங்கள், பொருள்கள் யாவும் நம் முன் பவனி வருகின்றன. நமது சக்தியினால் தோன்றும் எண்ணங்களில் ஒன்றே கடவுள். இயற்கையும், இலக்கியமும் நமது அறிவினால் உணரத்தக்கவையே. ஒவ்வொரு நல்ல காரியமும் தீயகாரியமும் நம்முடைய நிழல்கள். தெருக்களில் நடக்கையில் கர்வமுள்ளவர்கள் மானபங்கமடையும் சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆடம்பரமானவன் தனது கௌரவத்திற்கேற்றபடி தனது ஏவலாளர்களுக்கு உடையணிவித்து தனது விருந்தாளிகளுக்கு உபசாரம் செய்வதுபோல் தீய உள்ளம் படைத்தவர்களின் கோபம் குமிழிகளாகக் கிளம்பி தெருக்களில் நடமாடும் ஆண் பெண்களும், கடையில் வேலையாட்களுமாகத் தோன்றி நம்மை அவமதிக்கிறார்கள்.

இம்மாதிரியே தான் நமது வணக்கத்திற்குரிய விஷயங்களும். நமது கண்தான் தொடுவானத்தை நமக்கு அறிவிக்கிறது என்பதை நாம் மறந்துவிடுகிறோம். அம்மாதிரியே தான் நமது மனக் கண்ணும் ஒருவனை மகானாகவோ, வீரனாகவோ மதிப்பிடத் தூண்டுகிறது. ஏசுநாதர் எனும் 'தெய்விக மனிதனை' நல்லவர் என்று நமக்கு உணர்த்துவதும் இந்த மனக் கண்தான். ஒருபுறம் நமது அன்பும் மற்றொரு புறம் பிழைகளை வற்புறுத்தாத பாங்கும் அகண்டத்தின் மத்தியில் அவனை நிறுத்தி வழிபடச் செய்கின்றன. ஆனால், நிடித்த பக்திக்கும் வெறுப்பிற்கும் ஒரு எல்லை உண்டு. அகண்டமான சுயநலம் அழியும் தன்மை வாய்ந்த நேசபாவத்தை வென்றுவிடுகிறது. ஆன்மீக உலகில் தாம்பத்தியம் என்பது சாத்தியமில்லை. இதற்குக் காரணம் அன்பு பூணுபவர்களுக்கும் அன்புக்கு பாத்திர மானவர்களுக்கும் ஏற்றத் தாழ்வு இருப்பது தான். அன்பு பூணுபவன் தெய்வாம்சத்திற்குரியவன். இதனால் அவன் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்து கொண்டே போகிறான். இப்படிபட்டவன் உள்ள இடங்களில் இவன் சக்தி பிறரைக் கவர்கிறது. அறிவினால் மட்டும் அன்புக்குப் பாத்திரமானவன் அன்பு பூணுபவனிடம் துலங்கும் தெய்வாம்சத்தை உணர்ந்துவிட முடியாது. படத்திற்கும் படத்தில் தீட்டப்பட்ட உருவத்தின் அசலுக்குமுள்ள வித்தியாசம் உனக்கும் எனக்கும் இருக்கிறது. தனிப்பட்டவரின் அனுதாபம் ஏற்றக் குறை உள்ளது. இரண்டு மனிதர்கள் இரண்டு கிரகங்கள் மாதிரி. இரண்டு கிரகங்கள் ஒன்றுக்கொன்று குறிப்பிட்ட ஒரு முறையில்தான் தொடர்பு கொள்ள முடியும். அப்படித் தொடர்பு கொண்டால் அந்த இடத்தைத் தவிர கிரகங்களின் பிற பகுதிகள் அசையாத் தன்மை பெற்றிருக்கும். பிற பகுதி களும் தொடர்பு கொள்ளும் காலம் வரலாம். இந்தத் தொடர்பு நிடித்திருக்கும் வரையில் தொடர்பற்ற பிற பகுதிகளுக்குத் தொடர்பு கொள்ளும் ஊக்கம் அதிகமாயிருக்கும்.

வாழ்க்கையின் உருவகத்தைக் காணலாம். ஆனால், அதைக் குறைக்கவோ பெருக்கவோ முடியாது. அதன் ஒருமைப் பாட்டைக் குலைத்தால் குழப்பம்தான் ஏற்படும். ஆன்மா என்பது ஒன்றேயன்றி இரட்டைப் பிறவியல்ல. ஆன்மா காலக்கிரமத்தில் குழந்தையாக உருப்பெற்றாலும்

அது மற்றொரு குழந்தை தன்னுடன் எழ இடம் தராது. அவ்வளவு சக்தி வாய்ந்தது அது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு செயலும் அதன் தெய்விகத் தன்மையை வெட்ட வெளிச்சமாகக் காட்டுகிறது. நம்மிடம் நம்பிக்கை கொண்டிருப்பதுபோல் பிறரை நாம் நம்புவதில்லை. எல்லாவித பாக்கியங்களும் நமக்குக் கிட்ட வேண்டும் என்றே விரும்புகிறோம். பிறர் செயலில் எதை நாம் பாவம் எனக் கருதுகிறோமோ அதை நாம் செய்தால் அதைச் சோதனை என்கிறோம். குற்றம் செய்வதைப்பற்றி நாம் நினைப்பதுபோல் லேசாகப் பேசுவதில்லை என்பதிலிருந்து நம்மிடம் நாம் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்பதைக் காணலாம். ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பும் சந்தர்ப்பத்தைப் பிறருக்கு அளிக்க விரும்புவதில்லை. ஒரு செய்லின் தன்மைக்கும் அதன் விளைவுக்கும் மாறுபாடு இருக்கிறது. கொலையாளி கொலைத் தொழிலைப் பற்றி, கவிஞர்களும் கதாசிரியர்களும் நினைப்பதுபோல் அவ்வளவு கொடுமையாகக் கருதுவதில்லை. சாமான்ய சம்பவங்களைப் போலவே கொலையைப் பற்றி அவன் நினைக்கிறான். அதுபற்றி அவன் பதட்டமடைவதில்லை. கொலை பற்றிச் சுலபமாக சிந்தனை செய்யலாம். ஆனால், அதன் விளைவுதான் பயங்கரமாகவும் குழப்பம் விளைவிப்பதாகவும் இருக்கிறது. முக்கியமாகக் காதலால் விளையும் குற்றங்கள் குற்றம் புரிந்தவன் மனத்துக்கு நியாயமாகத் தோன்றுகிறது. ஆனால், குற்றத்தின் விளைவு சமுகத்தையே சீர்குலைப்பதாயிருக்கிறது. குற்றம் செய்வதால், தான் தன் நிலையிலிருந்து நழுவி விடுவான் என்றோ அல்லது தான் செய்த குற்றம் இழிவானது என்றோ குற்றவாளி நம்புவதில்லை. ஏனெனில் நம் அறிவு நம் மதிப்பிடும் தன்மையை திட்டப் படுத்துகிறது. ஏனெனில் அறிவுக்கு எதுவும் குற்றமாகப் படுவதில்லை. "அது குற்றத்தைவிடக் கேவலமானது. அது ஒரு தவறு" என்று நெப்போலியன் ஒரு சமயம் கூறியது அவன் அறிவின் குரலாகும். அறிவுக்கு உலகம் என்பது கணித சாஸ்திரத்தில் ஒரு புதிர் மாதிரி, அதற்குப் புகழ் இகழ் என்பது போன்ற சாதாரண உணர்ச்சிகள் கிடையாது திருட்டு என்பது நிலைமையையும் திருடனையும் பொருத்தது. கொள்கை அளவில் பார்த்தால் இவ்வுலகில் யார்தான் திருடுவதில்லை? பாபத்தைக் காண்கையில் மகான்கள் துயர் உறுகிறார்கள். இந்த

உணர்ச்சி அவர்களுடைய மனச் சாட்சியின் சாயலே ஒழிவே அறிவின் இயக்கமல்ல. அறிவின் நோக்கில் பாபம் என்பது அதனதன் அளவில் குறைந்திருப்பதே. மனச்சாட்சியிலிருந்து பார்த்தால் அது தீயது. அறிவு அதை நிழல் அல்லது ஒளியின்மை, சாரமில்லாதது என்கிறது. ஆனால், மனச்சாட்சி அதை சாரம் என்கிற தாக உணர்ந்து அது தீயது, ஆனால் அவசியமானது எனக் கருதுகிறது.

இவ்வாறாக பிரபஞ்சம் நமது பார்வைக் கேற்ற தோற்றமளிக்கிறது. நாம் பார்க்கும் பொருளும் நாமும் ஒன்றிவிடுகிறோம். என் நிலையிலிருந்து பிறவற்றை நான் பார்க்கிறேன். நாம் என்ன பேசினாலும் நம் மனதில் உள்ளதைத்தான் வெளியிடுகிறோம். ஹெர்மிஸ், காட்மஸ், கொலம்பஸ், நியூட்டன், போனபார்ட்டி ஆகியோர் தங்கள் அறிவைக் கொண்டு உயர்ந்தவர்கள். ஒரு மகானைப் பார்க்கையில் அவருடன் என்ன பேசுவதென்று கவலை யுறாமல் அவரை, பூமிசாஸ்திர விற்பன்னர் பூகற்பத்துள் இருக்கும் புதையலை நமக்குக் காட்டவந்தவர்களாகப் பாவிப்போம். மனோவலிமை பெற்ற ஒருவனுடைய செயலுள் ஒரு பகுதி அவனது நோக்கத்தை கணக்கிட்டுக் காட்டும் பூதக் கண்ணாடி என மதிப்போமாக! அவனுடைய ஆன்மிக உணர்வு பூர்ணத்துவமடைவதற்குள் அவன் செயலின் பிற பகுதிகளும் மலர்ந்து சிறப்புற்று விளங்கும். பூனைகள் தங்களது வாலையே துரத்திச் செல்லும் அழகிய காட்சிகளைப் பார்த்திருக்கிறீர்களா? பூனையின் கண்கொண்டு அந்தக் காட்சியைப் பார்ப்பீர் களானால் நூறுவிதமான நாடகப் பாத்திரங்கள் சோக, ஹாஸ்ய காட்சிகளை நடித்துக் காட்டுவது போலிருக்கும். ஆனால், பூனை அதனுடைய வாலுடன் விளையாடும் காட்சி தான் அது. இந்தக் காட்சியும் நாது ஆட்டங்கள், சிரிப் பொலிகள் அடங்கிய பின் அது தனிக்காட்சி என்பதை அறிவோம். அதாவது பார்ப்பவரும் பார்க்கும் பொருளும் தான். இவ்விரண்டும் சுற்றிச் சுற்றி வருவதற்குத்தான் இவ்வளவு முயற்சிகளும் ஆர்ப்பாட்டங்களும். இந்தக் காட்சி கெப்ளரும் அவர் கண்ட உலகுமாயிருந்தாலென்ன, கொலம்பஸும் அவர் கண்ட அமெரிக்காவுமா யிருந்தாலென்ன, ஒரு மனிதனும் அவன் படிக்கும் புத்தகமுமா யிருந்தாலென்ன, பூனையும், அதன் விளையாட்டுக்கான

அதன் வாலாயிருந்தால் தானென்ன?

கவிதா தேவதைகள், அன்பு பூணுபவர்கள், மதப் பிரசாரகர்கள் இந்த விளைவுகளை வெறுக்கின்றனர். தனது சோதனைக் கட்டத்தில் கண்ட உண்மைகளை வெளியே பறை சாற்றும் ரஸாயன சாஸ்திரியைத் தண்டிக்க இவர்கள் வகை தேடுவார்கள். நமது சொந்த விருப்பு வெறுப்பு, மனப்போக்கு அடிப்படையில் பிற விஷயங்களை நோக்குவது பற்றி என்ன சொல்லுவது? என்னதான் நாம் வாதித்தாலும் ஆண்டவன்தான் இந்தக் கரடு முரடான பூமிக்குடையவர். இந்த உண்மையை அறிந்தவர்கள் தன்னம்பிக்கையுடன் ஒழுக்கமாக வாழ வழி காட்டுகிறது. இந்தத் தன்னம்பிக்கையில் உறுதியாக நின்று தீவிரமாக ஆன்ம பரிசோதனை செய்து கொண்டு வந்தால் வாழ்க்கையில் உறுதியுடன் பணியாற்றலாம். உண்மையில் கவர்ச்சியில்லை, அதைக் கடைப்பிடிப்பதில் கஷ்டம் உண்டு. ஆனால், உண்மையின் பக்தன் அழுது சாக வேண்டும் என்று அர்த்தமில்லை. அவன் மனம் பதட்டமடைந்து சங்கடப்பட வேண்டிய அவசியமில்லை. உண்மையின் பக்தன் பிறர் வேலையைத் தான் செய்ய முற்படான், மற்றவர்கள் கண்ட உண்மைகளைத் தவறு என்று கூறமாட்டான். பிறர் கண்ட உண்மைகளுக்கும் தான் கண்டவைகளுக்குமுள்ள மாறுபாட்டை உணர்ந்து கொள்பவனே அறிவாளி. பிறர் கண்ட உண்மைகளை நான் கையாண்டு முடிவு காண முடியாது என்பதை நான் அறிந்துகொண்டு விட்டேன். ஆனால், நான் கண்ட உண்மைகளின் முடிவு காணும் ரகஸ்யத்தை நான் தெரிந்து கொண்டு விட்டதால் பிறரும் தங்களது சோதனைகளின் முடிவு காணும் ரகஸ்யத்தை தெரிந்துகொள்ள முடியும் என நம்புகிறேன். அனுதாபமுள்ள ஒருவன் தர்ம சங்கடமான நிலையிலிருக்கிறான். பல பேர் நீரில் மூழ்கும் தருவாயிலிருக்கையில் அவர்களிடையே நீந்தத் தெரிந்த ஒருவன் தனது கையை அவர்கள் பக்கம் நீட்டினாலும் அவர்கள் இவனை இழுத்து மூழ்கடித்து விடுவார்கள். இந்த நீந்தத் தெரிந்தவன் நிலையை ஒத்ததுதான் அனுதாபியின் நிலையும். எல்லோரும் தீய செயல்களின் விளைவுகளுக்குத் தப்ப விரும்புகின்றனரே ஒழிய தீயசெயலிலிருந்தே விடுபட விரும்புவதில்லை. இம்மாதிரி மனிதர்களிடம் தர்ம சிந்தனையை பாராட்டுவது பயனற்றதாகும். தேர்ந்த

வைத்தியனுயிருந்தால் இவர்களை நோக்கி "முதலில் தீயப் பழக்கத்திலிருந்து மீண்டு வாருங்கள். உங்களுக்கு பிறகு வைத்தியம் செய்யலாம்" என்று யோசனை கூறுவான்.

பேச்சு மலிந்த இந்த அமெரிக்க நாட்டில் நமது நல்ல சுபாவத்தினுலும், நம்மைச் சுற்றி எல்லோருடைய பேச்சுக்களையும் நான் கேட்பதாலும் நாம் மோசமான நிலைக்கு வந்துவிட்டோம். இந்த சுபாவம் நம்மைப் பெரிதும் பயனற்றவர்களாகச் செய்து விடுகிறது. ஒரு மனிதன் எப்போதும் நேர்பாதையில் செல்லவேண்டும். இந்தப் புறமோ அந்தப் புறமோ திரும்பலாகாது. மற்றவர்களுடைய அற்பத்தனத்திற்கு இரையாகாமல் மீள வேண்டுமானுல் வேறு எதிலோ கவனம் இருப்பதுபோல் நடந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பிறர் தங்களது அற்பத்தனத்தை அறிந்துகொள்வார்கள். இப்படிப் பாவனை செய்வது அவர்களுடைய அற்பமான தேவைகளுக்குத் தெய்விகமான பதில் போன்றதாகும். பிளாக்ஸ்மன் என்னும் ஓவியர் யூமனதெஸ் அல்லது ஏகிலஸ் என்னும் கிரேக்க தேவதையின் படத்தை வரைந்திருக்கிருர். அதில் ஆரெஸ்டஸ் அப்பாலோவை இறைஞ்சுகிருர். வாயிற்படியில் கொடிய தேவதைகள் படுத்துறங்குகின்றனர். அந்தப் படத்தில் கடவுளின் திருமுகத்தில் துயரம், கருணை, இரண்டின் சாயையும் படர்ந்திருக்கிறது. அதே சமயத்தில் முகத்தில் நிம்மதியும், விண்ணுக்கும் மண்ணுக்குமுள்ள நேர்மாருன நிலையும் துலங்குகின்றன. கடவுள் அழியாத் தன்மை வாய்ந்தவர், அழகின் அவதாரம். அவர் காலடியில் கிடக்கும் மனிதன், அவர் பூமிக்கு வந்து அதன் சச்சரவுகளையும் சங்கடங்களையும் தீர்த்து வைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிருன். ஆனல், கடவுளின் இயல்பு பூமிக்குள் நுழையாது. இந்த மாறுபாட்டை அப்படத்தில் படுத்திருக்கும் யூமனடீஸின் உருவம் காட்டுகிறது. கடவுளிடம் தன் தீராக் கடமை புரிய வேண்டிய சக்தி துள்ளுகிறது.

மாயை, மனப்பாங்கு, தொடர்பு, மேல்பூச்சு, ஆச்சரியம், அகநோக்கு முதலியன வெல்லாம் உண்மை மனங்கொண்டு பார்த்தால்—காலமெனும் நதியில் ஓடும் நாலிழைகள், வாழ்க்கையை இயக்கும் சக்திகள், அவைகளை நான் ஒழுங்குபடுத்த முடியாது. ஆனல், இவைகள் எல்லாம்

இதே வரிசைக் கிரமத்திலில்லா விட்டாலும், நான் கண்ட உண்மைகளே. என் விதாரணை பூரணத்துவமானது. இனிக் கூறுவதற்கொன்றுமில்லை என்றுகூட நான் கருதவில்லை. நானே ஒரு சிறுபகுதி, நான் கண்டது இந்தப் பகுதியிலும் ஒரு அம்சம். நான் சிறப்பான விதிகள் ஒன்றிரண்டை வகுக்கலாம். ஆனால், அவைகளைச் சித்தாந்தமாக நிர்ணயித்து வழங்க இன்னும் எனக்கு நிரம்ப அனுபவம் வேண்டும். அழியாத்தன்மை பெற்றவைகளைப் பற்றி எனக்குத் தெரிந்ததை எனக்குக் கிடைத்த காலத்தில் உளறிக் கொட்டுகிறேன். நான் அநேக அழகிய சித்திரங்களைப் பார்த்திருக்கிறேன், பயனும் பெற்றிருக்கிறேன், நான் வாழ்ந்தமட்டில் இன்பமாக வாழ்ந்திருக்கிறேன். பதினான்காவது வயதில் கற்றறியாத இளம் சிறுவனாயிருந்த நிலையில் நான் இன்றில்லை. ஏழு வருஷத்திற்கு முன்இருந்த நிலையில் கூட இன்றில்லை. இந்த வாழ்வின் பயன் என்ன என்று யாராவது கேட்கலாம். என்னைப் பொருத்தமட்டில் பயன் கிட்டியிருக்கிறது. அந்தப் பயன் என்னவெனில் எனது சிந்தனைகள், யோசனைகள், உண்மை ஆராய்ச்சிகளிலிருந்து தீய விளைவுகளை எதிர்பார்க்கக் கூடாது என்பது தான். என் சிந்தனைகளுக்கோ செயல்களுக்கோ உடனடியாக, குறிப்பிட்ட ஓரிடத்தில் நற்பயன் ஏற்படவேண்டும் என்று எதிர்பார்க்கலாகாது: ஆதி காரணம் போலவே விளைவும் ஆழ்ந்தது, உலகத்தன்மை வாய்ந்தது. அது மனிதர் ஆயுள் எனும் காலவரையறை கடந்து பயனளிக்கலாம். எனக்குத் தெரிந்தது நற்கருத்துக்களை கிரகித்துக் கொள்வதுதான். நான் இருக்கிறேன், என்னிடம் இப்பண்புகள் இருக்கின்றன. ஆனால், நான் வேறு எதையாவது பிற உலகிலிருந்து பெற்றதாக நினைக்கும் பொழுது அது மாயையாகப் போய்விடுகிறது. அதிருஷ்ட தேவதையை அதிசயிக்கத்தக்க முறையில் வணங்குகிறேன். எனது கிரகிக்கும் சக்தி மகத்தானதாகையால் ஏதாவது ஒன்று எனக்கு அதிகப்படியாகக் கிடைத்து விட்டாலும் நான் சங்கடப் படுவதில்லை, பேரறிவை நோக்கி நான் கூறுவது "அலை தொடங்கினால் இலட்சோபலட்சம் தானாகக் குவியும்" என்பதுதான். எனக்குப் புதிதாக ஏதாவது கிடைத்தால் அதை நன்கு பயன் படுத்துவதற்காக நான் கவலைப்பட்டு உடம்பை வாட்டிக் கொள்வதில்லை. நான் இறந்துவிட்டால் அதை

யார் அனுபவிக்கப் போகிறார்கள் என நினைத்து ஆறுதல் பெறுவேன். ஆதியிலேயே தகுதிக்கு மேற்பட்ட பயன் கிட்டியதால் அதே நிலை பின்னரும் நீடித்து வருகிறது. இந்தத் தகுதியே எனக்கு இயல்பானது என்று நான் கருதுகிறேன்.

எதற்கும் கணிசமான பயன் அல்லது விளைவு வேண்டும் எனத் துடிப்பது மத துரோகத்திற்கொப்பானது. உண்மையிலேயே இந்த மனப்பான்மையை நான் விரும்பவில்லை, வாழ்க்கை எனக்குக் கற்பனைத் தோற்ற மளிக்கிறது. கடுமையான உழைப்பும் கற்பனைபோன்றே காட்சியளிக்கிறது. மென்மையான கனவுக்கும் பயங்கரக் கனவுக்கும் உள்ள மாறுபாடுதான் வாழ்க்கைக்கும் உழைப்புக்கும் இருக்கிறது. அறிவுமிக்க வாழ்க்கையை ஏளனம் செய்து செயல் திறனை மக்கள் பாராட்டுகின்றனர். எனக்கு ஞானம் கிடைத்தால் போதும். ஆனால், அதற்கான அறிவுத்திறன் வேண்டும். அறிவுமட்டுக் இருந்தால் பேரானந்த மடைவேன், எனக்கு வேறெதுவும் வேண்டாம். ஒரு கடுகளவு தெரிந்துகொள்ள இந்த உலகத்தையே வேண்டுமானாலும் பணயம் வைக்கலாம், அடராஸ்டியா வகுத்த நல்லுரை எனக்கு எப்பொழுதும் ஞாபகத்திற்கு வருகிறது " ஏதாவது ஒரு உண்மையை அறிந்த ஆன்மா வுக்கு மற்றுமோர் உண்மையை அறியும் வரையில் எவ்வித ஆபத்தும் இல்லை."

நகரங்களிலும் வயற்காடுகளிலும் நான் காணும் உலக மல்ல என் மனத்திலிருப்பது. இந்த மாறுபாட்டை நான் என்றென்றும் மறக்கமாட்டேன். இந்த மாறுபாட்டின் அடிப்படைத் தத்துவத்தின் மகத்துவத்தை ஒரு நாள் கட்டாயம் நான் அறிவேன். மனதிலிருப்பதை நேரிடையாகக் காண முயற்சிப்பதால் பயன் ஏதும் கிட்டியதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தத் துறையில் பலர் முயற்சி செய்து பார்த்தவர்கள் உலகத்தோரின் நகைப்புக்குள்ளானார்கள். இவர்கள் ஜனநாயக கோட்பாடுகளைப் பின்பற்றி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர், வெறுப்பைக் கிளப்புகின்றனர், இருப்பவைகளை மறுக்கின்றனர். இதுமட்டுமல்ல, உலகத்திலே வெற்றிக்கு தாங்கள் வைத்திருக்கும் அளவுகோல்படி வெற்றி கண்டவர்கள் ஒருவரும் இல்லை. நீ கனவு காணும் உலகை ஏன் சமைக்கவில்லை எனும் கேள்விக்கு மேற்கூறியதுதான்

என்னுடைய பதில். ஆனால் நான் யாரையும் குறைகூற விரும்பவில்லை. சரியான முறையில் முயற்சித்தால் நிச்சயம் வெற்றி காணலாம். பொறுமை, எல்லையற்ற பொறுமை இருந்தால் கடைசியில் வெற்றி பெறுவது நிச்சயம். ஆனால் காலம் நம்மை ஏமாற்றிவிடாமல் விழிப்புடனிருக்க வேண்டும். உண்ணவோ, உறங்கவோ, நூறு டாலர் சம்பாதிக்கவோ காலம் ஆகும். ஆனால் வாழ்க்கைக்கு வழிகாட்டும் எண்ணம் எழ கணப்பொழுதுகூட ஆகாது. நமது தோட்டத்தை ஒழுங்குபடுத்துகிறோம், சாப்பிடுகிறோம், வீட்டு விஷயமாக மனையாளுடன் பேசுகிறோம். இதெல்லாம் அற்ப விஷயங்கள், அடுத்த வாரம் மறந்து விடக்கூடும். ஆனால், ஒவ்வொருவனும் நாடும் தனிமையில் அவன் அறிவு தெளிவடைகிறது. உண்மைகளை சுயரூபத்தில் அறிகிறான். இந்த அறிவும் உணர்வும் அவன் இவ்வுலகை விட்டுப் புது உலகுக்குச் சென்றாலும் உறுதுணையாயிருக்கும். பிறர் இகழ்கிறார்களே எனக் கவலையுற வேண்டாம், தோல்வியுற்றாலும் மனம் தளர வேண்டாம். பண்பட்ட உள்ளம் படைத்தவனே! மீண்டும் எழுந்திரு! நீதிக்கு என்றும் வெற்றியுண்டு. மேதை படைத்தவனுக்குச் செயல் ஆற்றும் திறன் கிடைக்கும் அதிசயத்தைக் காணவே உலகம் படைக்கப்பட்டது.

—1844-ம் ஆண்டில் எழுதியது

ரால்ப் வால்டோ எமர்சன்

Ralph Waldo Emerson

(1803–1882)

அவர் ஆசிரியர், கவி, தத்துவஞானி ; பாஸ்டன் நகரில் பிறந்தவர் : மூதாதையர் பல தலைமுறையாக மாதாகோயிலில் தொண்டாற்றி வந்தவர்கள். எமர்சனின் தகப்பனரான வில்லியம் எமர்சன் எனும் பாதிரியார் அமெரிக்காவில் நடைபெற்ற 'கடவுள் ஒருவர்' என்ற இயக்கத்தின் ஆரம்பக் காலத் தலைவர்களில் ஒருவராவார்– அவருடைய தாய் வழியில் வந்த மூதாதையர்களில் ஒருவ ரான பீட்டர் பல்க்கிலி எனும் பாதிரியார் மஸ்ஸாஷுட்ஸ் ஜில்லாவிலுள்ள கங்கார்ட் எனும் நகரத்தை ஸ்தாபித்தவ ராவார். அந்த நகரில்தான் எமர்சன் இறுதியில் நிரந்தரமாக தங்கியது. மத விஷயங்களையும் தத்துவங் களையும் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் எமர்சன் கிரேக்க, ஹிந்து, ஜர்மானிய இங்கிலீஷ் கொள்கைகளையும் தத்துவங்களையும் விரிவாகக் கற்றுணர்ந்த தன்மையினல் 'பரிசுத்தப் படுத்தும்' கிளர்ச்சியை வெற்றிகரமாக நடத்த முடிந்தது. வாழ் நாள்முழுவதும் தரும நீதிகளைப்பற்றிப் பொதுஜனங் களுக்குப் பிரசங்கம் செய்வதில் ஈடுபட்டிருந்தார். அதோடு அவர் எழுதிய எண்ணற்ற கட்டுரைகளும் கவிதைகளும் அமெரிக்க இலக்கியத்திலே புதியதோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் சகாப்தமாகத் திகழ்ந்தன.

எமர்சனின் வாழ்வை மூன்று கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம் : 1832ம் ஆண்டுவரை அவர் தன்னைத் தயார் படுத்திக் கொண்டது—1860 வரை இலக்கியப் பணி செய்தது — 1882ல் அவர் வீழ்ச்சி யுற்று மரணம் அடைந்தது. எமர்சனின் குழந்தைப்பருவம் பாஸ்டன் நகரில் கழிந்தது. அங்கே எட்டுக் குழந்தைகளில் ஒருவராய் அவர் வறுமையை அனுபவித்துக் கொண்டி ருந்தார். 1811–ல் அவருடைய தகப்பனர் இறந்தபோது

அறிவாற்றல் மிகுந்த அவருடைய பெரிய தாயாரான மேரி மூடி எமர்சன் என்பார் வீட்டிலும் பள்ளியிலும் நான்கு குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். எனவே பாஸ்டன் லத்தின் பாடசாலையில் படித்தபின்னர் எமர்சன் ஹார்வார்டு கல்லூரிக்கும் ஹார்வார்டு தெய்வமார்க்கப் பள்ளிக்கும் அனுப்பிவைக்கப் பட்டார். கல்விச் சாலைகளில் எமர்சன் ஒரு சராசரி மாணவனுகவே விளங்கினுர். அதற்குமேல் சோபித்தது கிடையாது. பெரும்பாலும் தனிமையிலிருந்துகொண்டு படிப்பது அவருக்கு வழக்கமாக இருந்தது. 1819ல் அக்காலத்தில் எமர்சன் பாஸ்டனிலுள்ள மாதா கோயிலில் 'வரலாறு', 'இங்கிலீஷ் இலக்கியம்' 'மனிதப் பண்பு', 'சரித்திரத்தின் தத்துவம்' ஆகியவைகள்பற்றித் தொடர்ந்தாற்போல் சொற்பொழி வாற்றி வந்தார். அவ்வகையில் எமர்சனுக்குப் புதிய தொழிலும் ஸ்திர நிலைமையும் ஏற்பட்டது. அவர் போற்றிய ஆசிரியர்களிடம் சிறப்பு ஏற்படக் காரணமா யிருந்தது எதுவென்று அறிய ஐரோப்பாவிலிருந்த போது எமர்சனுக்கு ஆர்வம் உண்டாயிற்று. ஆனல் லாண்டர், கோலரிட்ஜ்,வோர்ட்ஸ்வொர்த் ஆகியோர்களைச் சந்தித்தபோது அவருக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. கார்லைலை க்ரெய்க்கன்பட்டக்கில் சந்தித்தார். கார்லைல் அப்போது ஸர்ட்டர் ரெஸார்டஸ் என்ற நூலை எழுதிக்கொண் டிருந்தார். உண்மையை உணர்வதில் அவர்உள்ளம் ஈடுபட் டிருந்ததை எமர்சன் கண்டார். 1836-ல் முதன் முறையாக வெளியிடப்பட்ட இயற்கை எனும் தொகுதியில் இந்த நோக்கம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதுவே முதலாவது தத்துவம் என்று பிறகு வழங்கப்பட்டது. பிற் காலத்தில் எமர்சன் எழுதியவைகளுக்கான வித்தும் அதில் அடங்கியுள்ளது.தத்துவரீதியில் பார்ப்போமானல் அவருடைய முக்கியக் கொள்கைகள் யாவும் அதில் அடங்கியிருப்பதைக் காணலாம். பேரிடையான கடவுளாக

அந்தராத்மாவைக் குறிப்பிடும் பகுதி அது. தார்மீக, இயற்கை விதிகள் அடங்கியது—தன்னம்பிக்கையுள்ள ஒருவன் தனது மனச்சாட்சிப்படி விளக்கம்பெற சுதந்திரமளிப்பது அது.

சஞ்சிகை நடத்தும் பழக்கம் ஏற்பட்ட காலமும் அதுவே. அந்தப் பழக்கம் பிறகு அவருடைய ஆயுள்காலம் வரை இருந்ததெனலாம். உலகில் ஏற்படும் துன்பங்களினால் இடர்பட்டுத் தன்னை அறியும் நிமித்தம் அவருடைய வாலிபப் பருவம் எவ்வாறு ஈடுபடுத்தப்பட்டது என்பதை அந்த சஞ்சிகையின் ஆரம்பப் பக்கங்களில் காணலாம். புதிய இங்கிலாந்து உணர்வினால் கார்லைல், கதே ஆகியோருக்கு ஏற்பட்ட ஆத்ம சிந்தனையைப்போல் எமர்சனின் ஆத்ம சிந்தனை இருக்கவில்லை. ஆசையும் நேசமும் சந்தேகமும் அவர் வாழ்வில் உறுதியாகப் பின்னிக் கிடந்தன. மதகுருவாக வரவேண்டும் என்று மன உறுதி கொண்டிருந்தார் எமர்சன். அது பரம்பரைப் பழக்கமும் கூட. உள்ளம் ஒன்றி ஒருமித்து மணந்த மெல்லியலாள் எல்லென் டக்கர் இளம் வயதில் மாண்டாள். அதோடு அருமைச் சகோதரர்களான சார்லஸும், எட்வர்டும் இறந்தனர். ஆஸ்த்மா வியாதியும் வந்து சேர்ந்தது. இவை யாவும் எமர்சனை வைராக்கியத்துடன் இருக்கச்செய்து மதகுருவாக்கி விட்டன.

உள்ளத்தில் எழும் சந்தேகங்களுக்கு விடை காணவும் மனத்தெளிவு பெறவும் அவர் பாஸ்டனில் வகித்துவந்த இரண்டாவது பாதிரியார் பணியை ராஜிநாமா செய்து விட்டு 1832-ல் ஐரோப்பாவுக்குப் பிரயாணமானார். அந்தக் காலம் வரை அவர் எழுதிவைத்த போதனைகள் 160-க்கும் மேற்படும். இதல்லாமல் அவர் ஒரோரு சமயங்களில் பல கவிதைகளையும் தமது சஞ்சிகையில் எழுதியதுண்டு, பிரசித்தமடையாத கவிதைகள் அவை—அதுகாறும் வாழ் நாளில் கண்ட போராட்டங்கள், பரம்பரையாகப் பழக்கப் பட்ட கொள்கைகள், அதி தீட்சண்யமான விவேகம்

நிறைந்த நம்பிக்கை, அதோடு அவருடைய சொந்த மனசாட்சி ஆகியவைகளை அந்தப் போதனைகளில் அப்படியே காணலாம்.

1835-ல் லிடியா ஜாக்ஸனை அவர் இரண்டாந்தாரமாக மணந்துகொண்டார். அது முதல் அவர் நிரந்தரமாகக் கங்கார்டில் வசிக்கலானார். உண்மையை நாடும் ஒருவர் என்று கூறுவதற்குப் பதிலாக எமர்சனை மகாத்மா என்றே கூறலாம். தமது கொள்கையை நிரூபிப்பதற்காக அவர் ஹார்வார்டில் 'அமெரிக்கப்படிப்பாளி' என்பதுபற்றி 1837-ல் பேசிய போதும், பிறகு 1838-ல் தெய்வமார்க்கப் பள்ளியில் பேசும்போதும் அவர் சவால் விடவும் தயாராக இருந்தார்.

அப்போதிருந்த உணர்ச்சிப் பிரவாகமும் அழகான வசன நடையும் அவரிடம் பிறகு காணப்படவில்லை. அது 'இயற்கை 'யில் மிளிர்ந்திருப்பதைக் காணலாம். அவருடைய தலைமுறையில் அவர் மகான்களில் ஒருவராக விளங்கி உலகப் புகழ்பெற்றதற்குக் காரணம் அவருடைய கட்டுரைகளும் முதல் தொகுப்பும் (1842), கட்டுரைகளும் இரண்டாவது தொகுப்பும் (1844) ஆகும். அவருடைய பிரசங்கக் குறிப்புகளிலிருந்து அவைகள் மறுபடியும் எழுதப்பட்டன. 'தன்னம்பிக்கை', 'அந்தராத்மா', 'நஷ்ட ஈடு', 'அனுபவம்', 'கவி', 'அரசியல்', 'நட்பு' முதலியவைகளில் அவருடைய ஆர்வத்தையும் கவனத்துடன் வார்த்தைகளை உபயோகித்திருப்பதையும் காணலாம். அவை யாவும் ஒரு வகையில் புதிய இங்கிலாந்துப் போதனையை அனுசரித்தாற் போல் விளங்குவன. கேந்திரமான தார்மீக உண்மையை விளக்க, சிறுகச் சிறுக விவரித்த வண்ணம் சென்று அதன் உச்ச நிலையை வர்ணிக்க அவர் கையாண்ட தமது சுயாதீனமான சொற்றொடர்களையும் தன்மையையும் அந்தக் கட்டுரைகளில் காணலாம். அது தான் எமர்சனின் கலைக் கூடம் அப்பியாசம் செய்யப்பட வேண்டிய பாடப் புத்தகமாகும். எமர்சனின் செய்திக்கு

ஏற்ற சாதனமாக விளங்கிய கலை அது. அதனைப் பிறர் பின்பற்றிக் கையாண்டதுண்டு. ஆனால், அவர் காலத்திய இதர ஆசிரியர்கள் எவருமே எமர்சனை மிஞ்சியது கிடையாது.

1847—48 ல் அவர் இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது ஆற்றிய சொற்பொழிவுகளையே பிரதான மாகக் கொண்டதுதான் 'மனிதப் பிரதிநிதிகள்' எனும் நூல். மனிதச் சிறப்புகளைப் பற்றி அவருடைய தார்மீக ஜனநாயகக் கருத்துக்களை விவரித்துச் சொல்லப்படுவது. அங்கிருந்து திரும்பி வந்த பிறகு அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்தகாலத்தில் செய்த சொற் பொழிவுகளின் தொகுப்புதான் 'இங்கிலீஷ் வழிபாடு' (*Traits*) எனும் நூல். பிரிட்டிஷார் அடைந்த பொருளாதார ஆத்மீக சாதனை களைப் பற்றி அனுதாபத்துடன் எடுத்துரைக்கும் நூல். ஆரம்ப காலத்தில் வந்த 'இயற்கை'யில் குறிப்பிட்ட தத்து வங்களை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் விவேகக் களஞ்சியமாகத் திகழ்வதுதான் 'வாழ்க்கை விதி' எனும் நூலாகும். *1860* ல் வெளி வந்தது. அதுவே அவ்வரு டைய இறுதி முயற்சி எனலாம். எமர்ஸன் பிற்காலத்தில் எழுதிய கட்டுரைகளை அவருடைய நண்பரும் வரலாறு ஆசிரியருமான ஜே.ஈ. கேபட் சமுதாயமும் தனிமையும் (1870), கடிதங்களும் சமூக நோக்கங்களும் (1875), அறிவின் இயற்கை வரலாறு (1893) ஆகியவைகளைத் தொகுத்து வெளியிட்டார். விஷய ரீதியில் இந்த நூல்கள் பெரும் நோக்கங்கள் உடையன அல்ல. பலதரப்பட்ட விஷயங்கள் அடங் கியவை அவை.

கவிதை எழுதும் வழக்கம் எமர்சனுக்கு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து இருந்தது. அவைகளை எல்லாம் திரட்டிக் கவிதைகள் (*1847*), மே—தினமும் மற்ற கவிதைகளும் (*1867*) வெளியிடப்பட்டன.' ஊரியல் ', ' நாட்கள் ' ' ஒவ்வொரு வருக்கும் எல்லோருக்கும்,' ' திஸ்பின்க்ஸ்' (*Sphinx*), ' மெர்லின் ' ' ஹமத்ரேயா ' ஆகிய கவிதைகள் சிறந்தவைகளாகும்.

பைரன், .வோர்ட்ஸ்வொர்த் ஆகியவர்களைப்போல் அல்லாமல் 'உட்நோட்ஸ்', 'த்ரெனோடி', 'டெர்மினஸ்' ஆகிய கவிதைகளில் எமர்சன் தனக்குள்ள ஒதுங்கி நிற்கும் சொந்த மனோபாவத்தையும் சூசகமாகக் காட்டுகிறார். தமது கவித்திறனை வாய்ப்பாகக் கருதினார் எமர்சன். கற்பனை மிகுந்த அவருடைய கவிதைகள் காதுகளைவிட கண்களுக்கு ஏற்றதாக விளங்குவன. அவர் கவிதைகள் 19ம் நூற்றாண்டுக்குப் பிடிக்காது. 20ம் நூற்றாண்டு அவைகளை ஏற்றுக் கொள்ளும்.

எமர்சன் சமுதாயத்துடன் ஒட்டி வாழ்ந்து வந்தார். அவருக்கு விருப்பம் இல்லாதிருந்தும் மார்க்கரட் புல்லருக்குத் துணையாக இருந்து 'தி டயல்' என்ற பத்திரிகைக்கு (1840-44) ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். பரூக் பார்ம், கங்கார்டு தத்துவக் கலாசாலை ஆகிய இடங்களில் சேவை செய்துவந்த ஜ்யார்ஜ் ரிப்ளி, ப்ரான்ஸன் ஆல்காட் ஆகியோர்களுக்கு உற்சாகமூட்டும் நிமித்தம் எமர்சன் 'தி டயலி'ல் வேலை செய்துவந்தார். தோரோ, விட்மன், ஜோன்ஸ் வெரி முதலிய இளம் எழுத்தாளர்களுக்கும் எமர்சன் ஊக்கம் அளித்து வந்தார். ஜான் ப்ரௌனைத் தூக்கிலிட்டது போன்ற நிகழ்ச்சிகள்தான் எமர்சனை அறிக்கைகள் விடும்படி செய்துவிட்டன. தமது குரல் தம்முடைய காலத்தில் மட்டுமன்றி எல்லா சகாப்தங்களிலும் இயங்கி ஒலிக்கக் கூடியது என்பதை அவர் எப்போதுமே உணர்ந்திருந்தார். மனதையும் ஆத்மாவையும் தன் காலத்துக்கு மட்டும் என்று அவர் வரையறுக்கவில்லை. தத்துவ உள்ளொளிக்கு சக்தி வாய்ந்த இலக்கிய எழுத்துக்களை அவர் அளித்துவிட்டிருக்கிறார்.

பக்கம்	வரி	பிழைகள்	திருத்தங்கள்
5	12	அனுபவிக்கும	அனுபவிக்கும்
5	25	தோன்றிக் கொண் டிருககின்றனர்	தோன்றிக் கொண் டிருக்கின்றனர்
5	9	சமபிரதாய	சம்பிரதாய
9	8	அறிந்து கொளள	அறிந்து கொள்ள
11	21	என்றும	என்றும்
12	33	நலன்களெள்லாம்	நலன்களெல்லாம்
17	26	இருககிறது	இருக்கிறது
19	31	நற்குணமுடையவர்க ளாக்கிறது	நற்குணமுடையவர்க ளாக்குகிறது
23	1	அழகின	அழகின்
24	27	காட்டுகிறோம	காட்டுகிறோம்
24	29	பயன் படுத்தபபடு கின்றன	பயன் படுத்தப் படுகின்றன
29	9	நடக்கும	நடக்கும்
31	26	பிளேடோ	பிளேட்டோ
32	33	வெளிப்படுகிறது	வெளிப்படுத்துகிறது
33	27	சேதனப் பொருள்க ளுடன	சேதனப் பொருள் களுடன்
39	34	பாமபு	பாம்பு
39	38	பொருந்தும	பொருந்தும்
42	23	தெளிந்தரிய	தெளிந்தறிய
43	28	ஆன்மாமைவிட	ஆன்மாவைவிட
51	25	கடவுள் மூலம	கடவுள் மூலம்
51	36	முதலியவறறை	முதலியவற்றை
53	23	நாம	நாம்
53	33	ஆணும	ஆணும்
53	36	வாழ்க்கையும	வாழ்க்கையும்
54	21	நமமை	நம்மை
54	26	வளம	வளம்
54	30	அப்பழுக்கில்லர்த	அப்பழுக்கில்லாத
55	14	பயன்களைததான்	பயன்களைத்தான்
58	18	பேருண்மைக்ள்	பேருண்மைகள்
59	21	மாணமும்	மரணமும்
64	15	நல்லுறை	நல்லுரை
66	14	மரத்திம்பை	மரத்திம்மை
66	30	அஸ்திவாரம	அஸ்திவாரம்

பக்கம்	வரி	பிழைகள்	திருத்தங்கள்
66	35	மதம	மதம்
77	6	நமங்கு	நமக்கு
79	3	அவவாறே	அவ்வாறே
82	21	காரியம	காரியம்
82	35	பெறுமை	பெருமை
83	15	மே்லாக	மேலாக
84	21	வாழும	வாழும்
86	31	அரசாங்கம	அரசாங்கம்
87	9	மாய மாளிகைகள்	மாயமாளிகைகள்
88	27	உலசம்	உலகம்
89	36	சக்ஒ	சக்தி
91	14	இயற்கைப்	இயற்கை
93	29	மேலும	மேலும்
98	30	சுலபம	சுலபம்
101	24	இவைக்ள்	இவைகள்
101	32	எதைக்	எதைத்
102	7	அவதிப்படா தீர்கள	அவதிப்படாதீர்கள்
108	15	குலத்த	குலத்தை
108	31	செய்யவேண்டும	செய்யவேண்டும்
109	17	எனும	எனும்
110	38	பார்க்கின்றன	பார்க்கின்றனர்
112	35	ஆண்டவனும	ஆண்டவனும்
121	3	பொறுத்திருக் கிறது	பொருத்திருக்கிறது
124	2	நிருபிக்கப்பட்ட	நிரூபிக்கப்பட்ட
133	12	விவாதம	விவாதம்
135	27	எதிர்காலம	எதிர்காலம்
136	22	தோன்றும	தோன்றும்
141	28	பெருக்கத்திற்கும	பெருக்கத்திற்கும்
142	6	தோன்றலாம	தோன்றலாம்
143	10	பக்திக்கும	பக்திக்கும்
145	2	ஒழிவே	ஒழிய
145	24	விளங்கும	விளங்கும்
145	26	காட்சிசைப்	காட்சியைப்

அமெரிக்கக் கதைகள்

உலகப் புகழ்பெற்ற அமெரிக்கக் கதாசிரியர்களான ஜான் ஸ்டீன்பெக் எழுதிய ஜூனியஸ் மால்ட்பி, ஸ்டீபன் வின்செண்ட் எழுதிய பேயும் டேனியல் வெப்ஸ்டரும், ஸ்டீபன் கிரேன் எழுதிய திறந்த படகு ஆகிய மூன்று அரிய கதைகள் அடங்கி இருக்கின்றன. எளிய தமிழ் மொழிபெயர்ப்பு.

ரூபாய் ஒன்று **தபால் செலவு தனி**

மாய விளக்கு

அலாஅல்தீன் கதை உலகத்திலே பல மொழிகளிலும் வெளியாகி இருக்கிறது. அந்த அருமையான கதையை எளிய தமிழில் சின்னச் சின்ன வார்த்தைகளில் வை. கோவிந்தன் எழுதி இருக்கிறார்.

ரூபாய் மூன்று **தபால் செலவு தனி**

இவை சக்தி வெளியீடுகள்

சக்தி வெளியீடுகள்

கூண்டுக்கிளி	ஹரீந்த்ரநாத் சட்டோபாத்யாய்	1	0
அமெரிக்கக் கதைகள்		1	0
முத்ரா ராக்ஷஸம்	விசாகதத்தர்	1	8
சூரிய நமஸ்காரம்	திருவேதி	1	0
அணுவை அறிக	நா. கி. நாகராஜன்	1	8
பாரதியார் சரித்திரம்	செல்லம்மா பாரதி	2	0
மகாகவி பாரதியார்	வ. ரா.	2	0
குழந்தைமை ரகசியம்	மாண்டிசோரியம்மையார்	5	0
காய்கறித் தோட்டம்	மு. அருணசலம்	5	8
உலோகங்களும் நாமும்	,,	3	0
உணவுப் பஞ்சம்	,,	1	8
திருமலை முருகன் பள்ளு	,,	2	0
எருவும் எரு இடுதலும்	சுந்தரம்	1	4
டால்ஸ்டாய் கதைகள் I	டால்ஸ்டாய்	2	0
டால்ஸ்டாய் கதைகள் II	,,	2	0
இந்தியருக்கு	,,	1	0
இருளின் வலிமை	,,	2	0
டால்ஸ்டாய் கட்டுரைகள்	,,	2	0
போரும் வாழ்வும்	,,	24	0
லெனின் பிறந்தார்	ஆர். ராமநாதன்	3	8
அறிஞர் மார்க்ஸ்	,,	1	8
மார்க்ஸிசம் என்றால் என்ன?	எமிலி பேர்ன்ஸ்	1	0
பணம்	,,	1	8
புறநானூறும் தமிழரும்	வையாபுரிப் பிள்ளை	1	0



ரால்ப் வால்டோ எமர்சன்
(1803 – 1883)

எமர்சன் ஒரு ஞானி. கிரேக்க. ஹிந்து, ஜர்மானிய இங்கிலீஷ் கொள்கைகளையும் தத்துவங்களையும் பெரிதும் கற்றுணர்ந்தவர். அவர் கட்டுரைகள் அத்தனையும் ஞானச் சுரங்கங்கள். உலகப் பிரசித்தி பெற்ற அந்த ஞானச் சுரங்கங்கள் தமிழிலே வெளிவந்திருக்கின்றன.

சக்தி வெளியீடு